தொகுதி - XV நவம்பர் - 2015 இதழ் - 3

# சிந்தனை

ஆசிரியர்

**பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா**


கலைப்பீடம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
19 MAY 2017
மாநகரசபை
யாழ்ப்பாணம்

உசாத்துணைப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதி - XV நவம்பர்- 2015 இதழ் - 3

# சிந்தனை

ஆசிரியர்

**பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா**

பொதுசனநூலகம்
19 MAY 2017
மாநகர சபை
யாழ்ப்பாணம்

கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

8199(P)
PL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CINTANAI

The Journal of the Faculty of Arts, University of Jaffna is published in March, July and November every year.

CINTANAI is a refereed Journal, Its referees come form University Scholars and the National scholarly community.



| | |
|---|---|
| **Editor** | Professor Selliah Krishnarajah |
| **Associate Editor** | Dr. K.Kajavinthan |
| **Managing Editor** | Dr. S. Santhirasegaram |
| **Editorial Committee Members** | Dr. K.Shriganeshan<br>Dr. K.Arunthavarajah<br>Dr. (Mrs) J. Rasanayagam<br>Dr. S. Darshanan<br>Mr. R. Rajeshkannan<br>Mrs. S. Arulanantham<br>Mrs. S. Prabaharan |



| | |
|---|---|
| **Annual Subscription** | 1500/- SLR / 15US $ |
| **Published by** | The Faculty of Arts, University of Jaffna, Jaffna, Sri Lanka. |
| **Printed by** | Harikanan (Pvt) Ltd., # 681, K.K.S. Road, Jaffna. |
| **ISSN** | **2478 - 1061** |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **சிந்தனை** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் ஆய்விதழாகும். இவ் இதழ் ஆண்டுக்கு மும்முறை மார்ச், ஜூலை, நவம்பர் மாதங்களில் வெளியிடப்படுகின்றது. பிரசுரிக்கப்படும் கட்டுரைகள்: பொருளியல், புவியியல், அரசியல், வரலாறு, தொல்லியல், சமூகவியல், கல்வியியல், மானிடவியல், மெய்யியல், மொழியியல், தமிழ், வடமொழி, இந்துநாகரிகம், கிறிஸ்தவ நாகரிகம், நுண்கலைகள் முதலிய துறைகளில் உள்ள பொருட் கூறுகள் பற்றியனவாக அமையும்.

- **சிந்தனை**யில் வெளியாகும் கட்டுரைகளின் தகுதி, தகுந்த பல்கலைக்கழக ஆய்வாளர்களால் நிர்ணயிக்கப்படுகின்றது.

- **சிந்தனை**யில் ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட விரும்புவோர் கட்டுரையின் இரு பிரதிகளைக் கணினிப்பதிப்பாக ஆசிரியருக்கு அனுப்புதல் வேண்டும். அத்தோடு இலத்திரனியல் பிரதி ஒன்றும் newcintanai2014@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். அடிக்குறிப்புக்கள், உசாத்துணை விபரங்கள் ஆகியன கட்டுரையின் இறுதியில் அமைதல் வேண்டும்.

- **உசாத்துணை** விபரங்கள் பின்வரும் ஒழுங்குமுறையில் தரப்படுதல் வேண்டும். கட்டுரை எனில் ஆசிரியர் பெயர், முதலெழுத்துக்கள், அடைக்குறியினுள் வெளியிடப்பட்ட ஆண்டு, கட்டுரைத் தலைப்பு, சஞ்சிகையின் பெயர், தொகுதி இலக்கம், கட்டுரை இடம்பெற்றுள்ள பக்கங்கள், நூல் எனில்: ஆசிரியர் பெயர், முதலெழுத்துக்கள் அடைப்புக்குறியினுள் வெளியிடப்பட்ட ஆண்டு, நூலின் தலைப்பு, விபரம், வெளியிடப்பட்ட இடம், வெளியிட்டோர் விபரம்.

- **கட்டுரை** அனுப்புவோர் தங்கள் பெயர், பட்டங்கள், பதவிகள், அலுவலக முகவரி, மின்னஞ்சல் ஆகிய விபரங்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் தனித்தாளில் குறித்து அனுப்புதல் வேண்டும். கட்டுரையின் தலைப்பினையும் ஆங்கிலத்தில் குறிப்பிடுக. அனுப்பப்படும் கட்டுரைகள் ஆய்வு வளர்ச்சிக்கு வழங்கும் பங்களிப்பினைச் சுருக்கமாகத் தமிழிலும், ஆங்கிலத்திலும் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

- சந்தா கொடுப்பனவுகள் சிந்தனையின் நிர்வாக ஆசிரியருக்கு அனுப்பப்படல் வேண்டும். இலங்கையில் காசுக்கட்டளை, தபாற்கட்டளை, காசோலை மூலமும், பிறநாடுகளிலிருந்து வங்கிக் கட்டளைகள் மூலமும் அனுப்பப்பட வேண்டும். மாற்றிதழாக சிந்தனையினைப் பெற விரும்புவோர் நிர்வாக ஆசிரியருடன் தொடர்பு கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CINTANAI, REFREED JOURNAL, FACULTY OF ARTS, UNIVERSITY OF JAFFNA, SRI LANKA, 2015

PROCEDURE FOR PUBLICATION OF RESEARCH ARTICLES IN CINTANAI (IN TAMIL)

This particular Research Journal will be released thrice in a year, March July and November.

**Procedure profile.**

1. The title of article is by very short and express the main theme vividly.
2. The article with title should proceed with the research summary and the main technical terms.
3. The research article should not be exceeded more than 15 page A4 size by using BAAMINI found and TIME NEW ROMAN.
4. The concepts or ideas which borrowed from other sources should be incorporated with FOOT NOTES system with bibliographical notes
5. The finding and conclusion or suggestion of the article should be vividly inscribed at the end of the article,
6. The method adopted and materials used in the research discussion are should be spelled out at the set out of the article.
7. Photos, Graphs and Tables are will be accepted for publication but with in limited levels.
8. All permanent staff of the the Faculty board should support to purchase the volumes.
9. The members of the faculty could send more than one research article but the screening committee's decision is ultimate for publication. The acceptance for publication will be notitieded.
10. Authors should write his / her name, affilation, address, e-mail, contract telephone number in below the title of Article.

# The submission of Research Articles:

1. It is expected to the research article in both,soft and two hard copies and those unsuitable for publications will be returned to the respective authors.
2. The research articles for publication Cintanai should be written in Tamil Language but in case of Citations and Foot notes it could be used English terms too.
3. The continuation of one article under the same caption to other volumes is prohibited.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரை ஆசிரியர்கள்


1. **வண. பேராசிரியர் கலாநிதி ஞா. பிலேந்திரன்,** ph.D.
   தலைவர் /கிறிஸ்தவம் - இஸ்லாமிய
   நாகரிகத்துறை,
   யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
   Plendran@gmail.com

2. **கலாநிதி த. கிருஷ்ணமோகன்,** ph.D.
   சிரேஷ்ட விரிவுரையாளர் - Gr.I
   அரசியல் விஞ்ஞானம்,
   சமூகவிஞ்ஞானத்துறை,
   கலை கலாசாரபீடம்,
   கிழக்குப் பல்கலைக்கழகம்,
   tkmatura29@gmail.com

3. **ஆ. நித்திலவர்ணன்,** M.Ed.
   விரிவுரையாளர்
   கல்வியியற்துறை,
   யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
   anithlavarnan@gmail.com

4. **பத்மாசனி குலராஜசிங்கம்,** M.sc
   சிரேஷ்ட விரிவுரையாளர் - Gr. I
   இணைப்பாளர் /மனைப்பொருளியல் அலகு
   kulambaba@yahoo.co.in
   **அருளானந்தம் கிறிஸ்ரி தவறஞ்சித்** M.Sc
   சிரேஷ்ட விரிவுரையாளர் - Gr. I
   தாவரவியற்றுறை,
   யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
   anujiranjit@gmail.com

5. **சுபாஜினி உதயராஜா,** M.phil.
   சிரேஷ்ட விரிவுரையாளர் - Gr. I
   usubageo@gmail.com
   **கலாநிதி கருணாகரன் சுதாகர்,** ph.D.
   தலைவர் / புவியியற்றுறை,
   யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
   suthakar.k.@gmail.com

6. **பேராசிரியர் செ. கிருஷ்ணராசா,** M.A.
   தலைவர் / வரலாற்றுத்துறை,
   யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
   skrishna514@gmail.com

7. **கலாநிதி க. அருந்தவராஜா,** ph.D.
   சிரேஷ்ட விரிவுரையாளர் - Gr. I
   வரலாற்றுத்துறை,
   யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
   arunn.msu@gmail.com

8. **நா. பிரதீபராஜா,** M.phil
   சிரேஷ்ட விரிவுரையாளர் - Gr. II
   புவியியற்றுறை,
   யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
   npiratheeparajh@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை

சிந்தனை ஆய்விதழ் : கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பொருளடக்கம்


1. புறவயநிலையில் இலங்கைத் திருச்சபை வரலாற்றில் விளக்கம் அளிப்பதில் எதிர்கொள்ளப்படுகின்ற சவால்கள் (குறிப்பாக போர்த்துக்கேயர் கால ஆவணங்களை மையமாகக் கொண்டது).
   - **வண. பிதா. ஞா. பிலேந்திரன்** 1-12
2. உள்நாட்டு யுத்தத்திற்குப் பின்னர் இலங்கையில் நல்லிணக்கத்தினை கட்டியெழுப்புதல்: சவால்களும் சந்தர்ப்பங்களும்.
   - **த. கிருஷ்ணமோகன்** 13-30
3. யுத்தத்திற்குப் பின்னரான சூழலில் இலங்கையின் வடமாகாண பாடசாலை மாணவர்க்குரிய பொதுப்பரீட்சைகளின் பெறுபேறுகளிலான தளம்பல்கள் : அவற்றுக்கான காரணங்கள் மற்றும் தீர்வுகள்.
   - **ஆ. நித்திலவர்ணன்** 31-47
4. யாழ்ப்பாணத்தில் பழப்பாகு தயாரிப்புக்களில் தரநிர்ணய அளவீடுகள்: ஓர் ஆய்வு.
   - **பத்மாசனி குலராஜசிங்கம்**
   - **அருளானந்தம் கிறிஸ்ரி தவறஞ்சித்** 48-54
5. வாழ்வாதாரச் சொத்துக்களை படமாக்கலும் வறுமையின் பரிமாணமும்: ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவை சிறப்பாகக் கொண்டது.
   - **சுபாஜினி உதயராஜா**
   - **கருணாகரன் சுதாகர்** 55-68
6. குடியேற்றங்களால் உருவான தொன்மங்கள் - நல்லூர் அரசமரபின் உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த குடியேற்றங்கள் தந்த தொன்மங்கள் பற்றிய ஆய்வு.
   - **செல்லையா கிருஷ்ணராசா** 69-85
7. யாழ்ப்பாணப் பொருளாதாரக் கட்டமைப்பு (1930 - 1953): ஈழகேசரிப் பத்திரிகையினை அடிப்படையாகக் கொண்டது.
   - **கா. அருந்தவராஜா** 86-101
8. யாழ்ப்பாண மாவட்டத்தில் காலநிலை மாற்றமும் தணிப்பு நடவடிக்கைகளும்.
   - **நா. பிரதீபராஜா** 102-117




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறவய நிலையில் இலங்கைத் திருச்சபை வரலாற்றிற்கு விளக்கம் அளிப்பதில் எதிர்கொள்ளப்படுகின்ற சவால்கள்

## (குறிப்பாக போர்த்துக்கேயர் கால ஆவணங்களை மையமாகக் கொண்டது.)

வண. பிதா. ஞா. பிலேந்திரன்

**ஆய்வுச்சுருக்கம்**

*புறவய நிலையில் இலங்கைத் திருச்சபை வரலாறு பற்றிக் கூறும் ஆவணங்களுக்கு குறிப்பாக போர்த்துக்கேயர் ஆட்சிக்காலம் பற்றிக் கூறும் ஆவணங்களுக்குப் பொருள் விளக்கமளிப்பதில் பல சவால்களும் சிக்கல்களும் எதிர்கொள்ளப்படுகின்றன என்னும் விடயமே இங்கு முன்வைக்கப்படுகின்றது. ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்ற முதன்மை ஆவணங்களை ஆக்கியவர்கள் போர்த்துக்கேய மிசனரிமாரே அல்லது மறை அறிவிப்புப் பணியில் நெருங்கிய ஈடுபாடு கொண்டவர்கள். மேலும், போர்த்துக்கால் மன்னனின் ஆதரவுடன் இடம்பெற்ற மறைபரப்புப் பணி பற்றிய அறிக்கைகள் மன்னனைத் திருப்திப்படுத்தும் நோக்கில் தயார் பண்ணப்பட்டவை என்பது கருத்தில் கொள்ளப்படவேண்டியது. அத்துடன் இடம்பெற்ற மறைபரப்புப் பணிகள் ஐரோப்பிய மேலாண்மைப் பின்னணியிலேயே இடம் பெற்றன. அத்தோடு மறையைத் தழுவிய சுதேசிகள் பல்வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, அதாவது அதிக சலுகைகளை போத்துக்கல் மன்னனிடமிருந்து பெறுவதை அடிப்படையாகக் கொண்டே மதம் மாறினர். இதனால் ஆவணங்களில் பல விடயங்கள் மறை பரப்பாளர் சார்பாக மிகைப்படுத்தப்பட்ட தகவல்களாகவே காணப்படுகின்றன. மேலும், மிகமிகக் குறைந்த எண்ணிக்கையிலான போர்த்துக்கேய மிசனரிமாரே இக்காலத்தில் தமிழ்மொழியைக் கற்றிருந்தனர். புதிய மறையைத் தழுவியவர்கள் அம் மறையின் கோட்பாடுகளை புரிந்து கொண்டார்களா என்பது பொருத்தமான வினாவாகும். எனவே மேற் குறிப்பிட்டுள்ள விடயங்களின் பின் புலத்தில் இடம்பெற்ற மத மாற்றங்கள் உண்மையான மத மாற்றங்கள் எனக் கொள்ள முடியுமா? அதே வேளை உண்மையான மதமாற்றங்கள் இடம்பெற்றுள்ளன என்பதற்கும் மன்னர் மறைசாட்சிகள் பற்றிய சம்பவம், ஒல்லாந்த கிழக்கிந்தியக் கொம்பனியினரின் கெடுபிடிகள் மத்தியிலும் கத்தோலிக்கம் கடைப்பிடிக்கப்பட்டிருந்தமை சிறந்த எடுத்துக்காட்டு. இப்பின்னணியிலேயே போர்த்துக்கேயர் காலத்து ஆவணங்களுக்குப் பொருள் விளக்கமளிப்பதில் பல சவால்கள் எதிர்நோக்கப்படுகின்றன என்னும் கருத்து முன்வைக்கப்படுகின்றது.*

**திறவுச்சொற்கள் :** மறைப்பணியாளர்கள், திருச்சபை, மறை அறிவிப்பு, சுதேசிகள், மேலாண்மை, அரசியற்தந்திரோபாயங்கள், ஆவணங்கள், புறவயநிலை, மறைசாட்சிகள்

### முன்னுரை

புறவய நிலையில் இலங்கைத் திருச்சபை வரலாறு பற்றிக் கூறும் ஆவணங்களுக்கு விளக்கம் அளிப்பதில் பல சவால்களும், சிக்கல்களும் எதிர் கொள்ளப்படுகின்றன என்னும் விடயத்தை மையப் பொருளாகக் கொண்டதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது. வரலாறு பற்றிய ஆய்வினை மேற்கொள்ளும் போது தீர்க்கமான முடிவுகளைப் பெறுவதற்கு ஆய்வு விடயம் பற்றிய சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்வது முக்கியமானதாகும். இலங்கையில் கிறிஸ்தவத்தின் வரலாற்று நிகழ்வுகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வழியாக ஆவணச்சான்று, கல்வெட்டுச் சான்று, அகழ்வாய்வுத் தடயங்கள் விளங்குகின்றன. எனினும், இலங்கையில் கிறிஸ்தவத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றிய ஆய்வினை மேற்கொள்ளும் ஆய்வாளருக்கு ஆவணச் சான்றுகளே அதிக தகவல்களை அளிக்கின்றன.

ஆய்வின் போது, குறிப்பிட்ட நிகழ்வு அரசியல் வரலாற்று, சமூக, பொருளாதாரப் பின்னணியில் ஆராயப்பட்டு, பொருள் விளக்கம் காணப்படுதலே நேர்த்தியான முடிவைப் பெறுவதற்கான முறைமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த கால நிகழ்வுகள் பற்றியும் அந்நிகழ்வுகளில் செல்வாக்குச் செலுத்திய நேர், எதிர் விசைக காரணிகள் பற்றியும் அந்நிகழ்வுகளில் செல்வாக்குச் செலுத்திய நேர், எதிர் விசைக் காரணிகள் பற்றியும் எவ்வளவிற்கு செம்மையாக அவை நிகழ்ந்தபடியே அறிய முடியுமோ அவ்வாறு அறிவதற்கு அவைபற்றிக் கூறும் முதன்மை ஆவணங்களிலிருந்து தகவல்கள் திரட்டப்படுதலே பொருத்தமானது. எனினும் இலங்கைத் திருச்சபை வரலாறு பற்றிக் கூறும் ஆவணங்கள் என்ன நோக்கங்களுக்காகப் பதிவு செய்யப்பட்டன? யாரால் பதிவு செய்யப்பட்டன. எவ்வளவிற்குப் பதிவுகள் நடுவுநிலைமை நின்று மேற்கொள்ளப்பட்டன? என்னும் விடயங்கள் இங்கு கருத்திற் கொள்ளப்படல் முக்கியமானது. மேலும், இவ்வாறு நடுவுநிலைமை நின்று பதிவுகளை மேற்கொள்வதற்கு ஏற்ற அக, புறச் சூழல்கள் ஆவணங்களை ஆக்கிய ஆசிரியர்களுக்கு கிடைத்தனவா? என்னும் விடயமும் கவனத்திற் கொள்ளப்படுதல் ஆய்வின் புறவயமான முடிவுகளுக்கு கூடிய வலுச் சேர்ப்பதாக அமையும்.

**இலங்கையில் கத்தோலிக்கம்**

இலங்கைத் திருச்சபை வரலாற்று ஆசிரியர்கள் ஐந்து பிரிவுகளாக நோக்குவதுண்டு அவை யாவன

1. ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்ட காலம் கி.பி (1 - 6) நூற்றாண்டுகள்
2. போர்த்துக்கேயர் ஆட்சிக்காலம் கி.பி 1505 - 1658 வரை
3. ஒல்லாந்தர் ஆட்சிக் காலம் கி.பி 1658 - 1796 வரை
4. ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் கி.பி 1796 - 1948 வரை
5. சுதந்திர இலங்கை - கி.பி 1948

மேற்குறிப்பிட்ட எல்லாப் பிரிவுகளுக்கும் உட்பட்ட காலத்து நிகழ்வுகளை ஒரு கட்டுரையில் ஆய்வு செய்வது போர்த்துக்கேயர் காலம் பற்றிக் கூறும் ஆவணங்களுக்கு மட்டுப்டுத்தப்படுகின்றது. போர்த்துக்கேயர் காலத்தில் இடம்பெற்ற முக்கிய வரலாற்று நிகழ்வுகளாக இலங்கையில் கத்தோலிக்க மறை அறிமுகம் செய்யப்பட்டு பரப்பப்பட்டமையும் அதனால் சுதேச மதங்களும் சுதேசப் பண்பாடும் எதிர்கொண்ட சவால்களும் நோக்கப்படுகின்றன. கத்தோலிக்க மறையை அறிமுகம் செய்து அதனைப் பரப்ப கோட்டை மன்னன் 7 ஆம் புவனேகபாகுவின் அழைப்பின் பேரில் ஆறு பிரான்சிஸ்கன் சபைத்துறவிகள் **1543**இல் முதன் முதலில் இலங்கைக்கு வந்தனர். (v.perniola 1989: 36-37) இவர்களைத் தொடர்ந்து **1602** இல் (v.perniola, 1991: 196) இயேசு சபையினரும் (v.perniola, 1991 : 248) 1605 இல் டோமினிக்கன் சபையினரும் (v.perniola, 1991 : 258) 1606 இல், அகுஸ்தீனார் சபையினரும் இலங்கைக்கு வந்து கந்தோலிக்க மறை பரப்பும் பணியை மேற்கொண்டனர். போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் மேற்குறிப்பிட்ட நான்கு துறவற சபையினரோடு இணைந்து கணிசமான எண்ணிக்கையிலான மறைமாவட்டக் குருக்களும் பணியாற்றியுள்ளனர் (v.perniola ,1991 : xi)

**போர்த்துக்கேயர் ஆட்சிக்கால ஆவணங்கள் எழுதப்பட்ட பின்னணி**

மேற்குறிப்பிட்ட சபைகளைச் சார்ந்த மறைப்பணியாளர்களின் பணிகளை மையப்படுத்தியே ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன. இவ்வாவணங்கள் ஆக்கப்பட்ட சூழற்பின்னணியை நோக்கும் போது இதன் ஆசிரியர்கள் எவ்வளவிற்கு புறவயத் தன்மையுடன் பக்கச்சார்பற்றவர்களாக நிகழ்வுகளைப் பதிவு செய்திருப்பர் என்பதை ஓரளவிற்கு புரிந்து கொள்ளக் கூடியதாயிருக்கும். கத்தோலிக்க மறையின் ஆட்சிப் பீடமையமாக உரோமாபுரி விளங்குகின்றது. **16** ஆம் நூற்றாண்டில் கீழைத்தேச நாடுகளில் கத்தோலிக்க மறைபரப்பப்பட்ட போது இப்பணியை முன்னெடுப்பதற்குத் திருச்சபையில் தனியாக எந்தவொரு நிர்வாக அலகும் ஏற்படுத்தப் பட்டிருக்கவில்லை (Martin Quere 1995: 6).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அ) 'பத்தருவாதோ' (Pedroado )

இப்பின்னணியில் ஸ்பானிய, போர்த்துக்கேய, நாடுகளின் மன்னர்கள் முன்வந்து கீழைத்தேச நாடுகளில் கத்தோலிக்க மறையைப் பரப்பும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். இதனால் இந்நாடுகளின் மன்னர்களுக்கும் திருத்தந்தையர்களுக்குமிடையே ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. இதன்படி மேற்குறிப்பிட்ட நாடுகளின் மன்னர்களுக்கு கீழைத்தேச நாடுகளில் கத்தோலிக்க மறையைப்பரப்புதல் தொடர்பாகக் கணிசமான உரிமைகளும், சலுகைகளும் வழங்கப்பட்டன. இதுவே திருச்சபையில் 'பத்தருவாதோ' (V.Perniola 1989: 439 - 452 ) என அழைக்கப்பட்டது. இதன்படி போர்த்துக்கல் மன்னனின் கடமைகள் என்னும் நிலையில் இலங்கையில் குறிப்பாக ஆலயங்களையும், பாடசாலைகளையும், மடங்களையும், ஏனைய நிறுவனங்களையும் அமைத்து, தளபாடங்களையும் வழங்கி, மறைப்பணியாளரின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் எனப்பெரும் பொருளாதாரச் சுமையை போர்த்துக்கல் மன்னன் ஏற்க வேண்டியிருந்தது. அதனால் மறைப் பணியாளர் வருடா வருடம் மன்னனுக்கு பணிகள் பற்றிய அறிக்கை அனுப்பும் படி நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தனர். இதனால் மன்னனின் நன்மதிப்பைப் பெற்று பதவி உயர்வுகளைப் பெறும் பொருட்டு இராணுவத்தினரும், அரச அதிகாரிகளும் செயற்பட்டதோடு, அறிக்கைகளையும் அதற்கேற்பத் தயாரித்திருப்பர் எனக் கொள்ளலாம். இதனால் இவர்களால் தயாரிக்கப்பட்ட அறிக்கை எவ்வளவிற்கு புறவயத்தன்மை கொண்டதாக அமைந்திருக்குமென்பது நியாயபூர்வமான வினாவாகும்.

### ஆ) முக்கிய ஆவணங்களை ஆக்கியோர் மிசனறிமார் அல்லது ஐரோப்பியா

மேலும், போர்த்துக்கேயர் காலத்து இலங்கைத் திருச்சபையின் வரலாறு கூறும் எல்லா ஆவணங்களும் மிசனறிமாரால் அல்லது ஐரோப்பியக் கிறிஸ்தவர்களாலேயே எழுதப்பட்டன. இவ்அறிக்கைகளைத் தயாரித்தவர்கள் கிறிஸ்தவ மறை அறிவிப்புப் பணியில் முழு ஈடுபாட்டுடன் செயற்பட்டவர்கள் என்பது இங்கு கவனத்திற்கு கொள்ளப்பட்ட வேண்டியது. இந்நிலையில் முதன்மை ஆவணங்கள் எழுதியவர்கள், ஆவணங்களை ஆக்கும்போது விடயங்களைத் தெரிவு செய்வதிலும், அவற்றிற்கு விளக்கமளிப்பதிலும், பக்கச்சார்புடன் செயற்பட்டிருக்கலாம் எனக் கொள்ள இடமுண்டு. எடுத்துக்காட்டாக, ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் ஒல்லாந்த கிழக்கிந்தியக் கொம்பனியினர் கத்தோலிக்க திருச்சபையின் மட்டில் கடும் போக்கையும், கெடுபிடியையும் கடைப்பிடித்ததாக விமர்சித்த கத்தோலிக்க வரலாற்று ஆசிரியர்கள், போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் பாரம்பரிய மதங்களான இந்து, பௌத்த மதங்கள் மட்டில் போர்த்துக்கேய இராணுவத்தினரும் போர்த்துக்கேய அதிகாரிகளும் மறைபரப்புப் பணியாளர்களும் அதே கடும் போக்கையும், கெடுபிடியையும் மேற்கொண்டனர் என்பதைத் தங்கள் ஆவணங்களில் குறிப்பிட வில்லை. (W.L.A. Gon Peter, 1985:185)

### இ) ஐரோப்பியா மேலாண்மை நிலை

எந்தவொரு நிகழ்விற்கும் அது இடம்பெற்ற சமய, சமூக வரலாற்று பின்னணியில் பொருள் விளக்கம் அளித்தலே பொருத்தமானது. மதமாற்றத்தில் ஈடுபட்டிருந்த ஐரோப்பிய மறைப்பணியாளர்கள் ஐரோப்பியா மேலாண்மை நிலையிலிருந்தே மறைபரப்புப் பணியை மேற்கொண்டனர். அதாவது ஐரோப்பியா மேலாண்மையின் படி எதுவெல்லாம் ஐரோப்பியமோ அவை மட்டுமே உயர்ந்தவை : மேன்மையானவை: பேணப்பட வேண்டியவை: கடைப்பிடிக்க வேண்டியவை. இவ்வாறான கருத்தியல் செயற்பாட்டுப் பின்னணியில் ஐரோப்பிய சமய, சமூக வாழ்வியல் முறைகளுக்கேற்ப சுதேசிகளை மாற்றுவதும் அவ்வாறு விரும்பியோ, விரும்பாமலோ, வாழ வைப்பதும் சுதேச மக்களுக்கு தாம் செய்யும் பெரும் சேவையாக போர்த்துக்கேய மறைப்பணியாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதினார்கள். இக்கருத்தியற் தூண்டுதலின் பின்னணியிலேயே மதமாற்ற செயற்பாடுகளை மேற்கொண்டனர் என்பதைக் கருத்திற் கொள்ளல் பொருத்தமானது. எனினும் புறவய நிலையில் இக்கருத்தியலை நோக்கும் போது இடம் பெற்ற மதமாற்றங்கள் உண்மையான மதமாற்றங்களா என்னும் வினா பொருத்த மானதே.

வாதப் பிரதி வாதங்களை ஏற்படுத்தக் கூடியதும், இலகுவில் மக்களின் உணர்வு களைத் தூண்டக்கூடியதுமான மத மாற்றம் என்னும் விடயம் பற்றிய தமது கருத்துக்களைப் பதிவு செய்யும் போது வரலாற்று ஆசிரியர்கள் முற்றும் புறவய நிலையில் செயற்பட முடியும் என எதிர்பார்ப்பது யதார்த்தத்திற்குப் புறம்பானதே. (Martin Quere, 1995 : vii ) எந்தவொரு மதத்தைச்சேர்ந்த வரலாற்று ஆசிரியரும் மதம் சார் விடயங்களில் தாம் கடைப்பிடிக்கும் மதத்தைச் சார்ந்து கருத் துக்களை முன்வைத்தல் இயல்பானதே. இப்பின்புலத்தில் போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் தயாரிக்கப்பட்ட ஆண்டறிக்கைகள் பக்கச்சார்பானவையாக அமைந் திருக்கும் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதே.

### ஈ) மறை பரப்பு நிகழ்வுகள் பற்றிய சுதேசிகளின் நிலைப்பாடு

இலங்கைத் திருச்சபையின் வரலாற்றுக் குறிப்புக்களை எழுதிய ஆசிரியர்கள் குறிப் பாகத் திருச்சபையின் பரம்பல், மறை பரப்புப் பணியாளரின் பணிகள் மற்றும் செயற்பாடுகள் அவர்கள் தம் சாதனைகள், அவர்கள் எதிர்நோக்கிய சவால்கள் மற்றும் இழப்புக்கள் என்னும் விடயங்களை மையப்படுத்தியே முழு வரலாற்றையும் நோக்கினர். இக்காலத்தில் சுதேசிகளின் சமய, சமூக, பொருளாதார, கலாசார நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்கள், சுதேச மக்களின் வாழ்வியலில் ஏற்பட்ட எதிர் மறையான தாக்கங்கள் பற்றிய பதிவுகளை அவர்கள் மேற்கொண்டிருக்கவில்லை. மேலும், இக்காலத்தில் சுதேசிகள் எதிர்நோக்கிய சவால்கள் பிரச்சினைகள் காரணமாக இவ்வாறான ஆவணங்களையும், குறிப்புக் களையும் அவர்கள் ஆக்குவதற்கு ஏற்ற அக, புறச்சூழல் இருக்கவில்லை என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

இதனால் கிறிஸ்தவர்களல்லாதோர் இக்காலத்தில் கொண்டிருந்த கருத்தையோ அல்லது அபிப்பிராயங்களையோ வரலாற்றுக் குறிப்புகள் வழி அறிய முடியாதுள்ளது. மேலும், முதன்மை ஆவணங்களை ஆக்கியோர் சுதேச மக்களின் சமூக, பொருளாதார, கலாசார, சமய பின்னணியிலும் ஏனைய முரண்பாட்டுப் பின்னணியிலும் நோக்கத்தவறியுள்ளனர். இத்தகவல்களைத் திரட்டியதும், தொகுத்து எழுதியதும் மிசனறிமாரே. இக்காலத்து நிகழ் வுகள் பற்றிக் கூறும் ஆவணங்கள் அல்லது குறிப்புகள் எவையும் சுதேசிகளினால் எழுதப்படவில்லை. பொதுவாக ஆவணங் களைப் பேணுவதில் அதிக அக்கறை காட்டிய ஐரோப்பிய மிசனறிமார் தங்கள் காலத்து சுதேசிகளின் கருத்துக்கள் இங்கு இடம் பெறு வதற்கு வசதிகள் ஏற்படுத்தாமை பெருங் குறைபாடாகும்.

### உ) அரசியல் வாணிப இலக்கும் மறை அறிவிப்பும்

போர்த்துக்கல் மன்னனுக்கு தன் நாட்டின் ஆட்சி அதிகாரத்தை அகலப்படுத்தி, வாணிப மையங்களை அதிகரித்து, பொருளா தாரத்தைப் பெருக்குவது முக்கிய இலக்கா யிருந்தது. இந்த இலக்கை அடைவதற்கு கிறிஸ்தவ மறைபரப்புதல் ஒரு சாதகமாகப் பயன்படுத்தப்பட்டது. பல ஆசிய நாடு களுக்குக் கிறிஸ்தவம் பரப்பப்பட்டமை ஐரோப்பிய காலனித்துவ மேலாதிக்கச் செயற்பாடுகளின் ஓர் அங்கமாகவே கணிக்கப்பட்டது. காலனித்துவக் காலத்து மறைபரப்புப் பணிகளில் மிசனறிமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று இராணுவத்தினரும், ஏனைய சிவில் அதிகாரிகளும் தம் உயர் அதிகாரிகளின் நன்மதிப்பையும் பதவி உயர்வையும் இலக் காகக் கொண்டு செயற்பட்டமை மறுக்க முடியாத உண்மையாகும். அதே வேளை, சிவில் அதிகாரிகள் மிசனறிமாருக்கு அதிக உதவிகளையும் ஆதரவையும் வழங்கினர் என்பதும் கருத்திற் கொள்ளப்பட வேண் டிய விடயமாகும். (V. Perniola, 1989: xiii) மிசனறிமார் சிவில் அதிகாரிகளின் முகவர் களாகச் செயற்பட்ட நிலையும் அதிகம் காணப்படுகின்றது. மேலும் இராணுவத்தினர் பொருளாதார நிலையில் மக்களை அதிகம் சுரண்டுபவர்களாகச் செயற்பட்டதுண்டு. இப் பின்புலத்தில், மிசனறிமாரையும் இராணுவத்தினரையும் ஒரே அங்கமாகவே நோக்கினர். இந்த நிலை மறை அறிவிப்பு செயற்பாடுகளுக்குப் பின்னடைவையே ஏற்படுத்தியது. எனவே, இவ்விடங்களை முன்வைக்கும் ஆவணங்கள் கூறும் விடங் களுக்கு எவ்வாறு பொருள் விளக்கம் அளிப்பது என்பது மிகச்சிக்கலான விடயமே.

### ஊ) கிறிஸ்தவத்தை தழுவிய மக்களின் நோக்கங்களை பற்றிய ஆவணங்கள்

புதிதாக கிறிஸ்தவத்தைத் தழுவிய மக்களின் நோக்கத்தை ஆராயும்போது எல்லோரும் மதக் கோட்பாட்டில் கொண்ட ஆர்வத்தினால் இதய சுத்தியுடன் சுயமாக மதம் மாறினார்கள் என்னும் கருத்தியலுக்கு முரண்பாடான தகவல்களையே போர்த்துக்கேயர் காலத்து வரலாறு கூறும் ஆவணங்கள் முன்வைக்கின்றன. பலர் அரசியல், பொருளாதார, சமூக அங்கீகா ரம் என்னும் சலுகைகளை இலக்காகக் கொண்டே மதம் மாறியிருக்கின்றார்கள். அரச குடும்பத்தவர்களின் மதமாற்றம் அரசியல் இலாபத்தை இலக்காகக் கொண்ட நிகழ்வுகளாகத் தென்படுகின்றன.

### எ) சுதேச சமயங்களைப் பற்றித் தவறான கருத்து

இக்காலங்களில் பணியாற்றிய மிசனறி மாரும் சுதேச சமயங்களைப் பற்றித் தவறான கருத்தையே கொண்டிருந்தனர். மீட்புப் பற்றிச் சமகாலத் திருச்சபையும் தவறான கருத் தையே கொண்டிருந்தது. திருச்சபைக்குப் புறம்பாக எவரும் மீட்புப் பெற முடியாது என்பதே திருச்சபையின் படிப்பினையாக அக்காலத்தில் பேணப்பட்டது. மேலும் சுதேச மதக் கோட்பாடுகள், வழிபாடுகள் பற்றித் தவறான கருத்துக்களைக் கொண்டி ருந்தனர். (Martin Quere, 1995:214) வரலாற்று நிகழ்வுகளுக்குப் விளக்கமளிக்கும் போது சமகாலத்து சுதேச மக்களின் சிந்தனைப் போக்குகளும் செயற்பாடுகளும் கருத்திற் கொள்ளப்படுதல் முக்கியமானதாகும். மிசனறிமார் ஆசிய நாடுகளுக்கு கிறிஸ்தவ மறையைப் பரப்பும் நோக்குடன் வருகை தந்தாலும் சமகாலத்தில் காணப்பட்ட ஏனைய தளவிசைகள் காரணமாக சுதேசிகள் அரசியல் சுதந்திரத்தை இழந்தவர்களாவும் சுரண்டப் பட்டவர்களாகவும், சுதேச பண்பாடுகளை அவற்றின் தனித்துவத்தோடு பேணிக்காப்பதில் பல சவால்களை எதிர் நோக்கியவர்களாகவும் விளங்கினர். இதனால் பாரம்பரிய இந்துக்கள், பௌத்தர்கள் மத்தியில் இன்றும் இவ்வாறான செயற்பாடுகளின் எதிர்வினைத்தாக்கங்கள் உணரப் படுகின்றன.

### ஏ) இலங்கை மன்னர்களின் ஆவணங்கள்

இலங்கை மன்னர்களுக்குப் போர்த்துக் கேயர்களே எழுத்தாளர்களாகப் பணியாற் றினார். போர்த்துக்கேய மொழியை எழுதப் படிக்க தெரியாத இலங்கை மன்னர்கள் போர்த்துக்கேய மொழியில் எழுதப்பட்ட விடயங்களின் பொருள் புரியாதவர்களாகக் கையொப்பமிட்டுள்ளார்கள். இதனை இலங்கை மன்னன் விக்கிரமபாகு தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். (V.Pernila 1989: 187-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

188) இதே கருத்துப்பட டோமினிக்கன் சபைத் துறவியான டியோகு பேர்மூடொஸ் (Diego Bermudez) கூறியுள்ளார். அதன்படி, போர்த்துக்கல் மன்னனின் சலுகையைப் பெறுவதற்கு இலங்கையிலிருந்து மிசனறிமாரால் அனுப் படும் கடிதங்களில் அவர்கள் தம் பணிகள் பற்றி மிகைப்படுத்தப்படதான உண்மைக்குப் புறம்பான விடயங்கள் கூறப்படுவதாகக் கூறியுள்ளார். (V.Perniols, 1989: 283 - 284 )

**ஐ) புள்ளி விபரத்தின் நம்பகத்தன்மை.**

இலங்கையிலிருந்து போர்த்துக்கல் மன்னனுக்கு அனுப்பப்பட்ட ஆவணங்களில் கத்தோலிக்க மறையைத் தழுவிய மக்களின் எண்ணிக்கை குறிப்பிட்டுள்ளது. இவை மிகைப்படுத்தப்பட்ட எண்ணிக்கை என்பது தெளிவாகத் தென்படுகின்றது. இதனைச் சமகாலத்து சூழற் பின்னணியில் நோக்கும் போது ஆவணங்களில் கூறப்பட்டுள்ளவாறு ஏற்றுக்கொள்வது கடினமானதே. இதற்கு எடுத்துக்காட்டாக 1556 இல் இலங்கையின் தென் பகுதியில் 70,000 கரையார் குலத்தவர்கள் திருமுழுக்குப் பெற்றதாகக் கூறப்படும் எண்ணிக்கையின் நம்பகத்தன்மையை பேணியோலே அடிகள் புறவற நிலையில் விமர்சித்துள்ளார் (V.Perniola, 1989: 347-348). இவ்வாறு பொதுத்திருமுழுக்கு மக்களைப் போதிய நிலையில் ஆயத்தம் செய்ய முடியுமா? என்பது நியாய பூர்வமான கேள்வியாகும். பெரும்பாலும் இதனைக் கருத்திற் கொண்டே 1585 இல் இடம்பெற்ற கோவா மாகாண மாநாட்டில் (the provincisial council goa) இல் பொதுத் திருமுழுக்கு நூறு பேருக்குள் மட்டுப்படுத்த வேண்டும் என்னும் ஒழுங்கு பிறப்பிக்கப்பட்டமை நோக்கப்பட்ட வேண்டியது (Martin Quere, 1995 : 182 )

**ஏ) புதிய மறையைத் தழுவியோரின் நோக்கம்**

இலங்கையில் கத்தோலிக்க மறையை அறிமுகம் செய்த போர்த்துக்கேய மறைபரப்பாளர்கள் புதிய மறையின் கோட்பாடுகளை மக்களுக்கு எடுத்துரைப்பதற்கு சுதேசிகளின் மொழி பற்றிய அறிவு இல்லாதவர்களாகவே காணப்பட்டனர். அத்தோடு, சுதேச மொழிகளான தமிழ், சிங்கள மொழிகளைக் கற்றவர்களாக மிகச்சிலரே காணப்பட்டனர். இதனால் மறைப்பணியாளர்கள் மொழி பெயர்ப்பாளர்கள் போர்த்துக்கேயத்திலும், சுதே மொழிகளிலும் போதுமான புலமையும் கத்தோலிக்க மறையின் கோட்பாடுகள், படிப்பினைகள் பற்றிய அறிவும், மொழி பெயர்ப்பைச் செவ்வனே செய்வதற்கு ஏற்ற பின்புலத்தைக் கொண்டிருந்தனரா என்னும் கேள்வி இங்கு பொருத்தமானது.

இப் பின்புலத்தில் மத மாற்றம் பற்றி நோக்கும் போது ஆரம்பத்தில் கிறிஸ்தவத்தைத் தழுவியவர்கள் பல்வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகின்றது. இதில் அரசியற் தந்திரோபாயங்கள் முக்கியமானவையாகத் தென்படுகின்றன. இதற்கு சான்றாக ஆவண ஆதாரங்கள் பலவற்றை முன்வைக்கலாம்.

i) நூனோ அவ்வாறிஸ் பெரோ (Nuno Alvarez Perera) என்றும் போர்த்துக்கேயர் 1542 இல் நீர் கொழுப்பிலிருந்து கண்டி சென்று கண்டி மன்னனின் ஆலோசகராகப் பணியாற்றியவர். போர்த்துக்கேயரின் உதவியைப் பெறுவதற்கு திருமுழுக்குப் பெறும்படி கண்டி மன்னன் விக்கிரமபாகு என்பவருக்கு அறிவுரை வழங்க, அதன்படி மன்னனும் மற்றும் நெருங்கிய ஐந்து அதிகாரிகளும் திருமுழுக்குப் பெற்றனர். எனினும் திருமுழுக்கின் பின்பும் பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர்களாகவே அவர்கள் காணப்பட்டனர் (V.Perniloa, 1989: 131-132)

ii) தர்மபாலனின் தந்தை விதிய பண்டார கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட போது திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவத்தைத் தழுவுவதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமே, சிறையிலிருந்து விடுதலை பெறமுடியும் என்பதை நன்குணர்ந்து, 1552 இல் திருமுழுக்குப் பெற்றான். எனினும் சிறையிலிருந்து வெளியேறியவுடன் கிறிஸ்தவர்களையும், மிசனறிமாரையும் கடுமையாகத் தாக்கிப் பழிவாங்கினான். (V.Perniola 1989 : 316 - 317)

iii) கண்டி மன்னன் ஜெய வீர (1511- 1552) சீதாவாக்கை மன்னன் மாயாதுன்னையின் (1521-1581) அச்சுறுத்தல் காரணமாக போர்த்துக்கேயரின் உதவியை நாடினான். இந்த உதவியைப் பெறுவதற்குதிருமுழுக்குப் பெறுவதே ஒரே வழியென உணர்ந்து திருமுழுக்குப் பெற்றான். எனினும், போர்த்துக்கேயரின் எதிர்பார்க்கப்பட்ட உதவி தாமதமாகவே, கிறிஸ்தவர்களுக்கும் மிசனறிமாருக்கு எதிராகச் செயற்பட்டு அவர்களைத் தாக்கினான் (V.Perniola, 1989: xiii)

iv) சங்கிலி மன்னனின் சகோதரன் பரநிருப சிங்கம் தனக்கு யாழ்ப்பாண இராச்சியம் கிடைக்குமாயின் கிறிஸ்தவ மறையைத் தழுவ உடன்பட்டான்.(V.Perniola, 1989: xiii)

இவர்களில் புவனேகபாகு மட்டுமே எந்தவித நெருக்குதல்கள் மத்தியிலும் பௌத்த மதத்தைத் துறப்பதற்கு மறுப்புத் தெரிவித் ததோடு தம்மதத்திற்காகத் தனது அரசையும் துறப்பதற்குத் தயாராகியிருந்தார்.

v) அதே வேளையில் சமூக அரசியல் நலன்களுக்காக மதம் மாறியோருமுண்டு. இலங்கையின் வடபகுதியில் மன்னன் இந்து மதத்தைக் கடைப்பிடித்த போது மக்களும் அவ்வாறே காணப்பட்டனர். தென்பகுதியில் மன்னர்கள் பௌத்த மதத்தைக் கடைப்பிடித்த போது மக்களுக்கும் பௌத்தர்களாக விளங்கினார். போர்த்துக்கேயர் ஆட்சியாளர்களாயிருந்த போது மக்களும் ஆட்சியாளரின் மதமாகிய கத்தோலிக்கத்தைக் கடைப்பிடித்தனர். எனினும் கண்டியில் மன்னனின் மதம் பௌத்தமாயிருந்தமையினால் மக்களும் பௌத்தத்தைக் கடைப்பிடித்தனர். ஒல்லாந்தர் ஆட்சியில் சீர்திருத்த மதத்தையும், ஆங்கிலேயர் ஆட்சியில் ஆங்கில நாட்டு மதத்தையும், சுதந்திரத்தின் பின்னர் மீண்டும் இந்து பௌத்த மறுமலர்ச்சி ஏற்பட்டபோது மக்கள் மீண்டும் இம் மதங்களைக் கடைப்படித்தமை இதனைச் சுட்டி நிற்கின்றது.

vi) பொருளியல் சார் வாய்ப்புக்களைப் பெருக்கும் நோக்குடன் மதம் மாறிய சம்பவங்களுமுண்டு. பாரம்பரியமாக இலங்கையில் மக்கள் மன்னனுக்கு செலுத்தும் வரியின் வடிவமாக அரச ஊழியம் என்னும் முறைமை காணப் பட்டது. இது ஊழியமற்ற நிலையில் மக்கள் மன்னனுக்கு ஆற்றும் ஊழியமாகும். எனினும், கிறிஸ்தவர்களுக்கு இவ்வாறான கட்டாயக் கடமையிலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டது. இச்சலுகையைப் பெறும் பொருட்டு மதம் மாறியவர்களுமுண்டு. இவ்வாறே வேறு சலுகைகளுக்காக மதம் மாறியவர்களுமுண்டு. தாங்கள் பாரம் பரிய மதங்களில் இருந்த போது இழந்த அந்தஸ்த்தைப் பெறுவதற்காகவும் மதம் மாறியவர்களுமுண்டு.

vii) பெரும் குற்றங்களிலிருந்து தப்புவதற்காக மதம் மாறியவர்களுமுண்டு. இதனை புவனேகபாகு 12 நவம்பர் 1545 இல் போர்த்துக்கேய ஆளுனர் ஜெவாவோ டீ கஸ்ரோ (joao de castro) என்பவருக்கு எழுதிய கடிதத்திலிருந்து அறியக் கூடியதாயுள்ளது. சிலர் களவு கொலை போன்ற குற்றங்களிலிருந்து தப்புவதற்கு கிறிஸ்தவத்திற்கு மாறியதாகக் கூறியுள்ளார். மதத்தின் மட்டிலுள்ள உண்மையான பற்றினால் மதம் மாறுவதற்கும் தாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்பில்லையெனவும் தெளிவாகத் தமது மடலில் கூறியுள்ளார். (V.Perniola 1989:94-95)

viii) போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் பல்வேறு நோக்கங்களுக்காக மக்கள் கத்தோலிக்க மறையைத் தழுவிய போதும் மறையின் கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்டு மதம் மாறியவர்களுமுண்டு. இதற்குச் சான்றாக மன்னார் மறை சாட்சிகள் சம்பவத்தையும் ஒல்லாந்தர் ஆட்சியின் போது பல நெருக்குவாரங்கள் மத்தியிலும் மக்கள் இரகசியமாகப் பல ஆபத்துக்கள் மத்தியிலும் மதத்தைக் கடைப்பிடித்தமையையும் உதாரணமாக முன்வைக்கலாம்.

போர்த்துக்கேயர் காலத்து நிகழ்வுகள் பற்றி கூறும் பல ஆவணங்கள் காணப்படுகின்ற போதும் இங்கு மூன்று ஆவணங்கள் மட்டும் எடுத்துக்காட்டாக முன்வைக்கப்பட்டுகின்றன.

**மூன்று ஆசிரியர்களின் ஆவணங்கள் பற்றிய குறிப்புக்கள்**

**அ) பேரணியோலா அடிகள்**

**(Fr.Vgito Perniola S.J.)**

இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சி நிலவிய காலத்தில் இங்கு கத்தோலிக்க மறையைப் பரப்புவதில் பிரான்சிஸ்கன் சபை, இயேசு சபை, டோமினிக்கன் சபை, அகுஸ்தினார் சபை துறவிகளினது பல மடங்கும் பணி தள இல்லங்களும், கோவா மாநிலத்தில் இருந்துள்ளன. சமகாலத்தில் இலங்கையில் பணியாற்றிய துறவிகள் கோவாவிலும் லிஸ்பனிலுமுள்ள அவர்கள் தம் சபைசார் குருக்களுக்கும் சபையின் மேலாளர்களுக்கும் மறை பரப்பும் பணிகள் தொடர்பான தம் அறிக்கைகளையும் தகவல் களையும் அனுப்பியுள்ளனர். இவ்வாறு அனுப்பப்பட்டுள்ள ஆவணங்கள் சில கோவாலிலும் சில லிஸ்பனிலும் பொதுவாக எல்லாப் பிரதிகளும் உரோம் நகரிலுமுள்ள அவர்களது சபையின் ஆவணக்காப்பறைகளில் பேணப்பட்டுள்ளன. இவற்றுள் கோவா விலுள்ள சில ஆவணக்காப்பகங்கள் தீயி னால் அழிந்த போது பெறுமதிமிக்க ஆவணங்களும் அழிந்து போயிருக்கின்றன என்பதும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். எனினும், சில இயேசு சபையினர் தங்கள் சபையினைச் சார்ந்த மிசனறிமாரினால் அனுப்பப் பெற்ற ஆவணங்களின் பிரதிகளை லிஸ்பன், உரோம், போன்ற நகர்களிலுள்ள ஆவணக்காப்பகங்களில் பேணியமையினால் அச்சபையினரின் பணிகள் தொடர்பான தகவல்களைப் பெற்ற முடிகின்றது.

போர்த்துக்கேயர் காலத்து இலங்கைத் திருச்சபை வரலாற்றைக் கற்கும் மாணவர்கள் முதன்மை ஆவணங்களிலிருந்து தகவல்களைத் திரட்டுவதற்கு அதிக வசதிகளை ஏற்படுத்தி யவராக இயேசு சபையைச் சார்ந்த அருட் பணிவிற்ரோ பேணியோலோ அடிகள் காணப் படுகின்றார். குறைறோஸ், திரினாடே ஆகிய இரு வரலாற்று ஆசிரியர்களும் பொருள் விளக்க வரலாற்று நூலை ஆக்கிய போது பேணியோலா அடிகளின் பங்களிப்பானது முக்கியமானதாக இருந்தது. இவர் போர்த்துக்கேய வரலாறு கூறும் பல முக்கிய ஆவணங்களிலிருந்து திரட்டிய பகுதிகளைத் தொகுத்துத்தந்துள்ளார். இதனால் நிகழ்வுகள் பற்றிக்கூறிய வரலாற்று ஆசிரியர்களின் கருத்துக்களை ஆய்வாளர்கள் நேரடியாகவே அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கின்றது. போர்த்துக்கேயர் காலத்து வரலாறு கூறும் ஆவணங்கள் பேணப்படுகின்ற எல்லா ஆவணக் காப்பகங்களுக்கும் சென்று முக்கிய ஆவணங்களை ஆராய்ந்து இலங் கைத் திருச்சபை பற்றித் தீர்க்கமானதும் தெளிவானதுமான கருத்தை ஏற்படுத்த கூடிய ஆவணங்களிலிருந்து தகவல்களைத் திரட்டி முன்வைத்துள்ளார். இதில் உரோம், லிஸ்பன், கோவா ஆகிய மூன்று இடங்களிலுமுள்ள ஆவணக்காப்பகங்கள் முக்கியம் பெற்றவையாகும். எனினும் போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்துக்கல்லிலுள்ள ஆவணக் காப்பகங்களில் பெரும் தொகையிலான ஆவணங்கள் காணப் படுவதாகவும், எல்லாவற்றையும் படிப்பதற்கு காலம் தேவை என்பது பேணியோலா அடிகள் கருத்து. இருப்பினும், எதிர்காலத்தில் இலங்கைத் திருச்சபை வரலாறு பற்றி புதிய ஆவணங்கள்கண்டு பிடிக்கப்படினும் அவற்றின் வழியாகப் பெறப்படும் கருத்துக்கள் இலங்கைத் திருச் சபை பற்றியும் கத்தோலிக்க மறையைப் பரப்புவதில் மிசனறிமாரின் பங்களிப்புப் பற்றியும் சுதேசிகளின் கொண்டுள்ள கருத்தில் பெரும் மாற்றம் ஏற்படப் போவதில்லை என்பது பேணியோலா அடிகளின் கருத்து...

பேணியோலா அடிகள் போர்த்துக்கேயம், இலத்தீன் ஆகிய மொழிகளிலுள்ள ஆவணங் களை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்புச் செய்து "the Catholic Church in Sri Lanka, the Portuguese period, Vol, 1505-1565, Vol, 11, 1566-1619, vol, 111, 1620-1658" 1989, 1991, 1991 ஆண்டுகளில் கொழும்பில் வெளியிட்டுள்ளார். பேணியோலா அடிகள் வெளியிட்டுள்ள மூன்று தொகுதிகளிலும் போர்த்துக்கேயர் காலத்து இலங்கைத் திருச்சபையின் வரலாற்று நிகழ்வுகள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய ஆவணங்கள் பற்றிய குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

இப்பின்னணியில் முதன்மை ஆவணங் களை எழுதியவர்கள் யாவர் என்னும் வினா எழுகின்றது. இவர்கள் வாழ்வின் பல்வேறு நிலைகளில் உள்ளவர்கள். இவர்களில் திருத்தந்தையர்கள், ஆயர்கள் குருக்கள், அரசர்கள், சிவில் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், இராணுவத்தினர், கற்றோர், சாதாரணமக்கள் எனப் பலவகைப்பட்டோர் அடங்குவர். இவர்கள் ஒவ்வொரு பகுதியின ரும் தத்தமது நோக்கிலேயே தமது கருத்துக் களை சுதந்திரமாக வெளியிட்டுள்ள போதும் இவர்கள் அனைவரும் கத்தோலிக்க மதச்சார் புள்ளவர்கள் என்னும் பின்னணியிலே இவர்கள் முன்வைத்துள்ள கருத்துக்கள் நோக்கப்படுதல் பொருத்தமானது.

**ஆ) பேனோ டீ குவைறோஸ்**
**(Fr. Fernao de Queyroz)**

போர்த்துக்கேயரான பேனோ டீ குவை றோஸ் (Fernao de Queyroz) (கி.பி *1617-1688)* இந்தியாவிற்கு வந்து இயேசு சபையில் இணைந்து மெய்யியல், இறையியல், கற்கை களை மேற்கொண்டு, குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். எனினும் தாம் திரட்டிய வரலாற்றுத் தகவல்களைக் கொண்டு கி.பி *1671-1687* ஆகிய காலப்பகுதியில் Conquista Temporal Espiritual de Ceilao (the Temporal and spiritual Conquest of ceylon) என்னும் நூலைப் போர்த்துக்கேய மொழியில் *1961* இல் வெளியிட்டார். இதனை*1930* இயேசுசபையைச் சார்ந்த இலங்கையர், எஸ். ஜி. பெரோா அடிகள் ஆங்கிலத்திற்கு மொழி பெயர்ப்புச் செய்து வெளியிட்டார். இந்நூலை ஆக்குவதற்கு இதன் ஆசிரியர் பிரசுரிக்கப்பட்ட, பிரசுரிக்கப்படாத, மூலகங்களையும் இலங்கையிலிருந்து இந்தியாவிற்குத் திரும்பியவர்களிடமிருந்து பெறப்பட்ட செய்திகளையும் ஆதாரமாகக் கொண்டார். இவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கைக்கு வந்திருக்கவில்லை. எனினும், தாம் சேகரித்த மற்றும் பிறர் வழங்கிய தகவல்களிலிருந்தே தனது நூலை ஆக்கி யிருக்கின்றார். போர்த்துக்கேயர் ஒல்லாந்த ரிடம் இலங்கையை இழந்தமை இறைவனின் சாபம் எனத் தமது கருத்தினைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

இந்நூல் இலங்கைத் திருச்சபை வரலாற்றைக் கூற எழுதப்பட்டாலும் இதில் கட்டுக்கதைகள், புதுமைகள் பல விபரிக்கப்படுகின்றன என்பது சில வரலாற்றாசிரியர்களின் கருத்தாகும். இவ்வாறாகக் கட்டுக்கதைகள், புதுமைகள் இடம் பெறுவது வரலாற்று இலக்கியத்தின் நம்பகத்தன்மையை வெகுவாகப் பாதிக்கும். இலக்கியத்தில் பரவலாக ஆசிரியரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கல் நாட்டு தேசப்பற்றும், கத்தோலிக்க சமயப்பற்றும் மேலோங்கிக் காணப்படுகின்றது. இவரது நூல் கத்தோலிக்க மறை பற்றி மட்டும் கூறாது இலங்கையின் அரசியல், இராணுவ, பொருளாதார, சமூக நிலைகள் பற்றியும் கூறுகின்றது.

இது 1671 இற்கும் 1687 இற்கும் இடைப்பட்ட காலத்தில், ஆறு பாகங்களைக் கொண்ட மூன்று தொகுதிகளாக எழுதப்பட்டது. இதனை ஆக்குவதற்கான விடயப் பொருளை இதன் ஆசிரியர் அச்சு வடிவத்தில் தோன்றிய சில ஆவணங்களையும், கையெழுத்து ஆவணங்களையும். இலங்கையில் பணியாற்றிய சபைக்குருமார் அனுப்பிய ஆண்டறிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட விடயங்களையும், இலங்கையில் போர்த்துக்கேய ஆட்சியின் போது இடம் பெற்ற நிகழ்வுகளைப் பற்றிய அனுபவங்களைப் பெற்றவர்களோடு, நடத்திய உரையாடல் வழியாகவும் சில தனியாட்களின் கடிதங்களிலிருந்து பெற்ற தகவல்களையும் ஆதரமாகக் கொண்டு திரட்டியுள்ளார். Farnodo dr Queyroz கோவா மாநிலத்தில் இயேசு சபை முதல்வராகப் பணியாற்றியவர் (V.Perniola, 1989: xiii)

### இ) போலோ தெ திரினிடாடே (Paulo da Trinidade)

பிரான்சிஸ்கன் சபை மிசனறிமாரின் பணிகள் பற்றிய தகவல்களை வழங்கும் நூலாக பிரான்ஸ்சிஸ்ன் சபைத்துறவியான போலோ தெ திரினிடாடே (Paulo da Trinidada) என்னும் வரலாற்று ஆசிரியர் எழுதிய 'Conquista Espiritual do Oriente' (the Conquest of the East) என்னும் நூல் விளங்குகின்றது. இந்நூலை ஆக்குவதற்கான பாடப் பொருளை இந்நூலின் ஆசிரியர் கோவாவில் இருந்து பிரான்சிஸ்கன் மிசனறிமாரின் ஆவணக் காப்பறையிலிருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டும், (அதாவது இச்சபையினரது கோவாவிலிருந்த ஆவணக் காப்பகம் எரிவதற்கு முன்பு அங்கிருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டும்), தாம் இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டு, திரட்டிய தகவல்களைக் கொண்டும் ஆக்கியுள்ளார். இந்நூல் ஆக்கப்பட்ட காலத்தில் 1632 இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சி இடம்பெற்றுக் கொண்டிருந்தது என்ற வகையில் இந்நூலில் பல முக்கிய தகவல்கள் ஆசிரியராலேயே திரட்டப்பட்டன எனக் கொள்ள இடமுண்டு. இந்நூலின் ஆசிரியர் பிரான்சிஸ்கன் சபையின் commissary general ஆக கோவாவில் பணியாற்றியவர். இந்நூலின் சில பகுதிகள் இயேசு சபையைச் சேர்ந்த எஸ். ஜி. பெரோரா அடிகள் Antiquary and Literacy Registrar என்னும் இதழில் ஆங்கில மொழிபெயர்ப்பாக வெளியிட்டுள்ளார்.

போலோ தெ திரினிடாடே (Paulo da Trinidade) என்னும் பிரான்சிஸ்கன் சபைத்துறவி Conquesta Expiritual do Oriente (the Conquest of the east) என்னும் நூலை 1634 இல் போர்த்துக்கேய மொழியில் மூன்று தொகுதிகளாக எழுதினார். இலங்கை பற்றிக் கூறுகின்ற இதன் மூன்றாம் தொகுதி 56 அத்தியாயங்களைக் கொண்டு காணப்படுகின்றது. இப்பகுதியினை மேனாள் சிலாப மறை மாவட்ட ஆயர் எட்மன் பீரிஸ் அ.ம.தி அவர்களும், பங்களூர் பிரான்சிஸ்கன் துறவிகள் பெரிய குருமடத்தில் திருச்சபை வரலாற்று விரிவுரையாளர், வண. மீஸ்சமான் அவர்களும் இணைந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்ப்பு செய்து 1972 இல் வெளியிட்டுள்ளனர்.

இலங்கையில் முதன் முதலில் கத்தோலிக்க மறையைப் பரப்பியவர்கள் பிரான்சிஸ்கன் சபைத்துறவிகளாகும். ஆரம்ப காலங்களில் இவர்கள்பலசிறந்த சேவைகளை ஆற்றியவர்கள். எனினும், இந்நூல் எழுதப்பட்ட காலத்தில் பிரான்சிஸ்கன் சபைத்துறவிகளின் பணி ஆர்வம் அதிகம் குன்றிவிட்டதாகப் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

மட்டங்களிலிருந்தும் குற்றச்சாட்டுக்கள் எழுந்த வண்ணமிருந்தன. இப்பின்புலத்தில் இச்சபைத் துறவிகளின் நிலையத் தற்காப்ப தற்காக இந்நூல் எழுதப்பட்டுள்ளது . என ஆங்கில மொழிபெயர்ப்புக்கு முன்னுரை எழுதிய ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்நூலை ஆக்குவதற்கான தகவல்களைத் திரட்டுவதில் இந்நூலின் ஆசிரியருக்குப் போதிய பின்புலம் இருந்திருக்கின்றது. இவர் கோவாவில் பெரிய குருமட விரிவுரையாள ராகவும் கோவாவின் பேராயராகவும் பல பகுதிகளுக்கும் நேரடியாகச் சென்றதுடன் பல நூல்களையும் ஆவணங்களையும் படிக்கும் சந்தர்ப்பத்தைப் பெற்றார். இந்தியாவிலும் இலங்கையிலும் ஏனைய கிழக்கு நாடுகளிலுள்ள சபைக்குருமாரின் தலைவராகச் செயற்பட்டமையும் அவருக்கு வாய்ப்பினை வழங்கியிருக்கின்றது. சபையைச் சார்ந்த ஏனையோரிடம் கலந்துரையாடியும் தகவல்களைப் பெற்றுள்ளார். இலங்கையில் பணியாற்றிய பிராசிஸ்கோ நொக்கிறாவோ என்பவரின் உதவியும் இவருக்குக் கிடைத் திருக்கும் என்பதிற் சந்கேகமில்லை

இதன் மூலப்பிரதியின் நிழற்பிரதியை யாழ். மறைமாவட்டத்தைச்சேர்ந்த கருணாகரன்அடிகள் தமக்கு வழங்கியதாக மொழிபெயர்ப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். Edmund peiris & A.Meesrsaman, (1972) early Chistianity in Ceylon: a 17th Century Narrative , Colombo, p.12)

**நிறைவுரை**

போர்த்துக்கேயர் காலத்து ஆவணங் களுக்குப் பொருள் விளக்கம் அளிப்பதில் பல சவால்களும், சிக்கல்களும் எதிர்நோக் கப்படுகின்றன என்பதற்கு மேற்கூறப் பட்ட விடயங்கள் ஆதாரங்களாக அமை கின்றன. குறிப்பாகப் பத்துருவாதோ உடன்படிக்கையின் கீழ் இலங்கையில் பணியாற்றிய மிசனறிமார். இராணுவ, சிவில் அதிகாரிகள் போத்துக்கல் மன்னனை மகிழ்வித்து அவனது நன்மதிப்பைப் பெறும் நோக்குடன் ஆவணங்களை ஆக்கியுள்ளனர். ஆய்வுக்குட்படுத்தப்படுகின்ற ஆவணங்களை ஆக்கியோர் போத்துக்கேயராக விளங்கிய தோடு மட்டுமல்லாது போர்த்துக்கேய மேலாண்மை நிலையைப் பேணியமையும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும். மேலும் இது விடயம் தொடர்பாக சம காலத்து சுதேசிகளின் கருத்துக்களை அறிய சான்றுகள் எதுவும் கிடைக்காமை மற்று மொரு சிக்கலமான விடயமாகும்.

கத்தோலிக்க மறையைத் தழுவியவர்கள் பல்வேறு நோக்கங்களால் உந்தப்பட்டு மறையைத் தழுவியுள்ளார்கள். அத்துடன் பணியாற்றிய மிசனறிமாரும் சுதேசமதங்களைப் பற்றித் தவறான விளக்கம் கொண்டவர்களாக விளங்கினர். திருச்சபைக்குள்ளேயே ஒருவர் மீட்புப்பெற முடியும் என்னும் கருத்தைத் திருச்சபை வலியுறுத்தியிருந்தது. இலங்கையிலி ருந்து போர்த்துக்கல் மன்னனுக்கு அனுப்பப் பட்ட ஆவணங்களை ஆக்கியவர்கள் போர்த்துக்கேயரே . அந்த ஆவணங்களில் என்ன விடயங்கள் கூறப்பட்டுள்ளன என் பதைப் புரியாமலேயே இலங்கை மன்னர்கள் கையொப்பமிட்டுள்ளனர். ஆவணங்களில் இடம் பெறும்புள்ளி விபரங்கள் மிகைப் படுத்தப்பட்டவையாக இடம்பெறுகின்றன. இப்பின்புலத்தில் போர்த்துக்கேயர் ஆட்சியின் போது இலங்கையில் இடம்பெற்ற மதமாற்றங்கள் எல்லாம் உண்மையான மதமாற் றங்கள் எனக் கூறுவதில் பெரும் முரண்பாடுகள் உண்டு என்பதைத் தயக்கமின்றிக் கூற முடியும். எனினும், மன்னர் மறை சாட்சிகள் நிகழ்வும் ஒல்லாந்தர் ஆட்சியில் கடும் நெருக்குவாரங்கள், எச்சரிக்கைகள் மத்தியிலும் கத்தோலிக்கம் இரகசியமாகக் கடைப்பிடிக்கப்பட்டமை உண்மை மத மாற்றங்களும் இடம்பெற்றன என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இந் நிலையில் போர்த்துக்கேயர் காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் கத்தோலிக்க மறையின் பரம்பல் தொடர்பாக ஆக்கப்பட்ட ஆவணங்களுக்குப் புறவய நிலையில் விளக்கமளிப்பதில் அதிக சிக்கல்களும் சாவல்களும் உண்டு என்பதும் தெளிவாகின்றது.

## Bibliography


1. Perniola V. (1989).The Catholic Church in Sri Lanka : The Portuguse Period, Vol I : 1505 - 1565, Dehiwala Tisara Prakasakya Ltd.
2. _____ (1991). The Catholic Church in Sri Lanka : The Portuguse Period, Vol II : 1566 - 1619, Dehiwala Tisara Prakasakya Ltd.
3. _____ (1991). The Catholic Church in Sri Lanka : The Portuguse Period, Vol III : 1620 - 1658 Dehiwala Tisara Prakasakya Ltd.
4. Queyroz, Fernao de, (1930) The Temporal and Spiritual Conquest of Ceylon, trans. by S.G.Perera, Colombo : Catholic Press.
5. Don Peter W.L.A(1978) Education in Sri Lanka under the Portuguese, Colombo: Catholic Press.
6. Quere, M. (1995) Christinanity in Sri Lanka under the Portuguse 1597 - 1658, Colombo: Catholic Press
7. Boudens, R. (1957) The Catholic Church in Ceylon Under Dutch Rule, Rome: Catholic Book Agency
8. Gastan Perera C. (2009). The Portuguse Missionary in 16th and 17th Century Ceylon: The Spiritual Conquest Sri Lanka : Vijitha Yapa Publications.
9. சிவசாமி வி. போலோ த திரினிதாதேயின் கொங்குவிஸ்தா', பதிப்பாசிரியர் க. அருந்தவராஜா, (2014) வரலாற்றுக் கட்டுரைகளின் தொகுப்பு, அஞ்சு வெளியீடு.
10. சிவசாமி வி 'குவேறோஸ்', பதிப்பாசிரியர் க.அருந்தவராஜா, (2014) வரலாற்றுக் கட்டுரைகளின் தொகுப்பு, அஞ்சு வெளியீடு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டு யுத்தத்திற்குப் பின்னர் இலங்கையில் நல்லிணக்கத்தினை கட்டியெழுப்புதல் : சவால்களும், சந்தர்ப்பங்களும்

த. கிருஷ்ணமோகன்

**ஆய்வுச்சுருக்கம் :**

இலங்கையில் நிகழ்ந்த முப்பது வருட உள்நாட்டு யுத்தத்தில் சுமார் 150,000 அதிகமான பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் நடைபெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தல் (2012) வட மாகாணசபைத் தேர்தல் (2013) மற்றும் பாராளுமன்ற பொதுத் தேர்தல்களில் (2015) தமிழ் மக்கள் மிகவும் ஆர்வத்துடன் வாக்களித்தனர். இது 1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்ட பின்னர் கிழக்கு மாகாணசபைக்கு நடாத்தப்பட்ட இரண்டாவது தேர்தலும், வடமாகாண சபைக்காக நடாத்தப்பட்ட முதல் தேர்தலுமாகும். உள்நாட்டு யுத்தம் 2009 ஆம் ஆண்டு வைகாசி மாதம் முடிவடைந்த காலத்திலிருந்து சர்வதேச சமுதாயம் தொடர்ச்சியாகக் கொடுத்து வந்த உயர் அழுத்தத்தினால் இரு மாகாணசபைகளுக்குமான தேர்தல்கள் நடைபெற்றன. இதனால் இத்தேர்தல்கள் தேசிய ரீதியாகவும், சர்வதேசரீதியாகவும் அதிக கவன ஈர்ப்புக்குள்ளாகியிருந்தன. இலங்கையின் இனமோதலுக்கான மூலகாரணங்களைக் கண்டுபிடித்து அதற்குப் பொருத்தமான அரசியல் தீர்வினை உருவாக்குவதில் எல்லாத் தரப்பும் இன்று வரை தோல்வியடைந்திருந்தாலும், குறைந்தபட்ச அதிகாரத்தினைக் கொண்டியங்கும் ஏனைய மாகாண சபைகளைப் போன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணசபைகளை இயங்குவதற்கான ஆணையினைத் தேர்தல் மூலம் மக்கள் வழங்கினர். உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் நடைபெற்ற வடமாகாண சபைத் தேர்தல் முப்பது வருடங்களாக தொடரும் இலங்கையின் இனமோதலுக்கான அரசியல் தீர்வினை முன்னோக்கி நகர்த்துவதற்கான முக்கியமானதொரு தேர்தலாகத் தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் கருதப்பட்டது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசியல் தீர்விற்கான தனது முன்மொழிவுகளை இத்தேர்தல் விஞ்ஞாபனமாக முன்வைத்து மக்கள் ஆணையினை கோரியது. அரசியல் உரிமைகளுக்கு மேலாக எதனையும் தாம் எதிர்பார்க்கவில்லை என்பதை வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தல்கள், மற்றும் பாராளுமன்றத் தேர்தல் மூலம் தமிழ் மக்கள் அரசாங்கத்திற்கும், உலகத்திற்கும் அறிவித்தனர். இதன் மூலம் யுத்தவலயமாக இருந்த வடமாகாணம் தொடர்பாக கணிப்பிடப்பட்டிருந்த தவறான மதிப்பீடுகளுக்கு வடமாகாணசபைத் தேர்தலும், பாராளுமன்றத் தேர்தலும் முற்றுப்புள்ளி வைத்தன. ஆயினும் உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் இலங்கையில் நல்லிணக்கத்தினை உருவாக்குவதில் பொறுப்புடன் செயற்படவேண்டிய இலங்கை அரசாங்கம் அதிகாரப் பகிர்வுமூலமான நல்லிணக்கத்தினை உருவாக்குவதில் தொடர்ந்தும் தோல்வியடைந்தது. இந்நிலையில் 2015 ஆம் ஆண்டு அதிகாரத்திற்கு வந்த நல்லாட்சிக்கான ஐக்கிய முன்னணி அரசாங்கம் புதிய அரசியல் யாப்பு ஒன்றினூடாகப் பயணிக்க விரும்பி மக்கள் கருத்துக்களைக் கோரியுள்ளது. இலங்கையின் இனமோதலின் வரலாறு முழுவதிலும் இனவழித்தேசியவாத உணர்வுகளால் நிரம்பியிருந்தது. இதன் தொடர்ச்சியாகவன்றி புதிய கலாசாரத்தைப் படைக்க புதிய அரசியல் யாப்பு முயற்சிக்கிறது. இந்நிலையில் நாட்டின் அமைதி, சமாதானம், நல்லிணக்கம் என்பனவற்றினைப் பெற்றுக்கொள்ளக் கருத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் தொடர்பாகவும், புதிய யாப்பு உள்ளடக்கியிருக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

**திறவுசொற்கள் :** தேர்தல் விஞ்ஞாபனம், முன்மொழிவுகள், சமஷ்டிமுறைமை, பிராந்தியசபைகள், ஐக்கிய இலங்கை

## 1. அறிமுகம்

முப்பது வருடங்கள் நீடித்த உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக்காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபை முதலில் வெளியிட்ட தகவல்களின் படி 10,000 வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும், பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்த ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையின்படி 40,000 வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் கூறப்படுகின்றன. சிலர் இவ் எண்ணிக்கை இதனையும் விட அதிகமானது எனக் கூறுகின்றார்கள். ஆயினும் சார்ள்ஸ் பெட்றி 2012 ஆம் ஆண்டு சமர்ப்பித்த உள்ளக அறிக்கை 70,000 வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனக்கூறுகின்றது. இவைகளைவிட யுத்தத்தினால் பலர் அவயவங்களை இழந்தனர். பலர் கடும் காயங்களுக்குள்ளாகினர். எண்ணற்ற பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாகினர். எண்ணற்றோர் காணாமல் போனார்கள், பெரும்பாலானவர்கள் மன அழுத்தங்களுக்குள்ளாகினர். எண்ணற்றோர் சர்வதேச நியமங்களுக்கு உட்படாத தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டனர். மேலும் உள்நாட்டு யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் அரசியல் அகதிகளாகிப் பாதுகாப்பிற்காக நாட்டைவிட்டுத் தப்பிச் சென்றனர். ஏறக்குறைய ஐந்து இலட்சம் மக்கள் இதே காரணத்திற்காக உள்நாட்டுக்குள் இடம் பெயர்ந்தனர். உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் யுத்தவலயத்திற்குள்ளிருந்து உயிர்தப்பி வந்த மக்கள் இடப்பெயர்வு முகாம்களில் அல்லது நலன்புரி நிலையங்களில் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு, பின்னர் அவர்களில் பெரும்பாலானவர்கள் விடுவிக்கப்பட்டனர். பலருக்கு என்ன நடந்தது என்பது இன்னமும் தெரியாத நிலையில் காணாமல்போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்நிலை எதனையும் கருத்தில் கொள்ளாது கிழக்கின் உதயம் மற்றும் வடக்கின் வசந்தம் என்ற பெயரில் நாட்டின் ஏனைய பகுதிகளைப் போன்று வடகிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் ஆரம்பித்தது. யுத்தத்தினால் அழிந்த பௌதிக கட்டமைப்புக்களை மீண்டும் இலகுவாக உருவாக்கலாம் அல்லது திருத்தியமைக்கலாம். ஆனால் முப்பது வருட கால உள்நாட்டு யுத்தம் பூச்சியத்தில் முடிவடைந்து விட்டது என்ற ஏக்கத்திலிருந்தும் அவமானத்திலிருந்தும் மக்கள் மீளுருவாக்கம் பெறுவது மிகவும் கடினமாக இருந்தது. இலங்கை அரசாங்கம் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த அந்த இறுதி நாட்களில் நடாத்திய உச்சமட்ட இனப்படுகொலையின் நினைவுகளிலிருந்து மக்கள் இன்னமும் மீளவில்லை. இதனால் ஏற்பட்ட கோபம் மக்கள் மனதில் மாறாவுருநிலையாகிவிட்டது. இதிலிருந்து மக்களை உடனடியாக மீட்டு விட முடியாது. உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் வட மாகாணத்தில் தோன்றிய இராணுவமயமாக்கம், குடியிருப்புக் காணிகளை இராணுவம் அபகரித்தல், காணாமல் போதல், மகிழ்ச்சியற்ற வாழ்க்கைச் சூழல், மீள்குடியேற்றத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள், திட்டமிட்ட முறையில் நிகழ்த்தப்படும் கலாசார சீரழிவுகள் போன்றவற்றால் மக்கள் மனத்துயரங்களுக்குள்ளாகி வாழ்கின்றார்கள். முன்னை நாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் தேசிய முன்னணி அரசாங்கம் இப்பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்கான செயற்பாட்டில் ஈடுபடாமல், நடைமுறையிலுள்ள மாகாண சபைகளின் அதிகாரங்களை குறைப்பதற்கே முயற்சித்தது. மேலும் உள்நாட்டு யுத்தத்தில் தோல்வியடைந்து அவமானப்படுத்தப்பட்டு கேள்விக்குறியாக நிற்கும் தமிழ் மக்களின் மனங்களை வெல்லுவதற்கு ஆட்சியாளர்கள் முயற்சிக்கவில்லை. பதிலாக வடமாகாணத்தில் தொடர்ந்து நிகழவுள்ள அபிவிருத்திகள், புனரமைப்புக்கள் தொடர்பாகவே பரப்புரை செய்தன. இந்நிலையில் யுத்தத்தில் வெற்றி பெற முடிந்த ஐக்கிய மக்கள் தேசிய முன்னணி அரசாங்கத்தினால் தமிழ் மக்களின் மனங்களை வெற்றி கொள்ள முடிந்ததா? தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்மொழிந்த தேர்தல் விஞ்ஞாபன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களை வெற்றி கொள்வதிலுள்ள சவால்களும் தடைகளும் எவை? தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாகத் தென்னிலங்கையில் உருவாகியுள்ள கருத்துக்கள் யாவை ? இலங்கையின் எதிர்காலத்திற்கும், நல்லிணக்கத்திற்கும் தேவையான உள்ளடக்கங்கள் தொடர்பான கலந்துரையாடல்களுக்கும், விவாதங்களுக்கும், அப்பிராயங்களுக்கும் தேவையான களத்தினை நல்லாட்சி அரசாங்கம் உருவாக்கியுள்ளதா? போன்ற வினாக்களுக்கு இக் கட்டுரை விடையளித்துள்ளது. இதற்குத் தேவையான முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகள் அனைத்தும் இணையத் தளங்களூடாக பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், உய்த்தறிமுறை, தொகுத்தறிமுறை நுட்பமூடாக விவாதிக்க ப்பபட்டு, பண்புரீதியான ஆய்வாக மேற் கொள்ளப் பட்டுள்ளது.

**2. தேர்தல் விஞ்ஞாபனம்**

தமிழ் தேசியக் கூட்டமைப்பு " ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கான சுய அரசாங்கம்" ஒன்றை உருவாக்கும் இலக்குடன் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரித்து 2013 ஆம் ஆண்டு வெளியிட்டது. இதில் கூறப்பட்டிருக்கும் விடயங்கள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பாதுகாப்ப தற்கான முதற்படியாகக் கருதப்பட்டன. இதனால் இத்தேர்தல் வட மாகாண சபையினைக் கைப்பற்றி நிர்வாகிக்கும் தேர்தலாக அன்றி, தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தினைத் தீர்மானிக்கும் தேர்தலாகவே தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் நோக்கப்பட்டது. ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்ட பின்னர் மகிந்த ராஜபக்ஸ தலைமையிலான அரசாங்கத்திற்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் நிலவி வந்த மனக்கசப்பு மேலும் உச்ச நிலையினை அடைந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் "உண்மையான நல்லிணக்கத்தையும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய சமாதானத்தையும் இலங்கை மக்கள் அனைவருக்குமான அபிவிருத்தியையும் எய்துவதற்கு அதிகாரப் பகிர்வு அவசியமானது" என வலியுறுத்தியுள்ளதுடன், பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருக்க வேண்டும் எனவும் கோரியது (The Mandate given to the Tamil National Alliance - TNA).

- தமிழ் மக்கள் தனித்துவமானதொரு தேசியமாகும். சிங்களமக்களுடனும், ஏனையவர்களுடனும் வரலாற்றுக்காலம் தொடக்கம் இலங்கையில் வாழ்ந்து வருகின்றார்கள்.

- புவியியல் ரீதியாக இணைந்துள்ளதும், தமிழ் மொழியைப் பேசுகின்ற மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றதுமான வடக்கு கிழக்கு மாகாணங்களே தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடமாகும்.

- தமிழ் மக்கள் சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள்.

- வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் ஏற்றுக் கொள்ளும் வகையில் சமஷ்டி கூட்டமைப்பினை உருவாக்கி இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தில் அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட வேண்டும்.

- காணி, சட்டமும் ஒழுங்கும், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட சமூகப் பொருளாதார அபிவிருத்தி, வளங்கள் மற்றும் நிதி அதிகாரங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பங்கீடு செய்யப்பட்ட இறைமையின் அடிப்படையில் அதிகாரப்பரவலாக்கம் வழங்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தென் இலங்கை அரசியல் தலைவர்களையும், புத்திஜீவிகளையும் அச்சத்திற்கும், குழப்பத்திற்குமுள்ளாக்கியது. பலர் தமிழ்தேசியவாதத்தின் மீள்எழுச்சியாகவே இதனை நோக்கினர். குறிப்பாக றோகன் குணரட்னா " தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழீழ விடுதலைப் புலிகளின் மறு அவதாரமாகும். பிரிவினை வாதச் சித்தாந்தத்தினை மீண்டும் முன்னெடுத்துச் செல்கிறது" (Rohan Gunaratna, 06 September 2013, 03:18:05) எனக் கூறியிருந்தார். இதேபோன்று சம்பிக்க வரணக்க

"தமிழ் தேசிய கூட்டமைப்பு எந்தவொரு கோரிக்கையினையும் சுதந்திரமாக உருவாக்க முடியும். ஆனால் இவற்றில் எவற்றையும் இலங்கையில் அடைய முடியாது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்மொழிவுகளைக் கவனத்தில் எடுப்பதற்குப் பாராளுமன்றத்தின் 2/3 பெரும்பான்மையும், மேலதிகமாக சர்வஜனவாக்கெடுப்பும் நடாத்தப்பட வேண்டும்" (Champika Ranawaka July 28, 2015, 8:52 am) எனக் கூறியிருந்தார். டலஸ் அழகப்பெருமா "தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தென்பகுதி மக்களுக்கு வெறுப்பூட்டுகின்றது. தமிழ் சிங்கள மக்களுக்கிடையில் உருவாக்கப்படும் நல்லிணக்கத்தினைச் சிதைத்து இரண்டு சமுதாயங்களையும் நிரந்தரமாகப் பிரித்துள்ளது"(Dullas Alahapperuma, Sep 10, 2015) எனக் கூறியிருந்தார். "ஜே.வி.பி .சமஷ்டிக்கு எதிரானதாகும். தமிழ் மக்களுக்குள்ள மனக் குறைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். அதற்கு சமஸ்டி தீர்வாக முடியாது. வடக்கு - கிழக்கு மாகாணங்கள் சட்டத்திற்கு புறம்பாக இணைந்திருப்பதை எதிர்த்து உயர்நீதிமன்றம் சென்றோம். இரண்டு மாகாணங்களும் தனித்தே செயற்பட வேண்டும்" (Vijitha Herath, 29 July 2015) என்பது ஜே.வி.பியின் கருத்தகாக இருந்தது.

எனவே ஒருபக்கம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம், மறுபக்கம் தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் இதற்கு வெளியிட்ட அச்சம், குழப்பத்திற்கும் மத்தியில் 2013 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற வடமாகாண சபைத் தேர்தலில் 78.48 சதவீதமான மக்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு ஆதரவு தெரிவித்து தமது வாக்குகளைப் பதிவு செய்தனர். இதன் மூலம் 38 ஆசனங்களைக் கொண்ட வடமாகாணசபையின் 30 ஆசனங்களைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது. (Sumith Chaaminda and Nishan decmel, 2013:6) இதே போன்று 2015 ஆம் ஆண்டு ஆவணிமாதம், 17 ஆம்திகதி நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஆதரவு தெரிவித்து யாழ் மாவட்டத்தில் 69.12 சதவீத மக்களும், வன்னி மாவட்டத்தில் 54.55 சதவீத மக்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 53.25 சதவீத மக்களும், திருகோணமலை மாவட்டத்தில் 25.44 சதவீத மக்களும், அம்பாறை மாவட்டத்தில் 13.29 சதவீத மக்களும் தமது வாக்குகளை பதிவு செய்தனர். இதனை தமிழ் தேசியக் கூட்டமைப்பு மக்களிடம் சமர்பித்திருந்த தேர்தல் விஞ்ஞாபனத்திற்கும், அரசியல் அபிலாசைகளுக்கும் வழங்கப்பட்ட உயர்ந்த பட்ச அங்கீகாரமாக கருத முடியும்.

அதேநேரம் வடமாகாணசபையின் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டதாயினும் தேவையானதாகும். வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மையினை எதிர்பார்த்திருந்தது. ஆனால் வடமாகாண மக்கள் தமது விரைவில் மீளும் திறனையும், உறுதியான கொள்கையினையும் தமது வாக்களிப்பு நடத்தை மூலம் வெளிப்படுத்தி, வரலாற்றில் முதல் தடவையாக ஐந்தில் நான்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5/4) பெரும்பான்மையுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு தமது அங்கீகாரத்தை வழங்கினர். இதே போன்று பாராளுமன்றத் தேர்தலில் 16 ஆசனங்களைப் பெற்று பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினைப் பெற்றுள்ள மூன்றாவது கட்சியாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தன்னைப் பதிவு செய்தது. இது ஒருவகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக கொழும்பு அரசியல் தலைவர்கள் முன்வைத்த விமர்சனங்களுக்கு தமிழ் மக்கள் வழங்கிய பதிலாகவும் கருத முடியும். மறுபக்கத்தில் பேச்சளவிலன்றிச் செயலளவில் ஆற்ற வேண்டிய பணிகள் அதிகம் உள்ளது என்பதைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு தமிழ் மக்கள் புரிய வைத்தனர் என்று கூறலாம்.

யுத்தத்தினால் ஏற்பட்ட இழப்புக்களுக்குக் குறிப்பாக அவயவங்களில் இழப்பு, விதவைகள், அநாதைகள் வடுக்கள், துன்பங்கள், சுயமரியாதை இழப்புக்கள், அவதூறுகள் போன்ற மன அழுத்தங்களினால் ஏற்பட்ட துன்பங்களுக்கு நிவாரணம் தேடுவது, யுத்தப்பிரதேசத்தில் தொடர்ந்து நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினை வெளியேற்றுவது, இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப் பட்டிருக்கும் குடியிருப்பு நிலங்களை மீட்பது, மனித உரிமைகள் விவகாரத்திரனை கையாள்வது உட்பட பல அத்தியாவசியத் தேவைகளுக்கு வடமாகாண சபை அங்கத்தவர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் முன்னுரிமை வழங்கவேண்டியிருந்தது. மேலும், யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தி மாத்திரமன்றி, யுத்தம் கொடுத்த கொடூரமான வடுக்களுக்கும், முப்பது வருட யுத்தத்தின் மூலம் அடைய முயற்சிக்கப்பட்ட அரசியல் அபிலாசைகளுக்கும் நிரந்தரத் தீர்வு தரப்பட வேண்டும். இதற்கு தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே நிர்வகிக்கக் கூடிய அரசியல் அலகு உருவாக்கப்பட வேண்டும் என்ற செய்தியை வடமாகாண சபைத் தேர்தல் மூலம் தமிழ் மக்கள் அரசாங்கத்திற்கு தெரிவித்தனர். இந்நிலையில், இவைகளுக்காகவும், அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்காகவும் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றத் தான் தயாராக இருப்பதாக முதலமைச்சர் குறிப்பிட்டிருந்தார். தமக்கிடையில் அரசியல் மோதல்களுக்கு இடம் கொடுக்காமல் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுடைய நலன்களை உச்சநிலையில் பேணுவதற்கான வேலைத்திட்டங்களை மிகவும் அவதானத்துடனும், தியாக உணர்வுடனும் செயற்படுத்த வேண்டிய தேவை அரசாங்கத்திற்கும் தமிழ்த் தலைவர்களுக்கு உள்ளது. அதேநேரம் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு அரசாங்கத்துடன் வெளிப்படைத் தன்மையுடனும், கூட்டுறவுடனும் செயற்பட வேண்டிய தேவையும் தமிழ் தலைவர்களுக்கு உள்ளது என்பதையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

### 3. நிறைவேற்றப்படாத முன்மொழிவுகள்

1925 ஆம் ஆண்டு தோற்றம் பெற்ற கண்டிய தேசிய பேரவை (Kandyan National Assembly) இலங்கையில் சமஸ்டி ஆட்சி ஏற்படுத்தப்பட வேண்டும் எனக் கோரியது. அதேநேரம் இங்கிலாந்தில் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை முடித்துவிட்டு 1925 ஆம் ஆண்டு இலங்கைக்குத் திரும்பிய எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா முற்போக்கு தேசியக்கட்சியை (Progressive Nationalist Party) ஆரம்பித்து இலங்கைக்கான சமஸ்டி என்பதை பிரதான கொள்கையாகக் கொண்டு செயற்பட்டார். இது தொடர்பாக Ceylon Morning Leader என்னும் பத்திரிகையில் 1926 ஆம் ஆண்டு வைகாசி மாதம் தொடக்கம் ஆனி மாதம் வரை ஆறு கட்டுரைகளை எழுதியிருந்தார். இலங்கைக்கான சமஸ்டி அரசாங்கம் என்னும் தலைப்பில் 1926 ஆம் ஆண்டு ஆடி மாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆற்றிய உரையில் இலங்கைக்கான உள்ளக சமஸ்டி அல்லது சமஸ்டி அமைப்புத் தொடர்பாக எஸ் டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா முன் மொழிந்தார். கண்டிய தேசிய பேரவை பிரதேச சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என 1972 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் கோரியது. ஆகவே இலங்கையில் சமஸ்டி ஆட்சிக்கான கோரிக்கையை முதலில் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கா முன்வைத்தார் (Perera KKS, 25 September 2015). எஸ். டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா தமது அரசியல் வாழ்வின் ஆரம்ப காலத்தில் அப்போது நிலவியிருந்த மாகாண நிர்வாகப் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கு சமஸ்டி அரசியல் அமைப்புதான் கூடியளவிற்கு பொருத்தமானது என்ற கருத்தை வெளிப்படுத்தினார். இது இலங்கையின் பல்வேறுபட்ட இனங்களிடையே கூடியளவு புரிந்துணர்வு ஏற்படுவதற்கு வழிவகுத்து அரசியல் ரீதியான அமைதி ஏற்படுவதற்கு வழி வகுக்கும் என அவர் நம்பியிருந்தார். அவர் கருதிய சமஸ்டி அமைப்பு கண்டிய தேசியப் பேரவை கருதிய மூன்று அலகுகள் என்பதை விட விரிவானதொன்றாக இருந்தது.

1949 ஆம் ஆண்டிலிருந்து கடந்த அறுபத்தேழு வருடங்களுக்கு மேலாக இலங்கை தமிழரசுக் கட்சி (சமஸ்டிக் கட்சி) சமஸ்டி அரசாங்க முறையினைக் கோரி வருகிறது. இதற்கிணங்க சமஸ்டி அமைப்பை உருவாக்குவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர். எஸ்.ஜே.வி.செல்வநாயகமும், எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவும்வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிராந்திய சபைகளை உருவாக்கு வதற்கான ஒப்பந்தம் ஒன்றில் 1957 ஆம் ஆண்டு கைச்சாத்திட்டனர். பின்னர் இது கைவிடப்பட்டது. 1965 ஆம் ஆண்டு டட்லி சேனநாயக்காவும், செல்வநாயகமும் மாவட்ட சபைகளை உருவாக்குவதற்கான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டனர். இதுவும் பின்னர் கைவிடப்பட்டது. 1992 ஆம் ஆண்டு மங்கள முனசிங்கா தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக்குழு பதின்மூன்றாவது அரசியல் யாப்புத் திருத்தத்தில் கூறப் பட்டுள்ள "பொதுப் பட்டியல்" அதிகாரத்தினை இல்லாதொழித்து, அதனை மாகாணசபைகளின் அதிகாரப் பட்டியலுடன் இணைக்க வேண்டும் என ஆலோசனை கூறியிருந்ததுடன், வடக்கு கிழக்கு மாகாணங்கள் தனித்தனியாகப் பிரித்து நிர்வகிக்க வேண்டும் எனவும் கூறியிருந்தது (Mangala Moonesinghe Parliamentary Select Committee - Interim Report 1992). அப்போதுகிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டிருந்தன. இம் மாகாண சபையினைக் கருத்தில் கொண்டே தமது ஆலோசனையினை இக்குழு முன்வைத்திருந்தது.

1995, 1997, 2000 ஆம் ஆண்டுகளில் முன்னைநாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஒற்றை ஆட்சிக்குள் பிராந்தியங்களின் ஒன்றியம் (Union of Regions' Article 1 (1) } என்ற பெயரில் புதியதொரு அரசாங்கமுறையினை உருவாக்க நகல் அரசியல் யாப்பு ஒன்றினை வரைந்திருந்தார். இந் நகல் யாப்பின் அத்தியாயம் XV பிராந்தியங்களின் அதிகாரப் பங்கீடு தொடர்பாக எடுத்துக் கூறியிருந்தது (Sathananthan.S, 3 December 1997) வடக்கு-கிழக்கு பிராந்தியங்களின் இணைப்பு என்பது தமிழ் - முஸ்லிம் அரசியல் கட்சிகள் தமக்குள் ஆலோசித்து முடிவெடுத்துக்கொள்ள விடப்பட்டது. இக்காலத்தில் முன்னைநாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அமைச்சரவை அங்கத்தவராக இருந்துள்ளார்.

2002 ஆம் ஆண்டு மார்கழி மாதம் ஐந்தாம் திகதி வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தமிழக விடுதலைப் புலிகளுடன் ஒஸ்லோவில் நடாத்திய பேச்சுவார்த்தையின் போது "ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டியை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று ரீதியாக தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசத்தில் உள்ளக சுய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்ணய உரிமைக் கோட்பாட்டினை ஏற்றுக் கொண்டு அரசியல் தீர்வு காண்பதற்கு உடன்பட்டிருந்தார்" (Oslo Declaration, 5 December 2002).

ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் மற்றும் யாப்பு ரீதியான அதிகாரங்களை மக்கள் அனைவரும் பெற்று ஒன்றாக வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதற்காக பாராளுமன்ற தெரிவுக்குழுவினை 2006 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஸ அரசாங்கம் உருவாக்கியதுடன், தமிழ் தேசியக் கூட்டமைப்பினை இதில் இணைந்து பணியாற்ற வருமாறு அழைப்பு விடுத்தது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ சர்வக்கட்சி பிரதிநிதிகள் குழுவினை (All Party Representative Committee) நியமனம் செய்த பின்னர் ஆற்றிய உரையில்

"பண்டாநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தத்திலிருந்து எமது முயற்சிகளை நாங்கள் பகுப்பாய்வு செய்து பார்க்க வேண்டும். ஏனைய நாடுகளின் அனுபவங்களிலிருந்து பொருத்தமான பாடங்களை நாங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். தீர்வினை நான் ஒரு போதும் திணிக்க மாட்டேன். ஆனால் நீங்கள் தேசியப் பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுத் தரக்கூடிய பேச்சுவார்த்தைகளை உங்களுக்குள் நடாத்துங்கள். மக்கள் தம்மைத் தாமே நிர்வகித்துக் கொள்ளவும் தங்களுடைய அரசியல் பொருளாதார சூழலை தாமே கட்டுப் படுத்திக் கொள்ளவும் பொறுப்பு வழங்கப்பட வேண்டும். உலகில் பல நாடுகளில் இது வெற்றிகரமாக முயற்சிக்கப்பட்டுள்ளது. இதற்கு பல உதாரணங்கள் எமது அயல் நாடாகிய இந்தியா உட்பட பல நாடுகளில் உள்ளன. மோதலுக்கான பின்னணியை அடிப் படையாகக் கொண்டு நாட்டி னுடைய இறைமையினை தியாகம் செய்யாது ஆகக் கூடுதல் சாத்தியமான பரவலாக்கத்தினை நாம் உருவாக்குதல் வேண்டும்" (Sumanthiran, M.A, September 15, 2013, 9:06 pm )எனத் தெரிவித்திருந்தார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகள் நீண்ட கால தீர்க்கப்படாமல் தாமதமாகி வரும் இலங்கையின் இனமோதலுக்கு அரசியல் தீர்வு காணுமாறு மோதலுடன் தொடர்பு டையவர்களுக்கு அழைப்பு விடுத்திரு ந்ததுடன், காணி விடயங்கள் தொடர் பாகவும் குறிப்பிடுகின்றது. (பந்தி இலக்கம் 9.185). மேலும் உயர்பாதுகாப்பு வலயங்கள், இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்கள் என்பவற்றால் காணிகளை இழந்த மக்களுக்கு பொருத்தமானவகையில் நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும். (பந்தி இலக்கம் 9.142) எனத் தெரிவித்திருந்தது. ஆனால், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்வைத்த சிபார்சுகளை நடைமுறைப்படுத்தி வருவதாக மகிந்த ராஜபக்ஸ அரசாங்கம் பரப்புரை செய்ததேயன்றி, முக்கியமான சிபார்சுகளாகிய இராணுவம் ஆக்கிரமித்துள்ள காணிகளை மீள வழங்குதல், மனித உரிமைகள், நல் லாட்சி, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறுதல் போன்ற விடயங்களை நடை முறைப்படுத்துவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் எதனையும் ஆட்சியில் இருக்கும் வரை எடுத்திருக்கவில்லை. மேலும் மகிந்த ராஜபக்ஸ அரசாங்கம் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இவ்விடயங்கள் தொடர் பாகக் கலந்தாலோசித்து, ஆக்க பூர்வமான தீர்மானங்கள் எதனையும் நிறைவேற்றவில்லை. அதிகாரப் பரவாக்கம் தொடர்பாக கலந்தாலோசிப்பதற்கும் பதிலாக மாகாண சபைகளுக்கு பதின் மூன்றாவது அரசியல் யாப்பு திருத்தம் மூலம் வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களைக் குறைப்பது தொடர்பாக விவாதித்து வந்தது. இது மக்களுக்கான பிறிதொரு இராஜதந்திர அச்சுறுத்தலாகவே நோக்கப்பட்டது.

#### 4. விவாதிக்க வேண்டிய சவால்கள்

வடக்கு கிழக்கு மாகாணங்களை மீண்டும் இணைக்க எடுக்கப்படுகின்ற முயற்சி வடமாகாண சபைத் தேர்தலைத் தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் இலங்கையில் அரசியல் காட்சி நிலையில் சர்ச்சைகளையும், நீண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாதங்களையும் ஏற்படுத்தவுள்ளது. இச்சர்ச்சையிலும், விவாதத்திலும் ஈடுபடுகின்றவர்கள் ஜனநாயக அரசியல் சமநிலையினை உள்வாங்கி அறிவுபூர்வமாகச் சிந்தித்து, தமது கருத்துக்களை முன்வைப்பது சிறப்பானதாகும். வடமாகாண மக்கள், கிழக்கு மாகாணத்தினை வடமாகாணத்துடன் இணைத்துக் கொள்வதற்குத் தமது விருப்பத்தினை வெளியிட்டுள்ளனர். சமூகக் கட்டமைப்பிற்குள் நின்று சிந்தித்தால் மக்களுடைய ஆதரவுடன் வடமாகாண சபை கிழக்கு மாகாண சபையுடன் இணைந்து பணியாற்றத் தயாராகவுள்ளது என்ற உண்மை புலனாகிறது. ஆனால் கிழக்கு மாகாண மக்களும், மாகாண சபையும் இதற்கு தமது ஆதரவினை வழங்க வேண்டும் அல்லது சட்டபூர்வமான அங்கீகாரத்தினை அரசியல் யாப்பு ரீதியாகப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு பெற்றுக்கொள்வதில் பல சவால்கள் உள்ளன. இன்றுள்ள நிலையில் கிழக்கு மாகாணசபை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருப்பது இதற்கு மேலும் சவாலாக அமையும். இதனை மேலும் தெளிவாக விளங்கிக் கொள்வதற்குக் கிழக்கு மாகாணத்தின் அரசியல் கட்சி நிலையினைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

மிகவும் இலகுவாகக் கிழக்கு மாகாண மக்களிடமிருந்து வடக்கு கிழக்கு மாகாண இணைப்பிற்கான ஆதரவினைப் பெற்றுவிட முடியாது. மூன்று மாவட்ட ங்களை உள்ளடக்கியுள்ள கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்குச் சமமான வாக்கு வங்கியினை முஸ்லிம் மக்கள் வைத்திருக்கின்றார்கள். பெருமளவிற்கு அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்வதுடன், நிர்ணயம்மிக்க அரசியல் சக்தியாகவும் உள்ளனர். மேலும் கிழக்கு மாகாணத்தின் எல்லைப் பகுதிகள் சிங்கள மக்களின் வாழ்விடமாக மாற்றமடைந்துள்ளது என்ற உண்மையினையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். 2012 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்பின் படி கிழக்கு மாகாணத்தின் மொத்த சனத்தொகையில் தமிழ் மக்கள் 39.79 சதவீதமாகவும், முஸ்லிம் மக்கள் 36.72 சதவீதமாகவும், சிங்கள மக்கள் 23.15 சதவீதமாகவும், ஏனையவர்கள் 0.34 சதவீதமாகவும் உள்ளனர். (A2: Population by Ethnic Group According to Districts 2012).

இந்நிலையில் வடமாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தினை இணைத்தால் தமிழ் மக்கள் அரசியல் அதிகாரம் மிக்க சமூகமாக மாற்றமடைந்து விடுவார்கள். அத்துடன் வடக்கு - கிழக்கு இணைப்பின் மூலம் தமது அரசியல் செயற்பாட்டுத் தளத்தினை நிரந்தரமாக இழந்துவிடுவதற்கு வாய்ப்பு உருவாகலாம் என்ற அச்சம் கிழக்கு மாகாண முஸ்லிம் சமூகத்திடம் உள்ளது. அதேநேரம் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் வடமாகாணத்துடன் இணைவதற்கு சம்மதம் தெரிவித்தால் அவர்கள் தமது அரசியல் தலைமைத்துவ அபிலாசைகளுக்கான விட்டுக் கொடுப்புக்களை தமிழ் மக்களிடமிருந்து எதிர்பார்க்கக் கூடும். இதே போன்று கிழக்கு மாகாண தமிழ் மக்களும் தமது அரசியல் தலைமைத்துவ அபிலாசைகளுக்கான விட்டுக் கொடுப்புக்களை வடமாகாண தமிழ் மக்களிடமிருந்து எதிர்பார்க்கக்கூடும். இவைகள் எல்லாவற்றிற்கும் வட மாகாண தமிழ் மக்கள்தயாராக இருக்கும் நிலையிலேயே வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணசபை அல்லது சமஸ்டி முறைமையை உருவாக்க முடியும்.

2012 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 8 ஆம் திகதி நடைபெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் 37 ஆசனங்களில் 14 ஆசனங்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், 11 ஆசனங்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பும், 07 ஆசனங்களை ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ்சும், 04 ஆசனங்களை ஐக்கிய தேசியக் கட்சியும், 01 ஆசனத்தை தேசிய சுதந்திர முன்னணியும் பெற்றுக் கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை இல. 01 : கிழக்கு மாகாண இனவிகிதாசாரம் - 2012

| மாவட்டம் | பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் | முஸ்லிம்கள் | தமிழர்கள் | சிங்களவர்கள் |
|---|---|---|---|---|
| அம்பாறை | 441,287 | 44% | 18% | 38% |
| மட்டக்களப்பு | 347,099 | 25% | 74% | 01% |
| திருகோணமலை | 245,363 | 45% | 29% | 25% |

ஆதாரம் : குடிமதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம்

(2008 - 2015 Gossip Lanka News) இதேபோன்று முஸ்லிம் அரசியல் தலைவர்கள் மூன்று வெவ்வெறு அரசியல் கட்சிகள் சார்பாக இத் தேர்தலில் போட்டியிட்டிருந்தனர். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் 07 முஸ்லிம் பிரதிநிதிகளும், ஐக்கிய தேசியக் கட்சி சார்ப்பில் 01 முஸ்லிம் பிரதிநிதியும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் 07 முஸ்லீம் பிரதிநிதிகளும் வெற்றி பெற்றிருந்தனர். இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து போட்டியிட்டிருந்தால் 15 பிரதிநிதிகளைப் கிழக்கு மாகாண சபையில் பெற்றிருக்க முடியும். தேர்தல் முடிவுகளைப் பொறுத்தவரை வடமாகாண மக்கள் போன்று கிழக்கு மாகாணத் தமிழ் மக்களும் தமது அரசியல் அதிகாரப் பகிர்வினைக் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் மூலம் அரசாங்கத்திற்கும், உலகத்திற்கும் வெளிப்படுத்தியிருந்தனர். உண்மையில் பொருளாதார அபிவிருத்தியை விட அரசியல் உரிமைகள் தான் தமக்கும் முதன்மையானது என்பதை கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் முடிந்தவரைவெளிப்படுத்தியிருந்தனர். எனவே நடை பெற்ற இரு மாகாண சபைகளுக்குமான தேர்தல் களில் வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் மக்கள் பொருளாதார அபிவிருத்தியை விட அரசியல் அபிலாசைகளுக்கே முன்னுரிமை வழங்கியுள்ளனர் எனக் கூறலாம்.

கிழக்கு மாகாணத்தில் தனித்தவமானதொரு அரசியல் தளத்தினைப் பெற்றுள்ள முஸ்லிம் மக்கள் அரசியல் தலைவர்களின் சுயலாபம் கருதிய பொருளாதார அபிலாசைகளுக்கான செயற்பாடுகளால் தமது பலம்மிக்க அரசியல் தளத்தினை இழந்தனர். மன்னர் காலத்திருந்தே ஆட்சியாளர்களுடன் இணைந்து சலுகைகள் பெறும் அடையாளச் சமூகமாக முஸ்லீம் மக்கள் வளர்ந்தவர்கள் என சிலர் வெளிப் படையாக கூறியும் வந்தனர். இவ்வாறானவர்கள் முஸ்லிம் மக்கள் பலமானதும், தனித்துவமானதுமான அரசியல் சக்தியாக வளர்ந்தால் தமது சுய பொருளாதார அபிலாசைகளுக்காக ஆட்சியாளர்களுக்கு முண்டு கொடுக்கும் அரசியலுக்கு ஆபத்தாகி விடும் என அஞ்சு கின்றன. கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் தமது அடையாள கூர்மைப்படுத்தலுக்கு அப்பால், தாம் இலங்கையில் வாழும் பிறி தொரு சிறுபான்மைச் சமூகம் என்பதை மறந்த விடக்கூடாது. கிழக்கு மாகாண த்தில் வாழ்கின்ற தமிழ் மக்களுடன் பல விடயங்களில் இரண்டறக்கலந்து நட் புறவுடன் வாழும் முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுடன் இணைந்து தாம் பெற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்குரிய சந்தர்ப்பம் உள்ளது. தமிழ் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் வெளிப்படைத்தன்மையுடனும், பொறுப்புடனும் பேச்சுவார்த்தையில் ஈடு பட வேண்டும். கிழக்கு மாகாணசபையில் கூட்டு அரசாங்கம் உருவாக்கப்பட்டால் முதலமைச்சர் பதவியை இரண்டு வருடத்திற்கு முஸ்லிம் தலைவர்களுக்கு விட்டுத் தர தமிழ் தலைவர்கள் ஏற்கனவே தாயாராக இருந்துள்ளார்கள். எனவே கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கான தருணங்கள் உருவாக்கவும், பயன்படுத்தவும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5. அரசியல் தீர்விற்கான முன்மொழிவுகள்

இலங்கையின் அரசியல் கட்சி நிலையிலும், சர்வதேச அரசியல் கட்சி நிலையிலும் இரண்டு மாகாணங்களும் தனித்து இயங்குவதே பொருத்தமானதும், சாணக்கிய மானதுமாகும் என்றதொரு கருத்து நிலவுகிறது. இச்சிந்தனைத்தளத்திலிருந்து சிந்தித்தால், சிறுபான்மை சமூகங்களுக்கு இரண்டு மாகாண சபைகள், இரண்டு முதலமைச்சர்கள் உருவாவது தவறானதல்ல என்ற கருத்து நிலைபெற்றுவிடலாம். இணைப்பு என்பதை விட அதிகாரப் பகிர்வே இன்றைய தேவையாகும். இலங்கையில் வாழுக்கின்ற எல்லா சமூகங்களும் சமாதான மாகவும், சுயகௌரவத்துடனும், நீதியுடனும் வாழ்வதற்குரிய சமூக ஜனநாயகச் சூழலுக்குரிய உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும். இதனை இனமோதலுடன் தொடர்புடைய எல்லாத் தரப்பும் நன்கு விளங்கிக் கொண்டு சமாதானம், சுயகௌரவத்துடனான வாழ்க்கைச் சூழலை உருவாக்க முயற்சிக்க வேண்டும். இவ்வகையில் புதிய அரசாங்கம் நடை முறையிலுள்ள அரசியலமைப்பில் பின்வரும் வகையில் பலமாற்றங்களை செய்ய முயற்சிக்கலாம். இவ்வகையில் இலங்கையின் அரசியலமைப்பு முகவுரை (preamble) ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும். இம்முகவுரை பின்வருமாறு வரையப்பட்டிருக்கலாம்.

இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடு, இறைமை, ஐக்கியம் என்பவற்றை இலங்கையர் களாகிய நாம் பாதுகாப்புதற்குத் திட சங்கர்ப்பம் பூண்டுள்ளோம். இலங்கை தொன்று தொட்டு பல்லின, பல்மொழி பல் சமய பன்மைத்துவ சமூகங்களாகும். நாம் இலங்கையர் என்ற நாட்டுப்பற்றை ஊட்டும் வகையில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் (சோனர்கள்), பறங்கியர்கள் வாழுகின்ற பன்மைத்துவ சமூகங்கள் நல் லிணக்கத்துடன் ஆளப்படவேண்டும். தமக் கேயரித்தான கலாசாரம், மொழி, அடையாளம் கொண்ட இப்பெரும் சமூகங்கள் மிகவும் கவனத்துடன் இலங்கையில் பாதுகாக்கப்பட வேண்டியவையாகும். இலங்கையின் வடக்கு, கிழக்கு பிராந்தியங்கள் தமிழ்பேசும் மக்களின் வரலாற்றுக்கால, பூர்வீக வதிவிடமாகும். இப்பிராந்தியத்தில் வாழும் தமிழ் மக்களுடன் இணைந்து ஏனைய பன்மைத்துவ சமூகங்கள் நீண்டகாலமாக வாழ்ந்து வருகின்றனர். எனவே இலங்யில் ஆள்புல ஒருமைப்பாடு, இறைமை, ஐக்கியம் என்பவற்றிற்கு வலுவூட்டுவதற்கும், பலப்படுவதற்கும், பன்மைத்துவ இன, மொழி, சமய சமூகமாகிய தாம் பாதுகாப்பாகவுள்ளோம் என்ற அகவுணர்வினை பெற்றுக்கொள்ளும் வகையில் எல்லா சமூகங்களினதும் சமத்துவம், பாதுகாப்பு, நல்லிணக்கம், எதிர்பார்ப்பு என்பன உறுதிப்படுத்தப்படும்.

இலங்கைக் குடியரசானது மத்தியரசாங்கம் மற்றும் பிராந்திய அரசாங்கங்களைக் கொண்டமைந்து "பிராந்தியங்களின் ஒன்றியம்" என அழைக்கப்படுவதுடன், இலங்கையின் பல்லின, சமய. கலாசார பண்புகளை கருத்திலெடுத்து நல்லிணக்கம், சகிப்புத்தன்மை, வெளிப்படைத்தன்மை, நாட்டுப் பற்றுள்ள சமுதாயத்தை உருவாக்கும் வகையில் சமயச் சார்பற்ற குடியரசாக இலங்கை பிரகடனப்படுத்தப்பட்ட வேண்டும். வலுவேறாக்கத் தத்துவம் மற்றும் சம நிலைத் தலையீடுகள் கொண்ட அரசாங்க நிறுவனங்களும், கலப்பு அல்லது இரட்டை நிறைவேற்றுத்துறை முறைமையினை பிரயோகிக்கத்தக்கவகையில் ஈரங்க சட்டசபை யினையும் கொண்டிருக்கலாம்.

பாராளுமன்றம் பொதுமக்கள் சபை, பிராந்தியங்களின் சபை என இரண்டு சபைகளைக் கொண்டிருப்பதுடன், பொது மக்கள்சபை தேர்தல்மூலம் தெரிவுசெய்யப்படும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட கீழ் சபை எனவும், பிராந்தியங்களின் சபை மேல்சபை எனவும் அழைக்கப்படலாம். பிராந்தியங்களின் சபை அங்கத்தவர்கள் ஒவ்வொரு பிராந்திய சபையிலிருந்தும் மறைமுகத் தேர்தல் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவு செய்யப்படுவதுடன், மேல்சபை அங்கத்துவத்தில் பிராந்தியங்களுக்கு சமபிரதி நிதித்துவம் வழங்கப்பட்டு, பிராந்தியங்களின் சபை நிரந்தர சபையாக்கப்பட வேண்டும். இதன் அங்கத்தவர்களில் குறிப்பிட்ட தொகையினர் சுழற்சி முறையில் தெரிவு செய்யப்படலாம்.

தேர்தல் மூலம் மக்களால் தெரிவு செய்யப்படும் ஒருவர் ஐந்து (5) வருட காலத்திற்கு பதவி வகிக்கத்தக்க வகையில் ஜனாதிபதி நிறைவேற்றுத் துறைக்கு பொறுப்பாக இருப்பதுடன், பாராளுமன்றத்தின் கீழ் சபையிலிருந்து தெரிவு செய்யப்படும் அமைச்சரவையொன்று நிறைவேற்றுத் துறையுடன் இணைந்து செயற்பட வேண்டும். அமைச்சரவைக்கு ஜனாதிபதி தலைமை தாங்குவதுடன் ஜனாதிபதியின் அதிகாரங்கள் தற்போது நடைமுறையிலுள்ள பத்தொன்பதாம் (19) யாப்புத் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அமைதல் வேண்டும்.

தமிழ், முஸ்லிம் சிறுபான்மைச் சமூகத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இரண்டு உபஜனாதிபதி பதவிகள் உருவாக்கப்பட வேண்டும். பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்காத, சமுதாயத்தில் உயர்கல்வி, ஒழுக்கம், நேர்மை, உயர்ந்த விழுமியங்களைப் பேணி வாழ்ந்து வரும் தமிழ், முஸ்லிம் சமுதாயத்திலிருந்து இதுவரை பாராளுமன்றத்தின் இரு சபைகளும் ஒன்றாகக் கூடி மறைமுகத் தேர்தல் ஒன்றின் மூலம் உப ஜனாதிபதி தெரிவு செய்யப்பட வேண்டும். உபஜனாதிபதிகளின் பதவிக்காலம் ஆறு (6) வருடங்களாக வரையறுக்கலாம். ஜனாதிபதி பதவி ஏதாவதொரு காரணத்தினால் வறிதாகிப் போனால் (இல்லாது போனால்) புதிய ஜனாதிபதி தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் காலம் வரை உபஜனாதிபதிகளில் ஒருவர் எந்த சமுதாயம் எண்ணிக்கையில் அதிகமாகவுள்ளதோ அதனடிப்படையில் சுழற்சி முறையில் ஜனாதிபதியாக பதவி வகிக்கலாம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் குடியரசு ஜனாதிபதி ஒருவர் அனுபவிக்கும் அனைத்து அதிகாரங்களையும் உப ஜனாதிபதி அனுப்பவிப்பதுடன், ஜனாதிபதிக்காக பதில் கடமையாற்றும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் சுழற்சிமுறையில் உப ஜனாதிபதிகளில் ஒருவரை எந்த சமுதாயம் எண்ணிக்கையில் அதிகமாகவுள்ளதோ அதனடிப்படையில் பாராளுமன்றத்தால் நியமனம் செய்யப்படலாம். இரண்டு உப ஜனாதிபதிகளும் ஆணைக்குழுக்களை நியமனம் செய்வதற்காக உருவாக்கப்படும் அரசியமைப்பு பேரவையின் அங்கத்தவர்களாக்கப்படுவதுடன், அரசியலமைப்பு பேரவையின் தலைவராக சுழற்சி முறையில் இரண்டு உப ஜனாதிபதிகளும் வருடம் ஒருவர் என்ற வகையில் இரண்டு வருடங்கள் பதவி வகிக்கலாம்.

மக்களின் உரிமைகள் சுதந்திரங்களைப் பாதுகாத்து நிலைப்படுத்துவதற்காக உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், பிராந்திய மேல் நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களை அரசியலமைப்பு மூலம் உருவாக்கலாம். மக்களின் அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள், பிராந்திய சபைகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள் அனைத்தையும் பாதுகாக்கின்றதும், சட்ட ஆட்சியை நிலை நிறுத்துவதுமான சுதந்திர நிறுவனமாக உயர் நீதிமன்றம் மாற்றியமைக்கப்படுவதுடன், நீதித் துறையின் சுதந்திரத்தையும் அரசியல் தலையீடற்ற செயற்பாட்டையும் உச்சளவில் உறுதிப்படுத்துவதற்காக "சுதந்திர நீதிச்சேவை ஆணைக்குழு" ஒன்று நிறுவப்பட வேண்டும். சட்டமா அதிபர் திணைக்களம் மீது செலுத்தப்படும் அரசியல் தலையீட்டினை இல்லாதொழிப்பதற்காக இத்திணைக்களம் சுதந்திர நீதிச் சேவை ஆணைக்குழுவின் நேரடி மேற்பார்வையின் கீழ் கொண்டுவருவதுடன், பிராந்திய மேல்நீதிமன்ற நீதிபதிகள் சுதந்திர நீதிச்சேவை ஆணைக்குழுவின் சிபார்சுக்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிணங்க ஜனாதிபதியால் நியமனம் செய்யப்பட வேண்டும். பிராந்திய மேல் நீதிமன்றம் பிராந்தியத்தின் ஆள்புல எல்லைக்குள் புரியப்படும் அரசியலமைப்பு தவிர்ந்த அனைத்து குற்றங்களையும், உரிமை மீறல்களையும் விசாரணை செய்து நீதி வழங்கும். இந்நீதிமன்றத்தின் சுதந்திரமானதும், தடையற்றதுமான செயற் பாட்டிற்காக பிராந்திய சட்டமாதிபர் திணைக்களம் ஒவ்வொரு பிராந்தியங்களிலும் உருவாக்கப்படலாம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் "வட கிழக்குப் பிராந்தியம்" எனப் பெயரிடப் படலாம். பிராந்தியங்களின் எல்லைகள் மீள் வரையப்படுமாயின், இன விகிதாசாரத்தைக் கருத்திலெடுத்து இனங்களின் பெரும் பான்மையினைச்சிதைக்காத வகையில் பிராந்தி யங்களின் எல்லைகள் மீள் வரையப்படலாம். ஏனைய பிராந்தியங்கள் நடைமுறையிலுள்ள மாகாண எல்லைகளையும், பெரும் சமுதாயங் களின் விகிதாசாரத்தையும் கருத்திலெடுத்துப் பெயரிடலாம். பிராந்திய சபை ஒவ்வொன்றும் பிராந்திய சபைத் தேர்தல் சட்டத்திற்கு ஏற்ப உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவதன் மூலம் உருவாக்கப்படலாம். பிராந்திய சபைகளின் அவைத்தலைவர் "சபாநாயகர்" என பெயர் குறித்து அழைக்கப்படவேண்டும். பிராந்தியங்களின் ஒன்றியத்திற்கான அதிகாரப் பட்டியல், பிராந்திய சபை களுக்கான அதிகாரப்பட்டியல் என இருவகை அதிகாரப் பட்டியல்கள் மாத்திரம் உருவாக்கப்படுவதுடன், ஒருங் கிணைந்த அதிகாரப் பட்டியல் முறை இல்லாதொழிக்கப்பட்டு, பிராந்திய சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரப் பட்டியலுக்குட்பட்டு சட்டங்களை ஆக்கும் அதிகாரம் பிராந்திய சபைகளுக்கு வழங்கப் படலாம். அதனை மீளப்பெற்றுக் கொள்ளும் அதிகாரம் பிராந்தியங்களின் ஒன்றியத்திற்கு வழங்கப்படலாகாது. பிராந்திய சபை உறுப்பினர்கள் தொகையில் 25% இட ஒதுக்கீட்டினை பெண்களுக்கு ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஒதுக்க வேண்டும்.

ஒவ்வொரு பிராந்திய சபைகளுக்கும் நியமனம் செய்யப்படும் ஆளுநர் குறித்த பிராந்தியத்தின் வாக்காளராகவும், அமைச்சு செயலாளர் தரத்தில் பதவி வகித்தவராக அல்லது இலங்கை நிர்வாக சேவை தரம்-1 பதவி வகித்தவராக இருத்தல் வேண்டும். வடகிழக்கு பிராந்தியம் தவிர்ந்த பிராந்தியங்களின் ஆளுநர், பிரதம மந்திரி மற்றும் முதலமைச்சரின் கருத்தொருமைப்பாட்டுடன் ஜனாதிபதியால் நியமனம் செய்யப்படும் அதேநேரம், வடகிழக்கு பிராந்திய ஆளுநர் இரண்டு உப ஜனாதிபதிகள் மற்றும் முதலமைச்சரின் கருத்தொருமைப்பாட்டுடன் ஜனாதிபதியால் நியமனம் செய்யப்பட வேண்டும். ஆளுனர் நியமனத்தில் கருத்தொருமைப்பாடு எட்டப் படாதவிடத்து இவ்விடயத்தை அரசிய லமைப்புப் பேரவைக்கு ஜனாதிபதி சமர்ப்பித்து அரசியலமைப்பு பேரவையின் சிபார்சுக்கு இணங்க ஜனாதிபதியால் ஆளுநர் நியமனம் செய்யப்படலாம்.

மூன்று பெரும் சமுதாயங்கள் வாழுகின்ற பிராந்தியங்கள் அடையாளம் காணப்பட்டு, பெயர் குறித்து அரசியல் யாப்பில் கூறப் படலாம். (உதாரணமாக வடகிழக்கு, மத்தி, ஊவா, மேல் மாகாணங்கள்) பிராந்திய சபையின் உறுப்பினர்களில் பெரும் பான்மை ஆதரவினை எக்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பெறுகின்றார்களோ அக் கட்சியின் உறுப்பினர்களில் ஒருவரை குறித்த கட்சியின் கருத்தொருமைப்பாட்டுடன் முதலமைச்சர் ஆளுனரினால் தெரிவு செய்யப்படலாம். பிராந்திய சபைகளை நிர்வகிக்க மத்திய அமைச்சர் ஒருவர் நியமனம் செய்யப்படலாகாது. பதிலாக பிராந்திய சபைகளின் முதலமைச்சர்கள் அமைச்சரவையின் அங்கத்தவர்களாக்கப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படலாம். முதலமைச்சரின் கடமைகளாக:- பிராந்தியங்களிற்கான திட்டங்களை வகுத்தல், பிராந்தியத்தின் நிதியினை முகாமை செய்தல், பிராந்தியத்தின் சட்டம், ஒழுங்கினை நிர்வகித்தல், முதலீடுகளை நிர்வகித்தல் என்பனவாக வரையறுக்கலாம்.

முதலமைச்சர் மூன்று பெரும் சமுதாயங்களில் ஒன்றைச் சேர்ந்தவராக இருந்தால் இரண்டு பிரதி முதலமைச்சர்களும் ஏனைய இரண்டு பெரும் சமுதாயத்திலிருந்து தெரிவு செய்யப்படலாம். பிரதி முதலமைச்சர்கள் முதலமைச்சர்கள் கூட்டங்களில் பங்குபற்றும் அதிகாரம் கொண்டவர்களாகும். பிரதி முதலமைச்சர்களின் அதிகாரங்களாக: பிராந்திய சுகாதாரம், பிராந்திய சமூக சேவைகள், பிராந்திய கலாசாரம், பிராந்திய தொல்பொருள் மற்றும் நூதனசாலைகள், பிராந்திய போக்குவரத்து, பிராந்திய நகர அபிவிருத்தி என்பன வழங்கப்படலாம். முதலமைச்சர் பதவி ஏதாவதொரு காரணத்தினால் வறிதாகிப்போனால் ( இல்லாது போனால்) புதிய முதலமைச்சர் நியமனம் செய்யப்படும் வரை பிரதி முதலமைச்சர்களில் ஒருவர் எந்த சமுதாயம் எண்ணிக்கையில் அதிகமாகவுள்ளதோ அதனடிப்டையில் முதலமைச்சராகப் பதவி வகிக்கலாம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் முதலமைச்சர் ஒருவர் அனுபவிக்கும் அனைத்து அதிகாரங்களையும் பிரதி முதலமைச்சர் கொண்டிருப்பார். முதலமைச்சருக்கான பதில் கடமையாற்றும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் சுழற்சிமுறையில் பிரதி முதலமைச்சர்களில் ஒருவரை பிராந்திய சபையின் கருத்தினை அறிந்த பின்னர் ஆளுனர் பதில் முதலமைச்சராக நியமனம் செய்யலாம்.

பிராந்தியங்களில் முதலமைச்சரையும், இரண்டு பிரதி முதலமைச்சர்களையும் உள்ளடக்கிய அமைச்சரவை உருவாக்கப்பட வேண்டும். பிராந்தியங்களுக்கு பெயர் குறித்து ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் தொடர்பில் இயற்றப்படும் சட்டங்களை அமுலாக்கம் செய்வதற்கு பிராந்திய அமைச்சரவை ஒன்று உருவாக்கப்படலாம். அமைச்சரவையின் எண்ணிக்கை அரசியல் யாப்பினால் வரையறுக்கப்பட்டிருப்பதுடன், அமைச்சரவையின் எண்ணிக்கை தற்போதைய எண்ணிக்கையாகிய ஐந்திலிருந்து (5) பத்தாக (10) அதிகரிக்கப்படலாம்.

சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகள் பேசுகின்ற சமுதாயத்தில் இடையூடாட்டத்தின் மூலம் சமூக நல்லிணக்கத்தினையும், நல்லாட்சியையும் ஏற்படுத்துவதில் தற்போது நடைமுறையிலுள்ள மொழிக் கொள்கை தோல்வி கண்டுள்ளதால், பிராந்தியங்களின் ஒன்றியத்தில் சிங்களம் - தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் அரசகரும மொழிகளாக்கப்பட்டு ஆங்கிலம் இணைப்பு மொழியாக பிரகடனப்படுத்தப்படலாம். பிராந்தியங்களின் நிர்வாக மொழிகளாக சிங்களமும், தமிழும் இருப்பதுடன், பாராளுமன்றத்தின் பிராந்தியங்களின் சட்டங்கள் ஆங்கிலமொழியில் உருவாக்கப்பட்டு அவைகள் சிங்களத்திலும், தமிழிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும். பிராந்தியங்களின் ஒன்றிய (மத்திய அரசாங்கம்) நீதிமன்றங்களின் நிர்வாக மொழியாக ஆங்கிலம், சிங்களம். தமிழ் ஆகிய மூன்று மொழிகளும் பயன்படுத்தப்படலாம். பிராந்தியசபைகளின் ஆள்புல எல்லைக்குட்பட்ட நீதிமன்றங்களின் நிர்வாக மொழியாகச் சிங்களமும், தமிழும் பயன்படுத்தப்படலாம். பாடசாலைகளில் போதனா மொழியாக சிங்களமும், தமிழும் இருப்பதுடன், பல்கலைக்கழகங்களின் போதனா மொழி ஆங்கிலம் இருத்தல் வேண்டும். பிராந்தியங்களின் ஒன்றியமானது மும்மொழிக் கொள்கையின் பயன்பாட்டுக்குத் தேவையான வசதிகள் அனைத்தையும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

தேசிய நிதி ஆணைக்குழு உருவாக்கப்படுவதுடன், தேசிய நிதி ஆணைக் குழுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராந்தியங்களின் ஒன்றியத்திற்கும், பிராந்திய சபைகளுக்கும் சம அங்கத்துவம் வழங்கப்பட வேண்டும். பிராந்திய கணக்காளர் திணைக்களம் ஒன்று பாராளுமன்ற கணக்காய்வாளர் திணைக்களத்தின் கீழ் உருவாக்கப்படவேண்டும். பிராந்தியங்களின் ஒன்றியத்தின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் பிராந்திய சபைகளுக்கு வழங்கப்படும் நிதியின் அளவு பிராந்தியத்தின் சனத்தொகை, நிலவிஸ்தீரணம் என்பவைகளை அளவீடாகக் கொண்டு வகுக்கப்படலாம்.

பிராந்திய சபைகள் தமக்கான நிதிக் கட்டமைப்பை உருவாக்கி நிதி சேகரிக்கும் அதிகாரம் வழங்கப்படுவதுடன், வெளிநாட்டு நேரடி முதலீடுகள், மானியங்கள், அபிவிருத்தி உதவிகள் போன்றவற்றை பெற்று முகாமை செய்கின்ற அதிகாரம் பிராந்திய சபைகளுக்கு வழங்கப்படலாம். பிராந்திய சபைக்குட்பட்ட ஆள்புலநிலப்பரப்பிற்குள் வரி அறவிடுதல், மற்றும் வருமானம் ஈட்டும் அதிகாரங்கள் பிராந்திய சபைக்கு வழங்கப்படுவதுடன், பிராந்தியங்களின் ஒன்றியம் வகுக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் பிராந்தியசபைகளூடாக மேற் கொள்ளப்படலாம்.

அரசியலமைப்புப் பேரவையினால் பிராந்திய பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் நியமனம் செய்யப்பட வேண்டும். பிராந்திய பொதுச்சேவைக்கான ஆட்சேர்ப்பு, இடமாற்றம், பதவியுயர்வு, பதவிநீக்கம், ஒழுக்கக் கட்டுப்பாடு ஆகியவை பிராந்திய பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு பொறுப்பாக்கப்படுதல் வேண்டும். பிராந்திய சபை அமைச்சு செயலாளர்கள் பிராந்திய பொதுச்சேவை ஆணைக்குழுவின் சிபார்சிற்கு ஏற்ப ஆளுனரினால் நியமனம் செய்யப் படல் வேண்டும். அதேபோன்று பிராந்திய தேர்தல்ஆணைக்குழு ஒவ்வொரு பிராந்திய சபையிலும் உருவாக்கப்பட்டு பிராந்திய சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடாத்தும் அதிகாரங்கள் வழங்கப்படலாம்.

தேசிய காணி ஆணைக்குழுவொன்று பாராளுமன்ற சட்டத்தின் மூலம் உருவாக்கப்படலாம். தேசிய காணி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தொகை பிராந்தியங்களின் ஒன்றியத்திற்கும் (மத்திய அரசாங்கம்) பிராந்திய சபைகளுக்கும் சம அளவில் வழங்கப்படலாம். அத்துடன் தேசிய காணி ஆணைக்குழு எல்லாசமூகத்தினரதும்சம பிரதிநிதித்துவத்தினைக் கொண்டிருப்பதுடன், காணி ஆணைக்குழுவின் மேற்பார்வையில் பிராந்திய சபைகளுக்குட்பட்ட அரசகாணிகள் அனைத்தும் பிராந்திய சபைகளுக்குரித் தாக்கப்படலாம். கரையோர பிராந்திய சபைகளைச் சுற்றியுள்ள பத்து கடல் மைல் தூரத்திற்குட்பட்ட கரையோரங்களும், கரையோர வளங்களும், கடலாதிக்கமும் பிராந்திய சபைகளுக்குரியதாகும். அரச காணிகளை பகிர்ந்தளிக்கும்போது தேசிய காணி ஆணைக்குழு மாவட்டத்திலுள்ள காணியற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதுடன், அதன் பின்னர் பிராந்தி யத்திலுள்ள ஏனைய மாவட்டங்களின் காணியற்றவர்களுக்கும் முன்னுரிமை வழங்கி காணி பகிர்ந்தளிக்கப்படலாம். காடுகள் தொடர்பாக சர்வதேச நியமங்களைப் பயன்படுத்தி தேசிய காணிப் பயன்பாட்டுக் கொள்கையொன்றை தேசிய காணி ஆணைக்குழு உருவாக்க வேண்டும். காடுகள், ஆற்றுப்பள்ளத்தாக்கு, நீர்த்தேக்கங்கள், நீரேரிகள், குளங்கள் போன்றவற்றின் பயன்பாடும் மற்றும் பாதுகாப்பு, தாவரங்கள் மற்றும்விலங்குகளின்பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பாக தேசிய காணி ஆணைக்குழுவின் சிபார்சுகளைப் பின்பற்றி மத்திய அரசாங்கமும், பிராந்திய சபைகளும் செயற்படலாம். தேசிய முக்கியத்துவம் கருதி குறித்த பிராந்திய சபையிலுள்ள காணியை விடுவிக்கும்படி மத்தியரசாங்கம் தேசிய காணி ஆணைக்குழுவிடம் கோர முடியும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் பிராந்திய சபையில் சமூகமளித்த உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளுடன் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். தேசிய முக்கியத்துவம் கருதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிப் பயன்பாடு தொடர்பாக பிராந்தியங்களின் அரசாங்கத்திற்கும், பிராந்திய சபைக்கும் இடையில் கருத்தொருமைப்பாடு ஏற்படாதவிடத்து தேசிய காணி ஆணைக்குழு இது தொட ர்பாகத் தேசிய அரசியலமைப்புப் பேரவைக்கு அறிக்கையிடலாம். இரண்டு அரசாங்கங்களுக்குமிடையில் கருத்தொருமைப்பாட்டினை ஏற்படுத்துவதற்காக தேசிய அரசியலமைப்பு பேரவை நியாயாதிக்கதீர்ப்பு சபையொன்றினை பாராளுமன்றத்தின் அனுமதியுடன் உருவாக்கலாம். நியாய தீர்ப்பு சபைக்கான உறுப்பினர்கள் பிராந்திய சபைகளினதும், பிராந்தியங்களின் ஒன்றியத்தினதும் சம அளவிலான உறுப்பினர்களைக் கொண்டமைந்திருக்கலாம். நியாயாதீர்ப்பு சபையின் கருத்துக்களினூடாக இரண்டு அரசாங்கங்களும் கருத்தொருமைப் பாட்டிற்கு வர முடியாமல் போனால், தேசிய காணி ஆணைக்குழு இறுதித் தீர்ப்பிற்காக உயர்நீதிமன்றத்திடம் இவ்விடயத்தை பாரப்படுத்தி, உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பினை இறுதித் தீர்ப்பாகக் கொள்ளலாம்.

தேசிய அரசியலமைப்பு பேரவையினால் தேசிய காவல்துறை ஆணைக்குழுவிற்குட்ட பிராந்திய காவல்துறை ஆணைக்குழு ஒன்றை உருவாக்கலாம். பிராந்திய காவல்துறை ஆணைக்குழுவின் பொறுப்பில் பிராந்திய காவல்துறைச்சேவை செயற்பட வேண்டும். பிராந்திய காவல்துறை அங்கத்தவர்களின் ஆட்சேர்ப்பு, காவல்துறைச்சேவை செயற்பட வேண்டும். பிராந்திய காவல்துறை அங்கத்தவர்களின் ஆட்சேர்ப்பு, இடமாற்றம், பதவிநீக்கம், ஒழுங்காற்று நடவடிக்கை என்பவற்றிற்குப் பிராந்திய காவல்துறை ஆணைக்குழு பொறுப்பாக்கப்படுவதுடன், பிராந்தியங்களுக்கிடையிலான இடமாற்றம் பிராந்திய காவல்துறை ஆணைக்குழுவின் ஆலோசனையுடன் மேற்கொள்ளப்படலாம். பிராந்திய காவல்துறைக்குத் தேவையான ஆலோசனைகளைப் பிராந்திய சட்டமா அதிபர் திணைக்களம் வழங்கமுடியும்.

பிராந்தியம் அல்லது பிராந்தியங்கள் தொடர்பாக அப்பிராந்தியம் உங்களுக்காக உருவாக்கப்பட்ட பிராந்திய சபை / சபைகளின் தீர்மானம் ஒன்றினால் அங்கீகரிக்கப்படுகின்ற வரையில் அல்லது அங்கீகரிக்கப்பட்டாலொழிய பிராந்தியம் / ங்கள் தொடர்பாக யாப்பில் திருத்தம் செய்யமுடியாது. யாப்பு திருத்தம் ஒன்று பிராந்திய சபை/களால் அங்கீகரிக்கப்பட்டால். அப்பிராந்திய சபை/களின் சபாநாயகர் இவ்அங்கீகாரம் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிடலாம். அங்கீகாரம் தொடர்புபட்ட திருத்தம் வர்த்தமானி அறிவித்தல் திகதியிலிருந்து பிராந்தியம் / கள் தொடர்பில் நடைமுறைக்கு வரும். பெரும் சமுதாயங்கள் வாழ்கின்ற பிராந்தியங்களாக அடையாளம் காணப் பட்டுள்ள பிராந்திய சபைகளில் சபாநாயகரைத் தேர்ந்தெடுத்தல் தொடர்பான தீர்மானம், நிலையியற் கட்டளைகளை அங்கீகரித்தல் தொடர்பான தீர்மானம், சமய வழிபாடு, அனுஷ்டானம் தொடர்பான செயற்பாட்டில் அல்லது போதனையில் ஏதேனும் சமயத்தின் செல்வாக்கு, சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு, பிராந்தியங்களின் பொருளாதார வாய்ப்புக்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளும் போது பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படலாம். ஒன்று சபையிலுள்ள உறுப்பினர்களுள் 3/2 பெரும் பான்மையோரின் வாக்குகளை இத்தீர்மானம் பெற்றிருத்தல் இரண்டாவதாக, சபையிலுள்ள இரண்டாவது, மூன்றாவது பெரும் சமுதாயங்களின் உறுப்பினர்களுள் 3/2 பெரும் பான்மையோரின் வாக்குகளை இத்தீர்மானம் பெற்றிருத்தல்.

**6. முடிவுரை**

உள்நாட்டு யுத்தத்தில் அரசாங்கம் வெற்றியடைந்த பின்னர் தமிழ் மக்களின் மனத் துயரங்களுக்குத் தீர்வு காண்பதில் அக்கறை செலுத்தாமல் பௌதிக மீள் கட்டமைப்புக்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாகப் பெருந்தெருக்கள், புகையிரத சேவை, வைத்தியசாலைகள் புனரமைப்பு, மின்சாரம், தொலைத்தொடர்பு என்பவற்றில் முழுமையாக கவனம் செலுத்தியது. ஆயினும் வடமாகாண மக்களுக்கு பௌதீக வசதிகள் எந்தளவிற்கு அவசியமோ அதனைவிட உள்நாட்டு யுத்தத்தினால் ஏற்பட்ட பேரவலங்கள்,துன்பங்கள், மனத் துயரங்கள், உளவியல் பாதிப்புக்கள், காணமல் போனவர்கள் பற்றிய தகவல்கள் அறியமுடியாமல் ஏற்பட்ட பரிதவிப்புக்கள் என்பவற்றிலிருந்து தாம் மீள வேண்டும் என்பதே மிகவும் அதிகமாக இருந்தது. வடமாகாண சபைத் தேர்தல் வாக்களிப்பில் பங்கு பற்றிய பலர் வடமாகாணத்தில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினால் தாம் அச்சமடைந்துள்ளதாகவும், இதிலிருந்து மீள்வதற்காகவே தேர்தலில் வாக்களித்ததாகவும் தெரிவித்த கருத்து யுத்தப்பாதிப்பின் உச்சக்கட்டளவை எடுத்துக் காட்டியது. வடமாகாணத்தில் இராணுவம் நிலை கொண்டுள்ளமை பாதுகாப்பு நோக்கங்களுக்கானதல்ல. பதிலாக அரசியல் நோக்கங்களுக்கானது. இதனால் தமது நாளாந்த வாழ்க்கை பாதிக்கப்படுகிறது என்பதும் மக்களுடைய கருத்ததாக இருந்தது. ஆகவே யுத்தம் முடிவடைந்த நிலையில் இராணுவம் வடமாகாணத்தில் நிலை கொள்ளத் தேவையில்லை என்பது மக்களுடைய முடிவாகும். தேர்தலைக் கண்காணிப்பதற்காக வெளிநாட்டியிலிருந்து வருகை தந்திருந்த கண்காணிப்பாளர்கள் "மக்கள் தேர்தலில் வாக்களிப்பதற்கு மிகவும் ஆர்வமாகவுள்ளனர். ஆனால் பாதுகாப்பு படையினரின் பிரசன்னத்தால் மக்கள் பதட்டமடைந்துள்ளனர்." எனத் தெரிவித்துள்ளமை இராணுவத்தின் தேவைக்கு அதிகமான பிரசன்னம் உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டியது. அதேநேரம் தமிழ் தேசியக் கூட்டமைப்புதனது தேர்தல்விஞ்ஞாபனத்தினூடாக தனிரசு கோரிக்கையினைக் கைவிட்டுள்ளது. ஆகக்குறைந்த மாகாண சபைகளுக்கூடாக சமஷ்டி முறையிலான அதிகாரங்களை முழுமையாக வழங்கும்படி ஜனநாயக வழிமுறையில் கேட்டுள்ளது. இது மக்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு ஜனநாயக வழிமுறைகளிலான தமிழ்தேசியக் கூட்டமைப்பின் செயற்படாகும்.

மறுபக்கத்தில் கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற தமிழ் மக்களும், முஸ்லீம் மக்களும் ஒன்றிணைந்து மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை முழுமையாக வழங்கும்படி கோருவதற்கும், மேலதிக அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் கிழக்கு மாகாண சபையினை தமது அதிகாரத்தின் கீழ் கொண்டு வரவேண்டும். கிழக்கு மாகாணத்தில் வாழும் பெரும்பான்மை சமூகத்தினராகிய தமிழ் மக்களும், முஸ்லீம் மக்களும் தமக்குள் புரிந்துணர்வு உடன்படிக்கையினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இப்புரிந்துணர்வு உடன்படிக்கை சாத்தியமற்றுப் போனால் கிழக்கு மாகாண சபையினை ஆளுகின்ற அதிகாரம் இரண்டு சமுதாயங்களின் கையிலிருந்து விடுபட்டு பெரும்பான்மை கட்சியொன்றிற்கு சலுகைகளுக்காக முண்டு கொடுக்கும் சபையாக மாற்றமடையும்.

வடக்கு கிழக்கு மாகாணசபை இணைந்த அதிகாரப் பகிர்வு தரப்பட வேண்டும் என எதிர்பார்ப்பது இன மோதலுக்கான அரசியல் தீர்வினை மேலும் தாமதப்படுத்தும், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பினை அரசியல் தீர்விற்கான அல்லது அதிகாரப்பகிர்விற்கான முன் நிபந்தனையாக விதிப்பது சிறந்த அரசியல் சாணக்கியமாக கருத முடியாது. வடக்கு கிழக்கு இணைப்பு அரசியல் தீர்விற்கான முன் நிபந்தனையாகுமாயின், கிழக்கு மாகாண மக்களின் (தமிழ், முஸ்லீம்) அரசியல் தலைமைத்து அபிலாசையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றக்கூடிய புரிந்துணர்வு உடன் படிக்கையொன்றை வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் உருவாக்கிக் கொள்ளவேண்டும். அதேபோன்று வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் மக்களுக்கு இடையில் காணப்படும் சமூக இடை வெளி குறைக்கப்பட அல்லது இல்லா தொழிக்கப்பட பொருத்தமுடைய சமூகப் பொறிமுறை உருவாக்கப்பட்ட வேண்டும். அதுவரையில் இணைப்பு என்பது மேற் போக்கானது, கற்பனையானது. இன்னோர்வகையில் கூறினால் இரண்டு மாகாண மக்களுக்கிடையிலும் நல்லிணக்கம் ஏற்படவேண்டும். இதனை வடக்கிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். இது குறைந்த பட்சம் கிழக்கு மாகாண அரசியல் தலை மைத்துவ அபிலாசைகளுக்கூடாகவாவது ஏற்படுத்தப்படலாம். தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு கிழக்கு மாகாண மக்கள் வழங்கும் ஆதரவு வடக்கு, கிழக்கு இணைப் பிற்கான ஆதரவாக கருத முடியாது. கிழக்கு மாகாண மக்கள் தழிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமையிலான மாகாண சபையினையே விரும்புகின்றார்கள் என்பதே யதார்த்தமாகும். எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு இரண்டு மாகாணங்களிலும் ஆட்சியமைக்கக்கூடிய வகையில்தனது தந்திரோபாயங்களைவகுத்துக் கொள்வதே சிறந்த முடிவாக அமையும். இதனை உரிய முறையில் புரிந்து கொண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு பணியாற்றத் தவறுமாயின், கிழக்கு மாகாணத்தில் புதிய தமிழ்கட்சிகளின் உருவாக்கம் தவிர்க்க முடியாது போகலாம்.

**உசாத்துணைகள்**


1. A2 : Population by ethnic group according to districts, 2012, Census of Population & Housing, 2011, Department of Census & statistics Sri Lanka. URL Available on http://www.statistics.gov.lk/PophouSat/CPH 2011/index.php? filename = pop42&gp = Activities & tpl=3
2. ITN News, Sep 10, 2013, Strong challenge from TNA to national reconciliation. URL Available on http://www.itnnews.lk/ local-news/strong-challenge-from-tna-to-national- reconciliation/
3. JVP slams TNA manifesto and opposes federalism, 29 July, 2015 Tamil Guardian, URL Available on http://www.tamilguardian.com/article.asp?articleid=15412
4. Mangala Moonesinghe Parliamentary Select Committee - Interim Report 1992, URL Available on http://www.tamilnation.co/conflictresolution/tamileelam/92 selectcommittee.htm
5. Mirror Citizen, July 28, 2015 8:12am TNA mnifesto only election slogan: Patali, URL Available on http://www.tmirrorcitizen.dailymirror.lk/2015/07/28/tna-mainfesto-only-election-slogan-patali/
6. Oslo Declaration, Statement by the Royal Norwegian Government at conalusion of third session of peace talks between Sri Lanka and LTTE in Oslo, 5 December 2002, URL Available on http://www.tchr.net/oslo-declaration.pdf
7. Perera, K K S, 25 september 2015, SWRD Bandaranaike: sept. 26 is 56th death anniversary of formar pm S.W.R.D Bandaranaike, The Times of Sri Lanka, URL Available on http://www.timeesrilanka.com/tag/swrd-bandaranaike/
8. Report of the Commission of Inquiry on Lessons Leart and Reconcilliation, November 2011, More are


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Available at http://www.priu.gov.lk/news_update/Current_ Affairs/ca2011112/FINAL%20LLRC%20 REPORT.pdf

9. Rohan Gunaratna, 06 September 2013, 03:18:05, Recent election manifesto of the TNA anavatar of the LTTE, Lankasri News, URL Available on http://www.lankasrinews.com/view.php?202d36B220e7nJd34ebvrUjM4cbdTZEIcddcQWRTAdbc4scpsbe43gF-p03e033A818O2

10. Sathananthan.S, 3 December 1997. Chabdrika's Devolution Proposals' 1997 Draft Constitution in Sri Lanka - Whither Devolution of Power?, URL Available on http://www.tamilnation.co/conflictresolution/tamileelam/cbkproposals/971203satha.htm

11. Sumanthiran M A, September 15, 2013, 9:06 pm storm in teacup : TNA'S Election Manifesto, The Island, URL Available on http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=88128

12. Sumith Chaaminda and Nishan de Mel, 2013 Provinaial Council Election 2013 A political Analysis Central, Nirthern and North Western Province, Verite Research Pvt Ltd, URL Availabe http://www.goole.lk/url?sa=t&rct=j&q=&esrc=s&source=web&cd=8&cad=rja&uact=8&ved=0a-hUKEwil2q0c5szlAhUFTO4KHYyrBCIQFghBMAc&url=http%3A%2Fwww.veriteresa rch.org%2F-downloadpdf_spreport.cfm%3Fpdf_3D17&usg=AFQjCNEWean5KX0vWI8uCn55TnefCL8gyw&b-vm=bv.117218890.d.c.2E

13. The Mandate Given to the Tamil National Alliance (TNA) URL Available on http://www.www.satp.org/satporgtp/countries.srilanka/document/paper/TNA_mANIFESTO.PDF



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்திற்கு பின்னரான சூழலில் இலங்கையின் வட மாகாண பாடசாலை மாணவர்க்குரிய பொதுப்பரீட்சைகளின் பெறுபேறுகளிலான தளம்பல்கள் : அவற்றுக்கான காரணங்கள் மற்றும் தீர்வுகள்

ஆ. நித்திலவர்ணன்

**ஆய்வுச்சுருக்கம்**

இலங்கையில் தேசிய பொதுப்பரீட்சைகளாக தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தரப்பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரப்பரீட்சை ஆகியவற்றின் வடமாகாண தற்போதைய பெறுபேறுகளை தேசிய மட்ட பெறுபேறுகளுடனும், ஏனைய மாகாணப்பெறுபேறுகளுடனும் ஒப்பிடும்போது வட மாகாணம் பின் தங்கிய நிலையில் உள்ளது. எனவே இந்நிலைமையை ஆய்வுசெய்து மேம்படுத்தவேண்டிய தேவை கல்விச் சமூகத்தினர் மற்றும் ஆய்வாளர்கள் மத்தியில் எழுகின்றது, இவ்வாய்வானது அண்மைக்கால வடமாகாண பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளின் போக்கினை இனங்காண்பதுடன், குறைநிலைக்கு பொறுப்பான காரணங்களை இனங்காணவும் மற்றும் மேம்படுத்துவதற்கான எதிர்கால சிந்தனை, திட்டம் மற்றும் செயல்கள் பற்றியும் கவனம் செலுத்துகின்றது.

**திறவுச்சொற்கள் :** யுத்தத்திற்குப் பின்னரான சூழல், வடமாகாணப் பாடசாலை மாணவர்கள், பொதுப்பரீட்சைப் பெறுபெறுகள்

## 1.0 ஆய்வுப்பின்னணி

யுத்தத்திற்கு பின்னரான சூழலில் வடமாகாண பாடசாலை மாணவர்களின் பொதுப்பரீட்கைகளாக தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தரப்பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளில் தளம்பல் நிலை அல்லது வீழ்ச்சிநிலை காணப்படுகின்றது. அண்மைக்கால வடமாகாணத்தின் பொதுப் பரீட்சை பெறுபேறுகளை தேசிய மட்ட பெறுபேறுகளுடனும், ஏனைய மாகாணப் பெறுபேறுகளுடனும் ஒப்பிடும் போது வடமாகாணம் பின்தங்கிய நிலையில் உள்ளதனை அவதானிக்கலாம். மாவட்ட ரீதியாகவும் மற்றும் கல்விவலய ரீதியாகவும் நோக்குகின்ற போதும் வடமாகாணத்திலுள்ள மாவட்டங்கள் மற்றும் கல்வி வலயங்கள் பின் தங்கி இருப்பதனை அவதானிக்கலாம்.

## 2.0 ஆய்வுக்கான நியாயப்பாடு

இலங்கையின் மொத்ததேசிய உற்பத்திக்கு, வடமாகாணம் அதிகளவில் (67%) பங்களிப்புச் செய்யும் துறையாக சேவைத்துறை (service sector) காணப்படுகின்றது. இதற்கு காரணம் வடமாகாண மக்களின் அதிகரித்த கல்வியறிவு மட்டமாகும். துரதிஷ்ட வசமாக அன்மைக்காலமாக (2011- 2015) வடமாகாணத்தின் பொதுக்கல்வி அடைவு திருப்திகரமானநிலையில் அமையப் பெறவில்லை. இது நீண்ட நாளைய நோக்கில் பெரும்பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடியது.

கடுமையான யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில்கூட உயர்ந்த நிலையில் காணப் பட்ட வடமாகாணத்தின் பொதுக்கல்வி அடைவுகள் என்றுமில்லாதவாறு வீழ்ச்சி நிலையில் உள்ளமை தொடர்பான கவலையை கல்விச் சமூகத்தினர், கல்விசார் தொழிற் சங்கங்கள், அரசியல்வாதிகள், ஊடகங்கள், அரச சார்ப்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் வெளியிட்டு வருகின்றனர்.

“ஆறுதல்” என்ற தன்னார்வத்தொண்டு நிறுவனம் இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம்போன்ற பிரதேசங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுக்கல்வி அடைவுவீழ்ச்சிக்கான காரணங்களைக் கண்டறியும் நோக்குடன் ஆய்வுக்கட்டுரைப் போட்டியொன்றை அண்மையில் பத்திரிகைகள்வாயிலாக அறிவித்திருந்தது.

அதேபோன்று அகில இலங்கை இந்து மாமன்றமும் தமிழர் பிரதேசங்களில், பொதுக்கல்வியில் எதிர்நோக்கப்படும் சமகால சவால்கள்தொடர்பானகலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளது.

இத்தகைய பின்னணியில் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளில் தளம்பல்நிலை அல்லது வீழ்ச்சி நிலை ஏற்படுவதற்கான காரணங்களை கண்டறிந்து, பெறுபேறுகளை மேம்படுத்துவதற்கான தீர்வுகளை முன் வைக்க வேண்டிய தேவைப்பாடு வடமாகாண கல்விச் சமூகத்தினர் மற்றும் பொதுமக்கள் மத்தியில் எழுகின்றது.

**3.0 ஆய்வு நோக்கங்கள்**

இவ்வாய்வானது பின்வரும் ஆய்வு நோக்கங்களைக்கொண்டது.

1. யுத்தத்திற்கு பின்னரான சூழலில் வடமாகாண பாடசாலை மாணவர்களின் பொதுப்பரீட்சைகளான
   - தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை,
   - க.பொ.த சாதாரண தரப்பரீட்சை மற்றும்
   - க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் போக்கினை இனங்காணல்.
2. அண்மைய ஆண்டுகளில் (2011-2015) பொதுப் பரீட்சைப்பெறுபேறுகளில் தளம்பல்நிலை அல்லது வீழ்ச்சி நிலை ஏற்படுவதற்கானகாரணங்களைகண்டறிதல்
3. பெறுபேறுகளை மேம்படுத்துவதற்கு இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகளை மதிப்பீடு செய்தல்.
4. வடமாகாண பாடசாலை மாணவர்களின் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளை மேம்படுத்துவதற்கான தீர்வுகளை முன்வைத்தல்

**4.0 ஆய்வு முறையியல்**

அளவறிரீதியான (Quantitative) மற்றும் பண்பறிரீதியான (Qualitative) ஆய்வு முறையியல்கள் இரண்டும் கலந்து இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகள், இலங்கைப்பரீட்சைத்திணைக்களப் புள்ளிவிபரங்கள் மற்றும் வடமாகாண கல்வி முகாமைத்துவ தரவுத்தொகுதியின் (Education Management Information System - EMIS) புள்ளிவிபரங்களில் இருந்தும் மற்றும் இலக்கியமீளாய்வுகளில் இருந்தும் பெறப்பட்டது. முதனிலைத் தரவுகள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வியலாளர்கள் மற்றும் பெற்றோர்களுடனான கலந்துரையாடல், வகுப்பறைத் தரிசிப்பு என்பனவற்றின் மூலம் பெறப்பட்டன.

**5.0 இலக்கிய மீளாய்வு**

- 2014 ஆம் ஆண்டு வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் "வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு" (Northern Education System Review - NESR என்ற ஆய்வு மேற்கொள்ளப்பட்டு ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது. அதிலிருந்து இவ்வாய்வுடன்தொடர்புபட்ட விடயங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.
- கொழும்பு பல்கலைக்கழகத்தின் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையத்தினால் (National Education Research and Evaluation Centre - NEREC) தரம் - 8 மாணவர்களிடையே 2012 ஆம் ஆண்டு தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட மதிப்பீடுகளின் பகுப்பாய்வு அறிக்கையில் இருந்தும் பெறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.0 தரவு அளிக்கையும் தரவுப்பகுப்பாய்வும்

### 6.1 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் போக்குகள்

- தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், கடந்த மூன்றாண்டுகளில் (2013 - 2015)


அட்டவணை - 1 கடந்த ஐந்தாண்டுகளில் (2011- 2015) மாகாண ரீதியாக வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுக் கொண்ட மாணவர்கள் சதவீதம்

| மாகாணம் | கடந்த ஐந்தாண்டுகளில் வெட்டுப்புள்ளிக்கு மேல்பெற்றுக் கொண்ட மாணவர் சதவீதம் | | | | |
|---|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| மேல் மாகாணம் | 10.89 | 11.21 | 9.97 | 10.18 | 9.86 |
| மத்திய மாகாணம் | 7.34 | 7.75 | 6.82 | 6.91 | 6.59 |
| தென் மாகாணம் | 11.03 | 11.76 | 11.67 | 11.36 | 10.42 |
| வட மாகாணம் | 9.62 | 9.46 | 11.02 | 11.00 | 11.38 |
| கிழக்கு மாகாணம் | 10.32 | 10.41 | 9.66 | 8.52 | 7.99 |
| வடமேல் மாகாணம் | 11.62 | 12.15 | 11.30 | 11.37 | 10.51 |
| வடமத்திய மாகாணம் | 10.24 | 11.05 | 10.18 | 9.72 | 9.69 |
| ஊவா மாகாணம் | 10.30 | 10.54 | 10.05 | 9.14 | 9.72 |
| சப்பிரகமுவா மாகாணம் | 11.57 | 11.81 | 11.55 | 11.84 | 10.64 |
| இலங்கை | 10.38 | 10.76 | 10.12 | 9.99 | 9.55 |

(மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் - 2015)

வரைபு - 1

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 - 2015 வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுக்கொண்ட மாணவர்களின் சதவீதத்தின் மாகாண ரீதியான ஒப்பீடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுக் கொண்ட மாணவர் சதவீதமானது, ஏனைய மாகாணங்கயுடன் ஒப்பிடுகையில் வடமாகாணப்பெறுபேறுகள் திருப்தி கரமான நிரையிலுள்ளன.

- 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட (அதாவது இரண்டு வினாத்தாளிலும் 35 புள்ளிகளுக்கு மேல்) மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் மாகாணங்களை வரிசைப்படுத்துகின்ற போது வடமாகாணம் 8 ஆம் வரிசை நிலையில் உள்ளது.
- வடமாகாணத்திலுள்ள மாவட்டங்கள் தேசிய ரீதியாக பெறும் வரிசைநிலையும் பின்தங்கியதாகவே காணப்படுகின்றது (அட்டவணை: -2)
- 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின்

அட்டவணை: - 2: 2014 - 2015 வரையிலானதரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைபெறுபேறுகளின் அடிப்படையில், 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட (ஒவ்வொரு வினாத்தாளிலும் 35 புள்ளிகளுக்கு மேல்) வடமாகாணத்திலுள்ள மாவட்டங்கள் தேசியரீதியாக பெறும் வரிசை நிலை

| வட மாகாணத்திலுள்ள மாவட்டங்கள் | வடமாகாணத்திலுள்ள மாவட்டங்கள் தேசிய ரீதியாக பெறும் வரிசை நிலை | |
|---|---|---|
| | 2014ஆம் ஆண்டு | 2015ஆம் ஆண்டு |
| யாழ்ப்பாணம் | 18 | 17 |
| வவுனியா | 19 | 18 |
| மன்னார் | 21 | 20 |
| முல்லைத்தீவு | 23 | 22 |
| கிளிநொச்சி | 24 | 23 |

(மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் - 2015)

அடிப்படையில், தேசியரீதியாக 107 பாடசாலைகள் உயர்சித்தி வீதம் கொண்ட பாடசாலைகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் வடமாகாணத்தைச் சேர்ந்த 08 பாடசாலைகள் மாத்திரமே இடம் பெற்றிருந்தன. (அட்டவணை - 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அட்டவணை 3 : 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், தேசிய ரீதியாக உயர்சித்தி வீதம் கொண்ட வடமாகாணப் பாடசாலைகள்*

| தேசியரீதியான வரிசை நிலை | தேசியரீதியாக உயர்சித்தி வீதம் கொண்ட வடமாகாணப் பாடசாலைகள் | கல்வி வலயம் |
|---|---|---|
| 6 | யா / சென்.யோண் பொஸ்கோ | யாழ்ப்பாணம் |
| 11 | யா / யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப்பாடசாலை | யாழ்ப்பாணம் |
| 11 | யா / வடமராட்சி இந்து ஆரம்பப்பாடசாலை | வடமராட்சி |
| 11 | வ / இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் | வவுனியா தெற்கு |
| 35 | யா / கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை | யாழ்ப்பாணம் |
| 35 | வ / புதுக்குளம் ஆரம்பப்பாடசாலை | வவுனியா வடக்கு |
| 54 | யா / நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை | வடமராட்சி |
| 54 | யா / துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் | வடமராட்சி |

(மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் - 2015)

### 6.2 க.பொ.த சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின் போக்குகள்


அட்டவணை - 4: கடந்த ஏழாண்டுகளில் நடைபெற்ற க.பொ.த உயர்தரம் கற்பதற்கு தகைமை பெற்ற மாணவர் சதவீதம்


| மாகாணம் | கடந்த ஏழாண்டுகளில் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பெறுபேறுகளின் அடிப்படையில் க.பொ.த. உயர்தரம் கற்க தகைமை பெற்ற மாணவர் சதவீதம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| மேல் மாகாணம் | 60.93 | 67.30 | 66.56 | 69.03 | 69.4 | 71.96 | 72.67 |
| மத்திய மாகாணம் | 48.46 | 56.51 | 57.59 | 61.49 | 63.5 | 65.96 | 66.98 |
| தென் மாகாணம் | 53.08 | 60.33 | 62.86 | 66.30 | 67.05 | 73.08 | 75.21 |
| வட மாகாணம் | 55.71 | 56.93 | 54.26 | 59.99 | 65.33 | 64.19 | 60.38 |
| கிழக்கு மாகாணம் | 47.46 | 59.41 | 56.38 | 62.20 | 65.43 | 66.71 | 63.54 |
| வடமேல் மாகாணம் | 53.51 | 62.72 | 62.68 | 66.81 | 68.92 | 70.42 | 69.66 |
| வடமத்திய மாகாணம் | 42.54 | 54.80 | 56.09 | 60.40 | 63.06 | 65.25 | 66.61 |
| ஊவா மாகாணம் | 43.80 | 52.57 | 54.45 | 59.63 | 63.43 | 64.82 | 65.85 |
| சப்பிரகமுவா மாகாணம் | 50.33 | 59.40 | 60.44 | 64.3 | 66.60 | 68.26 | 69.97 |
| இலங்கை | 52.51 | 60.57 | 60.80 | 64.74 | 66.67 | 69.02 | |

(மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் - 2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 5 : 2013 - 2015 வரையிலான க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில், க.பொ.த (உயர்தரம்) கற்க தகைமைபெறுதலின் அடிப்படையில், வடமாகாணத்திலுள்ள மாவட்டங்கள் பெறும் வரிசை நிலை

| வட மாகாணத்திலுள்ள மாவட்டங்கள் | கடந்த மூன்றாண்டுகளில் தேசியரீதியாக பெறும் வரிசைநிலை | | |
|---|---|---|---|
| | 2013 | 2014 | 2015 |
| மன்னார் | 4 | 2 | 10 |
| வவுனியா | 3 | 7 | 16 |
| யாழ்ப்பாணம் | 8 | 20 | 21 |
| முல்லைத்தீவு | 24 | 24 | 24 |
| கிளிநொச்சி | 25 | 25 | 25 |
| வடமாகாணம் | 6 | 9 | 9 |

(மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் - 2015)

- 2013- 2015 வரையிலான க.பொ.த சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், க.பொ.த (உயர்தரம்) கற்க தகைமைபெறுவோரில் வட மாகாணம் மிகவும் பின்தாங்கிய நிலையிலுள்ளது. (அட்டவணை - 5)

- 2013- 2015 வரையிலான க.பொ.த சாதாரண தரப்பரீட்சை பெறு பேறு களின் அடிப்படையில், க.பொ.த (உயர்தரம்) கற்க தகைமை பெறு வோரில்வடமாகாணத்திலுள்ள மாவட் டங்கள் பெறும் வரிசைநிலையும் பின்தங்கியதாகவே காணப்படுகின்றது. (அட்டவணை - 5)

- 2015 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப் படையில், தேசியரீதியில் முதல் ஒன்பது இடங்களுக்குள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் எந்தவொரு மாவட்டமும் இடம்பெறவில்லை.

**6.3 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சை பெறுபேறுகளின் போக்கு**

- 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பாட சாலைப் பரீட்சார்த்திகளின் பெறு பேறுகளின் அடிப்படையில், ஏனைய மாகாணங் களுடன் ஒப்பிடும் போது வடமாகாணம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

- பரீட்சைக்கு தோற்றிய அனைத்துப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் அடிப்படையில், ஏனைய மாகாணங் களுடன் ஒப்பிடும்போது வடமாகாணம் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

- பாடத்துறை ரீதியாகவும் வடமாகாணம் முன்னணியிலுள்ளது. (அட்டவணை - 6)

**7.0 பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகளில் தளம்பல் நிலை அல்லது வீழ்ச்சி நிலைக்கான காரணங்கள்**

1. நீண்ட கால யுத்தம் ஏற்படுத்திய பாதிப்புக்களும் யுத்தத்திற்கு பின்னரான சூழல் ஏற்படுத்திய பாதிப்புக்களும்
2. வடமாகாண முன்பள்ளிக் கல்வி வழங்கலில் காணப்படும் குறைபாடுகள்
3. மாணவர்கள் தொடர்பான காரணிகள்
4. ஆசிரியர்கள் தொடர்பான காரணிகள்
5. பாடசாலை தொடர்பான காரணிகள்
6. கல்வி நிர்வாகம் தொடர்பான காரணிகள்
7. குடும்பம் தொடர்பான காரணிகள்
8. சமூகம் தொடர்பான காரணிகள்
9. அரசியல் மற்றும் திட்டமிட்ட புறக்கணிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 6 : பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் அடிப்படையிலும், பரீட்சைக்கு தோற்றிய அனைத்துப் பரீட்சாத்திகளின் பெறுபேறுகளின் அடிப்படையிலும் வடமாகாணம் பெற்றுக் கொள்ளும் வரிசை நிலை

| பாடத்துறை | பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் அடிப் படையில் வட மாகாணம் பெற்றுக்கொள்ளும் வரிசை நிலை | பரீட்சைக்கு தோற்றிய அனைத்துப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் வட மாகாணம் பெற்றுக்கொள்ளும் வரிசை நிலை |
|---|---|---|
| உயிரியல் விஞ்ஞானம் | 2 | 2 |
| பௌதிக விஞ்ஞானம் | 1 | 2 |
| வர்த்தகம் | 4 | 5 |
| கலை | 3 | 4 |
| பொறியியல் தொழில்நுட்பம் | 1 | 1 |
| உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் | 5 | 5 |
| ஏனையவை | 2 | 6 |

(மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் - 2015)

- 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சை பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், விஞ்ஞான பாடங்களில் தேசியரீதியாக 53 பாடசாலைகள் உயர்சித்திவீதம் கொண்ட பாடசாலைகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் வடமாகாணத்தைச் சேர்ந்த 09 பாடசாலைகள் இடம்பெற்றிருந்தன. (அட்டவணை - 7)

அட்டவணை 7 : 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சை பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், விஞ்ஞான பாடங்களில் தேசியரீதியாக உயர்சித்திவீதம் கொண்ட வடமாகாணப் பாடசாலைகள்

| தேசிய ரீதியான வரிசை நிலை | 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சை பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், விஞ்ஞான பாடங்களில் தேசியரீதியாக உயர்சித்திவீதம் கொண்ட வடமாகாணப் பாடசாலைகள் | கல்வி வலயம் |
|---|---|---|
| 3 | யா / சென்.யோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| 3 | யா / நெல்லியடி மத்திய கல்லூரி | வடமராட்சி |
| 6 | யா / காட்லிக் கல்லூரி, பருத்தித்துறை | வடமராட்சி |
| 9 | யா / மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை | வடமராட்சி |
| 14 | யா / யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | யாழ்ப்பாணம் |
| 19 | யா / வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை | யாழ்ப்பாணம் |
| 26 | யா / சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | யாழ்ப்பாணம் |
| 45 | யா / உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் கல்லூரி | வடமராட்சி |
| 46 | யா / வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி | வடமராட்சி |

(மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் - 2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சை பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் விஞ்ஞானம் அல்லாத (Non Science Subjects) பாடங்களில் தேசியரீதியாக 55 பாடசாலைகள் உயர்சித்திவீதம் கொண்ட பாடசாலைகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் வடமாகாணத்தைச் சேர்ந்த 03 பாடசாலைகள் மாத்திரமே இடம் பெற்றிருந்தன. (அட்டவணை 8)

அட்டவணை - 8: 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், விஞ்ஞானம் அல்லாத (Non Science Subjects) பாடங்களில் தேசியரீதியாக உயர்சித்திவீதம் கொண்ட வடமாகாணப் பாடசாலைகள்.

| தேசிய ரீதியான வரிசை நிலை | 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சை பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், விஞ்ஞானம் அல்லாத (Non Science Subjects) பாடங்களில் தேசியரீதியாக உயர்சித்தி வீதம் கொண்ட வடமாகாணப் பாடசாலைகள் | கல்வி வலயம் |
|---|---|---|
| 39 | யா / சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | யாழ்ப்பாணம் |
| 3 | யா / சென்.யேம்ஸ் மகளிர் பாடசாலை, யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| 6 | யா / வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை | யாழ்ப்பாணம் |
| | (மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் - 2015) | |

### 7.1 நீண்டகால யுத்தம் ஏற்படுத்திய பாதிப்புக்களும் யுத்தத்திற்கு பின்னரான சூழல் ஏற்படுத்திவரும் பாதிப்புக்களும்

நீண்ட கால யுத்தம் ஏற்படுத்திய பாதிப்புக்கள் மற்றும் யுத்தத்திற்கு பின்னரான சூழல் ஏற்படுத்திவரும் பாதிப்புக்கள் என்பன பாடசாலைக் கல்வியில் நேரடித் தாக்கங்களை விளைவித்துள்ளது. கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை பாதிப்படையச் செய்துள்ளது. மாணவரின் கல்வி அடைவுகளில் பெருஞ்செல்வாக்கினை செலுத்தியுள்ளது.

- இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக்கட்டக் காலப்பகுதியில் (2008 - 2009) நிவாரணக்கிராமங்களில் இருந்த 85,000 மாணவர்களில் யுனிசெவ் மேற்கொண்ட ஆய்வில் 70,000 மாணவர்கள் 1.5 தொடக்கம் 3 வருடங்கள் வரையில் தமது கற்றல் செயற்பாடுகளை முற்றாக இழந்திருக்கின்றார்கள் (குருகுலராஜா, 2014)
- பிற்காலப் பகுதியில் அவர்களுக்கான துரித கற்றல் நிதழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும் அவர்கள் அடிப்படை மொழித்திறன் மற்றும் கணிதத்திறன் அறிவு குறைந்தவர்களாக காணப்படுகின்றனர்.
- உள்நாட்டு யுத்தம் காரணமாக இலங்கையின் வடக்கு மாகாணத்தில் ஏற்கனவே காணப்பட்ட மக்களின் பொருளாதார மூலங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. உயிரிழப்புக்கள், உடமை இழப்புக்கள் மற்றும் அங்கவீகங்கள் காரணமாக குடும்பங்களின் வருமானம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. குடும்பத் தலைவர்கள் காணாமல்போனமை அல்லது நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை போன்ற காரணங்களால், வடக்கில் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது. (நித்திலவர்ணன், 2014)
- யுத்தத்திற்கு பின்னர் மீள்கட்டமைப்புச் செயற்பாடுகள் (2009 - 2015) துரிதமாக முன்னெடுத்துச்செல்லப்படுகின்ற போதும், மக்களின் வாழ்க்கைத்தரம் பெருமளவில் மேம்படவில்லை. மாகாணத்தின் வறுமை, கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்து செல்கின்றபோதும், இன்னும் முற்றாக ஒழிக்கப்படவில்லை. நகரம், கிராமங்களிடையில் வறுமையின் பரம்பல் இன்றும் சமனற்றுக் காணப்படுகின்றது. (நித்திலவர்ணன், 2014) இலங்கை மத்திய வங்கி அறிக்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி 2015 ஆம் ஆண்டில் வறுமை கூடிய மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் பதிவாகியுள்ளது.

- யுத்தத்திற்கு முன்னர் வடக்கில் இயங்கி வந்த பாரிய மற்றும் நடுத்தர தொழிற் சாலைகள் மீள இயங்க ஆரம்பிக்க வில்லை. விவசாயத்திற்கேற்ற வளமான மண்ணைக்கொண்ட பிரதேசங்களில் மக்கள் விவசாயம் செய்ய இன்னும் அனுமதிக்கப்படவில்லை. இதனால் குடும்பங்களின் பொருளாதாரம் பாதிக்கப் பட்டுள்ளது. இந்நிலைமையானது மாணவர்களின் கல்வியிலும் அவர்களின் பரீட்சை அடைவுகளிலும் நேரடித் தாக்கத்தினைச் செலுத்துகின்றது
- யுத்தம் ஏற்படுத்திய பாதிப்புக்கள் காரண மாக விசேட தேவையுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை, இலங்கையின் ஏனைய பிரதேசங்களைவிட வடக்கு மாகாணத்தில் அதிகமாக காணப்படுகின்றது.

(அட்டவணை 9)

**7.2 வட மாகாண முன்பள்ளிக்கல்வி வழங்கலில் காணப்படும் குறைபாடுகள்**

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில், அதிக எண்ணிக்கையான வட மாகாண மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொள்ளவில்லை. இதற்கான பிரதான காரணம் வட மாகாண முன்பள்ளிக்கல்வி வழங்கலில் காணப்படும் குறைபாடுகளாகும்.

- வடமாகாணத்திலுள்ள பல முன்பள்ளி கள் அடிப்படை வசதிகளற்று இயங்கி வருகின்றன.
- வன்னிப் பிரதேசத்திலுள்ள பல முன் பள்ளிகள், சிவில் பாதுகாப்புப்படையி னரின் நிர்வாக த்தின் கீழ் இயங்கி வரு கின்றன.
- அடிப்படைக் கல்வித் தகைமை மற்றும் தொழில் தகைமை இல்லாத பலர் முன்பள்ளி ஆசிரியர்களாக கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

(அட்டவணை 10)

அட்டவணை : 09 - வடக்கு மாகாணத்தில் உள்ள விசேட தேவையுடைய மாணவர் எண்ணிக்கையும் அவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் எண்ணிக்கையும்

| கல்வி வலயம் | விசேட தேவையுடைய மாணவர் எண்ணிக்கை | விசேட தேவையுடைய மாணவர் களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் எண்ணிக்கை |
|---|---|---|
| தீவகம் | 466 | 2 |
| யாழ்ப்பாணம் | 746 | 11 |
| கிளிநொச்சி | 842 | 12 |
| மடு | 278 | 8 |
| மன்னார் | 611 | 8 |
| முல்லைத்தீவு | 655 | 12 |
| தென்மராட்சி | 34 | 4 |
| துணுக்காய் | 298 | 10 |
| வடமராட்சி | 89 | 6 |
| வலிகாமம் | 1090 | 8 |
| வவுனியா வடக்கு | 204 | 5 |
| வவுனியா தெற்கு | 388 | 6 |
| வடமாகாணம் | 5701 | 92 |

(மூலம்: வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு - 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் நிறுவனம் ஆவணகம்

**7.3 மாணவர்கள் தொடர்பான காரணிகள்**

- கொழும்பு பல்கலைக்கழகத்தின் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையத்தினால் (National Education Research and Evakuation Centre - NEREC) தரம் - 8 மாணவர்களிடையே 2012 ஆம் ஆண்டு தேசியரீதியில் நடாத்தப்பட்ட மதிப்பீடுகளின் பிரகாரம் வடமாகாணம் கணித பாடத்தில் 6 ஆம் நிலையையும், ஆங்கில பாடத்தில் 7 ஆம் நிலையையும், விஞ்ஞான பாடத்தில் 8 ஆம் நிலையையும் பெற்றிருந்தது. 2012 ஆம் ஆண்டு தரம் 8 இல் இருந்த மாணவர்களே 2015 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர். இதில் வடமாகாணம் ஒன்பதாம் நிலையைப் பெற்றுள்ளது. இதிலிருந்து பெறுபேற்று வீழ்ச்சிக்கு, மாணவர்கள் சார்பான காரணிகள் அதிகளவில் செல்வாக்குச் செலுத்துவதை அவதானிக்கலாம்.

அட்டவணை - 10: வடக்கு மாகாணத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களின் கல்வித் தகைமையும் தொழில் தகைமையும்

| வலயம் | முன்பள்ளி ஆசிரியர் எண்ணிக்கை | கல்வித் தகைமை | | | தொழில் தகைமை | | |
|---|---|---|---|---|---|---|---|
| வலயம் | | A/L Pass | O/L Pass | Without O/L Pass | Aruthal | OUSL | Not Both |
| தீவகம் | 131 | 44 | 5 | 58 | 84 | 6 | 41 |
| யாழ்ப்பாணம் | 367 | 135 | 17 | 153 | 227 | 26 | 114 |
| கிளிநோச்சி | 450 | 72 | 32 | 198 | 392 | 6 | 52 |
| மடு | 85 | 35 | 3 | 40 | 78 | 0 | 7 |
| மன்னார் | 175 | 99 | 0 | 38 | 147 | 5 | 23 |
| முல்லைத்தீவு | 213 | 39 | 11 | 117 | 199 | 2 | 12 |
| தென்மராட்சி | 131 | 53 | 1 | 59 | 92 | 0 | 39 |
| துணுக்காய் | 156 | 28 | 11 | 115 | 144 | 6 | 6 |
| வரமராட்சி | 274 | 96 | 7 | 58 | 172 | 1 | 101 |
| வலிகாமம் | 362 | 158 | 15 | 85 | 273 | 6 | 83 |
| வவுனியா வடக்கு | 85 | 20 | 4 | 58 | 76 | 1 | 8 |
| வவுனியா தெற்கு | 251 | 82 | 27 | 99 | 187 | 6 | 58 |
| வடமாகாணம் | 2680 | 861 | 133 | 1078 | 2071 | 65 | 544 |

(மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் - 2015)

- அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு அற்ற மாணவர்கள் வடமாகாணப் பாடசாலை வகுப்பறைகளில் கணிசமான ளவில் காணப்படுகின்றனர்.
- மாறிவரும் புறச் சூழலில், மாணவர்களின் கற்றல் மீதான ஆர்வம் குறைவடைந்து செல்கின்றது.
- மாணவர்களின் பாடசாலை வரவு, குறிப்பாக மெல்லக்கற்கும் மாணவர்களின் வரவு குறைவாகக் காணப்படுகின்றது.
- தற்கால மாணவர்கள் மத்தியில் நவீன தொலைத் தொடர்பு சாதனங்களின் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது.
- மாணவர்கள் மத்தியில் ஒழுக்கமின்மை, குழுமோதல் மற்றும் துர்நடத்தைகள், என்பன அதிகரித்துச் செல்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணவர்களின் பாடத் தெரிவுகளில் ஏற்படும் தவறுகள்

பாடத்தெரிவு எனப்படும் போது, அழகியல் பாடங்களின் தெரிவு, தொழில்நுட்பப் பாடங்களின் தெரிவு மற்றும் விருப்புக்குரிய பாடங்களின் தெரிவு என்பன இடைநிலை வகுப்புக்களில் முக்கியம் பெறுகின்றன. இப்பாடத்தெரிவுகளின்போது மாணவனின் விருப்பு, ஆற்றல், குடும்பப்பின்னணி என்பவற்றுக்கு அமைவாக வழிகாட்ட வேண்டும். துரதிஷ்டவசமாக சிலசமயங்களில் பாடசாலைக் கற்பித்தல் வள ஆளணி மற்றும் பௌதிகவள காரணிகள் மற்றும் அதிபர், ஆசிரியர்களின் விருப்பு வெறுப்புகளும் செல்வாக்கு செலுத்தி விடுகின்றன.

ஆரம்ப காலந்தொட்டு க.பொ.த உயர்தர பாடத்தெரிவுகளில் பிழையான தெரிவுகளும் இடம்பெற்று வருகின்றன. இதனால் பரீட்சையில் தோல்வி அடைந்த பின் பாடத்துறை மாறுவோரும் உண்டு. மூன்று தடவையும் ஒரே பாடத்துறையில் தோற்றி சித்தியடையத் தவறி க.பொ.த உயர்தர தகைமையின்றி அல்லற்படுவோரும் உண்டு. தற்காலத்தில் க.பொ.த (சா/த) சித்தியடைந்து உயர்தரம் நுழையும் மாணவர்களுக்குப் பாடத் தெரிவுகள் தொடர்பான வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன. இருந்தும் பிழையான தெரிவுகளும் இடம் பெற்று விடுகின்றன.

- மாணவர்களின் கற்றல் ஒழுங்கு, கற்றல், மாதிரி, கற்றல் உள்ளடக்கம் மற்றும் சுயகற்றல் திறன்கள் என்பன நடை முறையில், கவனத்தில் கொள்ளப்படுதல் குறைவாகவுள்ளது. இவை கவனத்தில் கொள்ளப்படுதல் அவசியம்.

### 7.4 ஆசிரியர்கள் தொடர்பான காரணிகள்

- அதிகஷ்ட மற்றும் கஷ்ட பிரதேசங்களிலுள்ள சில ஆரம்ப மற்றும் இடைநிலைப் பாடசாலைகளில் முறையாகப் பயிற்றப்படாத ஆசிரியர்கள் அதாவது ஏனைய பாட ஆசிரியர்கள், மற்றும் தொண்டர் ஆசிரியர்கள், ஆசிரிய உதவியாளர்கள் ஆகியோர் பிரதான பாடங்களைக் கற்பிக்கும் சூழல் காணப்படுகின்றது.

- கணிசமான எண்ணிக்கையான ஆசிரியர்களுக்கு நவீன கற்றல் - கற்பித்தல் முறைகள் பற்றிய பரிட்சயமின்மை காணப்படுவதுடன், அவை தொடர்பான பயிற்சி வாய்ப்புக்களும் குறைவாகக் காணப்படுகின்றது.

- காலத்திற்கேற்ப ஆசிரியர் கல்வி கலைத் திட்டங்கள் மாற்றியமைக்கப்படுவதில்லை. மற்றும் நவீன பயிற்சி முறைகள் என்பன ஆசிரியர் கல்வி நிறுவனங்களால் முறையாகப் பின்பற்றப்படுவதில்லை

- யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலிடத்திலிருந்த கல்வி இன்று கீழ் நிலையில் இருப்பதற்கு ஆசிரியர்கள் வகுப்பறையில் இல்லாமையே காரணம் என தற்போதைய வடக்கு மாகாண ஆளுநர் சுட்டிக் காட்டியுள்ளார் (உதயன், 11-04-2016) இவர் முன்னர் ஆசிரியராகப் பணியாற்றியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

அவர் மேலும் குறிப்பிடும்போது உலகளாவிய ரீதியில் 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் ஆசிரியர்கள் இருக்கின்றனர். ஆனால் இலங்கையில் 17 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் இருக்கின்றார் எனவும் இலங்கையில் ஆசிரியர்களுக்காக பெருந்தொகைப் பணம் செலவு செய்யப்படுகின்றது என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

கல்விநிலை பரிதாப நிலையில் இருப்பதற்கு, ஆசிரியர்கள் நீண்ட விடுமுறைகளை எடுப்பது மற்றும் வெளி நாடுகளுக்கு செல்கின்றமை காரணமென வும் அவர் குறிப்பிடுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தற்காலத்தில் ஆசிரியர்களில் சிலர், சம்பளத்திற்கு வேலை பார்க்கும் தொழிலாகத்தான் ஆசிரியத் தொழிலை கருதுகின்றனர்.

- பாடத்திட்டத்தில் சில ஆசிரியர்களுக்கு ஆர்வமற்ற, ஆளுமையற்ற சூழல், கற்பித்தல் முறையில் தெளிவின்மை, சில ஆசிரியர்கள் குறிப்பிட்ட மாணவர் களுக்கு சொல்லிக்கொடுத்து, மந்தமான மாணவர்களை மட்டம் தட்டுவது, தன்னிடம் ரியூசன் படிக்கும் மாணவர் களுக்கு மட்டும் நன்றாக சொல்லிக் கொடுப்பது, சீரற்ற பழக்கவழக்கங்களை மாணவர்கள் முன்பு செய்தல் போன்ற பொறுப்பற்ற நடவடிக்கைகளால் மாணவ சமுதாயம் ஒழுக்க நடவடிக்கைகளை மீறுபவர்களாக உள்ளனர்.

- சமீப காலமாக ஊடகங்கள் வாயிலாக பார்க்கும்போது, ஒரு சில ஆசிரியர்களின் நடவடிக்கைகள் மாணவ சமுதாயத்திலும், பெற்றோர்கள் மத்தயிலும் ஒருவித அச்ச உணர்வுகளை ஏற்படுத்துவதாகவும், ஆசிரியர்கள் மீதுள்ள நன்மதிப்பை குறைக்கும் விதமாகவும் உள்ளது. தற்கால சமூகம் தாழ்ந்து போனதற்கு ஆசிரியர் சமூகத்தில் ஏற்பட்ட தாழ்வும் ஒரு காரணம் என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

- ஆசிரியர் பாடவிடயங்களை கற்பிக்கும் அளவுக்கு, பரீட்சை மாதிரி வழிகாட்டல் மற்றும் கற்பதற்கு உரிய வழிகாட்டல் போன்றவற்றைச் செய்வது நடைமுறையில் குறைவாகவுள்ளது.

- மேலும் மாணவர்களின் சுயகற்றலுக்கு போதியளவு நேரம் வழங்குவதில்லை என்பதுடன், கணிசமானளவு ஆசிரியர் கள் பாடத்திட்டத்தை நிறைவு செய்வ தில்லை. இவை மாணவர்களின் அடைவுக் குறைபாட்டில் பெருஞ் செல்வாக்குச் செலுத்துகின்றது.

**7.5 பாடசாலை தொடர்பான காரணிகள்**

- வடமாகாணப்பாடசாலைகளுக்கிடையில் மனிதவளம்மற்றும்பௌதிகவளப்பரம்பல் சமனற்றுக் காணப்படுகின்றது.
- மாகாணப் பாடசாலைகளுக்கும் தேசிய பாடசாலைகளுக்குமிடையில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றது.
- சில பாடசாலைகள் சிறப்பான பௌதிக வளம் மற்றும் மனித வளங்களை கொண்டிருக்கும் அதேவேளை மாணவர் எண்ணிக்கை குறைவாகக் காணப் படுகின்றது. அயலிலுள்ள வேறு சில பாடசாலைகள் அளவுக்கதிகமாக மாணவர் களை உள்வாங்குகின்றன.
- சில பாடசாலை அதிபர்களின் வினைத் திறனற்ற நிர்வாகம் காரணமாகவும் கல்வி அடைவுகளில் வீழ்ச்சி ஏற்படுகின்றது.

**7.6 கல்வி நிர்வாகம் தொடர்பான காரணிகள்**

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்ட பத்திரிகைச் செய்திக் குறிப்பில் (யாழ். தினக்குரல், 02 - 04-2016) பின்வரும் கல்வி நிர்வாகம் தொடர்பான காரணிகள் இன்றைய கல்வி நிலை வீழ்ச்சிக்கு காரணமாக அமைவதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

- முறையற்ற ஆசிரிய இடமாற்றங்கள்
- முறையற்ற அதிகாரிகளின் இடமாற்றங்கள்
- அரசியல் தலையீடுகள்
- கல்வியில் அநாவசியமான வெளியாரின் தலையீடுகள்
- அதிகாரிகள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர் களின் சுயமான சிந்தனைக்கு ஏற்படுத்தப் படும் முட்டுக்கட்டைகள்
- தேசிய மட்டத்தில் நடைபெறும் பரீட்சை வினாத்தாள்களுக்கு முரணான வகையில் சில பாடங்களின் வினாத்தாள்கள் வலய மட்டங்களிலும் மாகாண மட்டத்திலும் தயாரிக்கப்படுதல்.
- மாகாண மட்டத்தில் பெரும் தொகையான பணம் செலவிடப்பட்டு நடைபெறும் கல்விச் செயலமர்வு மற்றும் முன்னோடிக் கருத்தரங்குகள் வினைத்திறனற்றதாக இடம்பெறுதல் போன்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 7.7 குடும்பம் தொடர்பான காரணிகள்

- தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை வரை காட்டும் பெற்றோர் அக்கறை, இடை நிலைக்கல்வியில் தொடர்ந்து நீடிக்காமை.
- வீட்டில் பிள்ளை படிப்பதற்கான சூழலின்மை அதாவது கற்றலுக்கான பௌதிக வளங்களின் பற்றாக்குறை, கற்றலுக்கான கவிவுநிலையின்மை மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் ஒத்துழைப்பின்மை என்பன மாணவர்களின் பெறுபேற்றுக் குறைபாட்டில் பெருஞ் செல்வாக்கினைச் செலுத்துன்றன.
- தென்னிந்திய சினிமா, தொலைக்காட்சி தொடர் நாடகங்கள் மற்றும் கிரிக்கெட் போட்டி ஒளிப்பரப்புக்களுக்கு குடும்ப அங்கத்தவர்கள் அடிமையாகிப் போகின்றமை காரணமாக மாணவர்களின் கற்றல் நேரங்கள், பொழுது போக்கிற்கான நேரங்களாக மாற்றமடைகின்றன அல்லது மாணவர்களின் கற்றலுக்கு இடையூறு விளைவிக்கின்றன.
- அதிகரித்துச் செல்லும் குடும்ப வன்முறைகளும் விவாகரத்துக்களும்
- பெற்றோர் மற்றும் குடும்ப அங்கத்தவர்களிடையயே அதிகரித்துச் செல்லும் மதுப்பாவனை மற்றும் போதைப்பொருள் பாவனை காரணமான குடும்ப வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றன. இவை மாணவர் கற்றலில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

### 7.8 சமூகம் தொடர்பான காரணிகள்

- தற்கால சமூகத்தில் கொலை, கொள்ளை மற்றும் குழுமோதல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. தென்னிந்திய சினிமா மற்றும் தொலைக்காட்சி தொடர் நாடகங்கள் இவற்றை ஊக்குவிக்கின்றன.
- பாலியல் துஷ்பிரயோகங்கள், சிறுவர் துஸ்பிரயோகங்கள் மற்றும் இளவயதுத் திருமணங்கள் தொடர்பான செய்திகள் அடிக்கடி ஊடகங்களில் வெளி வருகின்றன.
- இலங்கையின் போதைப் பொருள் இடமாற்று மையமாக யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்கள் விளங்குவது அனைவருக்கும் கவலைதரும் விடயமாகும்.
- பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்திலும் தற்கொலை முயற்சிகள் அதிகரித்துச் செல்கின்றன.
- முகநூல் போன்ற சமூக வலைத்தளங்களின் தவறான பாவனை காரணமாக அவை சார்ந்த குற்றங்களும் அதிகரித்துக் காணப் படுகின்றன.
- சமூகம் கேளிக்கைகள் மற்றும் கொண்டாட்டங்களுக்கு காட்டும் அளவுக்கதிகமான அக்கறையை மாணவர்களின் கல்வி மற்றும் ஒழுக்க மேம்பாட்டில் காட்டுவது குறைவாகவுள்ளது.
- பாடசாலை நேரங்களில் பல கோயில் களில் ஒலிபெருக்கிகள் அளவுக்கதிகமான ஒலித்துக் கொண்டிருத்தல்.

மேற்குறிப்பிட்ட சமூகம்சார் காரணிகள், மாணவர்களின் கற்றலில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துவதுடன், கற்றலுக்கான ஊக்கத்தினையும் பாதிப் படையச் செய்வதன் மூலம் பரீட்சைப் பெறுபேற்று வீழ்ச்சிக்கு காரணமாக அமைகின்றன.

### 7.9 அரசியல் மற்றும் இனரீதியான புறக்கணிப்புக்கள்

- *2014 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டியில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டது. எதிர் பார்க்கப்படும் வினாக்களின் தொகுப்பு தமிழ் மொழிப்பகுதிப்பில் இடம் பெற்றிருக்கவில்லை. (ஞாயிறு தினக்குரல், 04-18-2014)*
- *2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் தேசியரீதியாக சிங்கள மொழிமூலம் முதன்மைபெற்ற மாணவர் பெயர் விபரங்கள், பரீட்சைத்திணைக்களத்தால் அறிவிக்கப் பட்ட அதேவேளை, தமிழ் மொழிமூலம் முதன்மை பெற்ற மாணவர்கள் பெயர் விபரங்கள் அறிவிக்கப் பட்டவில்லை. (இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், 2015)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கல்வியில் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன என்ற உண்மையை நாம் அனைவரும் உணர வேண்டும் என்பதோடு இன்னமும் வெளிப்படுத்த முடியாத அபாயகரமான நிலைமைகள் உள்ளன என்பதை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அண்மையில் சுட்டிக்காட்டியிருந்தது. (யாழ். தினக்குரல் 02-04-2016)

**8.0 வடமாகாண பாடசாலை மாணவர்களின் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளை மேம்படுத்து வதற்கான தீர்வுகள்**

- ஏற்கனவே மாணவர்களின் பரீட்சைப்பெறு பேறுகளை அதிகரிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள், மாகாணக் கல்வித் திணைக்களத்தினாலும், வலயக் கல்வி அலுவலகங்களினாலும் மற்றும் பாடசாலைகளினாலும் மேற்கொள்ளப் படுகின்றன. அதாவது பின்தங்கிய மாணவர்களுக்கான மேலதிக வகுப்புக்கள், பயிற்சிப்பரீட்சைகள் மற்றும் பரீட்சை வழிகாட்டல்கள் என்பன நடாத்தப் படுகின்றன.
- எதிர்காலத்தில் அடைய உத்தேசிக்கும் இலக்குகளை குறிப்பிட்டு உறுதிப்பாட்டு ஒப்பந்தங்கள், கல்வி அதிகாரிகள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களிடையில் கைச்சாத் திடப்படுகின்றன.
- தரவட்டங்கள் மற்றும் விசேட செயற்றிட்டங்கள் என்பன நடை முறைப்படுத்தப் படுகின்றன

**இவற்றிற்கு மேலதிகமாக சில ஆய்வாளனின் முன்மொழிவுகள்**

ஆசிரியர்கள் தங்களுடைய ஆசிரியப் பணியை மிகவும் தியாக உணர்வுடனும், பொறுப்புணர்வுடனும், கடமை உணர்வுடனும் செய்ய வேண்டும்.

- சிறப்பான பணிபுரியும் ஆசிரிய சமூகத்திற்கு அனைவரும் மரியாதை செலுத்த வேண்டும். இன்றைக்கும் நேர்மையாக கல்விப்பணியைத் தொடரவிரும்பும் ஆசிரியர்களுக்கு அதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கவேண்டும்.
- ஆரம்பப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் தமக்குட்பட்ட முன்பள்ளிகளுக்கு மாதத்தில் ஓரிரு நாட்கள் சென்று பிள்ளைகள் அடையவேண்டிய தேர்ச்சிகளை அடைந்திருக்கின்றார்களா என பரிசீலிப்பதுடன் அவர்களுக்கு ஓரிரு மணித்தியாலங்கள் கற்பித்தல்.
- மாணவர் முன்னேற்றம் தொடர்பாக பெற்றோருக்கு கல்வி வழங்கலில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மற்றும் நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை போன்ற சில பாடசாலைகள் வெற்றிக்கண்டுள்ளன. ஏனைய பாடசாலைகளும் இவற்றைப் பின்பற்றவேண்டும்.
- இன்னமும் சில இடங்களில் பெயர், முகம் வெளிப்படாமல், தமது பணியை முடிந்தவரை சிறப்பாக செய்து வரும் ஆசிரியர்களை நாம் பாராட்ட வேண்டும்.
- பொருத்தமான கல்வி வழிகாட்டல் (Educational Guidance) வழங்கல்-
- பாடத் தெரிவுகள், நூலகப்பயன்பாடு மற்றும் கற்றல் பழக்கங்கள் போன்ற விடயங்களில் துறை தேர்ந்தவர்கள் வழிகாட்டும் போது மாணவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதுடன் கல்வியின் மீதான நாட்டமும் அதிகரித்துச் செல்லும் இதன்மூலம் மாணவர்களது அடைவு மட்டமும் அதிகரித்துச் செல்லும்.
- இலங்கையின் பொதுக்கல்வியின் ஏழாவது கற்றல் தேர்ச்சியான, கற்றலுக்காக கற்றல் (Learn to learn) என்ற தேர்ச்சி எவ்வளவு தூரம் மாணவர்களிடம் அடையப்படுகின்றது என்ற வினா ஆய்வாளனிடம் உண்டு.

எவ்வாறு இலகுவாகக்கற்பது? கற்பித்தலின்பால் எவ்வாறு அதியுச்ச கவனத்தை செலுத்துவது? கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின்போது சிறந்த புலக்காட்சியைப் பெற்றுக்கொள்ளும் வழிவகைகள் எவை? கற்பவற்றை எவ்வாறு ஞாபகப்படுத்திக் கொள்வது? நேரான கற்றல் இடமாற்றத்தை எவ்வாறு ஏற்படுத்திக் கொள்வது? மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சைகளில் விடை எழுதும் முறைகள் என்பவை தொடர்பாக வகுப்பறைகளில் அதிகளவில் பயிற்றுவிக்கப்படவேண்டும்.

- கல்வி அமைச்சு வெளியிட்ட சுற்றறிக்கை இலக்கம் 6/2013 இற்கு அமைவாக தற்போது பாடசாலைகளில் “பாடசாலை ஆலோசனை மற்றும் வழிகாட்டல் வேலைத்திட்டங்கள்” முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வேலைத்திட்டங்களில் மாணவர்களின் உளநலன் மேம்பாடு மட்டுமன்றி ஆசிரியர்களின் உளநலன் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன் மூலம் ஆசிரியர்களிடமிருந்தும் உச்ச அளவு வினைத்திறனைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- வலயமட்ட மாநாடுகள் மற்றும் கருத்தரங்கள் மூலம் வலயமட்ட கல்விப்பிரச்சினைகள்கலந்துரையாடப்பட வேண்டும். மாணவர் அனுமதி, வளப்பங்கீடு, ஆசிரியர் இடமாற்றங்கள் போன்ற விடயங்களில் அனைவரும் விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும்.
- மாகாணக் கல்வித்திணைக்களத்திலும், வலயக்கல்வி அலுவலகங்களிலும் வினா வங்கிகள் (Question Bank) உருவாக்கப்பட்டு, தேர்ச்சி மிக்க ஆசிரியர் குழாத்தினால் மாகாணமட்ட மற்றும் வலயமட்ட வினாத் தாள்கள் தயாரிக்கப்பட வேண்டும்.
- க.பொ.த உயர்தர தவணைப்பரீட்சை வினாத்தாள்கள் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கண்காணிப்பில் இயங்கும் நிபுணத்துவமிக்க ஆசிரியர் குழாம் ஒன்றினால் தயாரிக்கப் பட வேண்டும்.
- கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர் கள் மற்றும் கல்விசார் தொழிற்சங்கங்கள் தம்மிடையேயான முரண்பாடுகளை களைந்து, ஒன்றாக இணைந்து வட மாகாண கல்விசார் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்
- மாணவர்களது கற்றலுக்கான நேரம், சூழல், வசதிகள், ஊக்கல் மற்றும் பரீட்சை மாதிரிப் பயிற்சிகள் என்பவற்றை மேம்படுத்த வேண்டும்.

**முடிவுரை**

இலங்கையில்நடைபெற்றநீண்டஉள்நாட்டு யுத்தத்தில் அதிகளவில் பாதிப்பிற்குள்ளானது எமது வடக்கு மாகாணமாகும். இதனால் வடமாகாணபாரம்பரியச்சொத்தான கல்வியில் பல பின்னடைவுகளைச் சந்திக்க நேர்ந்துள்ளது. அண்மைக்கால பொதுப்பரீட்சை அடைவு வீழ்ச்சிகள் அதற்கு கட்டியம் கூறுவனவாக அமைந்துள்ளன. இந்த யதார்த்தநிலையை கல்விசார் சமூகத்தினர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். ஒருவரையொருவர் குற்றம்சாட்டிக்கொண்டு காலத்தைப்போக்காது, வடமாகாண கல்வி மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளில் ஒற்றுமையாக ஈடுபட வேண்டும்.

**உசாத்துணைகள்**

1. தனபாலன், பா(2016) க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சைப் பெறுபேறுகளில் பிரதேச ரீதியான ஒப்பீடுகளில் ஏற்றத்தாழ்வுகள், உதயன், 11-04-2016, நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட், யாழ்ப்பாணம்.
2. தனபாலன், பா(2016) தமிழ் அதிகாரிகளின் பற்றாக்குறையும் ஆசிரிய வளம் போதாமையும், உதயன், 12-14-2016, நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட், யாழ்ப்பாணம்.
3. வடக்கு மாகாண கல்வி அமைச்சு (2014) வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு, வடக்கின் கல்விமுறைமை மீளாய்வு நெறிப்படுத்தும் குழு, யாழ்ப்பாணம்.
4. நித்திலவர்ணன், ஆ(2014) வடமாகாணத்தின் பேண்தகு அபிவிருத்திக்கான சவால்களும், அவற்றை எதிர்கொள்வதற்கான கல்வி முறைகளைக் கண்டறிதலும், யா/கரவெட்டி விக்கேஸ்வராக் கல்லூரியின் ஸ்தாபகரான இராசவாசல் முதலியார் உயர்திரு வீரவாகு சிற்றம்பலம் நினைவுப்பேருரை, 27-19-2014.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஞாயிறு தினக்குரல் 04-28-2014, '2014 ஆம்ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டியில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது" - செய்தி, ஏசியன் மீடியா பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

6. யாழ். தினக்குரல், 02-04-2016), "க.பொ.த சாதாரணதர பெறுபேற்றில் யாழ். மாவட்டம் 21 வது இடத்தில்" - செய்தி, ஏசியன் மீடியா பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட், யாழ்ப்பாணம்

7. கோணேசப்பிள்ளை, கோ (2014), "ஆறாந்தர தமிழ் மொழியும் இலக்கியமும் புதிய பாடநூலில் காணப்படும் தவறுகள்", யாழ். தினக்குரல், 104,15-12-2014, ஏசியன் மீடியா பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட், யாழ்ப்பாணம்

8. வடமாகாண கல்வி முகாமைத்துவ தரவுத்தொகுதி (Education Management Information System -EMIS), மாகாணக்கல்வித் திணைக்களம், வடமாகாணம் retrieved from http:// www.edudept.np.gov.lk on 19-04-2016.

9. Department of Examination (2015) performance of Candidates of G.C.E(A/L) Examination - 2015,Research and Development Branch, National Evaluation and Testing Service, Department of Examination, Sri Lanak.

10. Department of Examination (2014) Performance of Candidates of G.C.E (O/L) Examination - 2014, Research and Development Branch, National Evaluation and Testing Service, Department of Examinations, Sri Lanka.

11. Department of Examination (2015) Performance of Candidates of Grade Five Scholarship Examination - 2015, Resarch and Development Branch, National Evaluation and testing Service, Department of Examinations, Sri Lanka.

12. Gurukularajah. T (2014), " Vulnerability IN Northen Education', Discussion on 'Democratizing the North: A Dialogue on Governance, Development and Vulnerability', Jaffna, 10-01-2014.

13. National Education Research and Evaluation Centre - NEREC (2012), National Assessement of Achievement of Grade - 08 Students in Sri Lanka - 2012, University of Colombo, Sri Lanka.

14. Central Bank of Sri Lanka (2015) Provincial Gross Domesstic Product - 2014, Press release of Communications Department, Central Bank of Sri Lanka, Colombo - 01.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் பழப்பாகு தயாரிப்புகளில் தரநிர்ணய அளவீடுகள் - ஓர் ஆய்வு

பத்மாசனி குலராஜசிங்கம்

அருளானந்தம் கிறிஸ்ரி தவறஞ்சிற்

**ஆய்வுச்சுருக்கம்**

யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகும் பழ வர்க்கங்களான வாழைப்பழம், முந்திரிப்பழம், மாம்பழம், பப்பாசிப்பழம், தக்காளிப்பழம் போன்றன பழப்பாகு தயாரிப்பதற்கு ஏற்ற பழங்களாக விளங்குகின்றன. அவை போக்குவரத்து வசதியின்மை காரணமாகவும் தரமான சந்தைப்படுத்தல் வசதியின்மை காரணமாகவும் இங்கு உற்பத்தியாகும் பழங்களில் பெரும்பகுதி பயனற்றதாகின்றது. அத்துடன் பருவ காலங்களில் ஏற்படுகின்ற மாற்றங்களினாலும் அதிகமான பழ வர்க்கங்கள் அழிக்கப்படுகின்றன. மேலும் உள்ளூர் வியாபாரிகள் பழங்கள் நன்றாகக் கனிவதற்கு முன்பே இரசாயனப் பதார்த்தங்களைப் பயன்படுத்தி அவற்றிற்கு நஞ்சேற்றுகின்றார்கள். பழங்கள் தானாக கனிவதற்கு முன்பே கனிவடைவதற்காவும் பழங்கள் பழுதடைவதைத் தாமதமடையச் செய்வதற்காகவும் இந்த இராசாயனப் பதார்த்தங்கள் ஏற்றப்படுகின்றன. இவ்வாறு நஞ்சேற்றப்படுகின்ற காரணத்தினால் யாழ்ப்பாணத்துப் பழங்கள் சந்தைப்படுத்தும் வாய்ப்பை இழந்து விடுகின்றன. இந்நிலையில் பழப்பாகு தயாரிக்கும் முறைகளில் உள்ள தடைகளான பழப்பாகு நொதிப்படைதல், பழப்பாகு திரவத்தன்மையடைதல், பழப்பாகு பளிங்குருவாகுதல், பழப்பாகு பெக்ரின் சேர்க்காவிடின் மென்மையடைதல் பழப்பாகு கலங்கல் தன்மையடைதல் போன்றவற்றை நீக்கும் முறையாகவும் யாழ்ப்பாணத்தில் வாழ்பவர்களுக்கு ஒரு சிறந்த வீட்டுக் கைத்தொழிலை அறிமுகப்படுத்தும் முறையாகவும் பழப்பாகுகளைத் தயாரிக்கும் முறை பற்றி ஆராய்ந்துள்ளோம். நான்கு வகையான பழப்பாகு தயாரித்து புலனுணர்ச்சி மதிப்பீட்டின் மூலம் அவற்றின் இயல்புகளை ஒப்பிட்டு அறிவதும், தயாரிக்கப்பட்ட பழப்பாகு வகைளில் நுண்ணங்கி தொழிற்பாடு ( Methelene blue சாய நிறமற்ற முறை ), pH அளவு Meter (PH Meter ), வெல்லத்தின் அளவு (Refracto meter) போன்ற முறைகள் மூலம் கணிக்கப்பட்டு இழப்பழப்பாகு வகைகள் எவ்வளவு காலம் உபயோகப்படுத்தலாம். என எதிர்வு கூறலும் இவ்வாய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

நான்கு பழப்பாகுகளின் சுவை வேறுபட்டதாகவும், PH இன் பெறுமானம் முதல் வாரத்திலும் ஆறாம் வாரத்திலும் ஒப்பிட்டு நோக்கும் போது அமிலத்தன்மை குறைவாகவும் காணப்பட்டது. அவதானிக்கப்பட்ட ஆறு கிழமைகளில் மாம்பழப்பாகில் ஆறாம் வார முடிவில் மொத்த வெல்லத்தின் அளவானது (9.0) ஏனைய பழப்பாகுகளுடன் ஒப்பிடும் போது அதிகமாகக் காணப்பட்டது. ஆனால் அப்பிள் பழப்பாகில் மொத்த வெல்லத்தின் அளவு (6.6) குறைவாகக் காணப்பட்டது. தயாரிக்கப்பட்ட முதல் கிழமை தக்காளிப்பழப்பாகில் மொத்த வெல்லத்தின் அளவு (4.0) குறைவாகக் காணப்பட்டது.

தயாரிக்கப்பட்ட நான்கு பழப்பாகு வகைகளிலும் ஆறு வாரங்களிலும் நுண்ணங்கிகளின் செயற்பாட்டில் குறிப்பிடக்கூடியவாறு எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை. பழப்பாகு தயாரிக்கப்பட்ட காலப்பகுதியில் இருந்து ஆய்வுக்காக வைக்கப்பட்ட இறுதி காலம் வரை (நான்கு மாதங்கள்) நுண்ணங்கிகளினால் பழப்பாகில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தப்படாமலும் பழுதடையாமலும் காணப்பட்டது. எனவே இப்பழப்பாகுகள் தயாரிக்கப்பட்ட நாளில் இருந்து நான்கு மாதங்கள் வரை பழுதடையாமல் இருக்கும் என எதிர்வு கூற முடியும். ( www. org.lk 2013 )

**திறவுச்சொற்கள் :** PH பெறுமானம், பழப்பாகு, நுண்ணங்கிகள், புலனுணர்ச்சி

## 1. அறிமுகம்

பழப்பாகு தயாரிப்பானது மிகவும் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. பழப்பாகு தயாரிப்பானது ஆரம்பகால சமையல் முறைகளின் அடிப்படையில் தோன்றியது. மத்திய கிழக்கு நாடுகளில் சர்க்கரை சத்தினை அதிகமாகக் கொண்ட உணவுகளை அவர்களின் உணவில் சேர்ப்பது வழக்கமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குதான் இப்பழப்பாகு தயாரிப்புமுறை தோற்றம் பெற்றது. பின்னர் அங்கிருந்து மேற்கிந்திய தீவுகளுக்கு இப்பாரம்பரியம் கொண்டு வரப்பட்டது. பழப்பாகு தயாரிப்பு முறையானது பிரான்ஸ் நாட்டு இளவரசி மேரிராணி என்பவர் கப்பலில் செல்லும் போது அவருக்கு உடல்நிலை சரியின்மையில் உதவுவதற்கு வந்த "chutney scat" என்ற மருத்து வரினால் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் அவர்களது அரண்மனை விழாக்களில் பழப்பாகுதயாரிப்பானது பிரதான இடத்தினை வகித்தது. (www.Jamboree. Org history. html, https // www. Lungrown. com / the history.html 2014.)

பழப்பாகு தயாரிப்புக்களைத் கைத் தொழிலாகச் செய்து விற்பனை செய்வதற்கும் அறுவடைக் காலங்களில் பெற்று பழப்பாகை தயாரித்து லாபமீட்டுவதற்கும் உரிய நோக்கில் அமெரிக்கர்கள் அதனைக் கைத்தொழிலாக ஆரம்பித்து வைத்தனர். அமெரிக்காவின் புலம் பெயர்ந்தோர் தம் சொந்த சமையல் முறைகளில் பழப்பாகு தயாரித்தலை ஒரு முறையாகக் கொண்டு வந்த போதிலும், பழப்பாகு தயாரிப்பின் முதல் பதிவு 17 ஆம் நூற்றாண்டு என்றே வரலாறு பதிவு செய்து வைத்துள்ளது. புதிய இங்கிலாந்தில் ஆரம்ப காலத்தில் குடியேறியவர்கள் பழத் தயாரிப்பிற்கு இனிப்பு சுவை கொடுப்பதற்காக பனஞ்சர்க்கரை, தேன் போன்றவற்றைப் பயன்படுத்தினார்கள். தடிப்பாக்குவதற்கு கொதிக்கும் அப்பிள் பழக் கலவையில் இருந்து பெறப்பட்ட பெக்ரீனை பயன்படுத்தினார்கள்.

ஆரம்பகாலத்தில் பழப்பாகு தயாரிப்பதற்கு நன்கு கனிந்து மசிந்த இனிப்பான பழக்கங்களுக்கு தேன் சேர்த்து பழப்பாகு தயாரித்து வந்தனர். பின்னர் பிரிட்டிஷ் காலணியில் இருந்து சர்க்கரை இறக்குமதி செய்து பழப்பாகு தயாரிப்பை மேற்கொண்டு வந்தனர். இது விற்றமின் C குறைபாட்டினால் உருவாகும் ஸ்கேவி நோயைத் தடுக்கும்மருந்து என அறியப்பட்டது. கப்பல்களில் பயணம் செய்வோர் நீண்ட நாள் பழங்களைத் பாதுகாத்து உண்பதற்கான ஒரு முறையாக பழப்பாகு தயாரிப்பை மேற்கொண்டனர் எனவும் இதன்பின்பே இதன் பாவனை அதிகரித்தது எனவும் வரலாறுகள் கூறுகின்றன. (திருமதி. கறோயினி பேரானந்தம், வசந்தி அரசத்தினம், உணவு போசணையும், யாழ்ப்பாணம், 2006, கு.பத்மாசனி, மனைப்பொருளியல், உணவும் போசணையும்) பழப்பாகு ஆனது கரையக்கூடிய அல்லது கரையாத பழங்களில் தயாரிக்கப்படும். பழங்களில் உள்ளே பெக்ரின் துணைகொண்டு மென்மை யாகவும், பூசுவதற்கு லேசாகவும் ஓரளவு கட்டிப்பதமான தன்மையுள்ளதுமாக இருப்பது இத்தயாரிப்புக்களில் உள்ள விஷேட அம்சங்களாகும். உணவுப்பொருட்களின் மேற்பகுதிகளுக்கு பூசுவதற்கும் உள்ளடைப் புக்களாகப் பாவிப்பதற்கும் இவை உப யோகிக்கப்படுகின்றன. பழக்கங்களை அரைத்து கூழாக்கி பின்பு நேரடியாகவே தயா ரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. பழப்பாகு பல்வேறு அளவுகளிலும் வடிவங்களிலும் போத்தல்களில் பொதிசெய்யப்டுவது மற்றத்தயாரிப்புக்களை விட சிறப்பான ஒரு அம்சமாகும். (கு.பத்மாசனி, மனைப் பொருளியல், உணவு போசணையும், S.K.Kulshreatha, Food Preservation, 1999)

**பழப்பாகு தயாரித்தலில் உள்ள பொதுவான பிரச்சினைகள்**

- பழப்பாகு கடினமாகவும் இறுக்கமாகவும் காணப்படல்

நன்றாகப் பழுத்த பழத்தில் அதிகளவு இயற்கை பெக்ரின் காணப்படுவதனால் இப்பிரச்சினையிலிருந்து விடுபட பழம் நன்றாகப் பழுத்ததா எனக் கவனித்து 1:1 என்ற விகிதத்தில் சீனியையும் பழச்சாறினையும் சேர்த்தல் வேண்டும் நீண்ட நேரம் வெப்பமேற்றல்மூலம் ஜெல்பரிசோதனைகளை செய்தல் 1:1 என்ற விகிதத்தில் சீனி, பழப்பானம் சேர்த்தல் வேண்டும் தரமான அளவுகளைப் பயன்படுத்தல் வேண்டும்.

- பழப்பாகு திரவத் தன்மை அடைதல் சுவையூட்டியாகவும் நற்காப்பியாகவும் பயன்படுத்தப்படும் அமிலமும் பெக்டினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமமாகக் காணப்படாவிடினும் பழத்தில் காணப்படும் பெக்டினின் தரம் வேறுபடுவதாலும் இப்பிரச்சினை உருவாகின்றது மற்றும் நுண்ணங்கிச் செயற்பாட்டின் மூலம் பெக்டின் பாதிக்கப்படுவதனால் பழப்பாகு திரவத்தன்மை அடைகின்றது.

- பழப்பாகில் பளிங்கு உருவாகுதல்

மிதமிஞ்சியசீனி, சமையலுக்கு சிபார்சு செய்யப்பட்ட நேரம் குறைவுபடல், குறைந்த வெப்பநிலையில் நீண்ட நேரம் சமைத்தல் போன்ற காரணங்களால் பழப்பாகில் பளிங்கு உருவாகின்றது.

- பழப்பாகுக்கு பெக்டின் சேர்க்காவிடின் மென்மையடைதல்

சீனி, பழச்சாறு, அமிலம், பெக்ஷன் போன்றவை சமமாக சேர்க்கப்படாமையினால் இப்பிரச்சினை ஏற்படுகின்றது.

- பழப்பாகு கலங்கல் தன்மையடைதல்

பழம் நன்றாக பழுக்காமையினாலும் சில வகை பழங்கள் கூழாக காணப்படுவதனாலும் இப்பிரச்சினை உருவாகின்றது. ஆகவே கூழாக இருக்கும் பழங்களை வடிகட்டி பானத்தை எடுத்து பயன்படுத்தல் வேண்டும்.

- தயாரிப்பாளர்களின் சுகாதாரம் பேணல்

Website (www.food-safety/ preserving / jam/ jelliers 2013, http// www.Google / jam pdf / lets preserve : jams jelliers & preserves, 2014)

**ஆய்வில் தயாரிக்கப்படும் பழப்பாகு பற்றியது**

**பழப்பாகு**

பழப்பாகுகள் (ஜாம்) எனப்படுபவை பழங்களைப் பேணி நீண்டகாலம் வைத்திருப்பதற்கான ஓர் ஆரம்பகால சமையல் முறைகளில் ஒன்றாகும். சிதையாத பதத்தில், பதமாகப்பழுத்த, உடன்பறித்த பழங்களே பழப்பாகு தயாரித்தலுக்கு பொருத்தமானவையாகும். பழுக்காத அல்லது ஓரளவு பழுத்த பழங்கள் பொதுவாக பழப்பாகு தயாரிக்க ஏற்புடையவையல்ல. புளிப்பற்ற, இனிப்புவாய்ந்த பழங்களில் பழப்பாகு செய்யும்போது அவற்றின் சுவைக்கேற்றபடி எலுமிச்சம்புளி சேர்த்துக்கொள்ள வேண்டும்.

பழப்பாகை தயாரிப்பதற்கு தேவையான மூலங்களாக நன்கு மசித்த பழங்கள், சீனி, பெக்ரின், அமிலம், நிறப்பொருள் போன்ற இன்றியமையாதவை.

இவையாவும் தகுந்த அளவுகளில் பழங்களிலே இயற்கையாக காணப்படும் பெக்ரின் அமிலம் நிறப்பொருள் இவை யாவும் இயற்கையான முறையில் சேர்த்து தயாரிக்கப்படுவதனால் போசணை நிறைந்ததாகவும் உடலுக்கு நீங்கு விளைவிக்க முடியாதவையாகவும் விளங்குகின்றன.

**ஆய்வுப் பிரதேசம்**

தயாரிக்கப்பட்ட மொத்த பழப்பாகு மாதிரிகளின் அளவு - 04

தயாரிக்கப்பட்ட பழப்பாகு வகைகளின் இயல்புகளை அறிய புலனுணர்வு மதிப்பீட்டுக்குழு ஒன்று ஒழுங்கு படுத்தப் பட்டது. இக்குழுவானது யாழ் பல்கலைக்கழக ஊழியர்களிற்கும் மாணவர்களிற்கும் தனித்தனியாக ஒழுங்குப்படுத்தப்பட்டது.

யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் வருட அடிப்படையிலும் பால் அடிப்படையிலும் மற்றும் பல்கலைக்கழக ஊழியர்களும் இவ் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**100 கிராம் பழப்பாகில் உள்ள போசணையின் அளவு**

| போசணை பற்றிய தகவல்கள் | | |
|---|---|---|
| குறிப்பிடத்தக்க பெறுமதிகள் / 100ml / போத்தல் | | |
| சக்தி, K.J.KK. | *249/60* | *628/149* |
| புரதம் g | *8.00* | *20.0* |
| காபோவைதரேற்று | *5.0* | *12.5* |
| வெல்லம் g | *4.7* | *11.8* |
| கொழும்பு g | *0.8* | *2.0* |
| நிரம்பிய கொழும்பு g | *0.5* | *1.2* |

**Source - www.food safety/ preseving/ jam/ jellies 2013**

**தரவுகளும் முறையியலும்**

தரவுகள் :- 04 வகையான பழப்பாகு ஆய்வுக்காகத்தயாரிக்கப்பட்டன அவையாவன

**தக்காளிப் பழப்பாகு**

**தேவையான பொருட்கள்**

- தக்காளிப்பழம் - 500g
- சீனி - 450g
- சிற்றிக்கமிலம் - 2 தேக்கரண்டி
- கிருமியழிக்கப்பட்ட கண்ணாடிப்போத்தல்

**செய்முறை :-**

தக்காளிப்பழங்களை கழுவி கொதிநீரில் இட்டு அமிழ்த்தி அதன் தோல் உரிக்கப்பட்டது. அதன் பின்னர் பழங்களை இரண்டாக வெட்டி அதனுள் இருக்கும் வித்துக்களை வடிகட்டி அகற்றியபின்னர் பழங்களை சிறிதாகவெட்டி மிக்ஸியில் இட்டு அரைக்கப்பட்டது. அரைக்கப்பட்ட பழக்கூழானது அதனுடன் சீனி சேர்த்து 45 நிமிடங்களுக்கு அளவான வெப்பத்தில் அடுப்பில் இட்டுக்காய்ச்சி இறக்குவதற்கு முன்பாக சிற்றிக்கமிலம் இட்டு காய்ச்சப்பட்டது. பழப்பாகு இறக்கி ஆறவிடப்பட்டு கிருமி நீக்கம் செய்யப்பட்ட உலர்ந்த கண்ணாடிப்போத்தலில் இட்டு இறுக்கமாக மூடி வைக்கப்பட்டது.

**மாம்பழப்பாகு**

**தேவையான பொருட்கள்**

- கறுத்தக்கொழும்பான் மாம்பழங்கள் - 3
- சீனி - 450g
- வினாகிரி - 2 மேசைக்கரண்டி
- கிருமியழிக்கப்பட்ட கண்ணாடிப் போத்தல் - 1

**செய்முறை :-**

மாம்பழங்கள் சுத்தமாக கழுவப்பட்டு தோல் அகற்றப்பட்டது. பின்னர் வித்து மாற்றும் நடுத்தும்பு பகுதிகள் அகற்றப்பட்டு ஒரு இஞ்சி துண்டுகளாக வெட்டப்பட்டது. பின்னர் 1 கப் (cup) தண்ணீரை blander இல் இட்டு அரைத்துக் கொள்ளப்பட்டது. பின்னர் அரைத்த பழக்கலவையுடன் சீனியும் வினாகிரியும் சேர்த்து அடுப்பில் ஒரு மணித்தியாலம் காய்ச்சப்பட்டது. பின்னர் இறக்கி ஆறவிடப்பட்டு கிருமி நீக்கம் செய்யப்பட்ட கண்ணாடிப்போத்தலில் இட்டு இறுக்கமாக மூடிவைக்கப்பட்டது.

**திராட்சைப் பழப்பாகு**

**தேவையான பொருட்கள்**

- திராட்சைப்பழம் - 1kg
- சீனி - 450g
- சிற்றிக்கமிலம் - 2 தேக்கரண்டி
- கிருமியழிக்கப்பட்ட கண்ணாடிப்போத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செய்முறை :-**

முந்திரிகைப்பழங்களை கழுவி சுத்தம் செய்து கொதிநீரில் இடப்பபட்டது. 10 நிமிடங்களின் பின்னர் அதன் மேல் தோல் அகற்றப்பட்டு அதனுள் இருக்கும் வித்துக் களும் அகற்றப்பட்டது. பின்னர் பழக்கங்களை ஒரு ஐஸ்கிறீம் கப் ( ice cream cup) தண்ணீர் விட்டு மிக்ஸியில் அரைத்து அதனுடன் சீனி சேர்த்து 1 மணித்தியாலம் அடுப்பில் வைத்து காய்ச்சப்பட்டது. பின்னர் ஜாம் பதமாக வந்தவு டன் சிற்றிக்கமிலம் சேர்க்கப்பட்டு பின்பு இறக்கி ஆறவிடப்பட்டு கிருமி நீக்கப்பட்ட போத்தலில் அடைத்து காற்றுப்புகாதபடி மூடி வைக்கப்பட்டது. (கு.பத்மாசனி, மனைப் பொருளியல், உணவும் போசணையும், 2012)

**அப்பிள் தேன் பழப்பாகு**
**தேவையான பொருட்கள்**

- பச்சை அப்பிள் - 3
- தேன் - 2 தேக்கரண்டி (tea spoon)
- சீனி - 500g
- சிற்றிக்கமிலம் - 2 தேக்கரண்டி (tea spoon)
- நிறம் (மஞ்சள்) - தேவையான அளவு

**செய்முறை :-**

அப்பிளை கழுவி சுத்தம் செய்து அதன் தோல் வித்துக்கள் அகற்றப்பட்டது. இஞ்சி துண்டுகளாக வெட்டி 1 கப் தண்ணீர் விட்டு மிக்ஸியில் இட்டு அரைக்கப்பட்டது. பின்பு அதனுள் சீனி, கலரிங் ( colouring) சேர்த்து நன்றாக காய்ச்சி பதமாக வந்தவுடன் சிற்றிக் கமிலம் சேர்க்கப்பட்டது. பின்பு ஜாம் பத மாக வந்தவுடன் இறக்கி ஆறவிடப்பட்டு கிருமி நீக்கப்பட்ட போத்தலில் அடைத்து காற்றுப் புகாதபடி மூடிவைக்கப்பட்டது.

புலனுணர்வு மதிப்பீட்டுக்குழு இயல்புகள்
இப்புலனுணர்வு மதிப்பீட்டுக்குழு ஆய்வினூ டு பழப்பாகுகளின் பின்வரும் இயல்புகள் பரீட் சிக்கப்பட்டது.

- சுவை
- மணம்
- நிறம்
- இழையமைப்பு

(கு. பத்மாசனி, மனைப்பொருளியல், உணவும் போசணையும் 2012)

**pH பெறுமானம் அவதானித்தல்**

pH மானியை பயன்படுத்தி அளக்கப்பட்டது. மனைப்பொருளியல் ஆய்வுப்படுத்திய நான்கு பழப்பாகு வகைகளிலும் pH இன் பெறுமானம் முதல் வாரத்துடனும் ஆறாம் வாரத்துடனும் ஒப்பிடும்போது பெறுமானத்தின் அளவு குறைவடைகின்றது அதாவது அமிலத்தன்மை அதிகரித்துக் காணப்பட்டது.

அட்டவணை -1

| தயாரிக்கப்பட்ட பழப்பாகு வகைகள் | pH பெறுமானம் Weeks (வாரங்கள்) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1ம் வாரம் | 2ம் வாரம் | 3ம் வாரம் | 4ம் வாரம் | 5ம் வாரம் | 6ம் வாரம் |
| அப்பிள் பழப்பாகு | 4.27 | 4.16 | 4.94 | 4.58 | 4.15 | 4.02 |
| முந்திரிய பழப்பாகு | 3.85 | 3.75 | 3.60 | 3.53 | 3.64 | 3.56 |
| தக்காளி பழப்பாகு | 4.44 | 4.39 | 4.27 | 4.19 | 4.24 | |
| | | | | | | 4.10 |
| மாம்பழ பழப்பாகு | 4.35 | 4.18 | 4.03 | 3.98 | 4.04 | 3.90 |

மனைப்பொருளியல் ஆய்வு கூடத்தில் பெறப்பட்ட பெறுமானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. மொத்த வெல்லத்தின் அளவைக்கணித்தல்**

மாம்பழ பழப்பாகில் மற்றைய பழப் பாகுடன் ஒப்பிடும்போது வெல்லத்தின் அளவானது அதிகமாக இருந்தது. இருப்பினும் அப்பிள் பழப்பாகின் வெல்லத்தின் அளவானது ஏனைய பழப்பாகுகளுடன் ஒப்பிடும் போது குறைவாகவே காணப்பட்டது.

அட்டவணை -2 Refracto meter இனால் அளக்கப்பட்டது

| தயாரிக்கப்பட்ட பழப்பாகு வகைகள் | மொத்த வெல்லத்தின் அளவு Weeks (வாரங்கள்) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1ம் வாரம் | 2ம் வாரம் | 3ம் வாரம் | 4ம் வாரம் | 5ம் வாரம் | 6ம் வாரம் |
| அப்பிள் பழப்பாகு | 4.8 | 4.6 | 6.0 | 4.0 | 6.0 | 6.6 |
| முந்திரிய பழப்பாகு | 6.8 | 6.0 | 6.9 | 7.0 | 6.0 | 8.4 |
| தக்காளி பழப்பாகு | 4.0 | 5.1 | 4.0 | 7.0 | 6.8 | 8.2 |
| மாம்பழ பழப்பாகு | 4.5 | 3.0 | 6.0 | 6.0 | 4.0 | 9.0 |

ஆய்வு கூடத்தில் தயாரிக்கப்பட்டு பெறப்பட்டது

**3. நுண்ணங்கித் தொழிற்பாட்டை அவதானித்தல்**

பழப்பாகுகளின் கரைசல்கள் தயாரிக்கப் பட்டு methelene blue சாய நிறமற்ற முறை மூலம் நுண்ணங்கிகளின் செயற்பாடு அவதானிக்கப்பட்டது.

1ம்வாரம்-6ம்வாரம்வரையில்நுண்ணங்கியின் செயற்பாட்டை நோக்கும்போது அதில் குறிப்பிடக்கூடியளவு மாற்றம் அவதானி க்கப் படவில்லை. இதனால் தயாரிக்கப்பட்ட பழப் பாகுகள் நுண்ணங்கிகளின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கப்படுகிறது என்பதை எதிர்வு கூறலாம்.

அட்டவணை -3

ஆய்வு கூடத்தில் அவதானிக்கப்பட்டவை

| வாரங்கள் | | வேறுபட்ட பழப்பாகு மாதிரிகளும் அவற்றில் methylene blue சாயம் தாழத்தலுக்கு எடுக்கப்பட்ட நேரம் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | **அப்பிள் பழப்பாகு** | **முந்திரிய பழப்பாகு** | **தக்காளி பழப்பாகு** | **மாம்பழ பழப்பாகு** | **கட்டுப்பாட்டு மாதிரி** |
| 1 | 1ம் வாரம் | 3 மணித்தியாலம் 30 நிமிடம் | 3 மணித்தியாலம் 30 நிமிடம் | 3 மணித்தியாலம் | 3 மணித்தியாலம் 30 நிமிடம் | மாற்றம் இல்லை |
| 2 | 2ம் வாரம் | 3 மணித்தியாலம் 20 நிமிடம் | 3 மணித்தியாலம் 25 நிமிடம் | 2 மணித்தியாலம் 50 நிமிடம் | 3 மணித்தியாலம் 25நிமிடம் | மாற்றம் இல்லை |
| 3 | 3ம் வாரம் | 3 மணித்தியாலம் 15 நிமிடம் | 3 மணித்தியாலம் 20 நிமிடம் | 2 மணித்தியாலம் 50 நிமிடம் | 3 மணித்தியாலம் 20 நிமிடம் | மாற்றம் இல்லை |
| 4 | 4ம் வாரம் | 3 மணித்தியாலம் 10 நிமிடம் | 3 மணித்தியாலம் 25 நிமிடம் | 3 மணித்தியாலம் 50 நிமிடம் | 3 மணித்தியாலம் 20 நிமிடம் | மாற்றம் இல்லை |
| 5 | 5ம் வாரம் | 3 மணித்தியாலம் | 3 மணித்தியாலம் 30 நிமிடம் | 2 மணித்தியாலம் 45 நிமிடம் | 3 மணித்தியாலம் 28 நிமிடம் | மாற்றம் இல்லை |
| 6 | 6ம் வாரம் | 2 மணித்தியாலம் 45 நிமிடம் | 3 மணித்தியாலம் 35நிமிடம் | 2 மணித்தியாலம் 40 நிமிடம் | 3 மணித்தியாலம் 35 நிமிடம் | மாற்றம் இல்லை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முடிவுரை

நான்கு வகையான பழப்பாகுகள் தயாரிக்கப்பட்டன. புலனுணர்ச்சி மதிப்பீட்டுக்குழுவின் ஆய்வின்படி சுவை, மணம், நிறம், இழையமைப்பு ஆகிய இயல்புகளில் தயாரிக்கப்பட்ட நான்கு பழப்பாகுகளிற்கிடையில் பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் மாணவப்பிரிவுகளில் பொருள் உள்ள வேறுபாடானது அவதானிக்கப்பட்டுள்ளது (0.5% பொருள் உள்ள மட்டத்தில்)

தயாரிக்கப்பட்ட பழப்பாகு வகைகளின் pH பெறுமானம் ஆனது அமிலத்தன்மை கொண்டதாக காணப்பட்டது. தயாரிக்கப்பட்ட பழப்பாகு வகைகளில் வெல்லத்தின் அளவு சோதனைக்காக வைக்கப்பட்ட காலப் பகுதிகளில் அதிகரித்துக் காணப்பட்டன.

தயாரிக்கப்பட்ட பழப்பாகுகள் யாவற்றிலும் 1ம் - 6ம் வரையில் நுண்ணங்கியின் செயற்பாட்டை நோக்கும் போது அதில் குறிப்படக்கூடியளவு மாற்றம் அவதானிக்கப்படவில்லை. இதனால் தயாரிக்கப்பட்ட பழப்பாகுகள் நுண்ணங்கிகளின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கப்படுகிறது என்பதனை எதிர்வு கூறலாம்.

ஆகவே செயற்கை சேர்மானங்கள் சேர்க்காமல் இயற்கையான சேர்மானங்களை மட்டும் கொண்டு தயாரிக்கப்பட்ட இவ் நான்கு பழப்பாகுகளும் நான்கு மாதங்கள் பேணிப் பாதுகாக்கலாம் என்ற முடிவுக்கு வரலாம். இவ்வாய்வானது பழப்பாகு தொடர்பான எதிர்கால ஆய்வுகளுக்கும் சிறந்த உள்ளீடாக விளங்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை

யாழ்ப்பாணத்தில் பயிரிடப்படும் பழங்களை பேணுவதற்கும் அவற்றை நீண்ட காலம் பேணிப் பாதுகாத்து வைப்பதற்கும் ஏற்ற விஞ்ஞான ரீதியான தொழில்நுட்ப முறையை இப்பழப்பாகு தயாரிக்கப்படும் முறை மூலம் உருவாக்கிக் கொள்ளலாம். யாழ்ப்பாணத்திலுள்ள நாவற்குழிப் பிரதேசத்தில் மாம்பழப் பழப்பாகு தயாரிப்பதில் கொடிகட்டிப் பறந்த காலமும் உண்டு.

### எதிர்காலத்தில் ஆய்வு செய்வோருக்குரிய அறிவுறுத்தல்

எல்லா வகையான பழப்பாகினை தயாரிக்கலாம். ஆனால் தரமான பழப்பாகினை தயாரிப்பதற்கு பழங்களின் உள்ளீட்டு இயல்புகளை (பழத்தின் இனிப்புச்சுவை பெக்டினின் அளவு) செய்தல் வேண்டும். சேர்முறைகளை சரியான முறையில் கடைப்பிடித்தல், சேர்மானங்களின் சரியான விகிதம், வெப்பப் பரிகரிப்பு, போத்தல்கள் கிருமியழிக்கப்பட்டு காற்றிறுக்கமான நிலைமைகளின் கீழ் பழப்பாகினை போத்தலில் அடைத்தல், தயாரிப்பாளர்களின் சுகாதாரம் பேணப்படல் போன்றவையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

## Net Reference


1. www. jamboree.orghistory.html
2. https// www.Lungrown.com / the history.html
3. www. food-safety / presweving / jam/ jellies
4. https// www.goole.com / jam pdf / lets preserve : jams jellies & preserves
5. http// www.jam pdf the science of jam & jelly making
6. http// www. jam & jelly guide, history & overview of jam & jelly




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பாங்கும், வறுமையின் பரிமாணமும் : ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவை சிறப்பாகக் கொண்டது

சுபாஜினி உதயராசா / கருணாகரன் சுதாகர்

**ஆய்வுச்சுருக்கம்**

வாழ்வாதாரம் என்பது வாழ்க்கைத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு மூலமாகும். நிலைத்து நிற்கக்கூடிய வாழ்வாதாரமானது தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் அவர்களுடைய வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அடிப்படையாக அமையும் இயற்கை, சமூக, பௌதிக, மானிட மற்றும் நிதி மூலதனம் ஆகிய ஐந்து சொத்துக்களில் தங்கியுள்ளது (kristanson, et al ; 2005) நிலைத்து நிற்கக் கூடிய வாழ்வாதார உத்திகளும் சொத்துக்களும் வறுமையான மக்களின் வாழ்வாதாரத்தில் சுற்றுச் சூழல் வளங்களின் பங்கினை மிகவும் ஆழமாக ஆராய்வதற்கான ஒரு வழியை வழங்குகின்றது. (kristanson, et al., 2005). வாழ்வாதாரச் சொத்துக்களின் பரம்பலும், அவற்றின் அளவுகளும் மக்களின் வறுமையை தீர்மானிப்பவையாக விளங்குகின்றன. வறுமை என்பது இடம் சார்ந்த ரீதியில் சமனற்றுக் காணப்படும் ஒரு தோற்றப்பாடாகும். வறுமையினுடைய இடம்சார் பரிணாமத்தினை காட்சிப்படுத்தும் ஒரு பிரபல்யமான வழிமுறையாக வறுமை பற்றிய படமானது இப்பொழுது காணப்பட்டு வருகின்றது. ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வாழ்வாதாரச் சொத்துக்களை அடையாளப்படுத்தி அவற்றின் இடம்சார் பாங்கினை படமாக்குவதன் மூலம், வாழ்வாதாரச் சொத்துக்களின் அடிப்படையில் வறுமையின் இடம் சார்ந்த பரம்பலை அறிவதே இவ் ஆய்வின் நோக்கமாகும். இவ் ஆய்வானது முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகள் Arc GIS தொழிநுட்பத்தை பயன்படுத்தி இங்குள்ள இருபத்தேழு கிராமசேவகர் பிரிவுகளிலுள்ள வாழ்வாதாரச் சொத்துக்கள் அடையாளப்படுத்தப்பட்டு, படமாக்கப்பட்டு அவற்றின் இடம்சார் பாங்குகளை அடிப்படையாகக் கொண்டு வறுமை மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் வாழ்வாதாரச் சொத்துக்களின் பரம்மல் மட்டங்கள், ஒரே மாதிரியாக காணப்படவில்லை. வாழ்வாதாரச் சொத்துக்களின் பரம்பலில் காணப்பட்ட வேறுபாடுகளே வறுமை மட்டங்களிலும் வேறுபாடுகள் காணப்படக் காரணமாகும். எனவே கிராம சேவகர் பிரிவு ரீதியாக காணப்படுகின்ற வாழ்வாதாரச் சொத்துக்களின் பற்றாக்குறையினை நிவர்த்திசெய்து அவற்றின் பரம்பலை சமப்படுத்துவதன் மூலம் வறுமையினைக் குறைக்க முடியும். இவ்வாய்வினை மேற்கொண்டதன் மூலம் இப்பிரதேசத்தின் வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம் சார் பாங்கிற்கும் வறுமைக்கும் இடையிலான தொடர்பினை அறிய முடிந்துள்ளது.

**திறவுச்சொற்கள் :** வாழ்வாதாரம், வாழ்வாதாரச் சொத்துக்கள், கிராமசேவகர் பிரிவு, வறுமை, இடம்சார் பரம்பல்

## 1. அறிமுகம்

வாழ்வாதாரம் என்பது வாழ்க்கைத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு மூலமாகும். நிலைத்து நிற்கக்கூடிய வாழ்வாதாரமானது தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் அவர்களுடைய வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அடிப்படையாக அமையும் இயற்கை, சமூக, பௌதிக, மானிட மற்றும் நிதி மூலதனம் ஆகிய ஐந்து சொத்துக்களில் தங்கியுள்ளது (kristanson, et al., 2005). நிலைத்து நிற்கக் கூடிய வாழ்வாதார உத்திகளும் சொத்துக்களும் வறுமையான மக்களின் வாழ்வாதாரத்தில் சுற்றுச் சூழல் வளங்களின் பங்கினை மிகவும் ஆழமாக ஆராய்வதற்கான ஒரு வழியை வழங்குகின்றது (kristaanson, et al., 2005). வாழ்வாதாரச் சொத்துக்களின் பரம்பலும் அவற்றின் அளவுகளும் மக்களின் வறுமையை தீர்மானிப்பவையாக விளங்குகின்றன. வறுமை என்பது இடம்சார்ந்த ரீதியில் சமனற்றுக் காணப்படும் ஒரு தோற்றப்பாடாகும். வறுமையினுடைய இடம்சார் பரிணாமத்தினை காட்சிப்படுத்தும் ஒரு பிரபல்யமான வழிமுறையாக வறுமை பற்றிய படமானது இப்பொழுது காணப்பட்டு வருகின்றது. இப்படங்கள் வறுமை ஒழிப்புத் தொடர்பான முன்னுரிமைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிடுதலுக்கும், வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளுக்கும் ஒரு வழிகாட்டியாக இருக்கின்றது. வறுமையில் இடர்சார் பரம்பலை பகுப்பாய்வு செய்வது புவியியலாளர்களால் நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வறுமைப் படங்களை தயாரிப்பதில் நீண்ட காலமாக வருமானம் மற்றும் செலவு போன்ற தொடர்புபடுத்தப்பட்ட காரணிகள் முக்கிய பங்கு வகித்த போதும் இன்று அப்படங்களை தயாரிப்பதில் தொடர்புபடுத்தப்படாத (Disaggregating) தனித்த காரணிகள் இடம்சார்ந்த ரீதியில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

இதுவரையில் இலங்கை உட்பட பலநாடுகளில் வெளிவந்த வறுமை பற்றி இடம்சார் பரம்பலானது வறுமையின் தனிப்பரிமாணச்சுட்டிகளை (பண வருமானம், செலவு, பிழைப்பு மட்டம், வாழ்க்கைத் தரம், ஆயுள் எதிர்பார்ப்பு, குழந்தை இறப்பு, கல்வியறிவு) அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றது. இவை தேசிய குடிக்கணிப்பு தரவுகளில் இருந்தும் குடும்ப அமைப்பு (household) ஆய்வுகளில் இருந்தும் பெறப்பட்ட தரவுகளை வைத்துக் கொண்டே அட்டவணைகளாகவோ, படங்களாகவோ உருவாக்கப்பட்டிருக்கின்றன (Suan- Pheng kam et al., 2005, Mauricio R.Bellon et al, 2005). இலங்கையில் வறுமை பற்றிய ஆய்வுகள் பிரதானமாக குடிக்கணிப்பு புள்ளி விபரத் திணைக்களத்தின் குடியிருப்பாளர்களின் வருமானம், மற்றும் செலவு, ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன (Benedikt Korf 2004). ஒரு சில ஆய்வுகளில் வேறுசில மாறிகளை (நிலத்தினுடைய கிடைக்கக் கூடிய தன்மையும், அடையக் கூடிய தன்மையும், நீருக்கான கிடைக்கக் கூடிய தன்மையும், அடையக்கூடிய தன்மையையும், வேலை வாய்ப்பும் உட்கட்டுமான வசதிகளும்) அடிப்படையாக கொண்டும் வறுமை ஆராயப்பட்டுள்ளது (Upali Amarasinghe et al., 2005).

இவ் ஆய்விற்காக பல உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வுக்கட்டுரைகள் வாசிக்கப்பட்டு மிகப்பயனுடையதான ஒரு சில கட்டுரைகளின் சாரம்சங்கள் பின்வருமாறு. வறுமையின் இடம்சார் வேறுபாட்டையும், வாழ்வாதார சொத்துக்களுக்கு இடையிலான தொடர்பினையும், ஐந்து விதமான மூலதனச் சொத்துக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மாறிகளையும், அம்மாறிகளை பல்வேறு வகையான பிரிவுகளிலும் உள்ளடக்கி உள்ளத்தையும் பல்வேறு ஆய்வாளர்கள் தமது ஆய்வுகளில் குறிப்பிட்டுள்ளார்கள். (Erentein Hellin and chahdna - (2010) kristjansan et al., at (2005) Pheg kam et al., (2005) Eillis and Bahiigwa (2003) வறுமையின் இடம்சார் பரம்பலை (Nicholas minot (2000), bifogno and chong, ( 2002)) கிராமிய மட்டங்களில் கணக்கெடுப்பு முறையில் தரவுகளை பெற்று வறுமைப் படத்தினைத் தயாரித்துள்ளார்கள். தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக பிற்செலவு பகுப்பாய்வு Gini குணகம், Principal component analysis, ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன. (Upali Amarasinghe et al., 2005, kridtjanson, et al., 2005 Erentein hellin and chahdna 2010, Bisogno and chog 2002). பல்வேறு ஆய்வுகளில் வறுமையின் இடம்சார்பரம்பலையும் வாழ்வாதாரச் சொத்துக்களின் பரம்பலையும் படமாக்குவதற்கு செய்மதித்தரவுகளையும் Arc GIS நுட்ப முறைகளையும் பயன்படுத்தி உள்ளார்கள். (Erentein, Hellin and chandna 2010, Nicholas minot 2000, Bisogno and Chong 2002, elvidge et al., 2009). ஐந்து மூலதனச் சொத்துக்களையும் பிரதிபலிக்கும் பல்வேறு வகையான மாறிகளை அடையாளம் செய்து படமாக்கி உள்ளதோடு, அளவுசார் இடம் சார் அளவுப்பகுப்பாய்வு முறைகளைப் பயன்படுத்தியதன் ஊடாக வறுமைக்கும் வாழ்வாதாரச் சொத்துக்களுக்கும் இடையிலான தொடர்புகளை ஆராய்ந்துள்ளார்கள் (kristjanson, et al., 2005). இவ்வாறாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் பல்வேறு பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்ட வாழ்வாதாரச் சொத்துக்களுக்கும் வறுமைக்கும் இடையிலான தொடர்புகள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் இவ் ஆய்விற்கும் பயனுடையதாக அமைந்துள்ளன. குறிப்பாக இக்கட்டுரைகளில் கூறப்பட்ட தரவு சேகரிப்பு நுட்ப முறைகள், வாழ்வாதாரச் சொத்துக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மாறிகளை தெரிவு செய்தல், பகுப்பாய்வு நுட்பமுறைகள் போன்றன மிகவும் பயனுடையதாக அமைந்திருந்தன.


இலங்கையில் வாழ்வாதாரச் சொத்துக்களை அடிப்படையாகக் கொண்டு வறுமை அளவீடுகளோ, படமாக்கலோ இது வரையில் மேற்கொள்ளப்படவில்லை. கடந்த மூன்று தசாப்த காலமாக நடைபெற்ற யுத்தத்தினால் ஆய்வுப் பிரதேசமானது மிகவும் பாதிக்கப்பட்டு மக்கள் வறுமை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இப்பிரதேச மக்களின் வறுமையைக் குறைப்பதற்கு அல்லது நீக்குவதற்கு இங்குள்ள வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பரம்பலை அறிவதோடு அவற்றிற்கும் வறுமைக்கும் இடையிலான தொடர்பினையும் ஆராய்ந்து முடிவுகளை முன்வைப்பது அவசியமாக உள்ளது. இந்த வகையில் இவ்வாய்வானது ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாழ்வாதாரச் சொத்துக்களை அடையாளப்படுத்தி அவற்றின் இடம்சார் பாங்கினை படமாக்குவதன் மூலம், வாழ்வாதாரச் சொத்துக்களின் அடிப்படையில் வறுமையின் இடம்சார்ந்த பரம்பலை அறிவதே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

## 2. ஆய்வுப்பிரதேசம்

இலங்கையின் வடமாகாணத்தில் ஐந்து நிர்வாக மாவட்டங்களில் ஒன்றாகிய முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஆறு பிரதேச செயலர் பிரிவுகளுள் உள்ளடங்கும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவே ஆய்வுப் பிரதேசமாகும். இதன் எல்லைகளாக வடக்கே புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவும், கிழக்கே கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவும், தெற்கே வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவும், மேற்கே மாந்தை கிழக்கு, நுணுக்காய் பிரதேச செயலர் பிரிவுகளும் காணப்படுகின்றன. இப்பிரதேசத்தினுடைய மொத்தப் பரப்பு 618 சதுர கிலோமீற்றர்களாகும். (61,800 கெக்ரேயர் District statistical hand book - 2014). இது முல்லைத்தீவு மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 24 சதவீதமாகும். (District statistical hand book - 2014). ஆய்வுப்பிரதேசமானது இருபத்தேழு கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கியதுடன் மொத்தம் நூற்றுப் பதினான்கு கிராமங்களையும் கொண்டுள்ளது. தற்போது இங்கு 5585 குடும்பங்கள் வாழ்ந்து வருவதுடன் சனத்தொகையானது 18, 288 ஆக காணப்படுகின்றது. இதில் 8962 ஆண்களும், 9326 பெண்களுமாக உள்ளன. (statistical hand book 2014). இங்கு இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் என பல்வேறு மதத்தினரும் வாழ்கின்றனர். கடந்த கால யுத்தத்தினால் இப்பிரதேச மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வறுமை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். (கள ஆய்வு 2015) பல்வேறு நிவாராண உதவிகள் வழங்கப்பட்டு வந்த போதிலும் அவை ஏன் மக்களின் வறுமையை போக்கவில்லை என்பது ஆய்விற்குரிய விடயமாக உள்ளது. இதற்கான காரணத்தை கண்டறிவதற்கு அங்குள்ள வாழ்வாதாரச் சொத்துக்களின் பரம்பல் பற்றிய விடயத்தையும், மக்கள் வாழ்வாதாரச் சொத்துக்களை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்ற விடயத்தையும் ஆராய்தல் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**உரு 1 ஆய்வுப்பிரதேசம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. முறையியல்

### 3.1 தரவுகளும், தரவு சேகரிப்பு முறைகளும்

இவ் ஆய்வானது முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலைத் தரவுகள் வினாக்கொத்து, நேர்காணல், மையக் குழு விவாதங்கள், நேரடி அவதானிப்பு கலந்துரையாடல்கள் போன்ற வழிமுறைகளினூடாக பெறப்பட்டுள்ளன. குறிப்பாக விவசாயக் குழுக்கள், கமநலசேவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள், காணிக்கச்சேரி உத்தியோகத்தர்கள், நிலப்பயன் பாட்டு திட்டமிடலாளர்கள், ஆய்வுப்பிரதேச திட்டமிடலாளர்கள் போன்றவர்களுடன் மையக்குழு விவாதங்களை மேற்கொண்டு அப்பிரதேச மக்களின் வாழ்வாதாரச் சொத்துக்கள், வறுமை பற்றிய தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இருபத்தேழு கிராம சேவகர்களுக்கும் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு மக்களின் ஐந்து வகையான வாழ்வாதாரச் சொத்துக்கள் பற்றிய தரவுகளும் பெறப்பட்டுள்ளன. அத்துடன் வாழ்வாதாரச் சொத்துக்கள் தொடர்பான புள்ளி விபரத்தரவுகள், முல்லைத்தீவு மாவட்ட வறுமை தொடர்பான தரவுகள், இலங்கையின் வறுமை தொடர்பான புள்ளிவிபரத் தரவுகள் ஒட்டுசுட்டான்பிரதேசநிர்வாக எல்லைப்படம், இலங்கையின் வறுமை தொடர்பானதகவல்கள் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகள் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன.

### 3.2 தரவுப்பகுப்பாய்வு

தரவுப்பகுப்பாய்வானது பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட raster வரைபடங் களைபயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்த ஆய்விற்காக முன்வைக் கப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு பகுப்பாய்வுச் செயன் முறையானது ஒரு படிமுறையாக மேற் கொள்ளப்பட்டுள்ளது.

சமூக மூலதனமானது இரண்டு வகுப்புக் களாகவும், நிதி மூலதனமானது மூன்று வகுப்புகளாகவும், மனித மூலதனமும், பௌதிக மூலதனமும் நான்கு வகுப்புக்களாகவும், இயற்கை மூலதனமானது ஐந்து வகுப்புக் களாகவும் வகைப்படுத்தி பகுப்பாய்வு செய்யப் பட்டுள்ளது.

### 3.2 வாழ்வாதாரச் சொத்துக்களை அளவிடல்

ஒட்டுச்சுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இருபத்தேழு கிராம சேவகர் பிரிவிகளிலும் காணப்படும் வாழ்வாதாரச் சொத்துக்கள் அடையாளப்படுத்தப்பட்டு பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. ஐந்து வகையான மூலதனச் சொத்துக்களும் மக்களின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளன. இம் மூலதன சொத்துக்களை மனித மூலதனம். பௌதிக மூலதனம், சமூக மூலதனம், இயற்கை மூலதனம், நிதி மூலதனம் என வகைப்படுத்தி அவை ஒவ்வொன்றையும் கிராமசேவகர் பிரிவு ரீதியாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளதுடன் அவற்றினுள் உள்ளங்குகின்ற வாழ்வாதார மாறிகளும் அடையாளப்படுத்தப்பட்டு வகைப் படுத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் வாழ்வாதாரச் சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு அதனைப் படமாக்கிக் காட்டுவதற்கு இப்படிமுறை அடிப்படையாக உள்ளது. அந்த வகையில் மனித மூலதனம் எனும் போது மனிதனின் உடல், உள, அறிவுத்திறன்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக உள்ளது. இம்மூலதனத்தினுள் விவசாயக் குடும்பங்கள், பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள், மாணவர்கள், தங்கி வாழ்வோர் போன்ற மாறிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. சமூக அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய சமூகக் குழுக்கள், சமூக உறவு நிலைகள், சுகாதாரம், பாதுகாப்பு போன்ற மாறிகள் சமூக மூலதனத்தினுள் உள்ளடக்கப்படுகின்றன. ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பிரதேசத்தில் இயற்கையாகவே அமைந்துள்ள வளங்களை இயற்கை மூலதனம் என்ற வகைப்பாட்டினுள் உள்ளடக்கப்படுகின்றது. இம்மூலதனத்தினுள் நெற்செய்கைப்பரப்பு, மேட்டுநிலப் பயிர்ச்செய்கைப்பரப்பு, காடுகள், பயன்படுத்தப்படாத நிலங்கள் போன்ற மாறிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உருவாக்கப்பட்ட வளவாய்ப்புக்கள் பௌதிக மூலதனம் என வகைப்படுத்தப்படுகின்றது. இதனுள் நிரந்தர வீடுகள், தற்காலிக வீடுகள், மின்சாரம் பெறும் குடும்பங்கள், சூரிய கலம் பயன்படுத்தும் குடும்பங்கள், மலசலகூடம் பயன்படுத்தும் குடும்பங்கள் போன்ற மாறிகள் உள்ளடங்கியுள்ளன. மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு குறிப்பாக மக்களால் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார நடவடிக்கைகளுக்கு மூலமாக நிதி மூலதனம் காணப்படுகின்றது. இம்மூலதனத்தினுள் வருமான மட்டங்கள் (ரூபா 2500 இற்கு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள், ரூபா 2500 தொடக்கம் ரூபா 5000 வரை வருமானம் பெறும் குடும்பங்கள், ரூபா 5000 தொடக்கம் ரூபா 10,000 வரை வருமானம் பெறும் குடும்பங்கள், ரூபா 10,000 தொடக்கம் ரூபா 15,000 வரை வருமானம் பெறும் குடும்பங்கள், ரூபா 15000 இற்கு மேல் வருமானம் பெறும் குடும்பங்கள்), அரச தொழில் புரியும் குடும்பங்கள் போன்ற மாறிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்தவகையில் ஆய்வுப் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட வாழ்வாதாரச் சொத்துக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மாறிகளை ஓர் ஒழுங்கு முறையாக தொகுத்த புள்ளி விபரத்தரவுகள் அட்டவணைகளாக்கப்பட்டு பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

### 3.2.2 வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பாங்கு

ஒட்டுச்சுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள இருபத்தேழு கிராமசேவகர் பிரிவுகளையும் அடிப்படையாகக் கொண்டு ஐந்து மூலதனத்தினுள்ளும் உள்ளடங்குகின்ற ஒவ்வொரு மாறிகளுக்கும் தனித்தனிப் படங்கள் தயாரிக்கப்பட்டு பின் ஒவ்வொரு மூலதனத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் காணப்படும் வாழ்வாதார மூலதனங்கள் ஐந்தையும் அளவீடு செய்து நிறையிடப்பட்டு அவை தொடர்பான இடம் சார் பரம்பற் படங்கள் பெறப்பட்டுள்ளன. மனித மூலதனமாறிகளது இடம்சார் பரம்பற் போக்குகளை உரு 2 இல் அவதானிக்க முடியும்.

Mu/73, Mu/60 ஆகிய இரண்டு கிராம சேவகர் பிரிவுகளிலும் மனித மூலதனம் மிக உயர்வாக காணப்படுகின்றது. இங்கு பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் மொத்தக் குடித்தொகையில் 1% மாக உள்ளமையும், தங்கி வாழ்வோர் 2 % மாக உள்ளமையும், அதிகளவான (99%) மாணவர்கள் கல்விகற்க பாடசாலைகளுக்கு செல்வதாலும், அனைத்து விவசாயக் குடும்பங்களும் ஏதோ ஒரு வகையான பயிர்ச்செய்கையிலாவது ஈடுபட்டுள்ளதாலும்



**உரு 2 மனித மூலதனத்தின் இடம்சார் பாங்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சமூக மூலதனம் மிக உயர்வாக (very high) காணப்படுகின்றது. Mu/74, Mu/75, Mu/76, Mu/57, Mu/61, Mu/65, Mu/69, Mu/126 ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் மனித மூலதனம் உயர்வாக (High) காணப்படுவதற்கு காரணம் இங்குள்ள குடும்பங்களில் 52 வீதமானவர்களே விவசாயத்தில் ஈடுபடுவதோடு ஏனையவர்களுக்கு நிலம் இருந்தும் நீர்ப்பாசனப் பிரச்சினையால் பயிர்ச் செய்கையில் ஈடுபடமுடியாதவர்களாக உள்ளனர். மனித மூலதனம் குறைவாக (low) உள்ள கிராமசேவகர் பிரிவுகளில் உள்ள பெரும்பாலான குடும்பங்களில் முதியவர்கள் அதிகமாக இருப்பதால் தங்கி வாழ்வோர் தொகை அதிகமாகவும் (அதிகளவான இளைஞர்கள் வேலை வாய்ப்புக்காகவும், யுவதிகள் திருமணத்திற்காகவும் வெளிநாடுகளிற்கு சென்றுள்ளமையால் குடும்பத்தில் முதியவர்களே தங்கியிருக்க வேண்டிய நிலைமையை கள ஆய்வின் மூலம் கண்டறியமுடிந்தது), கல்வி கற்கும் மாணவர்கள் தொகை குறைவாகவும் இருப்பதும் காரணங்களாக உள்ளன. எடுத்துக்காட்டாக Mu/72, Mu/70, Mu/71, Mu/55, Mu/63, Mu/64, Mu/62, Mu/125, Mu/123 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் மனித மூலதனம் குறைவாகவும் (low) காணப்படுகின்றது. அதேவேளை Mu/56, Mu/58, Mu/59, Mu/127, Mu/124 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் மனித மூலதனமானது மிகக் குறைவாகவும் (Very Low) உள்ளது. இதனால் இங்கு வறுமை மிக உயர்வாக காணப்படுகின்றது. இதற்குப் பிரதான காரணமாக இருப்பது இப்பிரதேசத்தில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் (37 குடும்பங்கங்கள்) அதிகமாக இருப்பதும் விவசாயக் குடும்பங்கள் குறைவாக உள்ளமையும் (09 குடும்பங்கள்) கண்டறியப்பட்டுள்ளது. யுத்தத்தினால் அதிகவான ஆண்கள் மரணமடைந்தமையும் இயற்கை மரணம், ஒரு சில விவாகரத்து நிலைமைகளும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அதிகரித்தமைக்குக் காரணங்களாக கண்டறியப்பட்டுள்ளன. அத்துடன் மனித மூலதனம் மிகக் குறைவாக (very low) உள்ள இக்கிராம சேவகர் பிரிவுகளில் பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய 29 மாணவர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். வறுமை காரணமாக சிறுவர்களும் கூலி வேலைகளுக்கு செல்கின்றமை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒட்டுச்சுட்டான் பிரதேச செயலர் பிரிவில் மனித மூலதனம் கொண்டுள்ள இடம்சார் பரம்பலினை படமாக்கலின் மூலம் அறிய முடிந்துள்ளது.

ஒட்டுச்சுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராமசேவகர் பிரிவுகளின் பௌதிக மூலதனம் தொடர்பான இடம்சார் பரம்பற் படங்கள் பகுப்பாய்வுகளின் மூலம் பெறப்பட்டுள்ளன. பௌதிக மூலதனத்தின் இடம்சார் பரம்பல் பாங்கினை உரு 3 இல் அவதானிக்க முடியும்.

இப்பிரதேச செயலர் பிரிவிலுள்ள முத்துவிநாயகபுரம் (Mu/60) என்ற கிராம சேவையாளர் பிரிவில் பௌதிக மூலதனம் மிகக் குறைவாகக் (very low) காணப்படுகின்றது. காடுகள் அதிகமாக இருப்பதும், குடியிருப்புக்கள் குறைவாக இருப்பதும் தற்காலிக வீடுகள் அதிகமாக இருப்பதும் இதற்குரிய காரணமாகும். ஆய்வுப்பிரதேசத்திலுள்ள பன்னிரண்டு கிராம சேவையாளர் பிரிவுகளில் பௌதிக மூலதனம் குறைவாகக் (low) காணப்படுகின்றது. இதற்கு காரணம் இங்குள்ள வீடுகளில் 50 வீதமானவை அரசினால் வழங்கப்பட்ட தற்காலிக வீடுகளாகவும், பெரும்பாலன வீடுகளில் (72 % களஆய்வு 2015) சொந்த மலசலகூடம் இல்லாத நிலையும், மின்சாரம் பெறும் குடும்பங்கள் 20 வீதமாகவும் உள்ளமை காரணங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**உரு 3 பௌதிக மூலதனத்தின் இடம்சார் பாங்கு**


இத்தகைய நிலைமையை Mu/72, Mu/74, Mu/75, Mu/123 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் சிறப்பாக அவதானிக்கலாம். நடுத்தர அளவிலான பௌதிக மூலதனம் உள்ள பகுதிகளில் நிரந்தரமான வீடுகள் மின்சார, மலசலகூட வசதிகளோடு உள்ளமை களஆய்வின் மூலம் அறிய முடிந்தது. ஐந்து கிராம சேவகர் பிரிவுகளில் பௌதிக மூலதனம் உயர்வாகவும் (high) காணப்படுகின்றது. இதற்குக் காரணம் இங்கு வசதி படைத்தவர்கள் ஓரளவு காணப்படுவதால் நிரந்தரமான வீடுகளும், அதனுடன் இணைந்த மலசலகூட வசதிகளும், மின்சாரம் பயன்படுத்துகின்ற தன்மை அதிகளவாகவும் மின்சாரம் இல்லாத சந்தர்ப்பங்களில் சூரியகலங்களை பயன்படுத்துபவர்களாகவும், இப்பிரதேச மக்கள் காணப்படுகின்றமையால் பௌதிக மூலதனம் உயர்வாக (high) காணப்படுகின்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள இருபத்தேழு கிராம சேவையாளர் பிரிவுகளின் இயற்கை மூலதனம் தொடர்பான இடம்சார் பரம்பல் படங்கள் பகுப்பாய்வின் மூலம் பெறப்பட்டுள்ளன. இதனை உரு 4 இல் அவதானிக்கலாம். இந்துபுரம் (Mu/76), தச்சடம்பன் (Mu/70) ஒட்டுசுட்டான் (Mu/61) ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் இயற்கை மூலதனமானது மிகக் குறைவாக (very low) உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இங்கு நீர்ப்பாசனப் பிரச்சினையால் (நீரின்மை) பயன்படுத்தப்படாத நிலங்கள் ஏராளமாக உள்ளமையும், நெற் செய்கைப் பரப்புக்கள் குறைவாக பயன்படுத்தப்படுகின்றமையும் இதற்கு முக்கிய காரணமாக கண்டறியப் பட்டுள்ளது. இங்குள்ள எட்டு கிராம சேவையாளர் பிரிவுகளில் இயற்கை மூலதனமானது குறைவாகவும் (Low), பதின்மூன்று கிராம சேவகர் பிரிவுகளில் இயற்கை மூலதனமானது நடுத்தரமாகவும் (Medium) உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இப்பகுதி மக்கள் மழையை நம்பி பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதால் பயிர் செய்யப்படும் பரப்புக்களின் அளவுகள் காலத்திற்குக்க காலம் கூடிக்குறைவதாக மக்கள் கூறியுள்ளார்கள். (மையக்குழு விவாதங்கள் 2015). காதலியார் சமயங்குளம் (Mu/162) என்ற கிராமசேவகர் பிரிவில் இயற்கை மூலதனமானது உயர்வாகவும் (High) ஒலுமடு கிராம சேவகர் பிரிவில் மிக உயர்வாகவும் (Very high) இருப்பது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் இங்குள்ள நெற் செய்கைப் பரப்புக்கள் யாவும் இரண்டு போகங்களில் பயிர் செய்யப்படுவதுடன் அதிகளவான (65%) குடும்பங்கள் மேட்டுநிலப் பயிர்ச்செய்கையிலும் ஈடுபட்டுள்ளார்கள் அத்துடன் இங்கு கிணறுகள் மூலமும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்படுவதால் இங்கு பயன்படுத்தப்படாத நிலங்களின் அளவு மிகக் குறைவாக (1%) உள்ளமை நேரடி ஆய்வின் போது அவதானிக்க முடிந்தது. ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 27 கிராம சேவையாளர் பிரிவின் இயற்கை மூலதனத்தின் இடம்சார் பரம்பல் பாங்கினை உரு 4 இல் அவதானிக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆய்வுப்பிரதேச தரவுகளின் பகுப்பாய்வு களினதும் படமாக்கலினதும் முடிவுகளின் படி உயர்வான (high) சமூக மூலதனம் உள்ள பகுதிகளும், தாழ்வான அல்லது குறைவான (low) சமூக மூலதனம் உள்ள பகுதிகளும் அடையாளம் செய்யப்பட்டுள்ளன. இதனை உரு 5 இல் அவதானிக்கலாம்.

இந்த வகையில் இருபது கிராம சேவையாளர் பிரிவுகளில் சமூக மூலதனமானது உயர்வாக (high) உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இங்கு மாதர்சங்கங்களின் செயற்பாடுகள், சமுர்த்திக் குழுக்களின் செயற்பாடுகள், கிராம முன்னேற்றச் சங்கம், சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம், விவசாயக் குழுக்கள் போன்றவற்றின் செயற்பாடுகள்




**உரு 4 இயற்கை மூலதனத்தின் இடம்சார் பாங்கு**

அதிகளாக காணப்படுவதும் அயலவர்களுடன் கொண்டுள்ள சமூக உறவு நிலை திருப்திகரமாக இருப்பதுமே இப்பகுதிகளில் சமூக மூலதனம் உயர்வாக இருப்பதற்கு காரணங்களாகும். அதேவேளை திருமுறுகண்டி (Mu/75), அம்பகாமம் (Mu/72), தச்சடம்பன் (Mu/70), மணவாளன்பட்ட முறிப்பு (Mu/69), பண்டாரவன்னி (Mu/58), கருவேலன் கண்டல் (mu/66), தண்டுவான்




**உரு 5 சமூக மூலதனத்தின் இடம்சார் பரம்பல்**

(Mu/125) ஆகிய ஏழு கிராம சேவையாளர் பிரிவுகளில் சமூக மூலதனமானது, தாழ்வாக/குறைவாக (Low) உள்ளமை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இப்பிரதேசங்களில் மக்களின் கூட்டுறவு மனப்பாங்குகள் குறைவாக உள்ளதுடன் சமூகக் குழுக்களின் செயற்பாடுகள் குறைவாக உள்ளதும் சுகாதார சேவைகளின் அளவு, தரம் போன்றன மிக பின்தங்கிய நிலையில் உள்ளமையும் பிரதான காரணங்களாக ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

ஒரு பிரதேச மக்களின் வாழ்வாதார மூலதனங்களுக்கு மிகவும் அடிப்படையாக அமைவது நிதி மூலதனமாகும். அந்த வகையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் நிதி மூலதனத்தின் இடம்சார் பரம்பல் பங்கினை அறிவதற்கு வருமான மட்டங்கள், அரச தொழில்புரியும் குடும்பங்கள் போன்றன மாறிகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன. இப்பிரதேச மக்களின் வருமான மட்டத்தினை ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. உயர்வான நிதி மூலதனம் உள்ள குடும்பங்கள் (high)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுத்தரமான மூலதனம் உள்ள குடும்பங்கள் (Medium), தாழ்வான நிதி மூலதனம் (Low) உள்ள குடும்பங்கள் என இடம்சார் பரம்பல் படத்தினை உருவாக்கியதன் மூலம் நிதி மூலதனம் தொடர்பான முடிவுகள் பெறப்பட்டுள்ளன. கருவேலன்கண்டல் (Mu/66), தண்டுவான் (Mu/125), காதலியார் சம்மளங்குளம் (Mu/62) ஆகிய மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளில் மாத்திரமே நிதி மூலதனம் உயர்வாக (high) காணப்படுகின்றது. இப்பிரதேசங்களில் உள்ளவர்கள் அதி களவான விவசாய நடவடிக்கைகளை மேற் கொள்பவர்களாகவும், ஒன்றுக்கு மேற் பட்ட தொழில்களை செய்பவர்களாகவும் (விவசாயம் + வர்த்தகம் + பகுதிநேர வேலைகள், தையல், பற்பொடி செய்தல், பன்னம்) வெளிநாட்டில் உள்ள உறவினர்கள் மூலம் நிதியுதவிகளை பெறுபவர்களாகவும் உள்ளதால் இங்கு நிதி மூலதனம் உயர்வாக உள்ளது. பதினேழு கிராம சேவையாளர் பிரிவுகளில் நிதி மூலதனமானது மத்திம (Medium) நிலையில் காணப்படுகின்றது. இதற்கு இங்குள்ள குடும்பங்களில் நடுத்தரமான அரச சேவைகளில் ஈடுபடுபவர்கள் அதிகமாக இருப்பதே காரணமாக ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. அதாவது மத்தியதர வருமானம் பெறும் குடும்பங்களே அதிகமாக இங்கு உள்ளார்கள்

இந்துபுரம்(Mu/76) திருமுறுகண்டி (Mu/75), தச்சடம்பன் (Mu/70), கனகரத்தினபுரம் (Mu/56), முத்து விநாயகபுரம் (Mu/60), கூழாமுறிப்பு (Mu/68), பழம்பாசி (Mu/127) ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளில் நிதி மூலதனமானது குறைவான/ தாழ்ந்த (low) நிலையிலேயே இருப்பது பகுப்பாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இப்பிரதேசத் திலுள்ள மக்களில் பெரும்பாலானோர் சொந்த நிலமற்றவர்களாகவும் (47%), கூலித் தொழிலாளர்களாகவும் (29%), சிறிய பரப்புகளில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுபவர்களாகவும் இருப்பதால் வருமானம் மிகமிகக் குறைவாக இருப்பது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இதனாலேயே நிதி மூலதனம் தாழ்வான நிலையினை காட்டுகின்றது. ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம சேவையாளர் பிரிவுகளின் நிதி மூலதனத்தின் இடம்சார் பரம்பல் பங்கினை உரு 6 காட்டுகின்றது.

### 3.2.3 வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பாங்கும் வறுமையை மதிப்பிடலும்

வாழ்வாதாரச் சொத்துக்கள் ஐந்தினையும் இணைந்து வாழ்வாதாரச் சொத்துக்களின் பொதுமைப்படுத்திய இடம்சார்பரம்பல் படம் பெறப்பட்டுள்ளது. இந்த வகையில் உயர்வான (high) வாழ்வாதார சொத்துக்களைக் கொண்ட பகுதியாக காதலியார் சமளங்குளம் (Mu/62), தண்டுவான்(Mu/125), புளியங்குளம் (Mu/67), கரு வேலன்கண்டல் (Mu/66), பண்டாரன்னி (Mu/58) ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இப்பிரதேசங்களில் விவசாயக் குடும்பங்கள் அதிகமாக இருப்பதோடு அவர்கள் யாவரும்




**உரு 6 நிதி மூலதனத்தின் இடம்சார் பாங்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்குரிய விவசாய நிலங்களில் இரண்டு போகங்களில் பயிர்செய்கையை மேற் கொள்கிறார்கள். அத்துடன் மேட்டுநிலப் பயிர்ச்செய்கையிலும் அதிகளவானோர் ஈடுபட்டுள்ளதை ஆய்வின் போது அவதானிக்க முடிந்தது. பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் இப்பகுதியில் மிகக்குறைவாக (2%) இருப்பதோடு, அதிகளவான பிள்ளை கள் பாடசாலைக்கு செல்கின்றனர். இப்பிர தேசத்தில் 87 வீதமான குடும்பங்கள் நிரந் தரமான வீடுகளாக இருப்பதோடு 94 வீதமானவர்கள் மின்சார வசதிகளையும் கொண்டுள்ளதை நேரடி ஆய்வின் மூலம் அறிய முடிந்துள்ளது. சுகாதாரம், பாதுகாப்பு போன்றன உயர்வாக உள்ளதாக இப்பிரதேச மக்களுடன் கலந்துரையாடியபோது குறிப் பிட்டுள்ளார்கள். இங்கு ஐந்திற்கு மேற்பட்ட சமூகக் குழுக்கள் இயங்குவதோடு அவை மக் களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு பல்வேறு வழிகளில் உதவி வருவதை வினாக்கொத்துக்களிலிருந்து பெறப்பட்ட தரவுகளின் மூலமும், நேரடியாக மக்களை பேட்டி கண்டதன் மூலமும் அறிய முடிந்தது. இங்கு உற்பத்தியாகும் விளைப்பொருட்களை உடனடியாக விற்பனை செய்ய முடிவதால் மக்களின் வருமான நிலையும் உயர்வாக காணப்படுவதோடு அடுத்த பருவப்பயிர்ச் செய்கைக்கு அது வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுப்பதாகவும் மக்கள் தெரிவித்தார்கள். ஐந்து வகையான மூலதனச் சொத்துக்களும் உயர்வாகக் காணப்படும் இப்பகுதிகளில் வறுமை மிகக் குறைவாக உள்ளதை நேரடியாக அவதானிக்க முடிந்தது. அதாவது ஆய்வுப் பிரதேசத்தில் சமுர்த்தி நிவாரண உதவிகளை அடிப்படையாக் கொண்டே வறுமை கணிப் பிடப்படுகின்றது. இம்மூலதனச் சொத்துக்கள் உயர்வாக உள்ள பகுதிகள் என அடையாளம் செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் மிகக் குறைவான வீதத்தினரே சமுர்த்தி நிவாரண உதவிகளை பெற்றுக் கொள்பவர்களாக இருக் கின்றார்கள்.

மத்திம (Medium) அளவில் வாழ்வாதாரச் சொத்தினைக் கொண்ட பகுதிகளாக இந்துபுரம் திருமுறுகண்டி, பனிக்கன்குளம், மாங்குளம், அம்பகாமம்,ஒடுமடு, தச்சட ம்பன், மாணவாளன் பட்டமுறிப்பு, முந்தையன் கட்டு, கனகரத்தினபுரம், தட்டாய மலை, ஒட்டுசுட்டான், பேராறு , கற்சிலைமடு, கணேசபுரம், வித்தியாபுரம், கூழாமுறிப்பு, பெரிய இத்திமடு, பழம்பாசி, ஒதியமலை, பெரியகுளம் ஆகிய இருபத்தொரு கிராம சேவையாளர் பிரிவுகள் அடையாளம் காணப் பட்டுள்ளன. இங்கு எல்லா வகையான வாழ் வாதாரச் சொத்துக்களும் சமமான நிலையில் காணப்படுவதோடு அதிகளவான மக்கள் அரச தொழில் புரிபவர்களாக காணப்படுவதால் வறுமை மிக குறைவாக காணப்படுகின்றது. அதாவது மக்கள் இங்குள்ள வாழ்வா தாரச் சொத்துக்களை தமது அறிவிற்கு எட்டிய வகையில் சரியான முறையில் பயன் படுத்துகின்ற தன்மையை நேரடியாக அவ தானிக்க முடிந்தது. உதாரணமாக நெல் பயிர்செய்யப்படும் பிரதேசங்களில் பயிர்ச் செய்கை முடிவடைந்தவுடன் எள்ளு போன்ற உபஉணவுப்பயிர்களை பயிரிடுகின்ற முறையை களஆய்வின் போது அவதானிக்க முடிந்தது. அத்துடன் அரச ஊழியர்களாக இருந்த போதும் ஓய்வு நேரங்களில் வருமானத்தை பெறக்கூடிய சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்ற தன்மை அதிகளவான குடும்பங்களில் காணப்படுகின்றது. இதனால் சமுர்த்தி நிவாரண உதவிகளை பெறும் குடும்பங்கள் குறைவாகவே காணப்படுகின்றனர். மேற்கூறிய நிவாரண உதவிகளை பெற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கு அரச ஊழியர்களாக இருப்பதும் ஒரு காரணமாகும். இதுவும் வறுமை குறைவாக இருக்கின்றது என்பதைக் காட்டுவதற்கான ஒரு காரணியாக உள்ளது. அத்துடன் பாடசாலையிலிருந்து இடைவிலகியவர்களின் எண்ணிக்கை 2 சதவீதமாக காணப்படுகின்றது (கள ஆய்வு - 2015) சமுர்த்தி நிவாரண உதவிகளை அடிப்படையாகக் கொண்ட வறுமை பற்றிய மதிப்பீடும் வாழ்வாதாரச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்துக்களின் அடிப்படையில் வறுமையின் இடம்சார்ந்த பரம்பலும் ஒரே தன்மையையே காட்டுகின்றது ( கள ஆய்வு - 2015)


தாழ்வான (Low) அல்லது குறைவான வாழ்வாதாரச் சொத்துக்களைக் கொண்ட பகுதியாக முத்துவிநாயகபுரம் (Mu/60) என்ற கிராம சேவையாளர் பிரிவு அடையாளம் காணப்பட்டுள்ளது. இங்குள்ள மூலதனச் சொத்துக்களை முழுமையாக, சரியான முறையில் திட்டமிட்டு பயன்படுத்தாமையே இதற்கு முக்கிய காரணமாக கண்டறியப் பட்டுள்ளது. அத்துடன் இக்கிராம சேவையாளர் பிரிவிலுள்ள 278 குடும்பங்களில் 78 குடும்பங்கள் பெண் தலைமைத்துவ குடும்பங்களாக காணப்படுகின்றனர் (வினாக்கொத்து - 2015). இங்கு நிலமற்ற விவசாயிகள் காணப்படுவதோடு கூலித் தொழிலாளர்கள் அதிகரித்த நிலையில் மேற்கூறப்பட்ட விவசாயிகளும் கூலித் தொழிலாளர்களாக மாறுகின்ற நிலைமையும் காணப்படுகின்றது. குடும்ப வறுமை காரணமாக இப்பிரதேசத்திலுள்ள மொத்தக் குடும்பங்களில் 17 வீதமான குடும்பங்களில் மாணவர்கள் பாடசாலைக் கல்வியை விட்டு இடை விலகியுள்ளார்கள் ( களஆய்வு - 2015) இக்கிராம சேவையாளர் பிரிவில் 87 வீதமானவர்கள் சமுர்த்தி நிவாரண உதவி பெறுபவர்களாக உள்ளனர். இதன் மூலமும் இங்கு வறுமை அதிகளவில் உள்ளதை அறிய முடிகின்றது. இவ்வாறான நிலையில் இந்த வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம் சார் பாங்கினை உரு 7 இல் அவதானிக்கலாம்.

**முடிவுரை**

வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம் சார் பரம்பலும், வறுமையின் தொடர்புகளும் என்னும் இவ் ஆய்வானது ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவினை அடிப்படையாகக் காண்டு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இங்குள்ள இருபத்தேழு கிராமசேவகர் பிரிவுகளிலுமுள்ள வாழ்வாதாரச் சொத்துக்கள் அடையாளப்படுத்தப்பட்டு, படமாக்கப் பட்டு அவற்றின் இடம்சார் பாங்கு களை அடிப்படையாகக் கொண்டு வறுமை மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் வாழ்வாதாரச் சொத்துக்களின் பரம்பல் மட்டங்கள் ஒரேமாதிரியாக காணப்படவில்லை. வாழ்வாதாரச் சொத்துக்களின் பரம்பலில் காணப்பட்ட வேறுபாடுகளே வறுமை மட்டங்களிலும் வேறுபாடுகள் காணப்பட காரணமாகும்.

வாழ்வாதாரச் சொத்துக்களை அடிப்ப டையாகக் கொண்ட வறுமை நிலையை சமுர்த்தி நிவாரண வறுமை நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இரண்டு வறுமை நிலைகளும் ஒரே நிலையிலேயே காணப்படுகின்றன. ஆகவே வாழ்வாதாரச் சொத்துக்களைக் கொண்ட வறுமை பற்றிய மதிப்பீடு சரியாகவே உள்ளது.

பகுப்பாய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகளின் படி ஒவ்வொரு மூலதனமும் ஒவ் வொரு கிராமசேவகர் பிரிவுகளில் வேறுபட்ட அளவில் காணப்பட்டன. அந்த வகையில்




**உரு 7 வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பாங்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித மூலதனமானது. Mu/73, Mu/60 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலும் பௌதிக மூலதனமாது Mu/76, Mu/67, Mu/57, Mu/55 ஆகிய கிராமசேவகர் பிரிவுகளிலும் இயற்கை மூலதனமாகது Mu/71 கிராம சேவகர் பிரிவுகளிலும், சமூக மூலதனமானது Mu/74, Mu/73, Mu/71, Mu/76, Mu/55, Mu/56, Mu/57, Mu/59, Mu/60, Mu/61, Mu/62, Mu/63, Mu/64, Mu/65, Mu/67, Mu/68, Mu/126, Mu/127, Mu/123, Mu/124 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலும் நிதி மூலதனமானது Mu/ 62, Mu/125, Mu/66 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலும் உயர்வாகக் காணப்படுகின்றது. இதற்கான காரணங்கள் பகுப்பாய்வுப் பகுதியில் கூறப்பட்டுள்ளன. (உரு **4.1 -4.5** ஐ அவதானிக்க)

அதேவேளை மனித மூலதனமானது Mu/56, Mu/58, Mu/59, Mu/66, Mu/127, Mu/124 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலும் பௌதிக மூலதனமானது Mu/60 கிராம சேவகர் பிரிவிலும் இயற்கை மூலதனமானது Mu/70, Mu/61 ஆகிய கிராமசேவகர் பிரிவுகளிலும், சமூக மூலதனமானது Mu/75, Mu/ 70, Mu/72, Mu/69, Mu/58, Mu/66, Mu/125 ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் நிதி மூலதனமானது Mu/76, Mu/75 ,Mu/70, Mu/56, Mu/60, Mu/68, Mu/127 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலும் மிகக் குறைவாகக் காணப்படுகின்றன. இதற்கான காரணங்கள் பகுப்பாய்வுப் பகுதியில் கூறப்பட்டுள்ளன. (உரு **4.1 - 4.5** ஐ அவதானிக்க).

வாழ்வாதாரச் சொத்துக்களின் அடிப்படையில் வறுமையின் இடம்சார்ந்த பரம்பலை இவ் ஆய்வின் மூலம் அறிய முடிகின்றது. இப்பிரதேசத்தில் வறுமை முற்றாக இல்லாத பகுதிகளாக எவையும் அடையாளம் காணப்படவில்லை. இங்கு பல்வேறு வகையான வறுமை ஒழிப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தாலும் அவை மக்களின் வறுமையை உடனடியாக குறைக்க வழி ஏற்பட்டதே தவிர நிரந்தரமான வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளாக அவை அமையவில்லை. பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பல தமது தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு பல்வேறு நிறுவனங்களிடமிருந்து கடன் களைப் பெற்று அவற்றினை மீளச் செலுத்த முடியாமல் தவிக்கின்றனர். இத்தகைய கடனுதவிகளால் மக்களின் வறுமை மேலும் அதிகரித்ததே தவிர வாழ்வாதாரத்தில் எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை.

வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம் சார் பரம்பலை அறிந்ததன் மூலம் வறுமையை குறைக்கமுடியும். இங்குமனிதவளமும், இயற்கை வளமும் அதிகமாகக் காணப்படுகின்றன. அவற்றினை திட்டமிட்ட முறையில் பயன்படுத்துவதன் மூலம் வருமானத்தை அதிகரிக்க முடியும். இப்பிரதேசத்திலுள்ள ஓட்டுத்தொழிற்சாலையை பூரணமாக இயங்க வைப்பதன் மூலம் அதிகளவானோர்க்கு வேலை வாய்ப்பினை வழங்க முடியும். இதனால் இங்கு நிலவுகின்ற வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடிவதோடு வறுமையும் குறைக்கப்படும். அத்துடன் பல பெண் தலைமைத்துவ குடும்பங்கள் சுயதொழில்களில் ஈடுபட்டிருப்பதை அவதானிக்க முடிந்தாலும் அதனை முழுமையாக மேற்கொள்வதற்கு நிதிப்பற்றாக் குறையினை எதிர்நோக்குகின்றனர். இவர்களுக்கு நிதிவசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அத் தொழில்களை தொடர்ச்சியாக மேற்கொள்ளவழி செய்யலாம். குறிப்பாக சிறு தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்க கடனுதவிகளை குறைந்த வட்டி வீதத்தில் அறிமுகப்படுத்தலாம். அத்துடன் உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கான சந்தை வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். வெளியூர் உற்பத்திகளை தடை செய்வதன் மூலமும், விவசாயத்தில் நவீன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்துவதன் மூலமும் இப்பிரதேச மக்களின் வறுமையை குறைக்க முடியும் அத்துடன் கடனுதவிகளை பெறுவது தொடர்பானசரியானவிளக்கங்களை கடன் வழங்கும் நிறுவனங்கள் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். பெரும்பாலான மக்களுக்கு தாம் பெற்றுக்கொள்ளும் கடனு தவிகள் பற்றிய சரியான விளக்கங்கள் இன்மை யாலேயே நிரந்தரமான கடனாளிகளாக மாறி வறுமையில் மூழ்கியுள்ளார்கள். அதாவது கடனுதவிகள் தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டிய தேவை பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் காணப்பட வேண்டும்.

எனவே கிராம சேவகர் பிரிவு ரீதியாக காணப்படுகின்ற வாழ்வாதாரச் சொத்துக் களின் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்து அவற்றின் பரம்பலை சமப்படுத்துவதன் மூலம் வறுமையினைக் குறைக்க முடியும். இவ்வாய்வினை மேற்கொண்டதன் மூலம் இப்பிரதேசத்தின் வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம்சார் பரம்பலுக்கும் வறுமைக்கும் இடையிலான தொடர்பினை அறிய முடிந்துள்ளது. எனவே வாழ்வாதாரச் சொத்துக்களின் இடம் சார் பரம்பலை சரியாக அறிவதன் மூலம் ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தியை சரியாக மேற்கொள்ளலாம்.

**நன்றியுரை**

இவ் ஆய்விற்குத் தேவையான விளக்கப் படங்களைபுவியியல்தகவல்ஒழுங்குமுறையில் (GIS) தயாரிப்பதற்கு உதவிய புவியியற்றுறை பதவி நிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு ப.பத்மநாதன் அவர்களுக்கு எங்களது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## Reference

1. Olaf Erenstein, Jon Hellion Parvesh Chandra (2010) “ Proverty mapping based on livelihood assets : A meso - level application in the indo - Gangetic plains, India,” Applied Geography 30, 112 - 125.
2. Elvide C.D et al., (2009) “ A global poverty map derived from satellite data” Computer and geosciences, Vol.35,1652-1660.
3. Mauricio R. Bellon, David Hodson, David Bergvinson, David Beck, Eduardo Martinez - Romero, Yinha Montoya, (2005),” Targeting agricultural research to benefit poor farmers: Relating Poverty Mapping to maize environments in Mexico, Food policy 30, 476-492.
4. Particia kritjanson, Maren Radeny, Isabelle Baltenweck, Josep oguta, An Notenbaert, (2005) “ Liveihood Mapping and Poverty Correlates At A Meso - Level In Kenya” Food Policy30, 568- 583
5. Suan- Pheng Kam, Mahabub Hossain, Maniklal Bose, Lorena’s Villano, (2005), “Spatial Patterns of Rural Poverty and their Relationship with welfare influencing factors in Bangladesh”, Food polcy 30, 551-567
6. Upali Amarasighe, Madar Samad Markandu Anputhas, (2005), “Spatial Clustering of Rural poverty and food insecurity in sri Lanka” Food Policy Vol.30 (5-6) 493-609.
7. Nichola Minot, (2000) “Generating Disaggregated Poverty Maps: An Application On Vietnam, World Development Vol, 28 (2) 310-331.
8. Benedikt Korf, (2004), “War, Liveihood and Vulnerability in Sri Lanka”, Development and Change 35, 275-295..
9. Frank Ellis and Godrey Bahiigwa, (2002) “Livelihoods and Rural Poverty Reducation in Uganda, World Development Vol.31(6), 997-1013
10. Marcelo Bisogno, Alberto Chong, (2002), “Poverty and inequality in Bosnia and Herzegovina After the Civil War” World Development Vol.30(1), 61-75
11. Mullaitivu District Statistical Handbook 2014, PP O7-09., 20, 22, 48 - 49.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியேற்றங்களால் உருவான தொன்மங்கள் - நல்லூர் அரசமரபின் உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த குடியேற்றங்கள் தந்த தொன்மங்கள் பற்றிய ஆய்வு

செல்லையா கிருஷ்ணராசா

**ஆய்வுச்சுருக்கம்**

தென்னாசியாவின் குறிப்பிட்ட பிரதேசங்கள் தொடர்ச்சியாக வரலாற்றுத் தொன்மங்களை அபரிமிதமாகக் கொண்டிருப்பதற்கான காரணம் பற்றி ஆராயும் போது அங்கு சர்வதேச வாணிகத்துறையும், பௌதிக இயற்கை வள - மூலவளங்களுடன் தொடர்புபட்ட வகையிலான உள்நாட்டு சந்தைப் பரிவர்த்தனை நடவடிக்கைகளுமே தொடர்ச்சியான குடியேற்றமுறைச் செயற்பாடுகளினை தூண்டிய காரணிகளாக அமைந்திருந்தன. தென்னாசியாவில் குறிப்பிட்ட பிரதேசங்கள் வரலாற்றுக் காலத்திலிருந்தே தொடர்ச்சியாகக் குடியேற்ற நடைமுறைக்குள் உட்பட்டு வந்திருந்தமையின் பின்னணியில் தொன்மங்களும் அவற்றினை அடிப்படையாகக் கொண்ட வரலாற்றெழுத்தியல் மரபுகளும் உருவாக்கம் பெற்றமையை இலக்கிய வரலாற்றுச் சான்றுகள் உறுதிப்படுத்தியுள்ளன (பக்தவச்சலபாரதி, இலக்கிய மானிடவியல், ப.உ௯௪). சர்வதேச வாணிபக் கூட்டுக்களுக்கான வாணிப மார்க்கங்களுக்குரிய கேந்திரஸ்தானங்கள் அவற்றின் சமுத்திரவியல் பக்கத் தொடர்புகள் காரணமாக வேகமான வரலாற்று வளர்ச்சியை அடைந்து கொண்டிருந்தமையைக் காண்கின்றோம். புராதன இந்தியாவில் கேரளம், நேபாளம்,காஸ்மீர் என்பன அத்தகையதொரு வாணிபமார்க்கத்திலமைந்ததனித்துவமானபொருளாதார வளம் மிக்க செழிப்பான புலங்களாகவும், சமய அடிப்படையில் தனித்துவமான முறையிலமைந்த சமய வரலாற்று மரபுகளுக்குரிய தொன்மங்களையும் கொண்டிருக்கும் பிராந்தியங்களாகவும் விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இலங்கையிலும் அத்தகையதொரு பன்முகப்படுத்தப்பட்ட வாணிப, பொருளாதார, சமய வரலாற்று தொடர்புகள் இலங்கையிலும் ஏற்பட்டிருந்தமைக்கான இலக்கிய, தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. இலங்கைத் தீவின் தென்கிழக்கிலங்கைப் பிராந்தியம் யாவா மற்றும் மலேசியா, பாலித்தீவு போன்ற தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து தொன்மையான குடியேற்றங்களைக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. உரோகணத்தின் வரலாறு மற்றும் புராதன காலப் பன்மைப் பண்பாட்டுவளர்ச்சி நிலைகளை அங்கிருந்துகிடைத்துவரும் புராதன தொல்லியற் சின்னங்களிலிருந்தும், இராவணா மற்றும் பஞ்சவர் ஆட்சி மரபுகளிலிருந்தும், கௌதம புத்தருடைய மகியங்கணைக்கான முதல் வருகை பற்றிய தொன்மங்களிலிருந்தும் காணமுடிகின்றது. வட இலங்கையைப் பொறுத்தவரையிலும் குறிப்பாக யாழ்ப்பாணக்குடாநாடு பொறுத்தும் இத்தகைய பண்பாட்டு நிலைமைகளை விளக்கும் தொன்மங்கள் குடியேற்றங்கள் வாயிலாக ஏற்பட்டிருந்தமைக்கான வரலாற்று மூலங்களை மத்திய கால இலக்கிய மரபுகளினூடாக கண்டு கொள்ள முடிகின்றது. நல்லூர் இராசதானியில் அக்கால முகாமைத்துவ நடவடிக்கைகளை மையப்படுத்திய வகையில் எழுந்த அரசபாரம்பரியம் பற்றிய தொன்மங்கள் கூட குடியேற்ற முறைகளாலேயே உருவாக்கப்பட்டமையை வட இலங்கைப் பண்பாட்டில் யதார்த்தமாகக் காணலாம். இவ்வாய்வின் நோக்கமானது மத்திய கால வடஇலங்கையில் இலக்கிய மரபுகளில் பதியப்பட்ட நல்லூர் இராசதானியுடன் தொடர்புடைய வரலாற்றுத் தொன்மங்களைப் பற்றியும் அவற்றின் வடிவங்களைப் பற்றியும் ஆராய்வதாக அமைந்துள்ளது. கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட யாழ்ப்பாண இராச்சியம் பற்றிய ஆய்வுகளில் நல்லூர் இராசதானியுடன் தொடர்புடையதாகக் கருதப்பட்ட தொன்மங்கள் வெறுமனே ஐதீகங்கள் என்ற அடிப்படையில் கையாளப்பட்டிருந்தனவே தவிர அவற்றிற்கும் இடைக்கால வடஇலங்கைச் சமூக உருவாக்கத்திற்குமிடையிலான கருத்தாடல்கள் தொடர்பாக ஆராயப்பட்டிருக்கவில்லை. எஸ்.பத்மநாதன், கா. இந்திரபாலா ஆகியோர் அவற்றை வரலாற்றுக்கருவுடைய ஐதீகங்கள் (Historicsal Myths) என்ற அடிப்படையிலேயே அவற்றின் இருப்பினைக் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறான ஓர் ஆய்வியல் சூழலில் இலக்கிய மானிடவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுகுமுறையில் இதுவரையில் ஐதீகங்களாகக் கருதப்பட்டவற்றை தொன்மங்கள் என்ற நோக்கில் ஆராய வேண்டிய அவசியமான நிலைப்பாடு இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

இடப்பெயர்வுகள், குடியேற்றங்கள், தொன்மங்கள் ஆகிய மூன்று செயற்பாட்டு வடிவங்களும் ஒன்றுடன் மற்றொன்று இணைந்தவை என்ற கோட்பாட்டினை நல்லூர் இராசதானி பற்றிய வரலாற்றுச் சம்பவங்களுடன் இணைத்து வரலாற்று ஆய்வியல் அடிப்படையில் இங்கு நோக்கப்படுகின்றன. இவ்வாய்வில் ஒப்பீட்டடிப்படையிலானதும் விபரணவியலடிப்படையிலானதுமான வரலாற்றாய்வு முறையியலே பின்பற்றப்படுகின்றது. தொன்மங்கள் பற்றிய பொருண்மை அடிப்படையிலான ஆய்வியல் இங்குபின்பற்றப்படவில்லை.இதுவரையில்வெளிவந்தநல்லூர்இராசதானிபற்றியஆய்வுநூல்கள்,அவை தொடர்பாக வெளியிடப்பட்ட விமர்சன நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் யாழ்ப்பாண இராச்சியம் பற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையினரின் வெளியீட்டுத் தொகுப்புக்களினூடாகப் பெறப்பட்ட சான்றுகள் ஆகியனவற்றை ஆதாரமாகக் கொண்டே மிகச்சுருக்கமாக வட இலங்கையில் உருவான நல்லூர் பற்றிய தொன்மம் ஓர் அறிமுகநிலையில் ஆராயப்படுகின்றது. இங்கு தொன்மங்களுடாக வெளிப்படுத்தப்படும் வரலாற்றுத்தடயங்கள் ஆராயப்படவில்லை. அத்தொன்மங்களிடையே பாடபேத வேறுபாடுகள் இருப்பதன் காரணத்தினால் இன்னோரிடத்தில் அவ்விடயம் விரிவாக ஆராயப்படும்.

**அருஞ்சொற்கள் :** தொன்மம், இராசதானி, வாணிபமார்க்கங்கள், இலக்கிய மானிடவியல், மரபுகள், பிரபஞ்சம், குடியேற்றம், செல்நெறி, கருத்தாடல்கள், வரலாற்றுத்திரிபு, சமூகப்பிறழ்வு, ஆரியச்சக்கரவர்த்திகள்.

**தொன்மங்கள் - வரையறை**

ஆங்கிலத்தில் Antecedent என்ற பதத்திற்கு நிகராக தமிழில் தொன்மம் என்று குறிப்பிட்டுக் கொள்வதனைக் காணலாம். பக்தவத்சலபாரதி என்ற மானிடவியலாளர் தொன்மங்கள் பற்றி பின்வருமாறு வரையறை செய்கின்றார். "தொன்மங்கள் எனப்படுபவை நமது சந்ததினர் தெரிந்து கொண்டதை நமக்குத் தெரிவிப்பதாகவும், நமது பிரபஞ்ச அனுபவங்களை நமக்குப் புரிந்து கொள்ளவும், நமது அன்றாட வாழ்விற்க்கான அர்த்தத்தைத் தத்துவ, சமயரீதியில் விளங்கிக் கொள்ளவும், விளக்கஞ் சொல்லவும் அவற்றின்வழி சமூக வாழ்வை ஒழுங்குபடுத்திக் கொள்ளவும் உதவுபவை எனலாம். எனினும் தொன்மங்களின் செயல்பாடுகள் பன்முகப்பட்டவை. ஒவ்வொரு தொன்மமும் அந்தந்த இனத்தாரின் கூட்டுமனவெளிப்பாடு. இந்திய சமூகம் போன்ற மிகவும் நீண்ட வரலாறு கொண்ட பழமைச் சமூகங்களின் தொன்மங்களை அர்த்தப்படுத்துதல் என்பது அம்மொழி வழிப்பட்ட சமூகத்தின் மனப் பிரதிகளை அர்த்தப்படுத்துவதாகும். இந்த நீண்ட வரலாற்றுக் கால கட்டங்களில் ஏற்பட்ட சமூக, பண்பாடு, வரலாற்று நிகழ்வுகளின் தருக்க உறவுகளைத் தொன்மங்கள் கருத்தாடல்கள் செய்கின்றன." (பக்தவத்சலபாரதி, இலக்கிய மானிடவியல், 2014, ப.294 ) இத்தகைய கருத்தாடல்கள் நிரம்பப்பெற்ற தொன்மங்கள் நிறைந்த ஒரு பிரதேசமாக வட இலங்கையில் யாழ்ப்பாணக்குடாநாடு விளங்கிவருவதும், நல்லூர் அதன் கேந்திர ஸ்தானமாகக் காணப்படுவதுடன் இங்கு குறிப்பிடத்தக்கது. இக்கேந்திர ஸ்தானத்தின் நடவடிக்கைத்தளமானது சங்கிலியன் தோப்பினை மையப்படுத்தியிருந்த வகையும் நிர்வாக மற்றும் பண்பாட்டு நிறுவனங்கள் இதனைச் சூழ்ந்த வகையில் வளர்ச்சி அடைந்திருந்த நிலையினையும் மத்திய காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியப் பதிவுகள் ஊடாக அறிய முடிகின்றது. நாயன்மார்கட்டில் அமைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் சரஸ்வதி மஹால் பற்றிய தொன்மம் இன்னும் தொல்லியல் அடிப்படையில் உறுதிப்படுத்தக்கூடிய சூழல் ஏற்படாத நிலையிலும் அதன் வரலாற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவமானது மத்திய கால நல்லூரின் பதிவுப் பெட்டகமாக இலக்கியங்களின் இருப்பிடமாக விளங்கியிருந்த வரலாற்றுச் சூழலை வரலாற்றுத்திரிபாக அன்றி காரண-காரிய அடிப்படையில் தர்க்கரீதியான ஒரு பண்பாட்டுத்தளமாக உருவாக்கம் பெற்றிருந்தமையை விளங்கிக் கொள்ள முடிகின்றது. பரராசசேகரம் என்ற வைத்திய நூல் தோற்றம் பெற்ற அதேமையம் இற்றை வரைக்கும் (நாயன்மார்கட்டு வைத்தியசாலை என்ற பெயரில்) வைத்தியப் பாரம்பாரியத்தின் தொன்மத்தினை பாதுகாத்து வைத்திருப்பது போன்று சரஸ்வதி மஹால் பற்றிய தொன்மமும் அங்கு காணப்படுகின்றது.

**தொன்மங்களும் வரலாற்று விளக்கங்களும்**

ஒரு வரலாற்றாசிரியனுடைய சாதாரண உணர்வினைப் பொறுத்து அவன் தான் சார்ந்திருக்கும் ஒரு சமூகப் பொறுப்பு மிக்க நிலைமையில் அவனது பணி எவ்வாறு அமைய வேண்டும் என்பது ஒரு யுத்தம் அல்லது மனிதப்பேரவலம் நிகழ்ந்ததன் பின்னர் அக்குறிப்பிட்ட சமூகத்தின் இருப்பினை தக்கவைப்பதிலேயோ நிகழ்வின் விளைவுகளுக்கு நியாயம் கற்பிப்பதிலேயோ அல்லது எஞ்சிய சமூகத்தினை சமூகப்பிறவுகளிலிருந்து பாதுகாப்பதற்காக அறிவுறுத்துவதிலேயோ தங்கியுள்ளது. ஒரு சமூகத்தின் இருப்பினைத் தக்கவைத்துக் கொள்வதற்கு அடிப்படைத் தளமாக அமைவது அச்சமூகத்தின் வரலாற்றுத் தொன்மங்களின் பலமான பக்கங்களை நிலை நிறுத்துவதேயாகும் என்பதனையே அவ்வரலாற்றாசிரியன் உணர்த்த வேண்டும். போராட்டங்கள் நிகழ்ந்த பல நாடுகளிலும் இவ்வாறான தொன்மங்களின் பலமான பக்கங்கள் பற்றிய ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. இந்நிலையில் இக்குறிப்பிட்ட இனத்தினுடைய தோற்றத் தொன்மம் தொடர்பாக எமக்குக்கிடைக்கின்ற சான்றுகள் மத்திய காலக் குடியேற்றங்களூடாகவே கிடைத்துள்ளன. இக்குடியேற்றங்களைப் பற்றிய பதிவுகள் இலக்கியங்களாக, தலபுராணங்களாக, வைத்திய - சோதிட நூல்களாக உருவாக்கப்பட்டு, இன்று எமது சமூகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளன. அவற்றினை அடிப்படையாகக் கொண்டு வட இலங்கை மீதான குடியேற்றங்களை கி.பி 8 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 13 ஆம் நூற்றாண்டு வரைக்கும் நிகழ்ந்தவற்றை முதலாம் கட்டமாகவும் கி.பி 13 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி 16 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரைக்கும் நிகழ்ந்தவற்றை இரண்டாம் கட்டமாகவும் அதன் பின்னர் ஏற்பட்டவை ஐரோப்பியர் காலக்குடியேற்றங்களாகவும் வகுத்துக் கொள்ள முடிகின்றது. எமது ஆய்வினைப் பொறுத்தவரையில் முதலிருகால கட்டங்களுமே நல்லூரை ஆட்சிமரபுகளுடன் தொடர்புபடுத்தக்கூடிய தொன்மங்களுடன் பிணைத்து வைத்திருப்பதனை எடுத்துக் காட்ட முடிகின்றது.

**புராதன யாழ்ப்பாணம் - தொன்மங்களை உள்ளடக்கிய முதலாவது வரலாற்று வரைபு**

Ancient Jaffna என்ற நூலை 1920 இல் எழுதிய முதலியார் இராசநாயகம் யாழ்ப்பாண இராச்சியத்தின் தொன்மங்களை வரலாற்றடிப்படையில் மிகச்சிறந்த முறையில் பதிவு செய்து வைத்துள்ளமையானது யாழ்ப்பாண வரலாற்றில் ஒரு மைல் கல்லாக அமைந்துள்ளது. முதலியார் செ. இராசநாயகத்தின் இந்த ஆய்வினை அடிப்படையாக வைத்தே பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1960 களில் இருந்து உருவான தமிழ் வரலாற்றாசிரியர்கள் குறிப்பாக பேராசிரியர்களான க.கணபதிப்பிள்ளை, A.வேலுப்பிள்ளை, கா.இந்திரபாலா, சி.பத்மநாதன், வி.சிவசாமி ஆகியோர் யாழ்ப்பாண இராச்சியத்தின் தொன்மை, ஆட்சிமரபுகள், நல்லூர் இராசதானியின் பரப்பு, பண்பாட்டு அழிபாடுகள், சிற்பங்கள், ஆரியச்சக்கரவர்த்திகளால் வெளியிடப்பட்ட சேது நாணயங்கள் தொடர்பான ஆய்வுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்தி வந்துள்ளனர். (இந்திரபாலா, கா. யாழ்ப்பாண இராச்சியம் தோற்றம் பெற்ற காலமும் சூழ்நிலையும், **இளங்கதிர்**, பக். 13- 56). மேலும் போர்த்துக்கேய மற்றும் ஒல்லாந்தரது ஆவணங்களைப் பயன்படுத்தி யாழ்ப்பாண இராச்சியத்தின் இருப்பினையும் நிறுவியுள்ளனர் (சிற்றம்பலம், சி.க.(தொ.ஆ), **யாழ்ப்பாண இராச்சியம்**, வி. சிவசாமி, 'வரலாற்று மூலங்கள்' பக். 01 - 24, 1992) இருந்தபோதும் அண்மைக்காலங்களில் நல்லூர் இராசதானியுடன் தொடர்புபட்ட வரலாற்றிலக்கியங்களை வரலாற்றெழுத்தியல் அடிப்படையில் ஆராய்கின்ற புதிய ஆய்வியல் முறை அறிமுகப்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பான இலக்கியங்களில் கூறப்பட்ட தொன்மங்கள் பற்றிய பாடபேதங்கள் ஆராயப் பட்டனவே தவிர நல்லூர் இராசதானியுடன் அத்தொன்மங்கள் கொண்டிருந்த கருத்தாடல்கள் என்பன ஆராயப்படவில்லை (பத்மநாதன், **சி.ஈழத்து இலக்கியமும் வரலாறும்** பக். 01-153., 2004) இந்நிலையில் அத்தொன்மங்களைப்பற்றி ஆராயவேண்டிய சிந்தனையானது நல்லூர் இராதானியின் தோற்றப்பாட்டினையும் மத்திய கால புவிசார் அரசியல் சக்தியின் முக்கியத்துவத்தில் நல்லூர் வகித்திருந்த பங்கினை அளவீடு செய்வதற்கும் உதவுவதாகும். அவ்வகையில்வட இலங்கையில் நிகழ்ந்த குடியேற்ற செயற்பாடுகளினூடாக பதியப்பட்டுக்கிடைத்துள்ள இத்தொன்மங்கள் வெளிப்படுத்தும்கருத்தாடல்களை சமூகவியல், மானிடவியல் அடிப்படைகளில் ஆராய வேண்டிய அவசியத்தேவையின் பின்னணியில் நல்லூர் பற்றிய தொன்மங்கள் ஆய்வின் பொருட்டு இங்கு நிரைப்படுத்தப்படுகின்றன. அவ்வகையில் இக்கட்டுரையானது யாழ்ப்பாணத்து வரலாற்றுத் தொன்மங்கள் பற்றிய எதிர்கால ஆய்வு முயற்சிகளுக்கு ஒரு தொடக்கப்புள்ளியாக அமைகின்றது என்பது இங்கு மனங்கொள்ளப்படவேண்டியதாகும்.

**நல்லூர் பற்றி தொன்மங்களின் பொருண்மை**

வட இலங்கை பற்றிய (அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளதன் பிரகாரம்) தொன்மங்களினூடாக முதன் முதலாக அறிமுகப் படுத்தப்பட்ட நிலையில் நல்லூரானது மத்திய கால வாழ்விலும் வழிபாட்டிலும் ஊறிப்போன வகையில் இன்று வட இலங்கைத்தமிழ் மரபுகளின் உயிரோட்டமான ஆத்மீக உணர்வின் மையமாக, இலங்கையிலுள்ள இந்துக்களின் புனித பூமியாக வடிவெடுத் திருப்பதனைக் காண்கின்றோம். இதுவே வடஇலங்கைத் தமிழரின் **செவ்வியல் தொன்மமாக** அமைந்துள்ளது. "உலகளாவிய நிலையில் நோக்கும்போது படைப்புத் தொன்மம் அல்லது தோற்றத்தொன்மம் (Creation or orign myth) மட்டுமே ஒவ்வொரு இனத்தவரும் தனித்தனியாகக் கொண்டிருப்பதனைக் காணமுடிகின்றது. அதனால்தான் தொன்மங்களிலேயே தோற்றத்தொன்மங்களின் எண்ணிக்கையே உலகளவில் மிகுதியாக இருக்கின்றது. உலகம் தோன்றிய தோற்றத் தொன்மமும் மானுட இனத்தின் தோற்றத் தொன்மமும் ஒவ்வொரு இனத்திற்கென்றும் தனித்துவத்துடன் காணப்படுகின்றன (பக்தவத்சலபாரதி, **இலக்கிய மானுடவியல்**, ப.189, 2014). ஆனால் வட இலங்கைத் தமிழரின் தொன்மவியல் இடம்பெயர்தல் கோட்பாட்டை செல்நெறியாகக் கொண்டிருப்பதன் காரணத்தினால் யாழ்ப்பாணத்திற்கேயுரிய தமிழ்த் தொன்மங்கள் பற்றிய தேடுதல் இங்கு நிகழாமல் இருந்துவிட்டது. இக்காரணத்தினால் குடிப்பெயர்வுகளை, குடியேற்றங்களை அடிப்படையாகக் கொண்டே வட இலங்கையின் தொன்மங்கள் தமிழகத்தினைத் தழுவிய வகையில் மத்திய கால இலக்கியங்களில் செல்நெறியாக பதிவு செய்யப்பட்டுவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிராந்தியப் புவிசார் முகாமைத்துவ மையமாக நல்லூர்**

தேசிய மட்டத்திலும் சரி, பிராந்திய மட்டத்திலும் சரி நல்லூர் பெற்றிருக்கும் வகிபாகம் வட இலங்கையில் தனித்துவ மானதாக விளங்குவதற்குக் காரணம் அதன் மத்திய கால வரலாற்றுப் பின்னணியே ஆகும். ஒரு குறிப்பிட்ட காலகட்ட வட இலங்கைப்பண்பாட்டிற்கு நல்லூர்ப் பண்பாடு (Nallur culture) எனப் பெயரிடப் பட்டமைக்குக் காரணம் மத்திய கால வட இலங்கையின் வரலாற்றில் நல்லூர் இராச்சியம் படைபலத்துடன்கூடிய நிர்வாக முகாமைத்துவ கட்டமைப்புடன் வளர்ச்சி பெற்றிருந்த ஒரு மையமாக உருவாக்கப் பட்டிருந்தமையாகும். அவ் வரசியல் பலத்தினை அல்லது நிர்வாக முகாமைத்துவ முறையை தழுவிய நிலையில் வடஇலங்கையில் மத்திய காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்கள் தொன்மங்களைப் பதிவு செய்து கொண்டுள்ள முறையைக் கண்டுகொள்ள முடிகின்றது. அவ்வுருவாக்கத்தின் பின்னணியில் மத்திய கால வட இலங்கையில்வாணிபப் பொருளீட்டத்தின் செழிப்புக் கொண்ட பிராந்தியமொன்றின் முகாமைத்துவ முறை வளர்ச்சிக்கு ஆதரமாகவும், வட இலங்கையின் தலைநகராக மையப்படுத்தி நின்ற வகையில் மிகவும் பலம் வாய்ந்த பிராந்திய அரச கட்டமைப்பிற்குரிய நிர்வாக முகாமைத்துவ முறையொன்று தோற்றம் பெற்றுக் கொள்ளவும் சந்தர்ப்பம் கைகூடியது. தென்மேற்கிலங்கையின் கடற்கரையோர நிலத்திணிவின் மீதான கோட்டை யரசின் மேலாதிக்கத்தினையும் சிறிது காலம் முறியடித்துக்கொண்டு, ஆரியச் சக்கரவர்த்திகளின் நல்லூர் அரசு ஆக்கிரமிப்பு ரீதியான அணுகுமுறையில், வடகடல்சார்பிரதேசங்களை உள்ளடக்கிய வகையில் நிர்வாக ஆள்புல மொன்றினைக் கட்டியாண்ட வகையினையும் தொன்மங்கள் வாயிலாகப் பதிவு செய்யப்பட்டு ள்ளமையை காண்கின்றோம். கி.பி. 13ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்துடன் வட இலங்கையில் அராபியர் வசம் சிக்கியிருந்த துறைமுக மையங்கள் எல்லாவற்றையும் கையகப்படுத்திய நிலையில் புதிய பொருளாதார மையங்களை உள்நாட்டிலும், வடமேற்கு கடற்கரைப்பிராந்தியத்திலும், கன்னியாகுமரி மற்றும் இராமேஸ்வரத்தியையும் உள்ளடங்கிய நிலையில் உருவாக்கியதோடு, இரண்டாம் பாண்டியப்பேரரசினை தனது பாதுகாப்பரசாகவும் இராமேஸ்வரம் சேதுபதிகளது அரசினை திறையரசாகவும் மாற்றிக் கொண்டு ஆரியச் சக்கரவர்த்திகளின் நல்லூர் அரசு கோலோச்சியது. இவ்வாறு புதியதோர்புவிசார்அரசியல் நிலையானது வட இலங்கையில் நல்லூரினை மையப்படுத்திய வகையில் புத்தூக்கம் அடைந்தமையைத் தொடர்ந்து ஒரு புதிய சமூகக் கட்டமைவின் எழுச்சி வட இலங்கையில் தவிர்க்க முடியாத படி ஏற்பட்டுக் கொண்டது.

கள்ளியங்காட்டுச் செப்பேடுகள், விஜயநகரப்பேரரசுக்காலக் கல்வெட்டுக்கள், பல்வகைப்பட்ட சேது நாணய வெளியீடுகள், தோம்புச் சுவடிகள், சிற்பங்கள் மற்றும் வட இலங்கை இராசதானிக்காலத்தில் உருவான மருத்துவ - சோதிட இலக்கிய மூலாதாரங்கள் ஆகியன இவ்வரசின் அரசியல் வளர்ச்சி பற்றியும், பொருளாதாரச் செழிப்புப்பற்றியும் தனித்துவம் வாய்ந்த குடியேற்றங்களினாலான சமூகக் கட்டமைவு பற்றியும் உறுதிப்படுத்திக்கொள்ள உதவுகின்ற சான்றுகளாகும்.

**நல்லூர் இராசதானி மரபுகளோடு அடையாளம் காணப்பட்ட தொன்மங்கள்**

1. விஸ்ணு புத்திர வெடியரசன் பற்றிய தொன்மம்
2. மாருதப்புரவீகவல்லியுடன் தொடர்பு படுத்தப்பட்ட மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் பற்றிய தொன்மம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. உக்கிரசிங்கனுடன் தொடர்புபடுத்தப் பட்ட கதிரமலை மற்றும் செங்கடகலநகரி பற்றிய தொன்மம்
4. யாழ்ப்பாடி அல்லது அந்தகக்கவி வீரராகவனுடன் தொடர்புபடுத்தப்பட்ட மணற்றி பற்றிய தொன்மம்
5. தென்னிலங்கை மன்னனொருவனின் பட்டத்து இராணியின் தீராநோயைத் தீர்த்து வைத்த சிங்கையாரியன் பற்றிய தொன்மம்

இத்தொன்மங்களை பதிவு செய்து வைத்த இலக்கியங்களின் இயல்புகளும் அவற்றின் பொருளடக்கங்களும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. மேலும் இத்தொன்மங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள முறையில் பாடபேதங்கள் காணப்படுகின்ற வகையினையும் அவதானிக்க முடிகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட தொன்மங்களை அவை பதிந்து வைத்துள்ள கருத்தாடல் களத்தின் உள்ளடக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு காலப்பாகுபாடு செய்ய முடிகின்றது. அவையாவன:

1. கி.பி 4 ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி 8 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டகால கட்டத்திற்குரிதாக எமக்கு உதவுகின்ற இரண்டு தொன்மங்களாக கிடைப்பவை விஸ்ணு புத்திர வெடியரசனைப் பற்றியதும் சோழ நாட்டு இளவரசியான மாருதப்புரவீகவல்லி பற்றியதுமாகும். வெடியரசனைப்பற்றிய தொன்மம் (நெடுந்தீவின் கடலரசன்) நெடுந்தீவோடு தொடர்புபடுத்தப்பட்டும், மற்றையது மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்துடனும் தொடர்புபடுத்தப் பட்டவகையிலும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இந்த இரண்டு தொன்மங்களும் நல்லூருக்கு முந்திய (குடாநாட்டின்) அரசமரபுகளுடன் இணைக்கப்பட்டு கூறப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கதாகும். மாருதப் புரவீகவல்லி பற்றிய தொன்மம் கி.பி 8 ஆம் நூற்றாண்டிற்குரியதாக கொள்ள ப்படும் அதேவேளையில் நாகதீபத்தின் அரசமுறையில் மாற்றம் ஏற்பட்டுக் கொள்வதனைக் குறிப்பதற்காக சோழவம்சத்தின் மரபான மாருதப் புரவீகவல்லி பற்றிய தொன்மத்தினூடாக அது இணைத்து வைக்கப் பட்டுள்ளமை யை உணர முடிகின்றது.

2. உக்கிரசிங்கனுடன் தொடர்புபடுத்தப் பட்டுள்ள கதிரமலை மற்றும் செங்கட கலநகரி பற்றிய தொன்மம் ஆட்சி முறையில் ஏற்பட்ட தலைநகரமாற்றத்தினை குறித்து எழுந்ததெனக் கொள்ள முடியும். கதிரமலையி லிருந்து செங்கடகலநகரிக்கு ஆட்சி மாற்றம் நிகழ்ந்த பின்னரே நல்லூர் தலைநகராக்கப்பட்டதாக சில வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். இது கி.பி 8 ஆம் 13 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட நிகழ்வாக அமைந்திருக்கக் கூடும் எனக் கருதப்படுகின்றது. ஆனால் செங்கட கலநகரி எங்கே அமைந்திருந்தது என்பது இன்னும் அடையாளம் காணப் படவில்லை.

3. யாழ்ப்பாடி அல்லது அந்தகக்கவி வீரராகவனுடன் தொடர்புபடுத்தப்பட்ட மணற்றி பற்றிய தொன்மம் நல்லூர் இராசதானியுடன் தொடர்புபட்டதாக உள்ளது. மணற்றி என்று குறிக்கப்பட்ட பிரதேசம் அல்லது கிராமம் அல்லது நாடு இன்னும் அடையாளம் காணப்ப டவில்லை. இவை யாவும் வட இலங்கையில் ஏற்பட்ட குடியேற்றங்கள் தொடர்பான பதிவுகளில் இணைக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

4. தென்னிலங்கை மன்னனொருவனின் பட்டத்து இராணியின் தீராநோயைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | விஸ் ஜுபுத் திரவெடியரசன் தொன்மம் (நல்லூர் அரச மரபுகளுடன் தொடர்பற்றது | மாருதப்புரவீகவல்லி - வால சிங்கன் தொன்மம் ( நல்லூர் அரச மரபுகளுடன் தொடர்புற்றது | உக்கிரசிங்கன் கதிரமலை-செங்கடகலநகரி தொன்மம் (நல்லூர் அரச மரபுகளுடன் தொடர்புற்றது. | யாழ்பாடி / அந்தகக்கவிவீராகவன் தொன்மம் (நல்லூர் அரச மரபுகளுடன் தொடர்புற்றது | தென் னிலங்கைப் பட்டத் துராணியின் சூலைநோயைத் தீர்த்தசிங்கையாரியன் தொன்மம் |
|---|---|---|---|---|---|
| கைலாயமாலை | வெடியரசன் பற்றிய தொன்மம் குறிப்பிடப் படவில்லை | பெயர் குறிப்பிடாமல் சோழன் மகளொருத்தி குறிப்பிடப் பட்டுள்ளது | உக்கிரசிங்கன் - கதிரமலை பற்றியதொன்மம் சொல்லப்பட்டுள்ளது | வரராசசிங்கனிடமிருந்து வட இலங்கையை யாழ்ப்பாடி பரிசிலாகப் பெற்றமை | சூலைநோய் பற்றியதொன்மம் குறிப்பிடப்படவில்லை |
| வையாபாடல் | வெடியரசன் பற்றிய தொன்மம் குறிப்பிடப் படவில்லை | குதிரைமுகம் நீங்கப் பெற்றமை சொல்லப்படடல் அரச குமாரியின் பெயர் குறிக்கப்படவில்லை | சொல்லப்படவில்லை | விபீஸணனது ஆட்சியில் அவனது அரண்மனை யில் யாழ் வாசித்து மன்னனைப் பெரிதுங் காவந்த யாழ்ப்பாடி மணற்றிடலைப் பரிசிலாகப் பெற்றமை | சூலைநோய் பற்றியதொன்மம் குறிப்பிடப்படவில்லை |
| யாழ்ப்பாண வைபவ மாலை | வெடியரசன் பற்றிய தொன்மம் குறிப்பிடப் படவில்லை | திசையுக்கிரசோழன் மகளாக மாருதப் புரவீகவல்லி குறிக்கப்பட்டுள்ளது | உக்கிரசிங்கன் - கதிரமலை பற்றியதொன்மம் சொல்லப்பட்டுள்ளது | இருகண்களும் குருடனான யாழ்ப்பாணன் அனுராதபுரத்தில் ஆட்சி புரிந்த ஏலேல சிங்கனது அரண்மனையில் யாழைமீட்டு பாடல் பாடி மணற்றியை பரிசிலாகப் பெற்றமை | சூலைநோய் பற்றியதொன்மம் குறிப்பிடப்படவில்லை |
| புராதன யாழ்ப்பாணம் | வெடியரசன் பற்றிய தொன்மம் குறிப்பிடப் படவில்லை | திசையுக்கிரசோழன் மகளாக மாருதப் புரவீகவல்லி குறிக்கப்பட்டுள்ளது | உக்கிரசிங்கன் - கதிரமலை பற்றியதொன்மம் சொல்லப்பட்டுள்ளது | இருகண்களும் குருடனான யாழ்ப்பாணன் அனுராதபுரத்தில் ஆட்சி புரிந்த ஏலேல சிங்கனது அரண்மனையில் யாழைமீட்டு பாடல் பாடி மணற்றியை பரிசிலாகப் பெற்றமை | சூலைநோய் பற்றியதொன்மம் குறிப்பிடப்படவில்லை |
| யாழ்ப்பாண வைபவ விமர்சனம் | வெடியரசன் பற்றிய தொன்மம் குறிப்பிடப் படவில்லை | திசையுக்கிரசோழன் மகளாக மாருதப் புரவீகவல்லி குறிக்கப்பட்டுள்ளது | உக்கிரசிங்கன் - கதிரமலை பற்றியதொன்மம் சொல்லப்பட்டுள்ளது | யாழ்ப்பாணன் தனது பிரதேசத்தினை ஆளுவதற்கு ஒரு புதல்வனை அனுப்புமாறுவட நாட்டு மதுரையிலுள்ள குலகேதுமன்னனை வேண்ட அம் மன்னன் கையொன்றுசொத்தியாகவுள்ள தன் புதல்வனை அனுப்பி வைத்தான் | சூலைநோய் பற்றியதொன்மம் குறிப்பிடப்படவில்லை |
| யாழ்ப்பாண வரலாறு by முத்துத்தம்பி | வெடியரசன் பற்றிய தொன்மம் குறிப்பிடப்படவில்லை | மாருதப்பிரவாகவல்லி சோழராசன் புத்திரி எனவும் குதிரைமுகமென்னும் நோயினத் தீர்ப்பதற்காகவுமே கீரிமலைச் ச்சாரலுக்கு வருகை | உக்கிரசிங்கன் - கதிரமலை பற்றியதொன்மம் சொல்லப்பட்டுள்ளது | ஏலேலசிங்கனின் அனுராதபுர அரண்மனைக்குச் சென்று யாழ் மீட்டு.கவி பாடி மணற்றியைப் பரிசாகப் பெற்று, மணற்றியில் நல்லூரில் தனக்கென ஒருமாளிகையும் கட்டிய அந்தகக்கவி | சூலைநோய் பற்றியதொன்மம் குறிப்பிடப்படவில்லை |
| கண்ணகிவழக்குரை | வெடியரசனைப் பற்றிய தொன்மம் குறிப்பிடப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தின்படி ஆட்சி கி.பி 2 ம் நூற்றாண்டு. முக்குளி நாகர்களின் தலைவனாக வெடியரசன் | சொல்லப்படவில்லை | சொல்லப்படவில்லை | சொல்லப்படவில்லை | சூலைநோய் பற்றியதொன்மம் குறிப்பிடப்படவில்லை |
| தக்ஷிணகைலாச-புராணம் (கந்தபுராணம்) | இந்திரனுக்கிடப் பட்ட துருவாச முனிவரின் சாபத்துடன் தொடர்புபடுத்தி வெடியரசனைப் பற்றிய தொன்மம் | சொல்லப்படவில்லை | சொல்லப்படவில்லை | சொல்லப்படவில்லை | சொல்லப்படவில்லை |
| பரராசசேரம் | சொல்லப்படவில்லை | சொல்லப்படவில்லை | சொல்லப்படவில்லை | சொல்லப்படவில்லை | சொல்லப்பட்டுள்ளது |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்து வைத்த சிங்கையாரின் பற்றிய தொன்மம் நல்லூர் இராசதானியுடன் உள்ள தொடர்பினை உறுதிப்படுத்துகின்றது.

**யாழ்ப்பாணக் குடியேற்றங்கள் பற்றிய பதிவுகள் (Register for Jaffna Tamil Colonization)**

பரதகண்டத்திற்கும் இலங்கைத்தீவிற்கு மிடையிலான மக்களிடப்பெயர்வுகளும் குடியேற்றங்களும் கற்காலத்திலிருந்தே தொடர்ந்து இடம்பெற்று வந்துள்ளன. கடந்த 70000 வருடங்களுள் 17 தடவைகள் தென்னிந்திய - இலங்கை நிலத்தணிவுகள் பாக்கு நீரிணையிலுள்ள நீர்பரப்பு பின் வாங்கியமையினால் இணைக்கப்பட்டதாக தொல்லியலாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர் (Deraniyagala, S.U., Pre- Historic Basis for the rise of Civilization in SriLanka and Southern India, 2004,p.3) இக்காலப்பரப்பில் நிகழ்ந்ததாகக் கருதப்பட்ட உள்வரவு - வெளியேற்றங்களுக்கான பதிவுகள் எமக்கு நேரடியாகக் கிடைத்திருக்கவில்லை. ஆனால் இலக்கியங்கள் தோற்றம் பெற்ற பின்னரே இத்தகைய இடப்பெயர்வுகள், குடியேற்றங்கள் பற்றிய செய்திகள் பதிவிற்குட்படுத்தப்பட்ட தன்மையைக் காண்கின்றோம். இருந்தும் தொல்லியல் அகழ்வாய்வுச் சான்றுகள் மூலம் பெறப்பட்ட தடயங்கள் இவ்வாறான இடப் பெயர்வுகளை ( ஐதீகம் என்ற நிலையத் தவிர்த்து பார்க்கும் போது ) புறப்பட்ட இடத்திலிருந்து குடியேற்றம் நிகழ்ந்த இடம் வரைக்கும் அக்குறிப்பிட்ட பண்பாட்டு அலகிற்குரிய மக்கள் கூட்டத்தினரின் பண்பாடு வடிவங்களில் தொடர்ச்சியான இணைப்பு நிலையை ஓரளவிற்கு உறுதிப் படுத்தி நிற்பதனைக் காண்கின்றோம். வணிக த்திற் காகவும், ஆக்கிரமிப்பிற்காகவும், ஆள் வளத்திற்காகவும் இடப்பெயர்வுகளும் குடியேற்றங்களும் காலந்தோறும் நிகழ்த்தப் பட்டமையை வரலாற்று வளர்ச்சியில் கண்டு கொள்ளவும் முடிகின்றது. வட இந்தியாவிலிருந்தும் தக்கணத்திலிருந்தும் கேரளா என்று குறிப்பிடப்படுகின்ற சேரநாட்டிலிருந்தும் தென்னிந்தியாவின் மத்திய மற்றும் வடகிழக்குப் பரப்பிலிருந்தும் குறிப்பாக கலிங்கத்திலிருந்தும் இலங்கை நோக்கி ஏற்பட்ட அரச குடும்பத்தவர்களதும், போர் வீரர்களதும், வணிக மக்களதும் நகர்வுகள் காலத்திற்குக்காலம் இலங்கை மீது குறிப்பிட த்தக்க மக்கள் எண்ணிக்கையை அதிகரிப்பு செய்திருந்ததோடு, இலக்கிய மரபுகளின் வளர்ச்சிக்கும் அடிப் படையை இட்டு வைத்துள்ளன. ஆட்சி யமைக்கும் நோக்கத்திலும், வணிகக் குடியேற்றங்களாகவும், ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளாகவும் வணிக நோக்கிலமைந்த கடல் பயணங்களுக்காக கடல் முகப்புக்களை - துறைமுகங்களை அமைக்கும் நோக்கமாகவும் இங்கு குடியேற்றங்கள் காலத்திற்குக் காலம் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அவ்வகையில் வட இலங்கை மீதான இடைக்காலக் குடியேற்றங்கள் யாவும் இந்துசமுத்திரத்திற்கு மறுகரையிலிருந்து வட இலங்கை நோக்கி வந்து குவிந்து கொண்டிருந்த செயற்பாட்டின் தன்மை காரணமாக ஆங்காங்கு வளர்ச்சி பெற்றிருந்த இலக்கிய வடிவங்களும் வடஇலங்கையை வந்தடைந்து கொண்டன. கைலாயமாலை அவ்வாறன ஓர் இலக்கிய மரபின் தொடர்ச்சியாக நல்லூர் இராசதானியின் வரலாற்று வளர்ச்சியைத் தரு கின்றது. கைலாயமாலையின் முற்தொடர்ச் சியை தொண்டைமண்டலத்தின் உள்ள இலக்கிய வடிவங்களுடன் இணைந்து இனங்காணவேண்டிய ஒரு பொறுப்பு யாழ்ப்பாணத்து இலக்கிய வரலாற்றாசிரியர் களுக்குண்டு.

**பல குடியேற்றங்கள் - பல குலமுறைகள்**

இக்கருத்தமைவின் பின்னணில் வட இலங்கையில் மத்திய காலத்திலிருந்து ஆங்கி லேயர் ஆட்சிக்காலம் வரைக்கும் உள்ள காலப்பரப்பில் உள்ள காலப்பரப்பில் தமிழ் மொழியில் உருவான வரலாற்று எழுத்தியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுகளின் வளர்ச்சியின் பின்னணியில் குடியேற்றங்களும் குலமுறைகளும் செலுத்தியிருந்த தாக்கத்தினை மேலே குறிப்பிடப்பட்ட தொன்மங்களினூடாக விளங்க முடிகின்றது. குடியேற்றங்களினதும் குலமுறைகளினதும் விரிந்த செயற்பாடு இங்கு ஆலயங்களின் உருவாக்கத்திற்கும், மரபுகள் தொன்மங்களாக்கப்படுவதற்கும் காரணமாக இருந்திருக்கின்ற ஒரு தன்மையை வட இலங்கையின் வரலாற்று வளர்ச்சியில் காணமுடிகின்றது. கைலாயமாலை முதற் கொண்டு யாழ்ப்பாண வைபவக் கௌமுதி வரைக்கும் எழுந்த தமிழ் மொழியிலான வரலாற்றிலக்கியங்கள் மேற்கூறப்பட்ட கருத்தியலை உறுதிப்படுத்து வனாகவே உள்ளன. அமரர் சு.வித்தியானந்தன் பண்டிதர் பொ. ஜெகந்நாதன் என்பவரது யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும் என்ற நூலுக்கு வழங்கிய அணிந்துரையில் பின்வருமாறு குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

"....வையாபாடல், கைலாயமாலை, கோணேசர் கல்வெட்டு முதலிய வரலாற்று நூல்கள் அவர்களின் (யாழ்ப்பாணத்தரசர்) காலத்தவை. இவற்றுள் கைலாயமாலை என்பது ஆரியச்சக்கரவர்த்திகள் நல்லூரில் இராசதானி அமைத்து, யாழ்ப்பாண நாட்டில் அரசாட்சி ஏற்படுத்தியமை பற்றி கூறும் சிறப்புடையது. அவர்களின் ஆட்சியில் வன்னி நாட்டின் மீது ஏற்பட்ட படையெடுப்புக்கள், குடியேற்றங்கள், அரசியல் மாற்றங்கள் பற்றிக்கூறுவதே வையா என்ற நூலாகும்.... இவற்றை ஆதாரமாகக் கொண்டே பதி னெட்டாம் நூற்றாண்டில் மயில்வாகனப் புலவர் யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூ லை எழுதினார்" (ஜெகநாதன், பொ., 1987, giv)

இக்குறிப்பின் அடிப்படையாக நாம் பெற்றுக்கொள்ளக் கூடிய வரலாற்று நிகழ்வு எனக் கொள்ளக்கூடியது எங்கிருந்தோ நடைபெற்ற குடியேற்றங்கள் வாயிலாகவே மத்திய கால வட இலங்கையின் இலக்கிய வரலாற்று மரபுகளின் கருப்பொருள் வளர்ச்சி ஏற்பட்டிருந்ததோடு அம்மரபுகளின் பின்ன ணியில் தல புராணங்களும் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்த வகையை உறுதிப் படுத்தக்கூடியதாக உள்ளமையாகும். கைலாயமாலை இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டெனலாம். தென்னிந்திய தீபகற்பப் பிராந்தியங்களில் மத்திய காலத்தில் முக்கியத் துவம் பெற்றுக்காணப்பட்ட சமுதாய - சமய - பண்பாட்டு நிறுவனங்களுக்குரிய வடிவங்கள் யாவும் யாழ்ப் பாணத்திலும் அதற்கப்பாலுள்ள வன்னிப் பிராந்தியத்தினை உள்ளடக்கிய குளக் குடியிருப்புப் பிராந்தி யங்களிலும் குழும அடிப்படையிலும் பிராந்திய சமூக வட்டகைகளாகவும் நிலை பெற்றுவிட்டிருந்த குடியேற்றங்களில் பெருமளவிற்கு செல்வாக்கு செலுத்தியிருந்தன. இவ்வாறன குடியேற்றங்களுள் முதலாவது குறிப்பிட த்தக்கது தென்னியந்தியாவிலுள்ள மலபார் பிரதேசத்திலிருந்து இங்கு வந்து பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து வல்வெட்டி - உடுப்பிட்டி வரைக்கும் குடி யேறியவர்களைக் குறிப்பிடப்படுகின்றது. இரண்டாவது கட்டத்தில் கொரமாண்டல் கரையோரத்திலிருந்தும் அதன் பின்னர் திருநெல்வேலி மற்றும் மதுரை மாவட்டங்களிலிருந்து வந்து தொண் டைமானாற்றின் இரு மருங்கிலும் வழுக்கி யாற்றுப் பள்ளத்தாக்குப்பரப்பிலும் குடியேறி யவர்களைப் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. இறுதியாக கலிங்கத்திலிருந்தும் கொங்கு மற்றும் கர்நாடகப் பிரதேசத்திலிருந்தும் வந்து வட இலங்கை முழுவதிலும் பர வலாகக் குடியேறிய வர்களைப்பற்றிக் குறிப்பிடலாம். இத்தகைய குடியேற்றங்களூ டாக வட இலங்கையில் புதிய வரலாற்று மரபுகள் தோற்றுவிக்கப்பட்டு அவை தலவரலாறு, வம்சாதிக்க வரலாறு, சாதி மற்றும் குடிமையுடன் தொடர்புபட்ட சமூகப்பிரிவு பற்றிய வரலாறு என பதிவு செய் யப்பட்டமையைக் காண்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இடைக்கால வடஇலங்கையில் நிகழ்ந்த முதற் குடியேற்றம் சோழ மண்டலத் திலிருந்து நேரடியாக வந்த முதற் குடியேற்றமா அல்லது மலையாளத் திலிருந்து ஏற்பட்ட முதற் குயேற்றங்களா என்பதனை இன்னும் தீர்மானிக்க முடியவில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவும் ஐதீகங்களான மாருதப்புரவீகவல்லி, ஈழவல்லி மற்றும் அந்தகக்கவிவீராகவன் கதை (யாழ்ப்பாடி கதை) போன்றன முதற் குடியேற்றம் நிகழ்ந்தபின் உருவான வரலாற்று இலக்கிய மரபுகளுடன் இணைத்துக் கூறப்படுகின்ற முறையில் இங்கு நிகழ்ந்த சனத்தொகை முகிழ்ப்பினை உறுதிப்படுத்துகின்ற தொன்மங்களாக உள்ளன. அவ்வாறு வந்த முதற்குடியேற்றம் தொண்டமானாற்று பள்ளத்தாக்கின்' இரு மடங்கிலும் அமைந்து கொண்டது. அவை முழுவதும் பிற்காலச்சோழ வம்சத்தினருக்குரியதான கிராமக் குடியிருப்புக்களாக அமைந்து காணப்பட்டன. வரமராட்சியிலுள்ள உப்பு - வல்லை மற்றும் மண்டான் தொடங்கி, எழுதுமட்டுவாழ் வரைக்கும் அக்குயேற்றங்கள் அமைக்கப்ட்டிருந்தன. சோழங்கன் (சோழ கங்கன்) சோழன் தோட்டம். சோழ உப்புப் புலம் (சோனப்பு) பெரிய தோட்டம், பெரிய மாவில், சின்னமாவில் ஆகியன வடமராட்சியிலுள்ள சோழர் காலக் குடியேற்றங்களாகும். இக்குடியேற்றங்களை இங்கு நிரைப்படுத்திய சக்திமிக்க காரணிகளாக உள்ளூர் சுதேச மனித நடவடிக்கைகள் அமைந்திருக்க வேண்டும். அவ்வாறாயின் இக்குடியேற்றங்கள் நிகழ்வதற்கு முன்னர் யாழ்ப்பாணக் குடா நாட்டில் வாழ்ந்திருந்த சுதேசிகளது ஆதரவும் இக்குடியேற்றங்களுக்கு கிடைத்திருக்க வேண்டும் என்பதில் எவ்வித ஐயமும் இருக்கமுடியாது. புவியியல் அமைப்பின் அடிப்படையில் வரலாற்றுக் குடியேற்றங்கள் பெருமளவிற்கு வலிகாமம் வடக்குபிரதேசத்தினை குறிப்பாக வழுக்கியாற்றினை மையப் படுத்தியும் வரலாற்றுக்கு முற்பட்ட காலக்குடியிருப்புக்கள் வடமராட்சி கிழக்குப் பிராந்தியத்தினை மையப்படுத்தியும் மத்திய கால வரலாற்றுக்குடியேற்றங்கள் தொண்டைமானாற்றின் வடிநிலத்தினை யும், வலிகாமத்தின் மத்திய - மைய நிலப்பரப்பினை மையப்படுத்தியும் அமைந்து கொண்டமையை அவதானிக்க முடிகின்றது. இத்தன்மையினையே மத்திய காலத்திலும் பிற்காலத்திலும் இங்கு எழுந்த தமிழ் இலக்கியங்கள் சித்தரிப்பதனைக் காண்கின்றோம்.

**கைலாயமாலை - யாழ்ப்பாணக் குடியேற்றம் பற்றிய முதலாவது பதிவேடு**

நல்லூரைத் தலைநகராகக் கொண்ட ஆரியச்சக்கரவர்த்திகள் அரசின் முதற்பதி வேடு கைலாயமாலை என்பதில் வரலாற் றாசிரியர்களிடையே வேறுபாடான கருத்துக்கள் நிலவுவது மிகக்கடினம். ஆனால் கைலாயமாலை என்ற தலைப்பில் உருவாக்கப்பட்ட இவ்விலக்கிய ஏடானது முத்துராசக்கவிராயர் என்ற அரண்மனைப் புலவர் ஒருவரால் பாடப்பட்டது என்பதும் இவர் தொண்டைமண்டலத்திலுதித்த சோழ வம்சத்தவர் என்பது அதன் பாயிரத்திலிருந்து அறிய முடிகின்றது. பேராசிரியர் எஸ். பத்மநாதன் தனது நூற்குறிப்பில் கைலா யமாலைபற்றித்தருவது இங்குபயனுடையதாக அமையும்.

"... கைலாயமாலை சிங்கையாரியன் நல்லூ ரில் அமைத்த கைலாசநாதர் கோவிலின் வரலாற்றைப் பொருளாகக் கொண்டுள்ளது. எனினும் சிங்கையாரியனைப் பற்றியும் அவனோடு வந்த பிரதானிகளைப் பற்றியும் நூலிற் பல விபரங்கள் உள்ளன. அத்துடன் யாழ்ப்பாண நாட்டிற் சிங்கையாரியன் செய்த நிர்வாக ஏற்பாடுகளைப் பற்றியும் பல விபரங்களை கைலாயமாலை தருகின்றது. (பத்மநாதன், எஸ், 2004: ப.55) பொ.ஜெகந்நாதன் இந்நூலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவத்தினைபின்வருமாறுதருகின்றார். "இந்நூலிற் காணும் ஒரு தனி வாய்மை என்னவென்றால் கைலாய மாலை என்னும் அத்தலைப்பெயர் கைலாயக்கடவுள்மேலே பாடப்பட்ட ஒருதோத்திரப்பாமாலையாகவும் இருக்காமல் அல்லது அக்கோயிலைக் கொண்ட சுவாமியைக் பற்றிய வரலாறுகளைப் பற்றி மாத்திரம் அமையாமல் ..... அது நல்லூர் இராச்சியத்துக்காக ஆக்கப்பட்ட நூல் என்க ..... இக்குடியேற்றத்தினைப் பாண்டிமழவன், மன்னன், புவனேகபாகு மூன்றுபேரும் சேர்ந்துதான் செய்திருக்கிறார்கள். இது இராசபரம்பரையும் நல்லூர்க் குடிமக்களும் அறிய வேண்டும் என்று அவர்களே பாடுவித்து வெளிப்படுத்தியிருக்கிறார்கள்" (ஜெகந்நாதன், பொ., 1987, பக்.20-21). ஆகவே கைலாயமாலை நல்லூர் இராசதானியை மையமாக வைத்து ஏற்படுத்தப்பட்ட முதற் குடியேற்றங்களைப் பற்றி குறிப்பிடும் இலக்கிய வடிவமாக அமைந்தது என்பதில் ஐயம் எதுவும் எழ முடியாது. கைலாய மாலையை ஆராய்ந்தவர்கள் அந்நூல் தோற்றுவிக்கப்பட்ட காலம் தொடர்பாக பல்வேறு கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருப்பினும் நல்லூரில் முதற்தமிழ்ச் சங்கம் அமைத்த முதற்செய்தியை அந்நூலின் 210 ஆவது பாடலிலிருந்து உறுதிப் படுத்துவதில் ஒற்றுமைத்தன்மையை கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையில் குடியேற்றங்களோடு எழுந்த தமிழ்ச் சங்கமரபானது தமிழ்மொழிப் புலமையாளர்கள் தென்னிந்தியாவிலிருந்து நல்லூராருக்கு வரவழைக்கப்பட்டதோடு அவ்வழியே புலமைகொண்ட அங்கத்தவர்களது குடியேற்ற முறைமையை வலுப்படுத்தும் ஒரு நிறுவனமாக தமிழ்ச்சங்கம் வட இலங்கையில் தொழிற் பட்டிருந்த வகையைக் காணமுடிகின்றது (ஞானம் பாலச்சந்திரன், 2015 (1) ப.13), கைலாயமாலை நூலின் துணைக் கொண்டும் பாவலர் சரித்திர தீபகம் நூலின் துணைக்கொண்டும் யாழ்ப்பாண மன்னர்களினால் நிர்வகிக்கப்பட்ட தமிழ்ச்சங்கம் தொடர்பாக கீழ்க்கண்ட விடயங்களை வரலாற்றாய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

1. யாழ்ப்பாண மன்னர்கள் தமிழ்ச்சங்கத்தினை நிறுவினர்.
2. மன்னர்களால் பலநூல்கள் செய்விக்கப் பட்டுள்ளன.
3. ஈழத்துப்புலவர்கள் மட்டுமல்லாது மதுரை யிலிருந்த (தமிழகத்திலிருந்த) புலவர் களும் இச்சங்கத்தின் சேவைகளில் பங்கேற்றுள்ளனர்.
4. புலவர்களுக்கு படிச்சம்பளம் கொடுப்பதன் வாயிலாகவோ சன்மானம் வாயிலாகவோ புலவர்களை மன்னர் ஊக்குவித்துள்ளனர்
5. பலநூல்கள் நல்லூருக்கு கொண்டு வரப் பட்டு சேகரிக்கப்பட்டுள்ளன (ஞானம் பாலச்சந்திரன், 2015 (1), ப214)

மேலே தரப்பட்ட ஆய்வு முடிவுகள் மத்தியகால வட இலங்கையில் தமிழ் மொழிப் பாண்டித்தியம் வல்லவர்கள் மாத்திரமல்ல ஏனைய அறிவியல்துறை வல் லவர்களையும் குடியேற்றும் ஓர் (இடைக்கால) மையமாக நல்லூரும் வட இலங்கையும் விளங்கியிருந்தமையை தெளிவாக்குகின்றன. இப் பின்னணியில் நல்லூரிலுள்ள நாயன்மார்கட்டில் **சரஸ்வதி மஹால்** என்ற ழைக்கப்பட அரண்மனை நூலகமொன்று ஸ்தாபிக்கப்பட்டு, தமிழகத்திலிருந்தும் பிற பிரதேசங்களிலிருந்தும் நூலாக்கங்கள் பெறப்பட்டு வடஇலங்கையின் கல்வி நிலை வளர்த்தெடுக்கப்பட்டமையைக் காண முடிகின்றது. வட இலங்கையின் சிந்தனை மரபிற்கு (கந்தபுராணச் சிந்தனை மரபிற்கு) நாயன்மார்கட்டில் அமையப்பெற்றிருந்த அறிவியல்கழகமும் அதனோடு இணையப் பெற்றிருந்த **சரஸ்வதி மஹால் நூலகமும்** பெரும்பணியாற்றியிருந்தமை பற்றிய தொன்மம் இன்னும் விரிவாக ஆய்வு செய்யப்படாமல் இருப்பது கவலைக்குரிய ஒரு விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறெனினும் மத்திய கால வட இலங்கைத் தமிழ் மக்களது அறிவியல் வாழ்வில் நல்லூரில் அமையப் பெற்றிருந்த **சரஸ்வதி மஹால்** பெரும் பங்காற்றியிருந்தமையை ஆய்வாளர் எவருமே மறுக்கமுடியாது. அப்பின்னணியிலேயே வட இலங்கையில் நிகழ்ந்த குடியேற்றங்கள் யாவும் இலக்கியங்களில் தொன்மங்களாக பதிவேற்றம் செய்யப்பட்டு அந்நூலகத்திலேயே பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தன.

**வையாபாடல் - யாழ்ப்பாணத்து குடியேற்றம் பற்றிக் குறிப்பிடும் இரண்டாவது பதிவேடு**

வையாபாடல் வட இலங்கையில் மத்திய காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட குடியேற்றம் தொடர்பாகப் பேசுகின்ற இரண்டாவது இலக்கிய வடிவமாகும். போர்த்துக்கேயர் காலத்தின் தொடக்கத்தில் தோற்றுவிக்கப்பட்ட இந்த இலக்கிய வடிவமானது வன்னிக் குடியேற்றங்கள் பற்றிய விபரங்களைத் தருவதும் தமிழகத்திற்கும் வன்னிக்குமிடையிலான அரசியற் தொடர்புகளை விபரிப்பதுமாகக் காணப்படுகின்றது. வையாபுரி ஐயரால் பதிவேற்றம் செய்யப்பட்ட வரலாற்று நிகழ்வுகள் பற்றிய இத்தொகுப்பானது தோற்றம் பெறுவதற்குக் காரணமாக போர்த்துக்கேயரால் வட இலங்கைப் பண்பாட்டிற்கேற்பட்ட பாதிப்புக்களின் தாக்கமே என வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படுகின்றது. வையாடல் என்ற தலைப்பினை எடுத்து நோக்கும் போது அது ஓரிடத்தினையோ அல்லது தலத்தினையோ குறித்து நிற்காது ஒருவருடைய பாடல் என்ற கருத்தில் வெளிப்பட்டு நிற்பது தெளிவாகின்றது." வையாபாடல் என்னும் நூல் கி.பி16 ஆம் நூற்றாண்டிலே வையாபுரி ஐயரால் எழுதப்பட்டதென்பர். அது அடங்காப்பற்று வன்னியில் ஏற்பட்ட குடியேற்றங்களையும் படையெடுப்புக்களையும் வர்ணிக்கின்றது. தம்பலகாலம், திருகோணமலை, திரியாய், வெருகல், யாழ்ப்பாணம் ஆகியனவற்றிலே குடியேற்றப்பட்டவர்களது குறிப்புக்களும் அதில் அடங்கும் பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஏற்பட்ட பாண்டியர் படையெடுப்புக்களைப் பற்றிய சில மரபுவழிக்கதைகளையும் 16 ஆம், 17 ஆம் நூற்றாண்டுகளில் காணப்பட்ட சமூக நிலைகளையும் ஆதாரமாகக் கொண்டு வையாபாடல் உருவாக்கப்பட்டது' பேராசிரியர் பத்மநாதன் குறிப்பிடுகின்றார் (பத்மநாதன். சி., 2004 ப.vi). குடியேற்றங்களைப் பதிவு செய்வதற்காக உருவாக்கப்பட்ட இலக்கிய வடிவங்களுக்கு வையா பாடல் ஒரு சிறப்புதாரணமாகும்.

**யாழ்ப்பாண வைபவமாலை - வட இலங்கையின் முதல் வரலாற்று வரைபு**

17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மயில்கவாகனப் புலவரால் யாழ்ப்பாண வைபவமாலை எழுதப்பட்டது. இக்காலத்தில் கவர்ணராக இருந்த மேக்கறூனின் (கி.பி. 1739) வேண்டுகோளின்படி மயில்வாகனப் புலவர் இந்த நூலை எழுதினார். மயில்வாகனப் புலவரால் யாழ்ப்பாணத்தின் முற்கால நிகழ்ச்சிகளை ஒரு மாலை போல் கோர்த்துச் சொல்லப்பட்டுள்ளது. இவரைப் பற்றி பிற்காலப்பகுதியிலும் தமிழர் வரலாற்றைப் பற்றியும் யாழ்ப்பாண வரலாற்றை பற்றியும் எழுதியவர்கள். "வைபவம்" "வைபவகௌமுதி" என்ற சொற்கள் அவரவர் நூல்களின் தலைப்பில் இணைத்துக் கொண்டனர். யாழ்ப்பாண இராச்சியம் என்ற ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பில் வி.சிவசாமி எழுதிய வரலாற்று மூலங்கள் என்ற அத்தியாயத்தில் யாழ்ப்பாண வைபவமாலை தொடர்பாக பின்வருமாறு குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

"இது யாழ்ப்பாணத்தின் வைபவத்தினை - சிறப்பினை - சீரினை - மகிமை யினை - வரலாற்றினைக்கூறும் நூல் எனப்பொருள்படும். மாதகலைச் சேர்ந்த மயில்வாகனப் புலவர் சமகால யாழ்ப் பாணத்திலே ஒல்லாந்தத் தளபதியாகவும், தேசாதிபதியாகவும் 1736 இலே இருந்த மகெறல்என்பவரின் ஆலோசனைக்கேற்ப இந்நூலை எழுதினார் எனக் கூறப்படுகின்றது. ஏறக்குறைய இதே காலப்பகுதியிலே தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலக நூலகம்
யாழ்ப்பாணம்.

கோணேலியஸ் ஜோன் சீமோன் எனும் ஒல்லாந்த தேசாதிபதி யாழ்ப்பாணத்தமிழ் மக்கள் மத்தியிலே பாரம்பரியமாக நிலவி வந்த பழக்கவழக்கங்களை - தேசவழமையினைத் தொகுப்பித்தான் என்பதும் குறிப்பிடற்பாலது. வைபவமாலையின் முன்னுரையில் ஆசிரியர் தான் பயன்படுத்திய நான்கு நூல்களைக் குறிப்பிட்டுள்ளார். இவற்றுள் முற்குறிப்பிட்ட இரண்டையும் தவிர ஏனையவை இன்றுவரை கிடைத்ததில். அவற்றுள் ஒன்றான இராசமுறை மன்னர்களின் பெயர்களையும் சாதனைகளையும் கால ஒழுங்கின்படி கூறியிருக்கலாம். இவ்வகையிலிது இந்தியா விலே பேணப்பட்டு வந்த வம்சாவளி, இலங்கையிலே எழுதப்பட்ட இராசாவலிய முதலியவற்றுடன் ஒப்பிடக்கூடியதாக இருக்கலாம்". (சிற்றம்பலம். சி.க. தொ ஆ; **யாழ்ப்பாண இராச்சியம்** 1992, ப.14).

1879 ஆண்டில் பிரிட்டோ என்பவர் யாழ்ப்பாண வைபவமாலையைத் தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தார். பிரிட்டோவின் மொழி பெயர்ப்பு யாழ்ப்பாணத் தமிழர்களின் வரலாற்றுணர்வின் வெளிப்பாடு தான் பிரிட்டோவிற்கு முன்னரே 1845 ஆம் ஆண்டில் உதயதாரகை வரலாறு பற்றிய கட்டுரைத் தொடரை வெளியிடத் தொடங்கியது. இத்தொடர் 1855 வரை தொடர்ந்தது. டானியல் பூவர் என்ற வரை தொடர்ந்தது. டானியல் பூவர் என்ற அமெரிக்க மிசனரியால் 1841ல் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பத்திரிகை இக்கட்டுரைத் தொடரை வெளியிட்டமை யாழ்ப்பாணச் சரிதம் பற்றி மக்கள் காட்டிய ஆர்வத்தை வெளிப்படுத்தியதாகக் கொள்ளலாம். காரணம் இலங்கையின் வரலாறு சிங்கள் அரசர்கள் வரலாறாகவே எழுதப்படுகின்றது. அதே நேரத்தில் யாழ்ப்பாணத்தின் வரலாறு புறக்கணிக்கப்படுகிறது. என்ற குறையும் இக்கட்டுரைத் தொடரில் சுட்டிக் காட்டப்பட்டது. பிரிட்டோவின் வைபவமாலை மொழி பெயர்ப்பின் பின்னிணைப்பாக இலங்கையில் மொழிகளின் வளர்ச்சி பற்றிய கட்டுரை ஒன்றை பிரிட்டோ சேர்த்திருந்தார். சிங்களம் ஆரிய மொழி அன்று அது திராவிடத்தில் இருந்து கிளைத்த மொழி என்ற கருத்தை பிரிட்டோ தனது கட்டுரையில் முடிகிறது. அவரது கருத்தின் முக்கியத்துவம் என்னவென்றால் இலங்கைத் தமிழருக்கு ஒரு பழமையான வரலாறு இருந்தது; அது மொழியின் வரலாறாக நீண்டதாக இருக்குமாயின் அதைப் பேசும் மக்களும் இந்த நாட்டில் பண்டைக்காலம் முதலே இருந்து வந்துள்ளனர் எனக் குறிப்பிடலாம். இது தமிழர் சிந்தனையில் ஒரு புதிய திருப்பத்தினை தந்திருந்த போதும் அகண்ட தென்னிந்தியாவின் பண்பாட்டுப்பரப்பின் தொன்மத்துடன் பற்றிய தம்மை இணைத்து நோக்கிய தமிழர்களுக்கு இலங்கையில்தாங்கள் இருப்பு பற்றிய வரலாறுப் பதிவின்மை பற்றிய சிந்தனை அக்காலத்தில் தோன்றியிருக்கவில்லை.

சாமுவேல் யோன் என்பவர் 1879ல் யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற நூலை எழுதினார். இக்காலம் முதல் யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற தலைப்பில் பல நூல்கள் வெளிவரலாயின. அவற்றுள் சிலவற்றின் விபரம் பின்வருமாறு:

1. வி.சதாசிவப்பிள்ளை, யாழ்ப்பாண வைபவம் 1884
2. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, யாழ்ப்பாணச் சரித்திரம் 1912
3. கே. வேலுப்பிள்ளை, யாழ்ப்பாண வைபவகௌமுதி 1918

இந்த நூல்கள் யாழ்ப்பாண வைபவமாலையினை பிரதான மூலமாகக் கொண்டே வட இலங்கை வரலாற்றைக் கூறிச் செல்கின்றன. ஆனால் இந்நூல்களில் விபரிக்கப்பட்ட தமிழர் குடியேற்றம் தொடர்பான தொன்மங்கள் பற்றிய விபரிப்புக்கள் தளம் மாறி, இடம்மாறி பதிப்பிக்கப்பட்டமையைக் காண முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாகக் குறிப்பிடும் போது **யாழ்ப்பாடி** பற்றிய தொன்மம் அதாவது யாழை மீட்டு மணற்றியை பரிசிலாக பெற்றுக் கொண்ட நிகழ்வின் தளம் அனுராதபுரியில் ஆட்சி புரிந்த ஏலேலசிங்கனது அரண்மனையில் நிகழ்ந்துள்ளமையை ஆ.முத்துத்தம்பிப் பிள்ளையும் உக்கிரசிங்கனது மகனான செயதுங்கபரராசசிங்கனின் சிங்கை நகரில் உள்ள அரண்மனையில் நிகழ்ந்தது என முதலியார் இராசநாயகமும் பதிந்து வைத்துள்ளமையைக் காணமுடிகின்றது .

முதலியார் செ. இராசநாயகம் இந்தியத் தொடர்பை அழுத்திக் கூறுவதற்குப் பதிலாக வட இலங்கையில் தமிழர்களின் வரலாற்றுத் தொடர்ச்சியை இனங்காணப்பட்ட தொன் மங்களுடாக விபரிப்பதிலேயே அக்கறை காட்டினார். பின்னர் சில வரலாற்றாசிரியர்கள் செ. இராசநாயகத்தின் நோக்கு முறைக்கு மாறுபட்ட முறையிலும் எழுதினர். குறிப்பாக தமிழ்க் கல்வெட்டியல் ஆய்வு வளர்ச்சி பெற்ற நிலையில் இலங்கையில் சோழர் ஆட்சி பற்றிய தகவல்கள் பல வெளிவரத்தொடங்கியபோது தமிழரின் வரலாறு பற்றிய பன்முகநோக்கை தொன்மங்களுடாக விளக்க முற்பட்டுக் கொண்டனர். சோழர் படையெடுப்பு இலங்கையில் அதன் தாக்கம், குறிப்பாக திருகோணமலையில் சோழர்விட்டுச் சென்ற தடயங்கள் ஆகியன தமிழரின் வரலாறு பற்றிய பன்நோக்கு முறைகளை முன்வைக்க இடமளித்தது. தமிழ்ச் சாசன மரபுகளும் மத்தியகால தமிழ் இலக்கிய மரபுகளும் ஐதீகங்களையும் தொன்மங்களையும் இனங்காணத் தூண்டின. கோணேசர் கல்வெட்டு, தக்ஷிண கைலாய மான்மியம் என்பன தொன்மங்களையும் ஐதீகங்களையும் இணைந்து வைத்த இலக்கிய வடிவங்களாக தோற்றம் பெற்றன.

இப்பின்னணியில் வட இலங்கைத்தமிழர் மரபுகள் குறிப்பாக இலக்கிய வரலாற்று மரபுகள் என்ற நோக்குநிலையில் பதிகம், தோத்திரம், சிந்து, கும்மி, குளிர்த்தி, அகவல், விருத்தம், ஊஞ்சல் பள்ளு என்று தமிழ் இலக்கிய உறுப்புக்கள் யாவும் மத்திய காலப்பரப்பிலிருந்தே வட இலங்கையில் உருவாக்கம் பெற்று வளர்ச்சியடைந்தோடு, குடியேற்ற அலைகளினுடாக நிகழ்ந்த சம்பவங்களின் கோவையாக வரலாற்றுப் பதிவுகளும் இவ்விலக்கியங்களினூடே ஆரம்பித்து வைக்கப்பட்ட முறையைக் காண்கின்றோம். இவ்வரலாற்றுப்பதிவுகளின் பின்னணியில் ஏற்பட்ட குடியேற்றங்களுடன் புதிய வாழ்க்கையைத் தொடங்கிய புதிய வருகையாளர்கள் சுதேசிகளுடன் இணைந்து தம்முடைய தொன்மங்களை இலக்கிய வடிவமாக வடிவமைத்துக் கொண்டதோடு அவற்றினைத் தென்னிந்தியாவுடனும் பிணைத்தும் குறிப்பாக சிதம்பரத்துடனும் மதுரையுடனும் இணைத்து ஒரு நீண்ட வரலாற்று மரபினையும் உருவாக்கிக் கொண்டனர். இக்காரணத்தினாலேதான் வட இலங்கையின் வரலாற்றெழுத்தியலில் தமிழகத் தொடர்புகள் அழுத்தப் பட்டு வரப்பட்டநிலையில் நீண்ட பாரம்பரியத் துக்கான தேடல் இத்தொன்மங்களுடாக எடுத்துக் காட்டப் படுகின்றது.

மத்திய கால வட இலங்கைத் தமிழர் பண்பாட்டு வரலாறு பற்றிய எழுத்துக்களினூடாக கடந்த ஐந்து தசாப்த காலங்களாக சொல்லப்பட்டுக் கொண்டு வந்த தகவல்களின் பின்னணியில் தொன்மங்கள் எவ்விதத்திலும் முக்கியத்துவத்தினைப் பெற்றிருக்கவில்லை. எவ்வாறெனினும் தொல்லியல் சான்றுகள் வாயிலாக மத்திய கால நல்லூர் பற்றிய தொன்மங்களை உறுதிப்படுத்தப்படுவதற்கு இப்பொழுது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டு வரப்படுகின்றன. இலங்கைத்தீவின் வரலாற்றைக் கூறிச் செல்லும் மகாவம்சம் தரும் தமிழர் வரலாற்றிற்கு எதிர்த்திசையில் வடஇலங்கைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரின் தொன்மையான அரசமரபின் வரலாற்றிருப்பினை நிலைநிறுத்தும் பொருட்டு இங்கு தொல்லியல் தடயங்கள் தேடி எடுக்கப்பெற்று ஆராயப்படுகின்றன. அதிக எண்ணிக்கையில் கிடைக்கப் பெற்றுள்ள சேது வகை நாணயங்களுள் சில தங்க, வெள்ளி உலோக நாணயங்களாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் குடியேற்ற செயற்பாடுகளூடாக நிர்வாக - சமூக மையமாக்கப்பட்ட நல்லூருடன் அடையாளம் காணப்பட்ட தொன்மங்கள் தொடர்பாக மேற்கிளம்பும் மூன்று கருத்துக்களை முடிவுரையாகப் பின்வருமாறு குறிப்பிட்டுக் கொள்ளலாம். அவையாவன:

1. வட இலங்கைத் தமிழர் தொடர்ச்சியான பண்பாட்டுக்கட்டமைவை அல்லது பண்பாட்டு அடுக்குகளை அதே நிலப்பரப்பரப்பில் தொடர்ச்சியாகக் கொண்டிருக்கவில்லை என்பதனை மத்திய காலப்பரப்புக்குரியதாக அடையாளம் காணப்பட்ட தொன்மங்கள் (antecedent) வெளிப்படுத்துகின்றன. பொதுவாக சமூகவியல் மற்றும் மானிடவியல் ஆய்வுகளின் பின்னணியிலேயே குறிப்பிட்ட சமூகக் கட்டமைவின் இருப்பு, பண்பாட்டுக் கலப்பு, சமூக உருவாக்கம், அதனை உருவாக்கியவர்கள் தொடர் பாகவோ அல்லது மூத்ததொல்குடிகள் தொடர்பாகவோ எடுத்து ஆராயப்படுகின்ற நிலையில், நல்லூரில் குடியேறியிருந்த திராவிடக்குழுமங்கள் பற்றிய ஆய்வுகளுக்கு இன்னும் முக்கியத்துவம் கொடுக்கப்படாத நிலையில்,நல்லூரின் தொன்மையை மத்திய காலத்துடனே தொடங்க வேண்டியுள்ளது. மணற்றியைப் பரிசிலாகப் பெற்ற யாழ்பாடி பற்றியும், தென்னிலங்கையில் ஆட்சி செய்த சிங்கள மன்னனொருவன் தனது இராச்சிய உரித்தற்ற மகிஸியின் ஓர் ஆண் குழந்தையான **அந்தகக் குமாரனுக்கு** நாகதீப அரசினை கொடுத்தமை பற்றியும், தென்னிலங்கை இளவரசியொருத்தியின் சூலைநோயைத் தீர்த்த சிங்கையாரியன் பற்றியும், கந்தரோடையிலிருந்து உக்கரசிங்கன் செங்கடலநகரிக்கு தலை நகரை மாற்றியமை பற்றியும் குறிப்பிடுகின்ற தொன்மங்கள் தொடர்பாக இன்னும் சொல்லாடல் செய்ய வேண்டிய அடிப்படையான பொறுப்பினை நாம் கொண்டுள்ள நிலையில் மத்திய காலத்திற்கு முற்பட்ட வட இலங்கைத் தமிழர்க்குரிய அரச மரபுகளை இனங்காண்பதில் முரண்பாடான நிலையே எஞ்சியுள்ளன என்பதனை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.
2. நல்லூர் இராசதானியின் உருவாக்கத்தின் பின்னணியில் பௌத்தமதத் தொடர்பற்ற நிலையில் வட இலங்கையில் நிகழ்ந்த திராவிட இனக்குடியேற்றமுறைச் செயற்பாடுகளே அடிப்படையாக இருந்துள்ளன. ஆனால் ஆதிமுதல் இங்கு திராவிட இனத்தவர்களே வாழ்ந்திருந்து வந்துள்ளனர் என்பதனை ஆணித்தரமாக நிறுவுவதற்கு எத்தகைய தொல்லியற் சான்றுகளும் நல்லூரில் இதுவரையில் கிடைக்கவில்லை. நல்லூரை அரசியல் தலைநகராகக் கொண்டு சுதந்திர ஆரியச்சக்கரவர்த்திகள் அரசு இந்து திராவிடக்குழுமத்தவர்களுக்குரியதாக பேரரசக் கட்டமைப்பினைக் கொண்டிருந் திருப்பினும் இங்கு அரசவாரிசுரிமைக்கான வெற்றிடங்கள் ஏற்பட்டபோதெல்லாம், அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு தென்னிந்தியாவில் தமிழகக்திலிருந்தே இளவரசர்கள் அல்லது அரசவம்சத்தவர் வருவிக்கப்பட்ட நிகழ்வுகள் இடம் பெற்றி ருந்தமையை இத்தொன்மங்கள் மிகவும் ஆணித்தரமாக உறுதிப்படுத்தியுள்ளன. அந்தவகையில் தில்லைச்சிதம்பரத்தினை நோக்கிய ஓர் அரசாக நல்லூர் ஆரியச் சக்கரவர்த்திகள் அரசு காணப்பட்டது என்பது தொன்மங்களால் உறுதிப் படுத்தப் பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. முற்பட்ட காலத்து வடஇலங்கைப் பண்பாடனது மொழி மற்றும் கலை பண்பாட்டடிப்படையில் தனித்துவமாக வளர்ச்சியடைந்து வந்தது என்று குறிப்பிடு வதைவிட பௌத்தத்துடன் (தமிழ்ப் பௌத்தத்துடன்) இணைந்தே வளர்ச்சி பெற்று வந்தது எனக் குறிப்பிடுவது பொருள் மிக்கதாகும். நல்லூர் இராசதானியின் உருவாக்க காலத்திற்கும் முற்பட்ட காலத்தில் இலங்கையில் பௌத்தத்துடன் இந்துமதமும் இணைந்தே வளர்ச்சியடைந்து வந்திருந்தமைக்கான தொல்லியற் தடயங்கள் இலங்கைத்தீவில் பரவலாகக் கிடைத்துள்ள நிலையில், வட இலங்கையில் தனித்துவமான நிலையில் தமிழ்த்தொன்மங்கள் உருவாக முடியாதிருந்த ஒரு பண்பாட்டுச் சூழல் காணப்பட்டிருந்தமையை இம் முடிவுரையில் உறுதிப்படுத்திக் கொள்ள முடிகின்றது. அக்காலத்தில் இங்கு அறிமுகப்படுத்தப்பட்ட கண்ணகி மரபுகள் பௌத்த - இந்து மதங்களின் வாழ்வியற் சூழலை மையப்படுத்தி வளர்ச் சியடைந்தமையினால் தனித்துவமான இந்துமதச் சூழலின் தொடர்ச்சியை வட இலங்கையில் ஏற்படுத்த முடிந்திருக்காத ஒரு கருத்தமைவின் விளைவினால் ஏற்பட்ட வெற்றிடத்தினை நிரப்புவதற்காகவே பஞ்ச ஈஸ்வரங்கள் என்ற சிவபூமிக்கோட்பாட்டை பிற்காலத்தில் இலங்கையில் நிலைப்பெற வைத்தனர். இப்பின்னணியில் ஈழத்தமிழர் இந்துக்கள் என்றவோரடிப்படையை இராவணன் காலத்துத் தொன்மத்தினைச் சான்று காட்டி நிறுவ முயற்சிக்கப்ப ட்டுள்ளமை தெளிவாகின்றது. வடஈழத்து இந்துத்தமிழர் தமது இராச்சிய மட்டத்தில் சிவ வழிபாட்டினையே பிரதானமான மரபாகக் கொண்டிருந்தனர் என்பதை உணர்த்துவதாக அமைந்த அதே மரபுகளை நல்லூர் இராசதானி ஆட்சிமரபுகளுடன் இணைத்து கல்வெட்டுச் சான்றுகளிலும் பதிவு செய்து வைக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இதனாலேயே நல்லூரில் தோற்றுவிக்கப்பட்ட யாழ்ப்பாண அரசில் அரசர்களும், பிரபுக் களும், முதலியார்களும் அடிக்கடி சிதம்பர தரிசனத்திற்காக தமிழகம் நோக்கி யாத்திரை செய்த மரபு உருவானமையை கள்ளியங்காட்டு செப்பேடுகள் உட்பட்ட யாழ்ப்பாண வரலாற்று மரபுகளும் பதிவு செய்து வைத்துள்ளமையைக் காணமுடிகின்றது.

4. இறுதியாக நல்லூர் இராசதானியின் வரலாற்றிருப்பினைத் தொடர்ச்சியாக நிறுவுவதற்கான எந்த விதமான செப்பேட்டுச்சாசனங்களும் அவ்வாட்சி குறித்த கால எல்லைக்குட்பட்டதாக இது வரையில் எமக்குக் கிடைத்திருக்காத இவ் வேளையில் கள்ளியங்காட்டுச் செப்பேட்டுச் சாசனமொன்றில் **யாழ்ப் பாண அரசு பண்ணிய பரராசசேகரனின் சிதம்பரப் பயணம்** தொடர்பான செய்திகள் பொறிக்கப்பட்டிருக்கின்ற வரலாற்றுச் சூழலை காணமுடிகின்றது. இவ்வரலாற்றுச் சூழலிலேதான் தில்லைச்சிதம்பரம் கோவில் பரிபாலனத்திற்காக தேவதானங்களாக வட இலங்கையிலுள்ள கிராமங்கள் தானமளிக்கப்பட்ட நிகழ்வுகள் நடை பெற்றிருந்தமையை காணமுடிகின்றது. ஆகவே இடைக்கால நல்லூரில் தோற்றம் பெற்ற தொன்மங்களுக்கு அடிப்படையாக அமைந்த தென்னிந்தியக் குடியேற்றங்கள் வட இலங்யையின் பண்பாட்டு ஊடகங்களாக மாற்றமடைந்திருந்தமையை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Bibliography


1. சிற்றம்பலம், சி .க. **யாழ்ப்பாண இராச்சியம்**. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம். 1992
2. சண்முகலிங்கம், க., **இலங்கையின் சமூக பண்பாட்டு வரலாறு**. குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2014
3. சண்முகலிங்கம், க., மதுசூதனன், தெ. **கருத்தியலும் வரலாறும்**. விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம், கொழும்பு, 2006
4. ஜெகந்நாதன், பொ., **யாழ்ப்பாணத்தரசர் வரலாறும் காலமும்**. யாழ் இலக்கி வட்டம், யாழ்ப்பாணம், 1987
5. சின்னத்தம்பி, ஆறுமுகம். **ஈழநாட்டு ஆராய்ச்சி வரலாறு**. தமிழ்ப்பூங்கா அச்சகம், நெல்லியடி, 1994
6. பத்மநாதன், சி., **ஈழத்து இலக்கியமும் வரலாறு**. குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2014
7. பத்மநாதன், சி. இலங்கையில் வன்னியர், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2014
8. ஹெல்மன். இராசநாயகம்., ' இலங்கைத்தமிழரின் வரலாற்றுணர்வும் கடந்த காலம் பற்றிய படிமங்களும்" **கூடம்** காலாண்டிதழ், தொகுப்பாசிரியர் மதுசூதனன், தெ.ஈ 2008 ஜனவரி - மார்ச், கொழும்பு
9. பக்தவத்சலபாரதி, **இலக்கிய மானிடவியல்**. அடையாளம் வெளியீடு, அடையாளம் பிரஸ் இந்தியா, 2014
10. ஷெய்கு ஸைனுத்தீன் மக்தூம்,கேரளமும் போர்ச்சுக்கீசிய காலனி ஆதிக்கமும் (ஆங்கிலத்திலிருந்து தமிழில் ஷாகிர் அஸிம்) அடையாளம் வெளியீடு, இந்தியா 2009
11. Ragupathy, P.,**Tamil Social Formation in Sri Lanka**: A Historical Outline Madras, 1986
12. கிருஷ்ணராசா, செ., வடஇலங்கைப்பண்பாட்டுத் தளத்தின் உருவாக்கமும் உருவாக்கியவர்களும் - தொல்லியல் மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்ட விளக்கம், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை - 13.11.2014 கல்விக்கிளை ( நிர்வாகம் ), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்
13. ஏகநாயகிவல்லி, சிவராசசிங்கம்., **ஈழவரலாற்றுப் பதிவுகள்**. அரோவெப் பப்ளிர்ஸெர்ஸ் ரொரன்ரோ, கனடா, 2003
14. இராசநாயகம், செ.,**யாழ்ப்பாணச் சரித்திரம்**. எஜியன் எடுகேசனல் சேர்விஸ் நியூடெல்கி, 2003.
15. வேலுப்பிள்ளை, ஆ., **அரசகேசரியின் இரகுவம்சமும் அது எழுந்த இந்துப்பண்பாட்டுச் சூழலும்**. சேர். பொன். இராமநாதன் நினைவுப் பேருரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 28 நவம்பர், 1998

46. Indrapala, K., **The Evolution of An Ethnic Identity: The Tamils in Sri Lanka,** MV Publication, Sydney, 2005


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பொருளாதாரக் கட்டமைப்பு (1930 - 1958) ஈழகேசரிப் பத்திரிகையினை அடிப்படையாகக் கொண்டது

கா. அருந்தவராஜா

**ஆய்வுச்சுருக்கம்**

இலங்கையின் வடபகுதியில் அமைந்து பாரம்பரிய பொருளாதார பண்பாட்டு நிறுவனங்களுடன் அடையாளங் காணப்படுகின்ற பிரதேசமாக யாழ்ப்பாணப் பிரதேசம் காணப்படுகின்றது . யாழ்ப்பாணக் குடாநாட்டினையும் அயலில் காணப்படுகின்ற தீவுகளையும் உள்ளடக்கிய இத்தகைய பிரதேசத்தினுடைய வளர்ச்சியில் அல்லது அபிவிருத்தியில் புராதன காலந் தொடக்கம் அதனது பொருளாதார நடவடிக்கைகள் பிரதான இடத்தினைப் பெற்றுள்ளன. யாழ்ப்பாண அரசர்களுடைய காலத்திலும் சரி பின்வந்த ஐரோப்பியர்களது ஆட்சிக்காலங்களிலும் சரி அவர்களினால் யாழ்ப்பாணப் பிரதேசத்தினது பொருளாதாரத்தின் அடிப்படையினைத் தென்னிலங்கையிலோ அல்லது மலைநாட்டிலோ மேற்கொண்டதனைப் போன்று மாற்ற முடியவில்லை. மாறாக அவற்றுடன் இணைந்த வகையிலேதான் அவர்கள் தமது பொருளாதார நகர்வினையும் சுரண்டலையும் மேற்கொண்டு வந்தனரென்பதே உண்மை. இதற்கு இறுதியாக 1948 வரை இலங்கை முழுவதிலும் ஆதிக்கத்தினைச் செலுத்திய ஆங்கிலேயரும் கூட விதிவிலக்க அமையவில்லை. இத்தகைய ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தின் இறுதிப் பகுதியளவில் தமிழ் மக்களைச் சகல துறைகளிலும் முன்னேற்ற வேண்டுமென்ற நோக்கத்தினைப் பிரதானமாக முன்னிறுத்தி,யாழ்ப்பாணத்தினைத் தளமாகக் கொண்டு வெளிவர ஆரம்பித்த ஈழகேசரி என்ற தமிழ் வார வெளியீட்டின் ஊடாக அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட பொருளாதாரக் கட்டமைப்பு அல்லது பொருளாதார நிலை பற்றியும், அக்கால யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பொருளாதாரத்தினை முன்னேற்றச்செய்யும் பொருட்டு இப்பத்திரிகை தெரிவிக்கின்ற கருத்துக்கள் பற்றியும் அறிய முடிகின்றது. இவ்வகையில் இப்பத்திரிகையானது கொண்டிருந்த நோக்கங்களில் யாழ்ப்பாணத்தினது பொருளாதார அபிவிருத்தியும் ஒன்றென்பது அவதானிக்கத்தக்கது. இது அவ்வப்போது தனது வெளியீடுகளின் மூலமாகத் தேசத்தின் பொருளாதாரத்தினை உயர்த்துவதற்கான ஆலோசனைகளை அரசிற்கும் மக்களுக்கும் தெரிவித்தும் வந்தது. எனவே ஈழகேசரிப் பத்திரிகை வெளிவந்தகால (1930-1958) யாழ்ப்பாணப் பிரே தேசத்தினது பொருளாதார நிலையினை அறிய விரும்புகின்ற எவருக்கும் இது சிறந்த வரலாற்று ஆவணம் என்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை.

**திறவுச்சொற்கள் :** மலையாளப் புகையிலை வியாபாரம், சுதேசியம், கடலேரித்திட்டம், சுதேசியம், கூட்டுறவு

## 1. அறிமுகம்

ஒரு ஜனநாயக அரசினது முக்கியமான மூன்று கூறுகளாகச் சட்டத்துறை, நீதித்துறை நிர்வாகத்துறை என்பன காணப்படுகின்றன. இந்நிலையில் மக்களது உரிமைகளைக் காத்து அரசியலை நெறிப்படுத்துகின்ற துறைகளிலொன்றாகப் பத்திரிகைகள் காணப் படுவதனால் பத்திரிகைகள் ஜனநாயகத்தின் நான்காவது தூணாகக் கொள்ளப்படுகின்றன. (ஆனந்தராஜ்.ந.2002, ப.01) அவ்வகையில் ஈழகேசரி தோன்றிய காலமானது ஈழத்தின் அரசியல், சமூகம், வரலாறு பொறுத்து மிகவும் முக்கியம் பெற்றதும் இத்துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்ட காலப்பகுதியாகவும் காணப்படுகின்றது. அரசியல் ரீதியில் டொனமூர் அரசியல் திட்டமும் அதனால் ஏற்பட்ட மாற்றங்களும் காணப்பட, சமூக ரீதியில் பழைய சம்பிரதாயங்கள், மரபுகள், மூடநம்பிக்கைகள் போன்றவற்றினைத் தகர்த்தெறிய வேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வாறே பொருளாதார ரீதியில் பின்தங்கியிருந்த யாழ்ப்பாணத்தினைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையும் காணப்பட்டது. எனவே இத்தகையதொரு பின்னணியில் ஈழகேசரியினது வரவானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் இடம் பெறுகின்றது. பொதுப்பட இப்பத்திரிகை தோன்றிய காலப்பகுதியிலோ அல்லது அதற்கு முற்பட்ட காலப்பகுதியிலோ தோன்றிய பத்திரிகைகள் எல்லாமே மதப் பிரசாரத்தினையோ அல்லது தொழிலாளர்களது நலன்களையோ இலக்காகக் கொண்டு தான் தோன்றியிருந்தன. ஆனால் இப்பத்திரிகையோ இத்தகைய நோக்கங்களிலிருந்து முழுவதுமாக விலகி மதச் சார்பற்று, சமுதாய நலன்களைக் கருத்தில் கொண்டு பணியாற்றியது. தமிழ் பேசும் மக்களை அதிகமாக கொண்ட யாழ்ப்பாணப் பிரதேசத்து மண்ணில் தோன்றி அவர்களுக்காகவே தனது இறுதிக்காலம் வரை உழைத்தது. இப்பத்திரிகையின் மூலமாக யாழ்ப்பாணத்தில் அச்சமயத்தில் இடம் பெற்ற பொருளாதார நடவடிக்கைகள் பற்றியும், அவை தமிழ் மக்களது வாழ்வியலில் வகித்திருந்த பங்கு பற்றியும், சமகாலத்தில் காணப்பட்ட பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றியும், அத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்கின்ற வழிகள் பற்றியும் செய்திகளைப் பிரசுரித்து வந்தது. அவ்வகையில் அக்கால யாழ்ப்பாண தேசத்தின் பொருளாதாரத்தினது வழிகாட்டியாகப் பேசப்படுகின்ற இப்பத்திரிகையானது யாழ்ப்பாணப் பொருளாதார முன்னேற்றத்தின் அச்சாணியாகவும் விளங்கியதெனலாம்.

**ஈழகேசரியின் தோற்றம்**

1930 ஆம் ஆண்டு காலப்பகுதியினை அடுத்த சுமார் 25 வருட காலப்பகுதியினை அறிஞர்கள் தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் பத்திரிகைக் காலம் என்பர். (சுப்பிரமணியம். 1978, ப.169) இத்தகையதொரு பத்திரிகைக் காலத்தினைத் தனக்குள் உள்ளடக்கிய வகையிலேதான் ஈழகேசரிப் பத்திரிகை வெளிவர ஆரம்பித்தது. தென்னிந்தியாவில் பத்திரிகைக் காலங்களை மணிக்கொடி காலம், சரஸ்வதி காலம் எனக் குறிப்பிடுவதனைப் போன்று ஈழத்திலும் தனக்கென ஒரு காலப்பகுதியினை ஏற்படுத்தி அது சிறிய காலமெனினும் அக்காலகட்டதிலே புதுமைகள், புரட்சிகள் செய்து நினைவில் நிற்பது ஈழகேசரியே. அவ்வகையில் 1930 யூன் 30 இல் தனது வார வெளியீட்டினை முதன் முதலாக ஆரம்பித்த இப்பத்திரிகையானது தொடர்ந்து 1958 வரை 28 வருடங்கள் சிறப்பாகத் தனது பணிகளைச் செய்து வந்தது. இப்பத்திரிகையானது நா. பொன்னையா என்பவரினால் ஆரம்பிக்கப்பட்டு அவருடைய சொந்த அச்சகமான திருமகள் அழுத்தகத்திலிருந்து வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. இது ஒரு வாராந்தப் பத்திரிகையாக இருந்தாலும் கூட அக்காலத் தமிழ் மக்களது சகல துறை வளர்ச்சியிலும் பெரும்பங்கினை ஆற்றியிருந்ததெனலாம்.

யாழ்ப்பாணத்தில் தோற்றம் பெற்ற முதலாவது பிரதேசப் பத்திரிகையாகக் கருதப்படுகின்ற இப்பத்திரிகை அரசியல் சூழலை ஏனைய சூழலிலிருந்து பிரித்துப் பாராமல் பொருளாதார, சமூக, கலை, இலக்கியப்பண்பாட்டுச் சூழலுடன் ஒருங்கிணைத்துப் பார்த்ததென்றே கூறுதல் வேண்டும். எந்த ஒரு அரசியல் கட்சியினது பின்னணி கூட இதற்குக் கிடையாது. (உதயன், 2002 மார்ச்சு 18, ப.03) தொடக்கத்தில் இது ஒரு வாராந்தப் பத்திரிகையாகப் புதன் கிழமைகளில்தான் வெளிவந்தது. பின்னர் இது 1933 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெளிவரத் தொடங்கியது. தொடர்பு சாதன வசதிகள் குறைந்த அக்காலத்தில் ஈழகேசரியின் சேவை அவசியமானதொன்றாகக் காணப்பட்டது. ஈழகேசரி புதினங்களை வெளிப்படுத்துகையில், மிகவும் சிறப்பான முறையில் அதனை விளங்க வைக்கின்ற தன்மை கொண்டதாகக் காணப்பட்டது. புதினங்களில் உள்ளூர் புதினங்களுக்குத்தான் அதிகளவு முக்கியத்துவத்தைக் கொடுத்திருந்தது.

ஈழகேசரி பத்திரிகையானது தனியே யாழ்ப்பாணத்தில் மட்டுமே வாசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டத்தைக் கொண்டிருக்கவில்லை. அது தென்னிலங்கையிலும் கிழக்கு மாகாணம் உள்ளிட்ட இலங்கையின் பெரும்பாலான பகுதிகளிலும் தனது வாசகர்களைக் கொண்டிருந்ததுடன் கடல்கடந்து ,இந்தியா, பர்மா, மலாயா போன்ற நாடுகளிலும் கூட யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் செய்திகளை தெரிவிக்கின்ற ஊடகமாகக் காணப்பட்டது. தமிழர் வாழுகின்ற பகுதிகளிலுள்ள செய்திகளைக் கொழும்பு நிருபர் கடிதம், கிழக்குத் தபால், மலையகச் செய்திகள் போன்ற பல தலைப்புக்களின் கீழ் வெளியிட்டு வந்தது.

**ஈழகேசரியும் யாழ்ப்பாணப் பொருளாதாரக் கட்டமைப்பும்**

யாழ்ப்பாணப் பொருளாதார அமைப்பில் ஈழகேசரிப் பத்திரிகை வெளிவந்த காலப் பகுதியில் விவசாயமே பிரதான இடத்தினை பெற்றிருந்தது. அவற்றில் நெல், மிளகாய், வெங்காயம், புகையிலை, காய்கறிவகைகள், சிறுதானியங்கள், பப்பாசி போன்றன பிரதான இடத்தினைப் பிடித்திருந்தன. மேலும் இப்பத்திரிகை வெளிவந்த காலப்பகுதியில் கைத்தொழில் துறையானது பெருமளவிற்கு விருத்தியடையவில்லையென்றே கூறுதல் வேண்டும். குடிசைக் கைத்தொழில்கள் தேசத்தின் பல பகுதிகளிலும் பரலாகக் காணப்பட்டன. கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த மக்களில் அனேகர் மீனவத் தொழிலைப் பிரதான தொழிலாகக் கொண்டிருந்தனர். இவற்றினைவிட சுருட்டுக் கைத்தொழில், மலையாளப் புகையிலையின் மூலமாகக் கிடைத்த வருமானம், மலாயாவிலிருந்து கிடைக்கப் பெற்ற வருவாய், அரச உத்தியோகம், வியாபார நடவடிக்கைகள், கூலி வேலை போன்றன அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணம் பெற்ற வருவாய் தருகின்ற பிரதான மூலங்களாகக் காணப்பட்டன. எது எவ்வாறாயினும் ஈழகேசரி வெளிவந்த காலப்பகுதியில் (1930 - 58) யாழ்ப்பாணப் பிரதேசத்தினது பொருளாதார நிலையானது உறுதியற்றதாகவே காணப்பட்டது. இத்தகைய உறுதியற்ற நிலையில் திகழ்ந்த யாழ்ப்பாணத்தினது பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புகின்ற பணியில் ஈழகேசரி தன்னையும் ஒருவராக இணைத்துக் கொண்டது. அது தந்த செய்திகள் தமிழ் பேசும் மக்களது உணர்வினைத் தூண்டுகின்ற வகையில் அமைந்திருந்தன. அதில் ஓரளவிற்கு வெற்றியினையும் பெற்றது.

யாழ்ப்பாணப் பிரதேசமானது பல்வேறு வழிகளிலும் முன்னேற்றமடைவதற்கு யாழ்ப்பாண மக்கள் படிப்படியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி 1931 மார்ச்சு 18 இல் வெளிவந்த ஈழகேசரியின் வெளியீடொன்றில் க.வை.நமசிவாயம் என்பவர் எழுதிய கட்டுரையில் பின்வருமாறு சில தகவல்களை அவர் குறிப்பிட்டிருந்தார்.

"நாம் எல்லோரும் சுயநலமே முதன்மையாகக்கொண்டு நாம் நல்லாயிருக்கச் சுகமாக வழிவகைகளிறங்குவோமேயானால் நமது தேசம் ஒருக்காலும் முன்னிலையில் வரமாட்டாது. எங்களால் எங்களது தேசத்திற்கு ஆகவேண்டிய கடமைகளை நாங்கள் செவ்வனே யுணர்ந்து செய்வோமானால் எங்களது தேசம் முன்னேற்றுவதற்கு ஒரு வித ஆட்சேபமுமில்லை. " (ஈழகேசரி, 1931 மார்ச்சு 18, ப.04)

அவ்வகையில் ஈழகேசரிப் பத்திரிகையானது நாட்டினது பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புவதற்கான ஆலோசனைகளை செய்திகளாகவும் பிறர் எழுதிய படைப்புக்களின் வாயிலாகவும் ஆசிரியத் தலையங்கங்களின் ஊடாகவும் மக்களுக்குத் தெரிவித்து வந்தது. இது போன்று சமகாலத்தில் யாழ்ப்பாணத்தினைத் தளமாகக் கொண்டு வெளிவந்த வேறெந்தப் பத்திரிகைகளும் யாழ்ப்பாண தேசத்தினது பொருளாதாரத்தினை உயர்த்துவதற்கான முயற்சியில் அக்கறை கொண்டதாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியவில்லை. அவை தாம் ஆரம்பித்த நோக்கங்களை நிறைவு செய்வதிலேதான் அதிகளவில் கவனத்தினைச் செலுத்தின.

**விவசாயம்**

அக்கால யாழ்ப்பாண மக்களது விவசாய நடவடிக்கைகளில் நெல், மிளகாய், வெங்காயம், புகையிலை, காய்கறிவகைகள் மற்றும் சிறுதானியங்கள் என்பன பிரதான இடத்தினை வகித்திருந்தன. பெரும்போகம், சிறுபோகம், இடைப்போகம் என்ற அடிப்படையில் பெருமளவிற்கு மழை நீரை நம்பியதாக இவர்களது விவசாய நடவடிக்கைகள் அமைந்திருந்தன. அவ்வகையில் விவசாயம் பற்றியும், விவசாய நடவடிக்கைகள் தொடர்பாக விவசாயிகள் எதிர்நோக்கிய சவால்கள் பற்றியும் இப்பத்திரிகையில் செய்திகள் பல காணப்படுகின்றன. இத்தகைய செய்திகள் ஆசிரியர் தலையங்கமாகவும் கட்டுரை வடிவங்களிலும் மக்கள் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் வெளிவந்தன. விவசாயிகளை இப்பத்திரிகையானது கமக்காரர் என்றே அழைப்பதனை அதனது வெளியீடுகள் பலவற்றில் காணலாம்.

யாழ்ப்பாண விவசாயிகளில் அனேகர் ஈழகேசரி வெளிவந்த காலத்தில் எதிர்நோக்கிய முக்கியமான பிரச்சினை நீர் பற்றாக்குறையே, இப்பிரச்சினை அதிகமாகத் தீவுப்பகுதிகளிலே தான் காணப்பட்டது. அக்காலப்பகுதியில் குளங்கள், கால்வாய்கள் போன்றன புனரமைக்கப்படாமல் இருந்தன. எனவே இவற்றினைத் திருத்தி, விவசாயிகளுக்கு வழங்கி, யாழ்ப்பாண மக்களது நீர்ப்பிரச்சினைகளைத் தீர்த்து உதவுமாறு அரசாங்கத்தினைக் கேட்டுப் பல கட்டுரைகள் ஈழகேசரியில் வெளிவந்துள்ளன. இவ்விடயமாகக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதொரு சம்பவம் யாதெனில் நிலாவரைக் கிணற்றிலிருந்து நீரினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு நீண்ட காலமாக யாழ்ப்பாண மக்களால் எடுக்கப்பட்டுவந்த முயற்சியானது 1941 இல் தான் நிறைவேற்றப்பட்டதென்பதே.

மேற்குறித்த விடயமாக பின்வரும் தகவலொன்றினை ஈழகேசரியிலிருந்து பெறமுடிகின்றது.

"யாழ்ப்பாண விவசாய முயற்சியின் சரித்திரத்திலேயே வியாழக்கிழமையானது ஒரு முக்கியமான நாளாகும். நிலாவரைக் கிணற்றிலிருந்து நீர் இறைக்கப்பட்டது. நூறு ஆண்டுகளுக்கு மேலாக விவசாயம் செய்யப்படாமலிருந்த ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசனம் கிடைத்தது" (ஈழகேசரி, 1946 யூன் 16, ப.4B)

மேலும் நிலாவரைக் கிணற்றிலிருந்து மட்டுமன்றி ஊரெழுவிலுள்ள பொக்கனை, மானிப்பாயிலுள்ள இடிகுண்டு என்பனவற்றிலிருந்தும் நீரினைப் பெற்றுக் கொள்ளுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதனை இப்பத்திரிகையின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. அதேநேரத்தில் இத்தகையதொரு முக்கியமான தகவலை யாழ்ப்பாணத்திலிருந்து சமகாலத்தில் வெளிவந்துகொண்டிருந்த எந்தவொரு பத்திரிகையிலும் காண முடியவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. இதேநிலைதான் தென்னிலங்கையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த தமிழ் பத்திரிகைகளிலும் காணப்பட்டது. காரணம் அவையெல்லாம் ஒன்றில் மதப் பிரசாரத்தினையோ அல்லது குறிக்கப்பட்ட மக்களது நலன்களையோதான் கவனத்தில் கொண்டிருந்தன.

**பரவைக்கடல் திட்டம்**

ஈழகேசரிப் பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் பரவலாகப் பேசப்பட்ட மற்றொரு திட்டம் பரவைக்கடல் திட்ட மாகும். அக்காலத்தில் தமிழ் அரசியல் தலைவர்களிலொருவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கிய க.பாலசிங்கம் அவர்களும் அவருடன் சேர்ந்திருந்த சில தலைவர்களும் இவ் விடயமாகப் பெருமளவிற்கு அக்கறை கொண்டவர்களாகக் காணப்பட்டனர். யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலுமுள்ள உப்பு நீரினைச் சுத்த நீராக்குவதே இத்திட்டத்தினது பிரதான நோக்கமாகும். வலிகாமம் கிழக்குப் பகுதியினைச் சேர்ந்த மக்களில் சிலர் மேற்கூறப்பட்ட விடயமாக அக்காலப்பகுதியில் அரசாங்கத்திற்கு மனுவினையும் செய்திருந்தனர். அவ்வகையில் இத்திட்டம் பற்றிய தகவலொன்றினைத் தனது வெளியீடொன்றில் பின்வருமாறு ஈழகேசரிப் பத்திரிகை வெளியிட்டிருந்தது.

"நீண்டகாலமாக ஆலோசனை செய்து வந்த யாழ்ப்பாணப் பரவைக்கடல் திட்டம் சம்மந்தமான வேலை நீர்ப்பாசனப் பகுதியினரால் இவ்வாரம் ஆரம்பிக்கப்படும். வடமராட்சிப் பரவைக் கடலிலுள்ள உப்புத் தண்ணீரை நல்ல தண்ணீர் வாவியாக மாற்றத் தொண்டமானாற்றில் அணைகட்ட பத்து இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. "ஈழகேசரி, 1947 யூலை 06, ப 4A)

1953 இல் அரசாங்கமானது யாழ்ப்பாணக் கடலேரித் திட்ட வேலைகளைத் துரிதப்படுத்தியது. சமகாலப் பகுதியில் இதனது மற்றொரு பகுதி வேலையும் தொடங்கப்பட்டது. ஆனையிறவுப் பரவைக் கடலைச் சுத்தமாக்கி நீர் ஏரியாக்குகின்ற வேலையும் அங்கிருந்து தொண்டமானாறுவரை அமைக்கப்பட்டுள்ள பெரிய வாய்க்காலுக்கான வேலையும் மும்மரமாக அக்காலப்பகுதியில் நடைபெற்று வந்தன. இவற்றின் மூலமாக யாழ்ப்பாணத்தில் மிகப்பெரிய விவசாயப் பிரதேசமொன்றினை உருவாக்குவது அக்கால ஆட்சிபீடத்திலிருந்த அரசினது நோக்கமாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண விவசாயிகளில் பலர் வறியவர்களாகக் காணப்பட்டதனால் அவர்களில் சிலர் தனிப்பட்டவர்களிடம் அதிக வட்டிக்கு பணத்தினைப் பெற்று விவசாயத்திலீடுபடுவதனைத் தடுக்கின்ற நோக்கத்துடன் அரசாங்கத்தினால் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்கின்ற நோக்கத்துடன் " வட இலங்கை ஐக்கிய சங்கங்கள்" என்ற பெயரில் சங்கங்கள் சில ஆரம்பிக்கப்பட்டன. யாழ்ப்பாண விவசாயிகள் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி பூநகரி, கிளிநொச்சி உள்ளிட்ட வன்னிப் பகுதிகளிலும் பெருமளவு காணிகளை உடைமையாகக் கொண்டிருந்தனர். இந்நிலையில் 1942 இல் அரசாங்கத்தினால் யாழ்ப்பாண மக்களுக்குச் சில குறிப்பிட காரணங்களை முன்வைத்து அக்குறிப்பிட்ட பிரதேசங்களிலிருந்து நெல், வைக்கோல் போன்றனவற்றினைக்கொண்டு வருவதற்குத் தடைவிதித்திருத்தது.

எனவே இத்தகைய அரசாங்கத்தினுடைய நடவடிக்கைளுக்கு எதிராகத் தனது கருத்தினை ஈழகேசரியானது பின்வருமாறு முன்வைத்திருந்தது.

"கிளிநொச்சி, பரந்தன் முதலிய இடங்களில் காடுகளை வெட்டி வயல்களாக்குவதற்கு கமக்காரர் செலவிட்ட பணம், அடைந்த சிரமம். அப்படியிருக்க இவர்களை ஊக்கப்படுத்தாமல் அரசு தடைகளை ஏற்படுத்துவது முறையல்ல". (ஈழகேசரி, 1942 ஒக்டோபர் 04, ப.04)

அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் அடிக்கடி ஏற்படுகின்ற உணவுப் பற்றாக் குறையானது அங்கு சாதாரணமாக இடம் பெறுகின்ற நிகழ்வாகவே காணப்பட்டது. இதனால் இப்பற்றாக்குறையினை நிவர்த்தி செய்கின்ற நோக்குடன் அரசாங்கம் அதிகளவு செலவினைச் செய்து இந்தியா உள்ளிட்ட பிற தேசங்களிலிருந்து உணவுப் பொருட்களை இறக்குமதி செய்துவந்தது. அதுமட்டுன்றி அவற்றினைக் கொள்வனவு செய்த விலைகளிலும் பார்க்க குறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலைக்கே மக்களுக்கு விநியோகமும் செய்தது. இந்நிலையினை எப்படியாவது மாற்ற வேண்டுமென விரும்பிய ஈழகேசரிப் பத்திரிகை இவ்விடயமாக அரசாங்கம் மட்டுமே அக்கறையினைச் செலுத்தாமல் யாழ்ப்பாணத்திலுள்ள விவசாயிகளும் தமது பங்கிற்குச் செய்யக் கூடியவற்றினைச் செய்து உள்நாட்டில் உணவு உற்பத்தியினை அதிகரிப்பதற்கான வழிவகைகளைக் கையாள வேண்டுமெனக் கூறுகின்றது. அரிசி உணவினைத் தவிர்த்து மாற்று உணவுகளை உண்ணுதல் வேண்டும், அரச உத்தியோகஸ்தர்களும்தமது ஓய்வு நேரங்களை உணவு உற்பத்திக்குப் பயன்படுத்தலாம் போன்ற ஆலோசனைகளையும் மக்களுக்கு முன்வைக்கின்றது (ஈழகேசரி, 1952 ஆகஸ்ட் 10 ப.14) இவை எல்லாம் 20 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வடஇலங்கை மக்கள் உள்நாட்டு யுத்தத்தின்போது அனுபவிக்க வேண்டி வரலாம் என்ற ஈழகேசரியினது தீர்க்கதரிசனமாகவும் இருந்ததிருக்கலாம். தனது மற்றொரு வெளியீடொன்றில் பொருளாதார மந்த நிலையினை அகற்றுவதற்கு மது விலக்கினை நடைமுறைப்படுத்துவதன் அவசியம் பற்றி எடுத்துரைக்கின்றது. (ஈழகேசரி, 1952 டிசெம்பர் 21. ப.04)

யாழ்ப்பாண தேசத்தினது பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற நோக்கத்தினைத் தனது நோக்கங்களிலொன்றாகக் கொண்டிருந்த இப்பத்திரிகையானது யாழ்ப்பாணத்தில் பல்வேறு காரணங்களினால்அறுவடை குறைகின்றசமயங்களிலெல்லாம் மக்களுக்கு நிவாரணத்தினை வழங்குமாறு கோரிக்கையினை அவ்வப்போது அரசாங்கத்திடம் முன் வைத்து வந்தது. எடுத்துக்காட்டாக 1950 அளவில் யாழ்ப்பாணத்தில் காலநிலை பாதிப்படைந்தமையினால் அறுவடை குறைந்த போது அரசாங்கத்திடம் கமக்காரர்களுக்கு நிவாரணத்தினை வழங்குமாறு இப்பத்திரிகையானது கோரிக்கையினை விட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் கச்சேரியில் கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் விவசாயக் காணிகளை உடைமையாகக் கொண்டவர்களுக்காகக் கரைச்சித் திட்டத்தின் காணிப்பகுதி அதிகாரியினது தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் சில எடுக்கப்பட்டதனை தனது 1941 ஜனவரி 26 வெளியீட்டில் ஈழகேசரி பின்வருமாறு தெரிவித்திருந்தது.

- மந்தைகளின் அபிவிருத்தியினைக் கட்டுப் படுத்தல் வேண்டும்.
- சிறுபோகச் செய்கையினை இல்லாது செய்தல் வேண்டும்.
- தற்போது விருத்தி செய்யப்பட்ட ஒன்பதினாயிரம் ஏக்கர் வயலினைவிட இன்னும் அதிகமான நிலங்கள் மக்களுக்கு உதவ வழி தேட வேண்டும்.

ஆனால் இத்தகைய தீர்மானங்களை வன்மையாகக் கண்டனம் செய்கின்ற ஈழகேசரியானது இத்தகைய முடிவுகள் மேலும் வட மாகாணத்தினது பொருளாதாரத்தினை பாழாங்கிணற்றுக்குள் தள்ளுவதற்கு ஒப்பானதெனத் தெரிவிக்கின்றது (ஈழகேசரி, 1941 ஜனவரி 26, ப.01)

நெல்லினைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலே மிளகாய் உற்பத்தியானது விவசாயத்தில் பிரதான இடத்தினைப் பெற்றிருந்தது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பச்சைமிளகாய் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டது. இத்தகைய உற்பத்தியில் தீவுப்பகுதிகள்தான் முன்னிலையில் காணப்பட்டன. அதேநேரத்தில் காய்ந்த மிளகாயானது நாட்டின்பிறபகுதிகளிலிருந்தும் இறக்குமதியானது. அக்காலப்பகுதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்காயமும் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் செய்கை பண்ணப்பட்டது. அடுத்துப் புகையிலைச் செய்கையும் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தில் பிரதான இடத்தினை வகித்திருந்தது. இது போர்த்துக்கேயரது வருகையுடனேயே நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. (Seneveratne, 1996p. 223) பின்னர் ஒல்லாந்தரது காலத்தில் இது யாழ்ப்பாணத்தினது வருவாயில் பிரதான இடத்தினை வகிக்க ஆரம்பித்தது. பொதுவாக ஈழகேசரியில் விவசாயப் பயிர்கள் தொடர்பான செய்திகள் பரவலாக அடிக்கடி வெளிந்திருந்தாலும் கூட அவற்றில் புகையிலைச் செய்கை பற்றிய செய்திகளே அதிகளவில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**பனைவளம்**

உள்நாட்டு வளங்களில் பனை வளத்தினைப் பாதுகாப்பதற்கான அவசியத்தினையும் ஈழகேசரியானது தனது வெளியீடுகளில் தெரிவித்து வந்தது. அவற்றிலொரு செய்தியா னது பின்வருமானது அமைந்திருந்தது.

“நாட்டினது பொருளாதார நிலையினைச் சீர்படுத்த உதவுங்கள். கல்வி கற்ற உத்தியோகத்தரைத் தேடி நிற்கின்ற மக்கள் ஒவ்வொருகிராமத்திலும்பத்துப்பேர்கொண்ட கூட்டுறவுச் சங்கமொன்றினைத் தாபித்து பனை மரங்களைக் குத்தகைக்குப் பெற்று பதநீர் சேர்த்துப் பனங்கட்டித் தொழிற்சாலை மேற்கொள்ளலாம். (ஈழகேசரி, *1993* மார்சு *12,* ப.*06)*

இவ்வாறு பனை வளத்தினைப் பாது காப்பதன் அவசியத் தொடர்பாகவும் பல் வேறு கட்டுரைகளைத் தனது வெளியீடுகளில் பிரசுரித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. கட்டுரைகளுடன் கவிதைகள், பாடல்கள், துணுக்குகள், நாடகங்கள் போன்றவற்றின் மூலமாகவும் பனை வளத்தினது முக்கியத்துவத்தினை யாழ்ப் பாணத்தவர்களுக்கு ஈழகேசரி உணர்த்தியது.

யாழ்ப்பாணத்திலுள்ள பருத்தித்துறை, ஊர்காவற்துறை, காங்கேசன்துறை, வல் வெட்டித்துறை போன்ற இடங்களிலிருந்து மட்டக்களப்பிற்குச்செல்லுகின்றமரக்கலங்கள் மற்றும் வத்தைகள் என்பன ஏராளமான பனம் பொருட்களைக் கொண்டுசென்றன. இங்குள்ள பனம் பொருட்கள் மட்டக்களப்பு மக்களினால் விரும்பி நுகரப்பட்டன. இவ்வாறு அங்கு செல்லுகின்ற இவை அங்கிருந்து நெல், அரிசி என்பனவற்றினை ஏற்றி வந்தன. ஈழகேசரிப் பத்திரிகை வெளிவந்த காலப்பகுதியில் தம்பலமாகத்தில் உற்பத்தியான நெல்லிற்கு யாழ்ப்பாணத்தில் நல்ல வரவேற்பு காணப் பட்டமை குறிப்பிடத்தக்கது.(ஈழகேசரி, *1941* யூலை *21,* ப.*14)*

இத்தகைய பனை வளமானது தேவையின்றி அழிக்கப்பட்டு வருவதனை ஈழகேசரியானது அவ்வப்போது கண்டிக்கவும் தவறவில்லை. குறிப்பாககல்லோயாக்குடியேற்றத்திட்டத்தின் பொருட்டு அக்காலப்பகுதியில் யாழ்ப் பாணத்திலிருந்து அதிகளவு பனைகள் தறித்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. *1951* இல் இதன் பொருட்டு ஏறத்தாழ *25000* பனைகள் தேவைப்பட்டிருந்தன. இதனால் தென்னிலங்கையினைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து பனை மரங்களை கொள்வனவு செய்ய முற்பட்ட சமயங்களில் இவற்றினை அவர்களுக்கு விற்க முன்வந்த யாழ்ப்பாண மக்களை ஈழகேசரி எச்சரித்தது. அது அராபியர்களுக்குப் பேரிச்சம்பழம் எப்படிப் பிரயோசனமாகக் காணப்படுகின்றதோ அவ்வாறே வறண்ட பிரதேசமாகிய யாழ்ப்பாணத்து மக்களுக்கு பனை மரங்கள் இன்றியமையாதவை எனக் கூறிக் கண்டனம் செய்கின்றது. (ஈழகேசரி, *1951* மார்சு *11,* ப.*01)* மேலும் ஒல்லாந்தரது காலத்திலும் பின்வந்த ஆங்கிலேயரது காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள பனைகள் தறிக்கப்பட்டுப் பருத்தித்துறைத் துறைமுகத்தின் ஊடாகத் தென்னிந்தியாவிற்குக் கொண்டு செல்லப்பட்டு அவை அங்குள்ள ஆட்சியாளர்களினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப் பட்டமைக்கான ஆதாரங்கள் உள்ளன. எனவே பனை மரக்குற்றிகளை ஏற்றுமதி செய்கின்ற வியாபாரமும் யாழ்ப்பாணத்தவர்களினால் ஆங்கிலேயரது காலம்வரை நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

பொதுவாக உணவிற்குத் தட்டுப் பாடென்பது யாழ்ப்பாணத்தில் இரண்டாவது உலக யுத்த காலங்களில் ஏற்பட்டது. அச்சமயத்தில் மக்கள் உள்நாட்டில் பனம் பொருட்களையே அதிகளவில்பயன்படுத்தினர். அச்சமயத்திலும் சரி 1956களில் மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட சண்டைகளின்போதும் சரி யாழ்ப்பாணத்திலிருந்த வர்த்தகர்கள் உருவாக்கிய செயற்கையான தட்டுப் பாட்டினை ஈழகேசரி கண்டிக்கின்றது. இவ்விடயமாக அது கூறுகின்றபோது, மத்திய கிழக்கிலே உருவான சண்டையானது வடபகுதிவரை பரவிவிட்டதோ என்ற பயமானது யாழ்ப்பாணத்து மக்களுக்கு ஏற்பட்டதென்றால் அது யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தகர்களையே சாருமென கூசாமற் சொல்லிவிடலாம் என்கிறது. (ஈழகேசரி, 1966 நவம்பர் 11, ப.01 ) தொடர்ந்து கூறும்போது தீடீர் பணக்காரர்களாக வர விரும்புகின்ற இவர்களது நடவடிக்கைகள் கண்டிக்கத்தக்கன என்ற கருத்தினையும் முன்வைக்கின்றது.

**கைத்தொழில்கள்**

ஈழகேசரி வெளிவந்த காலப்பகுதியில் குடிசைக் கைத்தொழில்கள்யாழ்ப்பாணத்தினது பல பகுதிகளிலும் நடைபெற்று வந்ததுடன், பாரிய கைத்தொழில்கள் தொடங்குவதற்கான ஆரம்ப முயற்சிகள் நடைபெற்றமைக்கான தகவல்களையும் ஈழகேசரி தருகின்றது. ஒரு தேசமானது முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டுமானால் அந்நாட்டில் கைத்தொழிற்துறையானது வளர்ச்சியடைந்திருத்தல் அவசியமென்பது தெரிந்ததே. அக்காலப்பகுதியில் பாரிய கைத்தொழிற்சாலைகள் பல தென்னிலங்கையில் இயங்கி வந்தபோதும் கூட அரசிற்குச் சொந்தமாகக் காணப்பட்ட அவை பெருமளவிற்கு நட்டத்தினையே சமகாலத்தில் கொடுத்துவந்தன. இவ்வாறு அரசிற்குச் சொந்தமான தொழிற்சாலைகள் நட்டத் தினையே கொடுத்து வந்தமையினால் அதனைத் தடுப்பதற்கு அரசாங்கத்துடன் இணைந்து மக்களும் விசுவாசமாக நடந்துகொள்ள வேண்டுமென வலியுறுத்திய இப்பத்திரிகை இந்தியாவிலுள்ள மைசூரில் அரசாங்கத்தின் ஆதரவுடன் பல தொழிற்சாலைகள் சில வருடங்களாக இயங்கி வருவதாகவும் அதற்கு உதாரணங் காட்டுகின்றது. அவ்வகையில் சீமெந்து தொழிற்சாலையானது ஈழகேசரி காலத்தில்தான் யாழ்ப்பாணத்தில் முளைவிட ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

1930 இல் இத்தொழிற்சாலையினை ஆரம்பிப்பதற்கான இடங்கள் பல தெரிவு செய்யப்பட்டபோதும் இறுதியாகக் காங்கேசன்துறையே பொருத்தமான இட மாககத் தெரிவு செய்யப்பட்டு அதற்காக அரசாங்கத்தினால் 2500 ரூபாவும் ஒதுக்கப்பட்டது. இதன் பொருட்டு இங்கிலாந்திலிருந்து உபகரணங்களும் எடுத்துவரப்பட்டிருந்தன. இங்கு உற்பத்தி செய் யப்பட்ட சீமெந்தினை கிழக்குப் பாகிஸ்தானில் உள்ள நிலையமொன்று கொள்வனவு செய்தமை பற்றிய குறிப்புக்களை இப்பத் திரிகை தருகின்றது. அதாவது 8000 தொன் சீமெந்தினைஇலங்கையிடமிருந்து அந்நாடு கேட்டதாக அக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஈழகேசரி, 1951 மார்சு 11, ப.01)

யாழ்ப்பாணத்தினது கைத்தொழிவ்களை விருத்தி செய்வதற்கான பல்வேறு ஆலோச னைகளையும் அவ்வப்போது தனது வெளியீடு களில் ஈழகேசரி தெரிவித்து வந்தது. தென்னந் தும்பு உற்பத்தி, தீப்பெட்டி உற்பத்தி, கண்ணாடி உற்பத்தி போன்ற தொழில்களை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாண மக்களுக்கு எடுத்துக் கூறுகின்றது. வடமாகாணத்தில் 1842இல் 18714நெசவுத்தறிகள் காணப்பட் டதாகவும் 1925 இல் அது 423 தறிகளாக வீழ்ச்சி கண்டதாகவும் புள்ளிவிபரத்துடன் கூறுகின்றது. (ஈழகேசரி, 1931 யூலை 29,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப.01) இப்பத்திரிகையில் யாழ்ப்பாணப் பொருளாதார வீழ்ச்சிக்குப் பல காரணங்கள் அவ்வப்போது கூறப்பட்டாலும் கே.கந்தையா என்பவர் மேற்குறித்த விடயமாக ஈழகேசரியின் ஊடாகத் தனது கருத்தினைக் கூறும்போது, இங்கு நீர்ப்பாசன வசதிகள் குறைவு என்றும் கிழக்கு மாகாணம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதெனவும் வட பகுதியில் உள்ள துறைமுகங்கள் பல திறக்கப்படாமையினையும் பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களாகக் கூறுகின்றார். (ஈழகேசரி 1974 ஏப்ரல் 16, ப. 05)

ஈழகேசரி வெளிவந்த காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து பல சிறிய படகுகள் கிழக்கு மாகாணத்திற்கும் வன்னிக்கும் சென்றுவந்தன. இவை அப்பகுதிகளுக்குப் பனம் பொருட்களைக் கொண்டு சென்று கொடுத்துவிட்டுப் பதிலுக்கு அங்கிருந்து நெல்லினைக் கொண்டு வந்தன. யாழ்ப்பாணத்தினது ஒடியல், பனாட்டு என்பனவற்றுக்கு கிழக்குப் பகுதிகளில் வரவேற்புக்கிடைத்ததுடன், தம்பலகாமத்தில் விளைந்த நெல்லுக்கு யாழ்ப்பாணத்தில் நல்ல மதிப்பு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தில் சுருட்டுக் கைத்தொழில் பிரதான இடத்தினைப் பெற்றிருந்தது. அக்காலப் பகுதியில் இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கும் பிற தேசத்தவர்களுக்கும் யாழ்ப்பாணம் என்றாலே பனையும், சுருட்டும் அதற்கு மூலமான புகையிலையுமே பலரதும் மனதில் தோன்றும், யாழ்ப்பாண மக்களது நீண்டகால குடிசைக் கைத்தொழில்களில் சுருட்டுக் கைத்தொழிலும் ஒன்று. வயது வேறுபாடுகளின்றி பல ஆண்களும் ஈடுபட்ட இக்கைத்தொழிலானது இப்பகுதி மக்களது பிரதான வருமான மூலங்களிலொன்றாகக் காணப்பட்டிருந்தமை அவதானிக்கத்தக்கது. 8 வயதிலிருந்தே இதற்கான பயிற்சிகள் வழங்கப்படும். திறமையும் தேர்ச்சியும் நுட்பமும் பெற்ற தொழிலாளர்கள் பலர் இத்தொழிலை மேற்கொண்டு வந்தனர்.

யாழ்ப்பாணத்தில் அல்வாய், கொக்குவில், கோண்டாவில், வேலனை, அனலைதீவு, இணுவில் தாவடி, சுதுமலை, ஆனைக் கோட்டை, உரும்பிராய், குரும்பசிட்டி போன்ற இடங்களில் புகையிலை உற்பத்தியும் சுருட்டுக் கைத்தொழிலும் சிறப்பாக நடைபெற்று வந்தன. இப்பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்த காலப்பகுதியில் இலங்கையின் மொத்த சுருட்டுக் கைத்தொழிலாளர்களில் 70 சதவீதமானவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்துள்ளனர். (ஈழகேசரி, 1993 மார்சு 10 ப. 14) மேலும் அக்காலப்பகுதியில் இங்கே ஏறத்தாழ 20 இற்கும் மேற்பட்ட சுருட்டு வகைகள் உற்பத்தியாகின என்பதும் குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் புகையிலையின் வருகையானது யாழ்ப்பாணத்தவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே திகழ்ந்தது. ஈழகேசரி வெளிவந்த காலத்தில் பல்வேறு வகையிலான புகையிலையினைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த போதும்கூட இறுதியாக வெள்ளைப் புகையிலையே யாழ்ப்பாணத்தவர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

அவ்வகையில் யாழ்ப்பாணத்தினது அக்காலப் பொருளாதாரக் கட்டமைப்பினை தெளிவாக எடுத்துக்காட்டும் இப்பத்திரிகையானது அச்சமயத்தில் நடை பெற்றுக் கொண்டிருந்த சுருட்டுக் கைத்தொழில் தொடர்பான செய்திகள் பலவற்றினையும் தருகின்றது. அதாவது ஈழகேசரி பத்திரிகை வெளிவர ஆரம்பித்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தினது சுருட்டுக்கைத்தொழிலில் வீழ்ச்சிப் போக்கொன்று காணப்பட்டதனை அது தருகின்ற தகவல்களின் வாயிலாக அறிய முடிகின்றது. அத்தகவல் வருமாறு.

"யாழ்ப்பாண நகர்வாசிகளான நமது சகோதரர் முற்காலந்தொட்டுப் பல ஆண்டுகளாய் முதன்மை பெறவும் முன்னோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராற் புகழப்படவும் முதற் காரணமாய் இருந்த சுருட்டுக் கைத்தொழிலின் தற்கால அதிசய வீழ்ச்சியானது எம்மவரின் சகிக்கரிய அபாயத்திற்குக் காலாயிருக்கின்றது. "(ஈழகேசரி, 1931 மார்ச்சு 18, ப.04)

அக்காலப்பகுதியில் எத்தனையோ குடும்பத்தவர்களது வாழ்வாதாரமாக விளங்கிய இக்கைத்தொழிலின் வீழ்ச்சிக்கு முக்கியமான காரணமாகக் கருதப்படுவது அக்காலப்பகுதியில் பிற தேசங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட் ஆகும். இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட் 5 சதமாகவும் சுருட்டு 1 சதமாகவும் இருந்தாலும் அனேகர் சிகரெட்டினையே விரும்பி வாங்கினர். எனவே இத்தகையதொரு நிலையில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமாயின் யாழ்ப்பாணத்தில் புகையிலைத் தொழிற் சாலையொன்று அமைக்கப்பட்டு அங்கே பலவிதமான சுருட்டுக்கள் உற்பத்தி செய்யப்பட்ட வேண்டுமெனவும் ஈழகேசரி கூறுகின்றது. ( ஈழகேசரி, 1935 மே 20,ப.06)

1933 வரை இலங்கையில் சுருட்டுத் தொழிலுக்காக எவ்விதமான கூட்டுறவுச் சங்கங்களும் அமைக்கப்படவில்லை. என்றாலும் பின்னாளில் ஐக்கிய நாணய சங்கங்களது ஆதரவில் "யாழ்ப்பாண மலையாள புகையிலை வியாபாரச் சங்கம்" என்பது ஏற்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. 1936 இல் "வட இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கம்" என்ற அமைப்பும் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு உருவாக்கப்பட்ட சங்கங்களுக்கு இடையிலும் ஒற்றுமை காணப்படாமையினால் குறிப்பாக வட இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர்களுக்கிடையில் காணப்பட ஒற்றுமையின்மையினால் அதில் பிளவுகள் ஏற்பட்டன. இப்பின்னணியில் யாழ்ப்பாணத்தில் 4 சுருட்டுத்தொழிலாளர் சங்கங்கள் உருவெடுத்தன. அகில இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கம், இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கம், வட இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கம், இலங்கை யாழ்ப்பாணச் சுருட்டுத் தொழிலாளர் சங்கம் என்பவைகளே அவை. இத்தகைய சங்கங்களின் பிளவு பற்றி ஈழகேசரியானது தனது கருத்தினைப் பின்வருமாறு முன் வைத்தது.

" சுருட்டுத் தொழிலாளர் மத்தியில் தோன்றியுள்ள தொழிற்சங்கங்கள் என்ற பெயரில் போட்டி போட்டுக்கொண்டு கிளம்பிய நான்கு ஸ்தாபனங்களும் அவர்களின் பெலத்தினைக் குறைக்கின்றன. இதற்கு இவை அரசியல் கட்சிகளது மூலவேரிலிருந்து கிளம்பியமையே காரணம்". (ஈழகேசரி, 1955 யூலை 10, ப.07)

இறுதியாகச் சொல்லப்பட்ட அகில இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கம் தவிர்ந்த ஏனைய சங்கங்கள் மூன்றும் 1955 இற்குப் பின்னர் தாவடியில் நடைபெற்ற மாநா டொன்றில் இணைந்தன. இதன் தலைவராக எஸ். வைத்தியலிங்கம் என்பவர் தெரிவானார். தற்காலத்தில் இக்கைத்தொழிலின் முக்கியத்துவமானது அந்நிய பொருட்களின் வருகையின் பின்னணியில் மிகவும் குறைந்தவிட்ட தெனலாம். அவ்வகையில் ஈழகேசரியினது காலத்திலும் சரி பின்வந்த காலங்களிலும் சரி யாழ்ப்பாண மக்களது பொருளாதாரத்தில் பல்வேறு வழிகளிலும் செல்வாக்குச் செலுத்தியிருந்த ஒரு கைத்தொழிலாக இதனைக் கருதலாம். இத்தகையதொரு பின்னணியிலேதான் பிற பத்திரிகைகள் தமது வெளியீடுகளில் கொடுக்காத முக் கியத்துவத்தினைச் சுருட்டுக் கைத்தொழிலுக்கு ஈழகேசரி கொடுத்தது மட்டுமன்றி அக்கைத்தொழில் வளர்ச் சியடைவதற்கான பல்வேறு ஆலோசனை களையும் அவ்வப்போது தெரிவித்து வந்தது.

**மலையாளப் புகையிலை வியாபாரம்**

மலையாளப் புகையிலை வியாபாரமென் பது அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவாயினைத் தரக் கூடியதான வெளிநாட்டு வருமான மூலமாகக்காணப்பட்டது. இத்தகைய வியாபாரமானது கேளரப் பகுதியுடனேயே அதிகளவில் நடைபெற்றதன் காரணமாகவே இப்பெயரினைப் பெற்றதெனலாம். இத்தகைய வியாபாரத்தினுடைய தன்மைகள், அதில் ஏற்பட்ட தடைகள், அதற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் போன்றவற்றினை இப்பத்திரிகையானது தெளிவாகத் தருகின்றது.

இத்தகைய வியாபாரத்தின் ஊடாக அரசிற்குக் கிடைத்த வருவாய்கள் தொடர்பாக போர்த்துக்கேயரது ஆட்சியிலிருந்து குறிப்புக்கள் காணப்படுகின்றன. குத்தகைக்காரர்களுக்கு மட்டுமே புகையிலையினை விற்பனை செய்ய வேண்டுமென்று போர்த்துக்கேயரால் 1635 இல் கட்டளையொன்றும் பிறப்பிக்கப் பட்டிருந்தது. மேலும் 1945 இல் புகையிலை வர்த்தகத்தின் மூலமாக 5000 பர்தாக்கள் போர்த்துக்கேய அரசாங்கத்திற்கு வரியாகவும் கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (Abeyasinghe, Tikiri., 1986, p.37) அவ்வகையில் 1610 இல் போர்த்துக்கேயரால் இலங்கையில் விரிவுபடுத்தப்பட்ட இப்புகையிலைச் செய்கையானது யாழ்ப்பாண மக்களின் பொருளாதாரத்தில் ஈழகேசரிக் காலத்தில் குறிப்பிட்டத்தக்க செல்வாக்கினை ஏற்படுத்தியிருந்ததெனலாம்.

17 ஆம் நூற்றாண்டில் புகையிலைச் செய்கை, வியாபாரம், சுருட்டுக் கைத்தொழில் போன்றன இலாபந் தருகின்ற தொழில்களாக காணப்பட்டன. (பத்மநாதன், 2001, ப.71) யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்பட்ட புகையிலையானது தென்னிலங்கைக்கு மட்டுமன்றி சுமாத்திரா மற்றும் இந்தியாவிலுள்ள திருவாரூங்கூருக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. (Bancil., 1971, p.292) இவ்வாறு ஏற்றுமதி செய்யப்பட்ட புகையிலையின் மூலமாகக் கிடைத்த வருவாயினைக் கொண்டுதான் அச்சமயத்தில் யாழ்ப்பாணத்தில் பற்றாக் குறையாகக் காணப்பட்ட அரிசி மற்றும் ஏனைய உணவுப் பொருட்கள் என்பன இறக்குமதி செய்யப்பட்டன எனலாம்.

இத்தகைய மலையாளப் புகையிலை வியாபாரமானது ஆங்கிலேயரது ஆட்சிக் காலத்தின் இறுதியளவில் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தமை பற்றி இப்பத்திரிகையின் ஊடாக அறிய முடிகின்றது. 1950இல் திருவாங்கூரிலிருந்த விவசாயிகள் நிதி நெருக்கடியினை எதிர்நோக்கியதனால் அச்சமயத்தில் யாழ்ப்பாணப் புகையிலையினை நல்ல விலைக்கு அங்கே விற்பனை செய்ய முடியவில்லை. மேலும் அப்பகுதிக்கு சமகாலத்தில்தமிழ்நாட்டிலுள்ள கோயம்புத்து, திருநெல்வேலி ஆகிய இடங்களிலிருந்து புகையிலை அனுப்பப்பட்டதனால் யாழ்ப்பாணத்தவரது புகையிலைக்குப் பலத்த போட்டியும் இருந்தது.

இவ்விடயமானது சமகாலத்தில் வெளிவந்து கொண்டிருந்த இந்துசாதனம் என்ற பத்திரிகையின் வெளியீடொன்றில் எஸ் அருளம்பலம் எழுதிய கட்டுரையில் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது.

"திருவாங்கூரில் தேங்காய் நல்ல நிலையில் விற்கப்பட்ட காலத்தில் எம் புகையிலை அங்கு மனமாக விற்கப்பட்டது. ஆனால் இங்கே வியாபாரம் வீழ்ச்சியடைய மக்கள் பணப் பிரச்சினையினால் சிறந்த நல்ல புகையிலையினை வாங்கி உபயோகிக்க முடியாது போயிற்று. இது மாத்திரமன்றி எமது சொந்தப் புகையிலை வியாபாரிமார் மலையாளப் புகையிலைச் செய்கையில் ஈடுபட்டு யாழ்ப்பாணம் அனுபவிக்கும் முறையைக் காட்டிக் கொடுத்துவிட்டனர். (இந்துசாதனம், 1935 ஆகஸ்ட் 25,ப.06)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப காலங்களில் திருவாங்கூரில் புகையிலையானது சாப்பிடுவதற்காகவே பயன்படுத்தப்பட்டது. இது நோய்களைக் குணப்படுத்த வல்லது என்ற நம்பிக்கையும் திருவாங்கூரில் காணப்பட்டது. இதன் காரண மாகவே யாழ்ப்பாணப் புகையிலையினைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் திருவாங்கூர் அரசாங்கமானது இலங்கை அரசாங்கத்துடன் உடன்பாடொன்றினையும் செய்திருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்படுகின்ற புகையிலையினைச் சேகரிப்பதற்கு கொல்லம், ஆலப்பள்ளி ஆகிய இடங்களிலும் பண்டகசாலைகள் அமைக்கப்பட்டன. ஆரம்பகாலங்களில் அரசாங்கத்தின் பொறுப்பில் இருந்த புகையிலை வர்த்தகத்திற்கு தீர்வையும் இருக்கவில்லை. இருப்பினும் சட்ட விரோதமாகப் புகையிலை திருவாங்கூருக்கு அனுப்பப்பட்டதனால் அவ்வரசாங்கம் இவ்வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு தனியாருக்கு *1864* இல் அனுமதியினை அளித்தது. இக்கட்டத்திலிருந்து தான் இவ்வியாபாரத்தில் தரகுமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தர கர்கள் அரசாங்கத்தினுடைய அனுமதியினைப் பெற்றே சேவையில் ஈடுபட்டனர். *( ஈழகேசரி, 1933 ஜனவரி 01, ப. 08)*

*1864*இல் இருந்து *20* வருடங்களில் யாழ்ப்பாணத்தில் புகையிலை வியாபாரம் விருத்தியடைந்ததுடன் திருவாங்கூர் அரசாங்கத்திற்குத் தீர்வை வருமானமும் இதனால் அதிகரித்தது. *1885* இல் யாழ்ப் பாணப் புகையிலைக்கும் கோயம்புத்தூர் புகையிலைக்கும் கண்டிக்கு விலை *90* ரூபாவா கவே இருந்தது. பின்னர் அது *110* ரூபாவாக உயர்த்தப்பட்டது. *1926* ஆம் ஆண்டு தொடக்கம் ஆங்கிலேய நிறையிலேயே தீர்வை முறைகள் ஏற்படுத்தப்பட்டன. *1931* தொடக்கம் திருவாங்கூருக்கு இறக்குமதி செய் யப்படுகின்ற யாழ்ப்பாணப் புகையிலைக்கு கண்டிக்கு தீர்வையானது *135* ரூபாவாக மாற்றியமைக்கப்பட்டது. அதேநேரத்தில் கோயம்புத்தூர் புகையிலை கண்டிக்கு *110* ரூபாவாகவே தொடர்ந்தும் வழக்கிலிருந்து வந்தது. *(ஈழகேசரி, 1933 ஜனவரி 01, ப.08)*

*1931* இல் மலையாளப் புகையிலை வியாபாரிகளில் சுமார் *300* பேர் வரையானவர்கள் சேர்ந்து கைத்தொழில் அமைச்சருக்கு அச்சமயத்தில் காணப்பட்ட மலையாளப் புகையிலை வியாபாரத்தினுடைய நிலை பற்றித் தெரிவித்து அதனைச் சீர்படுத்த உதவுமாறும் கூறி விண்ணப்பமொன்றினை அனுப்பியிருந்தனர். அதில் கோயம்புத்தூர் புகையிலைக்கும் யாழ்ப்பாணப் புகையிலைக் கும் ஒரேவிதமான தீர்வை விதிக்கப்பட்ட வேண்டுமெனவும் யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்படுகின்ற புகையிலையினை இறக் குமதி செய்வதற்கு கொச்சின் துறைமுகத்தினை திறந்து விடுமாறும் கோரிக்கை விடப்பட் டிருந்தது *( ஈழகேசரி, 1933 யூலை 02, ப.08)*

யாழ்ப்பாண விவசாயிகள் எதிர்நோக்கிய பிரச்சினைகளில் தீர்வை வரிகள் ஒருபுறமிக்க தரகர்களின் கொடுமையானது மறுப்புறத்தில் காணப்பட்டது இவற்றினைவிட புகையிலை பண்டகசாலைக்கு வருகின்ற சமயத்தில் காணப்பட்ட அளவு நிறையிலும் பார்க்க அவை வெளியே எடுத்துச் செல்லப்படுகின்றபோது அவற்றினது நிறையானது குறைவாகவும் காணப்பட்டது. இத்தகைய பிரச்சினைகளை யாழ்ப்பாண மலையாளப் புகையிலை வியாபாரிகள் எதிர்நோக்கியபோதும் இலங்கை அரசாங்கம் இவ்விடயமாக எவ்விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. ஆனால் *1934* இல் மலையாளப் புகையிலை ஐக்கிய வியாபாரச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட நிகழ்வானது இவ்வியாபாரத்தில் ஏற்பட்டதொரு முக்கியமான நிகழ்வாகக் காணப்படுகின்றது. அதுவரை காலமும் வியாபாரிகளது கைகளிலிருந்த இவ் வியா பாரத்தினை இச்சங்கம் ஏற்று நடாத்த முன்வந்தது. இதனால் வியாபாரிகள், தரகர்கள் போன்றவர்களால் ஏற்படுகின்ற தொல்லைகள் ஓரளவிற்குக் குறைவடைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சங்கத்தினது தோற்றந் தொடர்பாக மகிழ்ச்சியடைந்த ஈழகேசரி தனது கருத்தினைப் பலவாறு முன்வைக்கின்றது. அத்துடன் இச்சங்கத்தினுடைய நடவடிக்கைகளைப் பாராட்டுகின்ற ஈழகேசரி இச்சங்கத்தின் மூலமாகப் புகையிலையினை அனுப்பிப் பயனடையுமாறு வியாபாரிகளைக் கேட்டது. இச்சங்கம் தருகின்ற விளம்பரங்களையும் அவ்வப்போது தனது வெளியீடுகளில் வெளியிட்டும் வந்தது.

“கமக்காரர்களுக்கு நிறைந்த நன்மையைச் செய்ய முற்பட்ட சங்கத்தை இப்போதே ஆதரித்து நிற்பது **யாவரதும்** கடனாகும்”. *(ஈழகேசரி, 1934 மே, ப. 08)*

இருப்பினும் இச்சங்கத்தினது வருகையினால் பாதிக்கப்பட்ட பலரும் இதற்கு எதிராகக் குறைகள் கூறினர். அவ்வாறு குறை கூறுபவர்களையும் ஈழகேசரி கண்டிக்கத் தவறவில்லை. அதேநேரத்தில் திருவாங்கூர் அரசாங்கம் புகையிலையின் வரிகளை உயர்த்தியமையினை விமர்சிக்கவும் தயங்கவில்லை. எது எவ்வாறாயினும் மலையாளப் புகையிலை வியாபாரம் ஆரம்பித்த காலத்திலிருந்து யாழ்ப்பாணத்தில் அது ஒரு உறுதியற்ற வியாபார நடவடிக்கையாகவே காணப்பட்டது. குறிப்பாக அதது தனது உள்நாட்டு உற்பத்தியினை அதிகரிக்கின்ற நோக்கத்துடன் திருவாங்கூர் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளே இத்தகைய நிலைக்குக் காரணமெனலாம்.

யாழ்ப்பாணத்தில் சாய்ப்புச் சட்டம் அமுல் படுத்தப்படுதல் வேண்டுமெனக் கோரி கடைகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் பலர் கிளர்ச்சியொன்றில் ஈடுபட்டதாக இப்பத்திரிகையில் தகவலொன்று காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள கடைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களில் அநேகர் இத்தகைய சட்டத்தினை வரவேற்கின்றார்கள் எனவும் அதற்கு யாழ்ப்பாணப் பட்டின சங்கத்தினர் எவ் விதமான பதிலையும் தரவில்லையெனவும் கூறி தொழில் மந்திரிக்கு மேற்குறித்த விடயமாகவும் மனுவொன்றினையும் அனுப்பியிருந்தனர். *(ஈழகேசரி, 1941 யூன் 06, ப.01)* மேலும் அக்காலப்பகுதியில் இத்தகைய சட்டம் வருவதனை அநேகமான முதலாளிகள் ஆதரித்தமையினையும் அறிய முடிகின்றது.

**சுதேசியம்**

யாழ்ப்பாணத்தினது பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற அக்கறை கொண்டிருந்த இப்பத்திரிகையானது சுதேசியத்திலும் தனது கவனத்தினைச் செலுத்தியது. அந்நியப் பொருட்களைப் பகிஸ்கரிப்பதன் மூலமாக வெளிநாடுகளுக்குச் செல்லவிருக்கின்ற பணத்தினைத் தடுத்து நாட்டினது பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சியிலும் அக்கறை காட்டியது. எடுத்துக்காட்டாக மண்ணெண்ணை அந்நியரது என்பதனால் அவ்விளக்கினைப் பாவிப்பதனை நிறுத்தி பதிலுக்குத் தேங்காய் எண்ணையினை உள்ளூரிலிருந்து பெற்றுப் பயன்படுத்தமாறு கூறுகின்றது. ஆபத்து, அருவருப்பு இன்மை, செலவுச் சுருக்கம், நீண்ட நேரப்பயன்பாடு என்பனவற்றினை இதற்கான காரணங்களாகக் கூறுகின்ற இப்பத்திரிகையானது மனையாளை மறுத்து மற்றொரு மாதை மணப்பதாக இது ஒத்துள்ளதாகக் கூறுகின்றது. *(ஈழகேசரி, 1930 செப்ரெம்பர் 24, ப.03)*

மேலும் இப்பத்திரிகை இறக்குமதி செய்கின்ற ஆடம்பரப் பொருட்களாக சீனி, சிகரெட், மண்ணெண்னை என்பனவற்றினைக் கருதி அதனது இறக்குமதிகளுக்குத் தடை போடவும் அரசினைக் கேட்டிருந்தது. யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசினது நோக்கங்களிலொன்றாகவும் அந்நியப் பொருட்களைப் பகிஸ்கரிப்பதென்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டமையினால் உரும்பிராயில் உள்ள கடையொன்றுக்குச் சென்ற இளைஞர்கள் சிலர் 1931 ஆகஸ்ட் 1 இல் அங்கிருந்த சிகரெட், பீடி போன்றவற்றினைக் கொள்வனவு செய்து நாற்சந்தியில் எரித்த சம்பவத்தினையும் ஈழகேசரி தருகின்றது. (ஈழகேசரி, 1931 ஆகஸ்ட் 05, ப.03) அதுமட்டுமன்றி இவற்றினது கொள்விலையினைப் பெற்றுக்கொண்ட கடையினது உரிமையாளர்கள், இனியொரு போதும் அவற்றினை விற்பனை செய்வதில்லையெனவும் உறுதியெடுத்துக் கொண்டனர். ஆடம்பரப் பொருட்களது பகிஸ்கரிப்பினை மேற்கொள்ளுவதற்குப் பெண்களே சிறந்தவர்களென அவர்களை அடையாளப்படுத்துகின்ற இப்பத்திரிகை யானது அதற்கான காரணத்தினைப் பின் வருமாறு முன்வைக்கின்றது.

"இப்பிரதேசப் பொருட்களை எமது நாட்டிலிருந்து அப்புறப்படுத்திவிட வேண்டுமென்னும் விரதத்தைப் பெண்கள் கைக்கொண்டு அதற்காக உண்மையாக உழைப்பாளர்களாயின் எம் நாட்டிலிருந்து வருடா வருடம் வெளியே போகும் கோடிக்கணக்கான பொருள் இத்தீற்குள்ளயே தங்கும்." (ஈழகேசரி, 1931 யூலை 08, ப.01)

**கூட்டுறவு இயக்கம்**

யாழ்ப்பாண மக்கள் உன்னத நிலையினைப் பொருளாதாரத்தில் எட்ட வேண்டுமாயின் அதற்கு கூட்டுறவு இயக்கத்தின் விருத்தியானது உயிர் போன்றதென்ற கருத்தினை தனது ஆசிரியத் தலையங்கமொன்றில் ஈழகேசரி முன் வைக்கின்றது. நாடுகள் பலவற்றினது தொழில் விருத்திக்கும் செல்வப் பெருக்கிற்கும் இதன் பணியானது அளப்பரியதெனத் தொடர்ந்து இவ்விடயமாக மேலும் கூறுகின்றது. தொடர்ந்து கூறும்போது, கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படையான நோக்கங்களையும் கொள்கைகளையும் இன்னும் நம்மவர் உள்ளபடி அறிந்து கொள்ளவில்லை. வியாபாரத்துடன் தொடர்பான கூட்டுறவுப் பண்டகசாலைகள் தமது கடமையினை சரிவரச் செய்வதில்லை. அவற்றினை நடாத்துகின்ற அதிபர்கள், நிர்வாக சபையினர் இவ்விடயமாகப் போதிளயவு அக்கறையினைக் காட்டுவதில்லை. இதனால் அதில் அளவு கடந்த தவறுகள், ஊழல்கள் என்பன காணப்படுகின்றன. கூட்டுறவுப் பண்டகசாலைகள் உரிய முறையில் நன்கு நடாத்தப்படின் சுயநலப் புலிகளுக்கும் கொள்ளை இலாபக்காரர்களுக்கும் இடமேது. ஐரோப்பாவில் தொழில் நிலையங்கள் மிக்க விருத்தியும் பெருமையும் அடைவதற்கு அத்தேச மக்களது கடமையின் திறமையும் நேர்மையுமே முக்கியமான காரணம். எனவே அவர்களை நாமும் ஏன் பின்பற்றக் கூடாது? பின்பற்றி ஏன் நாட்டினை முன்னேற்ற முடியாது." (ஈழகேசரி 1953 நவம்பர் 01, ப. 04)

**நிறைவுரை**

ஈழகேசரிப் பத்திரிகை வெளிவந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பிரதேசமானது முழுக்க முழுக்க விவசாயப்பிரதேசமாகவே காணப்பட்டது இதனால் அக்காலப்பகுதியில் விவசாயத்தில் எதிர்நோக்கப்பட்ட பிரச்சினைகள், எடுக்கப்பட்ட தீர்வுகள், அக்காலக் கைத்தொழில் நிலை, அது வளர்க்கப்பட்ட வேண்டியதன் அவசியம், சுதேசியம் பற்றிய தகவல்களையெல்லாம் இப்பத்திரிகையின் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது. அதுமட்டுமன்றி அச்சமயத்தில் உறுதியற்ற தன்மையில் சென்று கொண்டிருந்த யாழ்ப்பாண தேசத்தினது பொருளாதாரத்தினை முன்னேற்றுவதற்கான ஆலோசனைகளையும் இப்பத்திரிகை தனது வெளியீடுகளின் மூலமாகத் தெரிவித்தது. பொதுவாக அக்காலப்பகுதியில் தோற்றம் பெற்ற பத்திரிகைகளில் அனேகமானவை மதப் பிரசாரத்தினை முதன்மைப் படுத்தியவைளாகவே காணப்பட ஈழகேசரி அவற்றிலிருந்து விலகி நின்று தேசத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிக்குத் தேவையான கருத்துக்களையும் முற்போக்கான சிந்தனைகளையும் தனது வெளியீடுகளில் வெளியிட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது. அக்கால ஏறத்தாழ முப்பது வருடகால யாழ்ப்பாணத்தினது பொருளாதார நிலையிளைஅறிந்தகொள்ள விரும்புகின்ற எவரும் இப்பத்திரிகையினை ஒதுக்கிவிட்டுச் செல்ல முடியாததென்பதே உண்மை. இது தருகின்ற தகவல்கள் எல்லாமே மூலமான தகவல்கள். அவ்வகையில் தனதுகால (1930- 1958) யாழ்ப்பாணத்தினது பொருளாதார நிலையினைப் படம் பிடித்துக் காட்டுகின்ற வகையில் இதனது பணியானது அளப்பரியதெனலாம்.


**உசாத்துணைப் பட்டியல்**

**தமிழ்**

1. ஆனந்தராஜ்.ந., (2002). " சுதந்திரத்திற்குப் பின் ஈழத்தில் தமிழ் பத்திரிகைத்துறையின் வளர்ச்சி ஒரு நோக்கு", தமிழ் இலக்கியப் பெருவிழா, கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, கொழும்பு.
2. சுப்பிரமணியம் .நா., (1978) ,ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம், முத்தமிழ் வெளியீடு, முள்ளியவளை.
3. பத்மநாதன், சி., ( 2001) இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும், குமரன் புத்தக இல்லம், சென்னை - கொழும்பு. 2001.

## English

1. Bancil, P., (1971), Ceylon Agriculuture, Dhanaptrai and son, Delhi.
2. Seneveratne, S., (1996) Field Crop of Ceylon, Lake House Investment Ltd. Colombo.

**பத்திரிகைகள்**

1. அருளம்பலம், எஸ்., "சுருட்டு வியாபாரம்" , இந்துசாதனம் சைவபரிபாலன சபை, வண்ணார்பண்ணை, 1935, ஆகஸ்ட் 22.
2. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1930 செப்ரெம்பர் 24.
3. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1931 மார்ச்சு 18.
4. நமசிவாயம், கவை., "நமது தேசம் நன்னிலை அடைவதற்கு நாம் செய்ய வேண்டியதென்ன" ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1931 மார்சு 18.
5. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1931 மார்சு 18.
6. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1931 யூலை 08.
7. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1931 யூலை 21.
8. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1931 ஆகஸ்ட் 05.
9. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1933 ஜனவரி 01.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1933 மார்சு 10.
11. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1933 மார்சு 12.
12. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1933 யூலை 02.
13. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1934 மே 13.
14. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1935 மே 20.
15. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1941 ஜனவரி 26.
16. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1941 யூன் 06.
17. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1941 யூலை 21.
18. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1942 ஒக்ரோபர் 04.
19. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1942 யூன் 16.
20. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1946 நவம்பர் 11.
21. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1947 ஏப்பிரல் 06.
22. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1947 யூலை 06.
23. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1951மார்சு 11.
24. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1951மார்சு 11.
25. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1952 டிசெம்பர் 02.
26. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1953 நவம்பர் 01.
27. ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1955 யூலை 03.
28. உதயன், உதயன் பப்ளிகேசன்ஸ், யாழ்ப்பாணம், 2002 மார்ச்சு 18.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்டத்தில் காலநிலை மாற்றமும் தணிப்பு நடவடிக்கைகளும்

நா.பிரதீபராஜா

**ஆய்வுச்சுருக்கம்**

காலநிலை மாற்றம் என்பது உலகின் முக்கியமான பேசு பொருளாக மாறியுள்ளது. காலநிலையின் அனைத்து கூறுகளிலும் தன்னுடைய நிலைத்திருப்பை கொண்டிருக்கின்ற யாழ்ப்பாண மாவட்டமும் காலநிலைமாற்றத்தினையும் அதன் பாதிப்புக்களையும் எதிர்கொண்டுள்ளது.யாழ்ப்பாணமாவட்டத்தின் காலநிலை மாற்றத்தினை அறிந்து கொள்வதற்காக மழைவீழ்ச்சி மற்றும் வெப்பநிலையில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் பற்றி அறிந்து கொள்ளும் நோக்குடன் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தின் மழை அவதான நிலையங்களில் இருந்து ஐம்பத்தைந்து வருட காலத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட மழைவீழ்ச்சி வெப்பநிலைத் தரவுகள் சராசரி நியம விலகல் மற்றும் புவியியல் தகவல் ஒழுங்கு முறை என்பனவற்றை பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன. யாழ்ப்பாண மாவட்டத்தின் மழையின் செறிவில் ஏற்பட்டுள்ள மாற்றம் ஒரு பருவ வறட்சியினையும் ஒரு பருவ வெள்ளத்தினையும் இப்பிரதேசத்தில் ஏற்படுத்துகின்றது. அத்துடன் மழை நாட்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளதுடன் நவம்பர் ௨0ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் ௨0ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாவட்டத்தின் மொத்த மழைவீழ்ச்சியில் 80% ஆன மழைவீழ்ச்சி கிடைப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. ஆண்டுச் சாரசரி வெப்பநிலை 0.0௨5° C இனால் அதிகரித்துள்ளதுடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்மேல் பருவக்காற்று காலத்தில் கிடைக்கும் சராசரி வெப்பநிலை 0.0௪1°C இனால் அதிகரித்துள்ளது. இரவில் அளவீடு செய்யப்படுகின்ற இழிவு வெப்பநிலையின் அளவு 0.038 °C இனால் அதிகரித்துள்ளதுடன் சாரீரப்பதனின் அளவும் குறைவடைந்துள்ளது. மேலும் ஆவியாக்கத்தின் விகிதம் 10mm அதிகரித்துள்ளதுடன் காற்றின் திசை மற்றும் வேகம் எதிர்வு கூற முடியாத அளவுக்கு குழப்பம் அடைந்துள்ளது. வினைத்திறன் மிக்க நடவடிக்கைகள் மூலம் இக்காலநிலை மாற்றப் பாதிப்புக்களை தணிக்க முடியும். என்பதுடன் ஒருங்கிணைந்த உறுதியான செயற்பாடுகள் எதிர்காலப் பாதிப்புக்களை குறைக்கவல்லன.

**அருஞ்சொற்கள் :** காலநிலை மாற்றம், தணிப்பு நடவடிக்கைள், பாதிப்புக்கள், யாழ்ப்பாண மாவட்டம் மற்றும் ஒருங்கிணைந்த செயற்பாடுகள்.

## 1. அறிமுகம் (Introduction)

காலநிலை மாற்றம் என்பது உலகின் அனைத்து சூழல் பிரச்சினைகளினதும் ஒட்டுமொத்த விளைவே ஆகும். எம்மில் அதிகமானோர் கற்பனையான மற்றும் மிகைப் படுத்தப்பட்ட விடயம் என எண்ணியிருந்த காலநிலை மாற்றம் இன்று எம் கண்முன்னே எமக்கு பல பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. எனவே இக்கட்டுரை காலநிலை மாற்றம் அதனுடைய தாக்கம் மற்றும் அதனைத் தணிப்பதற்கான நடவடிக்கைகள் பற்றிய விடயங்கள் ஆராய்வதாக உள்ளது.

காலநிலை மாற்றம் என்பது வானிலை மூலக்கூறுகளான (weather elements) மழை வீழ்ச்சி, வெப்பநிலை, ஈரப்பதன், ஆவியாக்கம், வளிமண்டல அமுக்கம் போன்றவற்றில் ஏற்படுகின்ற நீண்ட கால மாற்றம் எனினும் வெப்பநிலை மாற்றமே ஏனைய மூலக்கூறுகளின் மாற்றத்துக்கு பிரதானமான காரணமாக அமைகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கையின் அனைத்து அம்சங்களும், காலநிலைக் காரணிகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியாகத் தொடர்புபட்டுள்ளன (Piratheeparajah. N 2016) விவசாயம் கடற்றொழில் போன்ற பொருளாதார நடவடிக்கைகள் மட்டுமன்றி மக்களின் அன்றாட அசைவுகள் போன்றவற்றினையும் தீர்மானிக்கின்ற சக்திகளாக இவை உள்ளன. மேற்படி காலநிலைக் காரணிகளின் மாற்ற நிலைமைகள் மக்களின் அன்றாட வாழ்வில் பல பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. (Nazran Baba, 2010) உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுவரும் காலநிலை மாறுதல்களைப் பொறுத்த வகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டினது காலநிலை தன்மைகளும் மாறிக்கொண்டு வருகின்றன. இதனால் மாற்றங்களை அறிந்து கொள்வதற்கு உதவியாகத் தற்போதுள்ள காலநிலைப் போக்குகளை அறிந்து கொள்ள வேண்டிய தேவை அதிகமாகவே உள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாடு இலங்கையின் ஏனைய பகுதிகளுடன்ஒப்பிடும்போது வேறான காலநிலைப் பண்புகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. ஒரு பருவ வரட்சியையும் ஒரு பருவ ஈரத்தையும் கொண்டதான யாழ்ப்பாணக் குடாநாட்டின் காலநிலையில் பல்வேறு புவியியல் காரணிகள் செல்வாக்குச் செலுத்தினாலும், இந்திய உபகண்டம் (Indian sub continent) மற்றும் வங்காளவிரிகுடாவின் (Bay of Bengal) மிகப் பரந்த கடற்பகுதி என்பன யாழ்ப்பாணக் குடாநாட்டின் காலநிலையில் பெரும் செல்வாக்கினைச் செலுத்துகின்றன. (Piratheeparajah. N & Rajendram. K, 2015) விளாடிமிர் கெப்பன் (Wladimir Koppen, 1846-1940) என்பவரின் காலநிலைப் பாகுபாட்டில் உலர் கோடை உப அயன (The Dry Summer Sub Tropical- Csa, Csb) காலநிலைப் பாகுபாட்டிற் கான காலநிலைப் பண்புகளைக் கொண்ட யாழ்ப்பாணக் குடாநாட்டின் காலநிலை மாற்றத்தினை அறிந்து கொள்வதனூடாக தணிப்பு நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்க முடியும்.

## ஆய்வின் நோக்கங்கள் (Objectives of the Resarch)

இவ்வாய்வின் பிரதான நோக்கம் கடந்த 55 ஆண்டு காலமாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் காலநிலை மாற்றப் போக்கினை அறிந்து கொள்வதாகும். இதன் உபநோக்கங்களாக யாழ்ப்பாண மாவட்ட மழை வீழ்ச்சியின் கால ரீதியான மாறுதல்களையும், மழை நாட்களின் போக்கினையும் ஆண்டு ரீதியான வெப்பநிலைப் போக்குகள் மற்றும் மாத ரீதியான வெப்பநிலை மாற்றங்களையும் அறிந்து கொள்வதாகும்.

## தரவுகளும் பகுப்பாய்வும் (Data and Analysis)

இவ்வாய்வுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தின் வெப்பநிலை, மழைவீழ்ச்சி தொடர்பான தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 1960 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட மழைவீழ்ச்சி அளவுகள், மழைநாட்கள் மற்றும் தாழமுக்கம், புயல் சூறாவளி போன்ற தரவுகள் மாத ரீதியாகவும் ஆண்டு ரீதியாகவும் பெறப்பட்டன. மேலும் மாதச் சராசரி வெப்பநிலை, ஆண்டுச் சராசரி வெப்பநிலை போன்ற தரவுகளும் 55 வருடங்களுக்குப் பெறப்பட்டன. யாழ்ப்பாண மாவட்டத்தில் பல மழை அவதானிப்பு நிலையங்கள், கடந்த காலத்தில் செயற்பட்டுள்ளன. அவற்றில் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே மழைவீழ்ச்சி அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டன. எனவே அவற்றினுடைய தரவுகளும் இவ்வாய்வுகளுக்கு பெறப்பட்டன. அந்த வகையில், நெடுந்தீவு, புங்குடுதீவு, வேலணை, நயினாதீவு, ஊர் காவற்றுறை, வட்டுக்கோட்டை, குருநகர், திருநெல்வேலி, கோண்டாவில், அச்சுவேலி, காங்கேசன்துறை, மணற்காடு, சாவகச்சேரி, பருத்தித்துறை மற்றும் மிருசுவில் போன்ற இடங்களில் பதிவு செய்யப்பட்ட மழைவீழ்ச்சித் தரவுகள் பெறப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் திருநெல்வேலி விவசாய வானிலை அவதான நிலையத்தில் இருந்தும், நயினாதீவு மழைவீழ்ச்சி அவதான நிலையத்தில் இருந்தும் ஆகக்கூடிய காலத்துக்கான மழைவீழ்ச்சி தரவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

வெப்பநிலைத் தரவுகள் தனித்து திருநெல்வேலி விவசாய வானிலை அவதான நிலையத்தில் இருந்து மட்டுமே பெறப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நிகழ்ந்த யுத்த அனர்த்த த்தினால் சில ஆண்டுகள் மற்றும் சில மாதங்களில் வானிலை அவதானிப்புக்கள் (weather observation) இடம் பெறவில்லை. இதனால் தவறவிடப்பட்ட தரவுகளுக்காக மாதச் சராசரி மற்றும் ஆண்டுச் சாரசரி முறைகள் பாவிக்கப்பட்டுள்ளன. அதாவது ஒரு குறிப்பிட்ட ஆண்டின் குறிப்பிட்ட மாதத் தரவு இல்லையெனின் அதற்கு முன் மற்றும் பின் ஆண்டுகளின் அந்தந்த மாதச் சராசரிகள் கூட்டப்பெற்று இரண்டால் பிரிக்கப்பட்டு வரும் பெறுமானம் தரவு இல்லாத மாதச் சராசரியாக கணிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அருகாமைநிலை(Nearing Station) முறைமையை இதில் பிரயோகிக்க முடியவில்லை. காரணம் அருகாமை நிலையம் 06km க்கு அப்பால் அமைந்திருக்கின்றமையாகும்.

தரவுகள் விபரணப் புள்ளிவிபர முறையைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. (MicroSoft Excel Work Sheet இனைப் பயன்படுத்தி சராசரி நியமவிலகல் (Standard Deviation) முறை மூலம் வெப்பநிலை மற்றும் மழைவீழ்ச்சி மாறுபாடுகள் அறியப்பட்டு உள்ளன. மேலும் சில பகுப்பாய்வு முடிவுகளை எளிதில் விபரிப்பதற்காக Micro Soft Excel இனைப் பயன்படுத்தி உருக்களாகவும் அட்டவணைகளாகவும் மாற்றப்பட்டுள்ளன. மேலும் இடம்சார் விபரங்களைப் படமாக்குவதற்கு புவியியல் தகவல்முறை (Geographic Information System ) பயன்படுத்தப்பட்டுள்ளது. இடஞ்சார்ஒப்பீட்டு படங்களுக்காகவும் வட மாகாணத்தின் வேறு சில வானிலை அவதான நிலையங்கள் மழைவீழ்ச்சி மற்றும் வெப்பநிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. வெப்பநிலை மற்றும் மழைவீழ்ச்சி தொடர்பான தரவுகள் ஒப்பீட்டுக்காக வடமாகாணத்தின் ஏனைய சில வானிலை அவதான நிலையங்களின் தரவுகள் பயன்படுத்தப்பட்டு வரை படமாக்கப்பட்டுள்ளன. இதற்காக அந்த நிலையங்களின் அகலாங்கு, நெட்டாங்கு தரவுகள் பெறப்பட்டு அவற்றின் அமைவிடங்கள் நிலையப்படுத்தப்பட்டு அந்த நிலையங்களின் இடைவிலகல் முறைமையில் கணிக்கப்பட்ட வெப்பநிலை மழைவீழ்ச்சி முடிவுகள் படமாக்கப்பட்டன. இதற்கு Interpolation முறையானது kinging முறைமூலம் மேற்கொள்ளப்பட்டு பகுப்பாய்வுப்படங்கள் பெறப்பட்டன.

## முடிவுகள் (Result)

### மழைவீழ்ச்சிப் போக்குகள் (Trends of rainfall)

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியின் பெரும்பகுதி வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிக் காற்றினாலேயே கிடைக்கின்றது. இதனைவிட அயன இடை ஒருங்கல் வலயத்தின் விரிவாக்கம், மேற்காவுகைச் செயற்பாடு சூறாவளி மற்றும் அயனக் குழப்பங்கள் என்பனவற்றினாலும் இப்பிரதேசம் மழையைப் பெறுகின்றது. எனினும் நவம்பர் தொடக்கம் பெப்ரவரி வரையானகாலப்பகுதிகளிலேயே இப்பிரதேசம் தனது மொத்த மழைவீழ்ச்சியில் 80% இற்கு மேற்பட்ட மழையினைப் பெறுகின்றது. இதனைவிட அயன இடை ஒருங்கல்வலயத்தின் விரிவாக்கம், மேற்காவுகைக் காலங்களிலும் இடைப் பருவப் பெயர்ச்சி (Inter Monsoon) காலங்களிலும் 15% இற்கு மேற்பட்ட மழை வீழ்ச்சியைப் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணக் குடாநாட்டு மழைவீழ்ச்சி ஆண்டுதோறும் வேறுபட்ட தன்மைகளைக் கொண்டு அமைந்துள்ளது. இதற்குப் பருவகால ரீதியாக ஏற்பட்டு வரும் மாறுதல்களும் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுவரும் காலநிலை மாற்றங்களுமே காரணமாகும்.

### ஜனவரி தொடக்கம் பெப்ரவரி வரையான சராசரி மழைவீழ்ச்சி (Average rainfall from January to February)

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆண்டு ரீதியாகக் குறிப்பிட்ட மாதங்களில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியின் அளவு குறைவடைந்து கொண்டு செல்கின்ற நிலைமையைக் காணலாம். இந்தவகையில் 1930 ஆம் ஆண்டு தொடக்கம் 1960 வரையில் ஜனவரிமாத சராசரி மழைவீழ்ச்சி 91.2 mm ஆகக்காணப்பட்டது. இது 1961 - 2015 வரையான காலப்பகுதியில் 67.1 mm ஆகக்குறைவடைந்துள்ளது.

மேலும் 2000 - 2008 வரையான காலப்பகுதியில் இது 89.7 mm ஆகக் காணப்பட்டுள்ளது. 2000 - 2008 வரையான காலப் பகுதியில் 2002 ஆம் ஆண்டு 144.5 mm மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. ஆனால் 2004 ஆம் ஆண்டியிலிருந்து ஜனவரியில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியின் அளவு குறைவாகவே உள்ளது. இதற்கு வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிக் காற்றினது செல்வாக்கு டிசம்பர் மாதத்தின் பிற்பகுதியிலேயே வலுவிழந்து காணப்படுவது ஒரு காரணமாக இருந்தாலும், இக்காலப்பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டினைச் சூழவுள்ள கடல்களில் காணப்படும் வெப்ப மாற்றங்களும் காரணமாகும்.


ஆனால் பெப்ரவரி மாதத்தில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சி அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. 1931 - 1960 வரையான காலப்பகுதியில் 34.8 mm மழைவீழ்ச்சியும் 1961 - 1991 வரையான காலத்தில் 39mm மழைவீழ்ச்சியும், 200 - 2009 வரையான காலத்தில் 42.7mm மழைவீழ்ச்சியும், சராசரியாக கிடைத்திருப்பதனைக் காணலாம். பெப்ரவரியின் பிற்பகுதிகளில் உகைப்புச் செயன்முறையினால் (Convectional Process) கிடைக்கும் மழைவீழ்ச்சியின் அளவு அதிகமாகவிருப்பதுடன் ஜனவரி மாதப் பிற்பகுதியில் அதிகரித்து வருகின்ற வெப்பநிலையினால் வங்காள விரிகுடாவில் ஏற்படுகின்ற தாழமுக்கச் செயற்பாடுகள் (Low pressure) யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு கிடைக்கின்ற மழைவீழ்ச்சியின் அளவை அதிகரிக்கச் செய்துள்ளன எனலாம். எனினும் கடந்த 2000 ஆம் ஆண்டிலிருந்து ஜனவரி மற்றும் பெப்ரவரியில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியில் நிச்சயமற்ற தன்மை (Uncertaintes) காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

### மார்ச் மற்றும் ஏப்பிரல் மாத மழைவீழ்ச்சி (Average rainfall from March to April)

மார்ச் மாதத்தினை பொறுத்தவரையில் 1930 தொடக்கம் 2010 வரை சராசரியாக 56.8 mm மழைவீழ்ச்சியே காணப்படுகின்றது. இதற்குப் பெரும்பாலும் மார்ச்மாதம் வரண்ட காலப்பகுதியாகவும், வடகீழ்" மொன்சூன்" பின்வாங்கு காலமாகவும் (Retreat of the monsoon) காணப்படுவதே காரணமாகும். குறிப்பிட்டத்தக்கது. இந்தவகையில் சில ஆண்டுகளின் மார்ச் மாதங்கள் மழையற்ற காலமாகவே காணப்பட்டுள்ளன. 1987 மார்ச் இல் 00 mm மழைவீழ்ச்சியும், 1991 மார்ச் இல் 1.4 mm மழைவீழ்ச்சியும் 1999ல் 2.6 mm மழைவீழ்ச்சியும் 2015 ஆம் ஆண்டு மார்ச்சில் 00mm மழைவீழ்ச்சியும் கிடைத்துள்ளது. ஆனால் 2008 ஆம் ஆண்டு மார்ச்சில் அயன இடை ஒருங்கல் செயற்பாட்டினால் (Inter Tropical Covergence Proces) ஏற்பட்ட தாழமுக்கத்தின் காரணமாக மார்ச் முதலாம் திகதியில் இருந்து 23 ஆம் திகதி வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மூலம் தரவுப் பகுப்பாய்வு 2016

243.1 mm மழைவீழ்ச்சி கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கமாகும். அதிலும் 2008 மார்ச் 20 ஆம் திகதி 47.4 mm மழை வீழ்ச்சி கிடைத்துள்ளது. கடந்த 40 வருடங்களாக மார்ச் மாதத்தில் கிடைத்த மழைவீழ்ச்சியில் 2008 மார்ச் மாதத்திலேயே அதிகளவான மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது.

அடுத்து ஏப்பிரல் மாதத்தினை எடுத்துக்கொண்டால் மார்ச், மற்றும் ஏப்ரல் மாதங்கள் ஒருங்கால் மேற்காவுகைக்குரிய மாதங்கள் என்பதனால் இம்மாதங்களில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சி அதனுடைய செல்வாக்கிற்குட்பட்டதாகவே அமைகின்றது. ஆனால் ஏப்பிரல் மாதத்தில் கிடைக்கின்ற மழை வீழ்ச்சியின் அளவு குறைவடைந்து கொண்டு செல்வதனைக் காண முடியும். 1930 - 1960 களுக்கிடைப்பட்ட காலத்தில் ஏப்ரல் மாதத்தின் சராசரி மழைவீழ்ச்சி 66.2 mm ஆகக் காணப்பட்டது. ஆனால் 1961-1990 வரையான காலப்பகுதியில் 52.3 mm மழைவீழ்ச்சியே கிடைத்துள்ளது .பின்னர் 2001 ஆம் ஆண்டு ஏப்பிரல் 125.8 mm உம் 2002 ஆம் ஆண்டு ஏப்பிரல் 140.1 mm மழைவீழ்ச்சியும் கிடைத்துள்ளது. எனினும் ஏப்ரல் மாதத்தினைப் பொறுத்தவரை ஓரளவுச் சாரசரியான மழைவீழ்ச்சி கிடைத்து வருகின்றது.

கடந்த 60 ஆண்டுக்கால யாழ்ப்பாண மாவட்டத்தில் மார்ச் மாதத்தின் மழைவீழ்ச்சியின் அளவு குறைவாக இருந்தால் ஏப்ரல் மாதத்தில் அதிக மழைவீழ்ச்சி கிடைத்து வருவதனைக் காணமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலும் 2000 - 2005 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இதனைக் காணமுடியும். 2000 ஆம் ஆண்டு மார்ச்சில் 17.3 mm மழைவீழ்ச்சி கிடைக்க ஏப்ரலில் 62 mm மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. அதே போல் 2001 மார்ச்சில் 00 mm மழைவீழ்ச்சியும், ஏப்ரல் 83 m மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. 2005 இல் மார்ச் மாதச் சராசரி மழைவீழ்ச்சி 00 mm ஆக இருக்க ஏப்ரல் மாதத்தில் 150.1 mm மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது.

எனவே மார்ச் மாதத்தில் கிடைக்கும் மழைவீழ்ச்சியின் அளவே ஏப்ரல் மாதத்தில் கிடைக்கும் மழைவீழ்ச்சியின் அளவைத் தீர்மானிக்கின்றது. இதற்கு மார்ச்சில் யாழ்ப்பாணக்குடாநாட்டின் வளிமண்டல வெப்ப நிலையில் ஏற்படும் கடுமையான மாற்றம் வெப்பச் சலனத்தை உருவாக்கி மாலைநேரப் பகுதிகளில் (குறிப்பாக மதியம் 1.00 மணிக்கு பின்னர்) மழைப்பொழிவை உருவாக்குவதுடன் ஏப்ரலின் பிற் பகுதிகளில் தென்மேல் பருவப்பெயர்ச்சி ஆரம்பிக் கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதனால் ஏற்படும் காலநிலை மாற்றங்கள் ஏப்ரல் மாதத்தில் மழைவீழ்ச்சியின் அளவை அதிகரிக்கச் செய்கின்றன எனலாம்.

### மே தொடக்கம் செப்டெம்பர் வரையான மழைவீழ்ச்சி (Rainfall from May to September)

மே - செப்டெம்பர் வரை கிடைக்கின்ற மழைவீழ்ச்சியானது யாழ்ப்பாணக் குடாநாட்டை பொறுத்தவரை குறைவாகும். ஏனெனில் இக்காலப்பகுதி தென்மேல் பருவப் பெயர்ச்சிக்காற்றின் (South west Monsoon wind) செல்வாக்கிற்கு உட்பட்ட காலமாகக் கருதப்படுவதனால் அதன் செல்வாக்கு வடக்கு, கிழக்கு மாகாணத்தில் மிகக் குறைவாக காணப்படுகின்றமையால் இக்காலத்தில் கிடைக்கின்ற மழையின் அளவு குறைவாகும். 1931 - 1960 வரையான காலங்களில் மேற்குறிப்பிட்ட மாதங்களில் சராசரி 164.6 mm மழைவீழ்ச்சியும் 1961 - 1990 வரையான காலங்களில் 189.9 mm மழைவீழ்ச்சியும் கிடைத்துள்ளன. 2000 - 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மே- செப்டெம்பர் வரையும் கடைதட்த மழைவீழ்ச்சியின் தன்மைகளை நோக்கினால் 2004 ஆம் ஆண்டு மே - செப்டெம்பர் வரையும் கிடைத்த மழைவீழச்சியின் தன்மைகளை நோக்கினால் 2004 ஆம் ஆண்டு மே மாதம் 256.9mm மழைவீழ்ச்சியும் 2003 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 145.8mm மழைவீழ்ச்சியும் கிடைத்துள்ளது. இவை கூடிய மழைவீழ்ச்சிகளாகக் காணப்பட குறைந்த மழைவீழ்ச்சிகளாக 2006 ஆம் ஆண்டு மே மாதம் 1.0 mm உம், ஜூன் மாதம் 0.0 mm உம் ஜூலையில் 0.0 mm உம், ஒகஸ்ட் 0.0 mm உம் பெறப்பட்டுள்ளன. 2006 ஆம் ஆண்டு மே தொடக்கம் ஆகஸ்ட் வரையான காலத்தில் 1.0 mm மழைவீழ்ச்சியே கிடைத்துள்ளது. 2005 ஆம் ஆண்டு காலப் பகுதியில் குறைவான மழைவீழ்ச்சியே கிடைத்துள்ளது. அதுபோல் 2000 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளிலும் இம்மாதங்களில் குறைவான மழைவீழ்ச்சியே கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் ஒகஸ்ட் மாதத்தின் பிற்பகுதியில் ஒகஸ்ட் 20ஆம் திகதிக்குப் பின்னர் ஒரளவு மழை கிடைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### செப்டெம்பர் மழைவீழ்ச்சியின் மாறுபடும் தன்மை (Rainfall variability in the month of September)

செப்டெம்பர் மாதத்தில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியில் மாறுபடு தன்மை காணப் படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். 1931 - 1960 வரையான காலத்தில் 44.87 mm மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. 2000 - 2015 வரையான செப்டெம்பர் மாதத்தில் 94.1 mm என்ற அளவில் மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. இடைமொன்சூன் கால மாகிய இக்காலப்பகுதியில் ஒருங்கல் மேற்காவுகைச் செயற்பாட்டினாலும் மழை கிடைக்கின்றமை குறிப்பிடத்தக்காகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு இக்கால மழை அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில் இக்காலத்திலும் ஓகஸ்ட் மாதத்தின் பிற்பகுதியிலும் கிடைக்கின்ற மழையை விதைப்பு மழை என்பர். இம் மழைவீழ்ச்சி சீராகக் கிடைக்குமானால் பயிர்செய்கை நடவடிக்கைகள் குறிப்பாக விதைத்தல் செயற்பாடு சிறப்பாக அமைய வாய்ப்புண்டு. இம் மாதத்தில் மழைவீழ்ச்சி குறைவாக இருந்தால் அது யாழ்ப்பாண மாவட்டத்தின் பயிர்ச்செய்கை நடவடிக்கையிலும் பாதிப்பினை ஏற்படுத்தும் எனலாம்.

### ஒக்டோபர் தொடக்கம் டிசம்பர் வரையான மழைவீழ்ச்சி (Average rainfall from October Average rainfall from October to December + O December


ஒக்டோபர் மாதத்தினைப் பொறுத்த வரையில் யாழ்ப்பாணக் குடாநாடு இம்மாதத்திலிருந்து சிறந்த மழைவீழ்ச்சியைப் பெறத் தொடங்குகின்றது. வடகீழ்ப் பருவ பெயர்ச்சிக் காற்றினது தொடக்க காலமாக இருப்பதனால் அதிக மழையைப் பெறுகின்றது. வங்காள விரிகுடாவில் இக்காலப் பகுதியில் தாழமுக்கம் காரணமாகச் சில சமயங்களில் சூறாவளியின் செயற்பாடுகளும் அதிக மழைவீழ்ச்சிக்குக் காரணமாக உள்ளன. யாழ்ப்பாணக் குடாநாட்டினது மாரிப் பருவம் பெரும்பாலும் இக்காலப்பகுதியிலே தொடங்குகின்றது. என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1931 - 1960 வரையான காலப்பகுதியில் ஒக்டோபர் மாதத்தின் சராசரி மழைவீழ்ச்சியாக 139.785 mm மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. 1961 - 1990 வரை 242.mm மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. 2000 - 2015 வரையான காலத்தில் 257.8 mm மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. 2000 - 2008 வரையான காலப் பகுதியில் ஒக்டோபர் மாதத்தில் கிடைத்த மழைவீழ்ச்சியில் 2001 ஒக்டோபரில் 460.3 mm மழைவீழ்ச்சி அதிககூடிய மழைவீழ்ச்சியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மிகக் குறைந்த மழை வீழ்ச்சி 2000 ஒக்டோபரில் 83.5 mm மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றுள்ளது. 1931 - 2007 வரையான காலப்பகுதியில் ஒக்டோபர் மாதத்தில் கிடைக்கப்பெற்ற மழைவீழ்ச்சியின் அளவு அதிகரித்து வருவதனைக் காண முடிகின்றது. எனினும் பெரும்பாலான ஒக்டோபர் மாதங்களிலும் சராசரியாக 174 mm க்கு மேலேயே மழைவீழ்ச்சி கிடைத்துள்ளமையைக் காணலாம்.

### நவம்பர் அதிகூடிய மழைவீழ்ச்சி (Highest Rainfall in the month of November)

அடுத்து நவம்பர் மாதங்களில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சி யாழ்ப்பாணக் குடாநாட்டில் குறிப்பிடக்கூடிய ஒன்றாகும். ஜனவரி - டிசெம்பர் வரையான 12 மாதங்களிலும் நவம்பர் மாதத்திலேயே அதிகளவான மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்றின் (North East Monsson wind) செல்வாக்கிற்கு உட்பட்ட இம்மாதமே யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஈரப்பருவத்தில் மிக உச்சமான மழைவீழ்ச்சியைப் பெறுகின்ற மாதமாகும். நவம்பர் மாதங்களில் சராசரியாக 404.8 mm மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. 1961 - 1990 வரையான காலப்பகுதியில் நவம்பர் மாதங்களில் 336.1 mm மழைவீழ்ச்சியும் 2000 - 2005 வரையான காலப்பகுதியில் 427.2 mm மழைவீழ்ச்சியும் கிடைத்துள்ளது. ஆண்டுதோறும் நவம்பர் மாதங்களில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியில் மாறுதன்மை காணப்படுகின்றது 1931 - 2015 வரையான காலப்பகுதியில் நவம்பர் மாதங்களிடையே கிடைக்கின்ற மழைவீழ்ச்சியில் மாறுபடும் தன்மை காணப்பட்டாலும் அனைத்து ஆண்டுகளிலும் நவம்பர் மாதமே அதிகூடிய மழைவீழ்ச்சியைப் பெறுகின்றது. 2000 - 2015 வரையான காலப்பகுதியில் 2008 ஆம் ஆண்டு நவம்பர் அதிககூடிய மழை வீழ்ச்சியாக 830 mm மழைவீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. அதேசமயம் 2000 ஆம் ஆண்டு நவம்பரில் 286.8 mm மழைவீழ்ச்சி குறைந்த மழைவீழ்ச்சியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது ஆகும். ஆனால் நவம்பர் மாதத்தில் கிடைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மூலம் தரவுப்பகுப்பாய்வு 2016





மூலம் தரவுப்பகுப்பாய்வு 2016

அதிக மழையினால் யாழ்ப்பாணக் குடா நாட்டின் பல பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப் படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

டிசம்பர் மாதங்களில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சி சராசரியாக 220mmக்கு மேலேயே உள்ளது. 1931 - 1960 வரையான காலப்பகுதியில் 262.5 mm மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. 1961 - 1990 வரையான காலப்பகுதியில் 278.2 mm மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. 2000 - 2015 வரையான காலப்பகுதியில் சராசரியாக 219.4 mm மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. 2000 - 2015 வரையான டிசம்பர் மாதங்களில் 2001 டிசெம்பரில் 32.1 mm அதிகூடிய மழைவீழ்ச்சியும் 2003 டிசம்பரில் 56.5 mm குறைவான மழைவீழ்ச்சியாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1930 - 2008 வரையான டிசெம்பர் மாதங்களில் டிசெம்பர் 05 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரையான காலப்பகுதிகளில் பெரும்பாலும் மழைவீழ்ச்சி ஒப்பீட்டளவில் அதிகமாகக் கிடைக்கின்றமை குறிப்பிடத்தக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### யாழ்ப்பாண மாவட்டத்தின் வெப்பநிலை மாறுபாடுகள் (Temperature Variations in Jaffna District )

யாழ்ப்பாணக் குடாநாட்டின் காலநிலையைப் பொறுத்தவரைவெப்பநிலை முக்கிய பங்கினை வகிக்கின்றது. அயன வலயத்தைச் சேர்ந்த பிரதேசமாக யாழ்ப்பாணக் குடாநாடு உள்ளமையால் ஆண்டு முழுவதும் சூரியனின் கதிர்வீச்சை (Solar radiation) நேரடியாகப் பெறுகின்றமையால் வெப்பநிலையும் ஆண்டு முழுவதும் உயர்வாகவே காணப்படும். எனினும் சில மாதங்களில் இவை அதிகமாகவும் சில மாதங்களில் குறைவாகவும் காணப் படுகின்றது.

எனினும் 1960 இலிருந்து இன்று வரையான வெப்பநிலைப் போக்குகளை அவதானிக்கும் போது யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு கிடைக்கின்ற வெப்பநிலையின் அளவு அதிகரித்துக் கொண்டு செல்வதனைக் காணலாம். குறிப்பாகச் சில மாதங்களில் இத்தகைய தன்மை அதிகமாகக் காணப்ப டுகின்றதனை அவதானிக்கலாம்.

### ஜனவரி - ஏப்பிரல் வரையான வெப்பநிலை (Temperature from January to April )

1960 - 1990 வரையான ஜனவரி மாதத்தில் சராசரி வெப்பநிலை 25.5°c யாகக் காணப்படுகின்றது. எனினும் 1990களிலிருந்து 2008 வரை இவற்றில் பெரிய வேறுபாடு காணப்படாமல் சில காலங்களில் குறைந்தும் கூடியும் காணப்படுகின்றது. எனினும் 25-26°c என்ற அளவிலேயே உள்ளது. பெப்ரவரி மாதத்தில் 1990 - 2008 ஆம் ஆண்டு வரை சராசரியாக 26.5°c ஆகக் காணப்பட்ட மார்ச் மாதத்தில் 1960 - 2015 வரையான காலப்பகுதியில் 28.7°c ஆகவே சராசரி வெப்பநிலை காணப்படுகின்றன.

எனினும் 1972 - 1981 மற்றும் 2008 மார்ச் மாதங்களில் நடுப்பகுதியில் இருந்து ஏப்ரல் மாதத்தின் தொடக்கம் வரை மிகவும் குறைவான வெப்பநிலையே அவதானிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் இக்காலப்பகுதியில் அயன இடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருங்கல் வலயத்தின் அசைவு காரணமாக அதிக மழைவீழ்ச்சியும் தாழமுக்கச் செயற்பாட்டினால் யாழ். குடாநாட்டு வான்பரப்பில் திரண்முகில் ( Cumulus - clouds - Cu) களின் செறிவு அதிகமாகக் காணப்பட்டமையுமே காரணம் எனலாம். ஏப்ரல் மாதத்தினைப் பொறுத்தவரையிலும் பெரிதாக வெப்பநிலையில் வேறுபாடுகள் காணப்படவில்லை. 29-30°c வரையிலேயே வெப்ப வேறுபாடுகள் காணப்படுகின்றன.

மேற்கூறிய மாதங்களில் வெப்பநிலையில் பெரியளவான வேறுபாடுகள் காணப் படாமைக்கு ஜனவரி, பெப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு மழைவீழ்ச்சியைத் தருகின்ற வடகீழ்ப் பெயர்ச்சிக் காற்றின் செல்வாக்குக்கு உட்பட்டனவாகக் காணப்படுகின்றமையால் வெப்பநிலை குறைவாகவே உள்ளது. இதற்கு அக்காலத்தில் இப்பகுதி வானிலையின் திரண் மழை முகில்களும், தாழமுக்கமும் உயர்வாகக் காணப்படுகின்றமையையும் காரணமாகக் கூறலாம்.

**மே - ஓகஸ்ட் வரையான வெப்பநிலை**
**(Temperature from May to August )**

அடுத்து மே தொடக்க ஓகஸ்ட் வரையான காலம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வெப்பநிலையில் கவனிக்கப்பட வேண்டிய காலமாகும். ஏனெனில் 1960 ஆம் ஆண்டியிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கிடைக்கப் பெறும் வெப்பநிலையின் அளவு அதிகரித்துக் கொண்டு வருவதை அவதானிக்கலாம். 1960 இலிருந்து 1990 வரை மே மாதச் சராசரி வெப்பநிலை 29.50°c ஆகக் காணப்பட்டது. ஆனால் 1999 இல் 31.30°c ஆகவும் 2001 ஆம் ஆண்டு 31.0°c ஆகவும் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரையான ஆண்டுகளில் மே மாதத்தில் சராசரி 30.3 °c ஆகவும் காணப்படுகின்றது.

ஜூன் மாதத்தில் 1960 தொடக்கம் 1990கள் வரை சராசரி வெப்பநிலை 29°c ஆகக் காணப்பட்ட 1999 இல் 30.80 ஆகவும் 2002 இல் 30°c ஆகவும் 2006 இல் 30.2°c ஆகவும் காணப்படுகின்றது. ஜூலை மாதத்தில் 1960 - 1990 வரை 28.6°c ஆகக் காணப்பட்ட 1999 இல் 31.3°c ஆகவும் 2000 ஆம் ஆண்டு 29.4°c ஆகவும் 2001 இல் 29.3°c ஆகவும் 2002 இல் 29.6°c ஆகவும் 2003 இல் 30.1°c ஆகவும் 2006 இல் 29.9°c ஆகவும் காணப்படுகின்றது.

ஓகஸ்ட் மாதத்தினை நோக்கினால் 1960 - 1990 கள் வரை 28.3°c சாரசரியாகக் காணப்பட்டுள்ளது. ஆனால் 1999 ஆம் ஆண்டு 31°c ஆகவும் 2001ஆம் ஆண்டு 28.9°c ஆகவும் 2004 இல் 29.4°c ஆகவும் 2005 இல் 29.5°c ஆகவும் 2006 இல் 29.5°c ஆகவும் உள்ளது.

மேற்கூறிய நான்கு மாதங்களும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வரட்சிக்குரிய மாதங்களாகும். இலங்கையின் தெற்கு மற்றும் மேற்குப் பகுதிக்கு மழையைத் தருகின்ற தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்றின் செல்வாக்கிற்கு உட்பட்ட மாதங்களாகையால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இக்காலப் பகுதியில் இயல்பாகவே அதிக வெப்பமும் வரண்ட வளிமண்டல நிலைமையுமே காணப்படுகின்றது. ஆயினும் 1990 களின் பின்னர் இக்காலப்பகுதியில் வெப்பநிலை அதிகரித்துக் கொண்டு வருகின்றது. சராசரியாக மே மாதம் 0.25°c யினாலும் ஜூன் மாதம் 0.21°c யினாலும் ஜூலை மாதம் 0.28°c யினாலும் ஓகஸ்ட் மாதம் 0.3°c யினாலும் அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பினைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. ஏனெனில் 01°c அதிகரிப்பிற்குச் சுமார் 5000 ஆண்டுகள் எடுத்துள்ள புவியின் வரலாற்றில் மேற்படி அதிகரிப்புக்கள் யாழ்ப்பாணத்தில் மிகவும் குறுகிய காலத்தில் நிகழ்ந்துள்ளது. பூகோள வெப்பமாதலின் விளைவாக பூமியின் சராசரி வெப்பநிலைகளில் ஏற்பட்டுள்ள மாற்றமும் அதனால் தோன்றிய காலநிலை மாற்றமும் இதற்குக் காரணியாகக் கருதலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**செம்டெம்பர் தொடக்கம் டிசெம்பர் வரையான வெப்பநிலை (Temperature from September to December )**

அடுத்து செப்டெம்பர் - டிசெம்பர் வரையான காலப்பகுதிகளில் கிடைத்திருக்கின்ற வெப்பநிலைகளின் அளவுகளில் பெரிதான வேறுபாடுகள் காணப்படவில்லை. எனினும் 1960 களில் இருந்து செப்டெம்பர் - டிசெம்பர் வரை நோக்கும் போது வெப்பநிலை சற்று அதிகரித்துக் கொண்டு செல்வதனைக் காணலாம். 1961 - 1990 வரையான காலப்பகுதியில் செப்டெம்பர் மாதத்தில் வெப்பநிலையானது 28.3°c ஆகக்காணப்பட அதன் பின்னர் அது அதிகரித்துக் கொண்டு செல்வதனைக் காணமுடியும். 1999ல் 30.7°c ஆகவும் 2001 29.1°c ஆகவும் 2003 இல் 29.7°c ஆகவும் 2006 இல் 29.6°c ஆகவும் காணப்படுகின்றது. 1961 - 1990 வரையான செப்டெம்பர் மாத சராசரி வெப்பநிலை 28.3°c ஆகவும் 2000 - 2008 வரை 28.8°c ஆக உள்ளது. இந்த வகையில் 1930 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இம்மாதத்தில் 0.30°c வெப்பநிலை சராசரியாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒக்டோபர் மாதத்தினை நோக்கும் போது வெப்பநிலை அதிகரிப்பினைக் காணமுடியும். 1960-1990 கள்வரை 27.7°c ஆகக்காணப்பட்ட 2000 - 2007 வரை 28°c ஆக காணப்படுகின்றது. இம்மாதங்களிலும் சராசரியாக 30.03°c ஆக அதிகரித்துள்ளது. அதுபோல் நவம்பர் மாதத்தின் சராசரி வெப்பநிலை என்பது 1960கள் தொடக்கம் 1990 வரை 26.7°c வெப்பநிலை சராசரியாகக் காணப்பட்ட 2000 - 2007 வரையான காலப்பகுதியில் 26.4°c ஆக காணப்படுகின்றது. டிசெம்பர்மாதத்தினுடைய வெப்பநிலையைப் பொறுத்தவரை 1960 - 1960 வரை 25.8°c ஆகக் காணப்ட்ட 2000 - 2008 வரையான காலப்பகுதியில் 25.8°c ஆகக் காணப்படுகின்றது. 0.02°c இனால் அதிகரித்துள்ளது.

**யாழ்ப்பாண மாவட்ட காலநிலையில் அவதானிக்கப்பட்ட மாறுதல்கள் (Changes observed in the climate of the Jaffna District)**


மேற்கூறியவற்றின் அடிப்படையில் சில முடிவுகளுக்கு வரலாம். அந்தவகையில் 1930 களிலிருந்து 2008 வரை யாழ்ப்பாணக் குடாநாட்டின் மழைவீழ்ச்சி, வெப்பநிலைப் போக்கில் பின்வரும் விடயங்களை அவதானிக்கலாம்.




மூலம் தரவுப்பகுப்பாய்வு 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலம்: தரவுப் பகுப்பாய்வு, 2016

**மூலம் தரவுப்பகுப்பாய்வு 2016**

1. 1930 களிலிருந்து இன்று வரை ஆண்டு தோறும் கிடைக்கின்ற மொத்த மழை வீழ்ச்சியின் அளவு குறிப்பிடத்தக்க அளவில் மாற்றமடையவில்லை.

2. யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஈர, உபஈர, இடைவரட்சி, வரட்சி, உயர்வரட்சிக் காலங்கள் மாற்றமடைந்து கொண்டு செல்கின்றன. அத்துடன் அவற்றின் கால அளவுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

3. வெப்பநிலையைப் பொறுத்தவரை மே - செப்டெம்பர் வரையான காலப்பகுதிகளில் 0.25°c யினாலும் ஜூன் மாதத்தில் 0.21°c யினாலும் ஜூலை மாதத்தில் 0.28°c யினாலும் ஓகஸ்ட் மாதத்தில் 0.09°c யினாலும் செப்டெம்பர் மாதம் 0.04°c யினாலும் வெப்பநிலை அதிகரித்துள்ளது. 1960 - 2007 வரையான காலப்பகுதிகளில் இதனை அவதானிக்கலாம். மேலும் 1960 - 1990 கள் வரை ஆண்டு சராசரி வெப்பநிலையானது 27.97°c ஆகக் காணப்பட்டிருக்க 2000 - 2007 வரையான காலப் பகுதியில் ஆண்டு சராசரி வெப்பநிலையானது 28.02°c ஆகக் காணப்படுகின்றது.

4. ஜனவரி தொடக்கம் ஏப்ரல் வரையிலும் ஒக்டோபர் தொடக்கம் டிசெம்பர் வரையிலும் வெப்பநிலை அதிகளவு அதிகரிக்காது விட்டாலும் 0.02°c என்ற அளவில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

5. யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த 50 வருடங்களில் மே, ஜூலை மாதங்களிலே மிகக் குறைவான மழைவீழ்ச்சியைப் பெறுகின்றன. சராசரி 29.0 mm அதே வேளை ஒக்டோபர் நவம்பர் மாதங்கள் மழையைப் பெறுகின்றன. சராசரி 289.45 mm ஆகும்.

6. வெப்பநிலையில் மே, ஜூன் மாதங்களில் அதிக வெப்பநிலையைப் பெறுகின்றன. சராசரி 29.3 குறைவான வெப்பநிலையாக டிசெம்பர், ஜனவரி மாதங்கள் உள்ளன.

7. சாரீரப்பதனைப் (Relative Hunmidity) பொறுத்தவரை பெரியளவில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. பகல், இரவு இரண்டும் சேர்ந்து சராசரியாக 50% -76% வகையிலே வேறுபடுகின்றன. அண்மைய காலங்களில் சாரீரப்பதனில் ஏற்படுகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடுகள் மக்களின் சௌகரிய காலநிலையில் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக மக்கள் உணர் வெப்பநிலையின் (Feeling temperature) அதிகத்தை உணர்கின்றனர்.

கடந்த 10 ஆண்டுகளாக எமது பிரதேசத்தின் சாரீரப்பதன் அளவு (Relative humidity) குறைவடைந்து செல்கின்றது. இதனால் மனித சௌகரியத்திலும் முகில் உருவாக்கத்திலும் கடுமையான பாதிப்புக்கள் ஏற்படுகின்றது. குறிப்பாக இரவு நேரத்தில் சாரீரப்பதன் அளவு குறைவடைந்தமை காரணமாக வளிமண்டல வெப்பநிலையில் மாற்றம் காரணமாக உடல் தொழிற்பாட்டின் விளைவாக அதிகமான வியர்வை வெளியேற்றம் காரணமாக அதிக மனித சௌகரியப் (Human comfort) பிரச்சினைகள் ஏற்படுகின்றமை குறிப்பிட த்தக்கது.

8. குடாநாட்டில் மழைக்கால நாட்களில் (Rainy Days) எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. 1930 தொடக்கம் 1990 வரை 74 என்ற சராசரி அளவில் இருந்த மழை நாட்கள் தற்போது 52 ஆக குறைவடைந்துள்ளன. மழைவீழ்ச்சியின் அளவில் எத்தகைய மாற்றமும் ஏற்படாமல் மழை நாட்களில் ஏற்பட்ட குறைவின் காரணமாக குறுகிய காலத்தில் ஏற்படும் செறிவான மழைவீழ்ச்சி (intensive rainfall) வெள்ள அனர்த்தத்தை ஏற்படுத்துவதுடன் அதிகளவான மழைநீர் கழுவு நீராக (Surface flow) கடலுடன் கலப்பதுடன் குடாநாட்டின் தரைகீழ் நீர்வளத்திலும் (Ground water resource) பாதிப்பினை ஏற்படுத்துகின்றன.

மேற்கூறிய வகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் காலநிலைமைகளில் மாறுதல்களை அவதானிக்க முடிகின்றது. உலகம் காலநிலை மாற்றங்கள் எதிர்கொள்வதற்கு தன்னைத் தயார்படுத்தி வருகின்றது. காலநிலை மாற்றம் தொடர்பான மாநாடுகளை நடாத்தி வருவதுடன் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்குப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இதற்குப் பல நாடுகள் கூட்டாகவும் தனித்தும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

## யாழ்ப்பாண மாவட்ட காலநிலை மாற்ற தணிப்புச் செயற்பாடுகள் (Climate change mitigation measures in the Jaffna District)

காலநிலை மாற்றம் என்பது இன்றைய மனித குலத்தின் மிக முக்கியமான பிரச்சினையாக உள்ளது. இதனைத் தணிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகள் உலகளாவிய ரீதியில், தேசிய ரீதியில் மற்றும் உள்ளூர் ரீதியான செயற்பாடுகள் அவசியமானவையாக உள்ளன. அந்தவகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் காலநிலை மாற்றத்தினைக் குறைப்பதற்கான பரிந்துரைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. விழிப்புணர்வு (Awarness) காலநிலை மாற்றம் தொடர்பான விழிப்புணர்வு மிகஅவசியமாகும். மக்கள் காலநிலை மாற்றம் தொடர்பான விடயங்களை அறிந்திருத்தல் வேண்டும். மழைவீழ்ச்சி காலங்கள் மற்றும் சராசரி அளவுகள், வெப்பநிலையின் சாராசரி அளவுகள், அதிக வெப்பமான மாதம், வெப்பம் குறைந்த மாதம், காற்று வீசும் திசை, வளிமண்டல ஈரப்பதன், வளிமண்டல அமுக்கம் மற்றும் காலநிலை மாற்ற விளைவுகள் என்பன தொடர்பாகப் போதுமான அறிவு அவசியமாகும். குறிப்பாக விவசாயிகள் காலநிலை மாற்றம் மற்றும் அதன் விளைவுகளைப் பற்றி அறிந்திருத்தல் வேண்டும். அதற்கு ஏற்றாற் போல் தமது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ளுதல் அவசியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய விழிப்புணர்வு சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் ஏற்படல் வேண்டும். காலநிலை மாற்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் (Printed and Electronics Media) பெரும் பங்கினை வகிக்க முடியும். வினைத்திறனான விழிப்புணர்வே காலநிலை மாற்றத்தினைத் தணிப்பதற்கான மிகச்சரியான நடவடிக்கை ஆகும்

2. அபிவிருத்தி அனுமதிகள் (Development Permissions) அபிவிருத்திச் செயற்பாட்டுக்கான அனுமதிகளின் போது எதிர்பாராத காலநிலை மாற்றத்தினைக் கருத்திற் கொண்டு அனுமதிகள் வழங்கப்படல் வேண்டும். எமது காலநிலை நிலைமைகளில் தங்கியிருக்கின்ற வளங்களின் மீது அதிகளவு அழுத்தம் தரக்கூடிய அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு அனுமதி வழங்குதல் கூடாது. உதாரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டின்தரைக்கீழ் நீர்வளமானது யாழ்ப்பாணக் குடாநாட்டின் மழைவீழ்ச்சியில் தங்கியுள்ளது. எனவே தரைக்கீழ் நீரினை அளவுக்கு அதிகமாக ஓரிடத்தில் இருந்து மட்டும் பெறும் புதிய தொழில் முயற்சிகளுக்கு போதுமான ஏற்பாடு வரும் வரையில் அனுமதி வழங்குதல் கூடாது. இதன்மூலம் காலநிலை மாற்றத்தினை பாதிப்புக்களில் ஒன்றான கடும் வரட்சியைத் தடுக்க முடியும் (Piratheeparajah, 2016)

3. மரங்களைப் பாதுகாத்தலும் மர நடுகையும் (Protections and plantation of trees) யாழ்ப்பாணக் குடாநாட்டின் இயற்கைத் தாவரப் போர்வையை அதிகரித்தல் வெப்பநிலை வேறுபாடுகளின் காரணமாக ஏற்படும் அசெளகரிய நிலைமையைத் தடுக்க முடியும்.

4. வரட்சியை எதிர்கொள்வதற்கான புதிய தந்திரோபாயங்கள் (New Stratesies to face the drought) யாழ்ப்பாணக் குடாநாடு கிடைக்கும் மழைவீழ்ச்சியின் மூலம் உயிர் வாழ்கின்றது. கிடைக்கும் மழைவீழ்ச்சியானது உரிய முறையில் சேமிக்கப்பட வேண்டிய அதே சமயம் வரட்சியை எதிர் கொள்வதற்கான வாழ்க்கை முறையையும் பின்பற்றுதல் வேண்டும். கிடைக்கின்ற மழைவீழ்ச்சியை வைத்துக் கொண்டு பாதிப்பை ஏற்படுத்தும் வரட்சியை அறிந்து கொள்ள முடியும். அதாவது கடந்த ஆண்டின் வடகீழ் பருவ பெயர்ச்சிக் காற்றுக் காலத்தில் கிடைத்த மழைவீழ்ச்சி 60 mm இனை விடக் குறைவாகவும் அதே சமயம் நிகழும் ஆண்டின் மே மாதம் வரை கிடைக்கின்ற மழைவீழ்ச்சி 255 mm இனை விடக்குறைவாகவும் இருந்தால் நிகழும் ஆண்டின் ஜூன், ஜூலை, ஓகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களிலேயே நாம் வரட்சியை (தீவகப் பகுதிகளே அதிகம் பாதிக்கப்படும்) எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கும் மே மாதம் 30 ஆம் திகதியே வரட்சிக்குரிய நிலைமைகளை எதிர்கொள்ள தயார்படுத்தல் வேண்டும் (Piratheeparajah, 2016)

5. அனர்த்தங்களுக்கான தயார் நிலைமை (Preparedness for disasters): பிரதேச புவியியல் அமைவைப் பொறுத்தவரை நாம் வெள்ளப் பெருக்கு, வரட்சி, சூறாவளி, புயல் மற்றும் அனல் காற்று போன்ற காலநிலை அனர்த்தங்களுக்கான வாய்ப்புக்களை அதிகம் கொண்டுள்ளது. (Piratheeparajah & Rajendram, 2015) எனவே இவ்வனர்த்தனங்களைப் பற்றி அறிந்து கொள்வதுடன் அவை ஏற்படும் காலங்களில் அறிந்து செயற்படல் (காலநிலை மாற்றத்தின் விளைவுகளில் ஒன்று. எந்தக் காலத்தில் எவ்வகை அனர்த்தம் ஏற்படும் என்பதனை எதிர்வு கூற முடியாமை, கடும் வரட்சிக் காலம் என வரையறுக்கப்பட்ட காலத்தில் வெள்ள அனர்த்தமும், மழைவீழ்ச்சிக் காலம் என வரையறுக்கப்பட்ட காலத்தில் வரட்சியும் நிகழலாம் (Nishadi Eriyagma, 2010)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. வினைத்திறனாக நீர் முகாமைத்துவம் (Effective water Management) : யாழ்ப்பாணக் குடாநாட்டின் மழைவீழ்ச்சி இஸ்ரேல் நாட்டின் மழைவீழ்ச்சியை விட 8 மடங்கு உயர்வானது. ஆனால் அதனை எவ்வாறு பயன்படுத்துகின்றோம். என்பதனைப் பொறுத்தே நீர் கிடைப்பனவு தீர்மானிக்கப்படுகிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு கிடைக்கும் நீர்வளத்தில் அதிகமான பங்கினை வீணே கடலுக்குள் விடுகின்றோம். பின்வரும் எளிய சமன்பாடு மழைவீழ்ச்சியையும் பயன்பாட்டையும் விளங்குகின்றது.

- யாழ்ப்பாணக் குடாநாட்டின் நாளாந்த தேவை (சராசரி ஒருவருக்கு 180 லீற்றர் என்ற அளவில் = 2400 கன மீற்றர்
- வருடாந்த தேவை 24000 x 365= 8760000 கன மீற்றர் அதாவது 8.76 மில்லியன் கனமீற்றர்
- வருடச் சராசரி மழைவீழ்ச்சி 1240 மில்லி லீற்றர் அதாவது 124 சென்ரிமீற்றர் அல்லது 1.24 மீற்றர் உயரம் (மழைவீழ்ச்சி உயரத்திலேயே அளக்கப்படுகின்றது.
- யாழ்ப்பாணக் குடாநாட்டின் பரப்பு (நீர் நிலைகள் உள்ளடங்கலான )1025 சதுர கிலோ மீற்றர். அதாவது பரப்பு மீற்றரில் 1025000000 சதுர மீற்றர்
- எனவே யாழ்ப்பாண மாவட்டத்தின் பரப்பு 1025000000 சதுர மீற்றர். ஆண்டுச் சராசரி மழை 1.24 மீற்றர் உயரம் கொண்டது.
- எனவே அனைத்துப் பிரதேசங்களும் உள்ளடங்கலாக ஆண்டு மழைவீழ்ச்சி 1.24 x 1025000000 = 1271000000 கனமீற்றர்
- மழைவீழ்ச்சி உயரத்தின் அடிப்படையில் கணிப்பிடப்படுவதாலும் தேவையான மழைவீழ்ச்சியின் அளவு கன மீற்றரில் இருப்பதாலும் சராசரியான கிடைக்கும் மழைவீழ்ச்சி 1.00 மீற்றர் என எடுத்தாலே (உண்மையான ஆண்டுச்சராசரி 1.24 மீற்றர்) யாழ்ப்பாணக் குடாநாடு 1025000000 கன மீற்றர் அதாவது 1025 மில்லியன் கன மீற்றர்) மழைவீழ்ச்சியைப் பெறுகிறது. இந்த 1025 மில்லியன் கனமீற்றரில் ஆவியக்கத்தின் (Evaporation) மூலம் 125 மில்லியன் கனமீற்றரும், தரைக்கீழ் ஊடு வடிதலின் (Infiltration) மூலம் 200 மில்லியன் கன மீற்றர் மழையும் இழக்கப்படுகிறது. எனவே தேறிய மிகுதி 1025-125+200=700 மில்லியன் கன மீற்றர்

மேற்குறித்த இரண்டு செயற்பாடுகளும் தவிர மிஞ்சியிருப்பது 700 மில்லியன் கனமீற்றர் நீர்

- வருடாந்த தேவை 8.76 மில்லியன் கனமீற்றர்
- கிடைப்பது 700 மில்லியன் கனமீற்றர்
- யாழ்ப்பாண மாவட்ட நீரின் மித மிஞ்சிய அளவு 700-8.76=691.42 மில்லியன் கனமீற்றர்
- ஆகவே தேவையை விட பல மடங்கு நீரினைப் பெறுகின்றோம்.
- தேவையான 8.76 மில்லியன் கன மீற்றர் நீரினை நாம் மழைவீழ்ச்சி தரைமேல் மற்றும் தரைக் கீழ் நீர்மூலம் பெறுகிறோம். அவ்வாறு பார்த்தால் (தரைக்கீழ் ஊடு வடிதலையும்) சேர்த்து 900-8.76= 891.24 மில்லியன் கனமீற்றர் நீரிவினை வீணாக கடலுக்குள் விடுகின்றோம்.

இருப்பினும் குறிப்பாக எமது தீவக மக்கள் மே, யூன், யூலை, ஓகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் அதிகளவான நீர்ப்பஞ்சத்தால் அவலப்படுகின்றனர். அதிகளவான விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. கால்நடைகள் இறக்கின்றன. மக்கள் தீவகப்பகுதிகளை விட்டு இடம் பெயர்கிறார்கள். தேவையை விட பல மடங்கு அதிகமான நீர்வளத்தை பெற்றும் சில பருவங்களில் வரட்சி நிலைமையை எதிர்கொள்ளக் காரணம் வினைத்திறனில்லாத நீர் முகாமைத்துவச் செயற்பாடுகளே. எனவே வினைத்திறனான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் முகாமைத்துவத்தைப் பேணினால் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் வரட்சி மற்றும் வெப்ப அதிகரிப்பின் பாதிப்புக்களை குறைக்க முடியும் (Piratheeparajah, 2016)

7. அனர்த்த அவசர காலப் பொதி (Disaster Emergenct Kit): அனைவரது வீட்டிலும் அனர்த்த அவசர காலப்பொதி (Disaster Emergency Kit) ஒன்றினை எப்போதும் பேணுதல்வேண்டும். இதனுள்எதிர்ப்பாராத காலநிலை அனர்த்தங்களின்போது எடுத்துச் செல்லக்கூடிய வகையிலும், அனர்த்த அவசர காலநிலைகளின் போதும் பாவிக்கக் கூடியதாகவும் அமைத்தல் வேண்டும். இதன் மூலம் ஏற்படும் பேரழிவுகளைத் தடுக்கலாம்.

## முடிவுரை (Conclustion)

மேற்கூறப்பட்டவிடயங்களை விட பொலித்தீன் பாவனையைக் குறைத்தல் இயலுமான வரை பெற்றோலியப் பொருட்களின் பாவனையைக்குறைத்தல், சூழலுடன் இணைந்த விவசாய விலங்கு வேளாண்மையை மேற்கொள்ளல், கழிவகற்றல் முகாமைத்துவத்தில் அதிக கவனம் செலுத்தல் மற்றும்பசுமைத்தொழில்நுட்பங்களை அதிகம் பயன்படுத்துதல் போன்றவை மூலம் எமது பிரதேசகாலநிலை மாற்றத்தின் பாதிப்புக்களை குறைக்கலாம்

காலநிலை மாற்றம் என்பது உலகப் பொதுவானவிடயம்ஆயினும்மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வதன் மூலம் பிரதேசத்தில் காலநிலை மாற்றப் பாதிப்புக்களைத் தவிர்க்க இயலும், அரசுகள் மற்றும் நிறுவனங்கள், திணைக்களங்கள், சமூக அமைப்புக்கள் மற்றும் தனிமனிதர்கள் என ஒவ்வொரு மட்டத்திலும் காலநிலை மாற்றத்துக்கு எதிரான செயற்பாட்டினை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் எமது தனித்தன்மை மிக்க புவியியல் அம்சங்களைக் கொண்ட யாழ்ப்பாணக் குடாநாடு பாலைவனமாகி முற்றிலும் நீரில் மூழ்கும் நிலைமை எதிர்காலத்தில் ஏற்படலாம். எதிர்நோக்கியிருக்கும் இப்பேராபத்தை எதிர்கொள்வதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள விட்டால் யாழ்ப்பாணக்குடாநாட்டு மக்கள்வாழ்க்கைக்கு உவப்பற்ற பகுதியாக மாறும் என்பது எவரும் மறுக்க முடியாத உண்மையாகும்.

## உசாத்துணைகள் (Reference)


1. Department of Meteorology, Colombo, Meterological data for the period of 1960- 2015 of Jaffna District.
2. Nazran Baha, (2010), "*Sinking the perl of the Indian ocean: Climate change in Sri Lanka*", Global Mejority, Vol.01 pp4 - 16
3. Nishadi Eriyagma, (2010) " *Impacts of climate change on waterf resource and agriculture in Sri Lanka.*, Water Matters, issue 05 >,pp6-7
4. Piratheeparajah. N, & Rajendram.K, (2015), "*Occurencs of flood hazards in the Northern region of Sri Lanka*". Journal of South Asian studies, Vol.03 pp363-376
5. Piratheeparajah. N, & Rajendram.K, (2014)," *Spatial variation of flood and dought hazards in the Northern region of Sri Lanka*". International Research Journal of Earth Science, Vol.02(06), pp1 -10
6. Piratheeparajah. N, (2016)," *Pattern of spatil and temporal variations of rainfall in the Northern province of Sri Lanka*", Indian journal of spatial science, Vol.07 (01) summer issue, ppl - 6
7. Piratheeparajah. N, (2016)," *Temporal and spatial variations of the atmospheric temperature in the Northern province of Sri Lanka*", International research journal of environmental science, Vol.05 (05), pp63-67
8. பிரதீபராஜா. நா, இராஜேந்திரம். க & குகபாலன். கா, (2012), "யாழ்ப்பாண மாவட்ட விவசாயத்தில் காலநிலை அனர்த்தங்களின் பாதிப்பு, யாழ்ப்பாண வாழ்வியல், வரலாற்றுத்துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம். PP -63 - 76




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. Challanges Encountered in objective interpretation of Sri Lankan Church History with Special emphasis on Portuguese's period documents.
**- Rev. Fr. G. Pilendran**

02. The Buildings up of Reconciliation in the postwar period of Sri Lanka: Opportunities and Challenges.
**- T. Krishnamohan**

03. Fluctuation in the Results of General Examinations Among the Students of Northern Province After the Postwar Context : Causes and Solutions.
**- A. Nithlavarnan**

04. A Study of the Quality parameters in preparation of Jam in Jaffna.
**- K. Pathmasany**
**- A. C. Thavaranjit**

05. Mapping Spatial Pattern of Livelihood Assets and poverty dimension : Special Reference to Oddusuddan D.S. Division.
**- U. Subajini**
**- K. Suthakar**

06. The Anticedents which formed through the settlements : A Research on the Anticedents caused to the formation of Nallur Capital through the settlements in the Northern Sri Lanka.
**- S. Krishnarjah**

07. The Economic Structure of Jaffna (1930 - 1950) : A Review Based on Eelakesari News Paper.
**- K. Arunthavarajah**

08. Climate Change and Mitigration Measures in the Jaffna District.
**- N. Piratheeparajah**

ISSN 2478-1061
9 772478 106003

Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org